உலக சமாதானம்: ஐ.நா.வின் பங்கு?

உலகலா

செப்ரெம்பர் 1993



சோமாலிய மக்களின் நிர்க்கதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

New Doc 2020-04-06 14.46.20_page-0001.jpg

உலகுலா

உலக விவகாரங்கள்

ஆசியா :

ஜெனரலின் தேர்தல் 9
ஒரு மாவீரனின் நிழல் 11
ஆத்மாவின் பிரச்சனை 16
அமைதியற்ற பிரதேசம் 19
சரித்திரத்தின் முன்னோடிகள் 20
புதிய வகையிலான ஆதிக்கப்பிடி 23
குர்திஸ் மக்களின் சூது விளையாட்டு 25
நீங்கள் சதாமைத் தாக்கவில்லை 28
கலப்பு நோக்கங்கள் 30
எல்லையில் தீ 31
தைலத்திலே ஒரு கூடி 33
கற்பனை இஸ்லாமியர் 34

ஐரோப்பா :

இரத்தமும் அரும் பொருட்களும் 37
மிக்-29 விமானத்தில் பறப்பு 39
பொஸ்னியாவில் இரத்தக் குளியல் 41

அமெரிக்கா :

கிளின்ரனுக்கான பாதுகாப்பு 48
நடு இரவில் 52

ஆபிரிக்கா :

ஷரியா அமுலாக்கத்தின் விலை 54
ஒரு தேசத்தின் உதயம் 56
சமாதானத்தை ஏற்படுத்துவதில் அபாயங்கள் 58
அதிகம் தெரிந்த மனிதர்கள் 61

அவுஸ்ரேலியா :

இது யாருடைய நிலம் 63

மனிதவியல் வரலாறு :

ஆரம்பகால வாழ்க்கையின் எச்சம் 64
மாயாவின் இரகசியங்கள் 78

வாணிகம் :

மீளுற்பத்தியிலும் சிறந்தது 66

குற்றவியல் :

அதிவேக நீரூந்துப்படகு 67

மருத்துவம் :

உயிர்ச்சத்து "E" 69

ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும் :

ஆகாய மேலாதிக்கம் 71

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் :

சங்கிலித் தாக்கம் 73
குழப்ப நிலையின் அறிமுறை 76
உலகின் மிகப்பெரிய குளிரூட்டி 77

பல்தினைப் பகுதி :

புதியன அறிமுகம் 2
செய்திச் சரம் 5
பார்வைகள் 8
நேசப் பூக்கள் 54
தேசியத்தலைவரின் செய்தி

B-59

உலக உலா
சமூக, அரசியல்,
விஞ்ஞான,
தொழில் நுட்ப
மாத இதழ்

புதியன அறிமுகம்

வீதியில்

சைக்கிள் ஓடுவதில் ஆர்வமுள்ளோர் வழியில் காற்றுப்போவது எவ்வளவு கோபத்தை உண்டாக்கும் என்பதை அறிவர். இப்பொழுது கிரீன் டயர் என அழைக்கப்படும் ஒரு பிரித்தானிய கம்பனி ஒருபோதும் காற்றுப் போகாத டயர் வகைகளை உற்பத்தி செய்கிறது. தோற்றத்திலும், ஓடுவதிலும் சாதாரண ரயர்களைப் போலவே இவை காணப்படுகின்றன. ஆனால் இப்புதுரக டயர்கள் ''பொலியூறெதேன்'' ஆல் செய்யப்பட்டவை. இவற்றிற் குள் ஆயிரக்கணக்கான நுண்ணிய காற்றுக் குமிழ்கள் உள்ளன. இவை 20அங். தொடக்கம் 26அங். வரையான றேசிங் மொடல்அடங்கிய 13 வேறுபட்ட ரகங்களிற் கிடைக்கும். சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு சோடியின் விலை 90 டொலருக்கும் 100 டொலருக்கும் இடைப்பட்டதாகும் கிறீன் டயர் கம்பனியின் அமெரிக்க கிளையை நடாத்தும் பற்றிக் ஒடெனல் என்பவரின் கூற்றுப்படி காற்றடிக்கும் சாதாரண டயர்களிலும் பார்க்க இவை 2 அல்லது 3 மடங்கு நீண்ட காலத்திற்கு நின்று பிடிக்கக் கூடியவை.

நியூஸ்வீக் 'ஜூலை 6' 1993

சிறிய விளக்கு

வீட்டில் விளக்கு அணைந்ததும் மெழுகு திரிகளையோ அல்லது டோச் லைட்டுகளையோ இருட்டில் தேடி அலைவது பலரது பழக்கமாகும். பதிலாக செல்கோ தொழிற்சாலை என அழைக்கப்படும் நியூயோர்க் கம்பனி ஒன்று மேலான ஓர் எண்ணத்தை முன் வைத்துள்ளது. அது தான் ஒரு சிறு விளக்கையும் அதிபிரகாசமுள்ள டோச் லைட்டையும் உள்ளடக்கிய நுண்ணிய ஒளிக்கதிர் லாம்பாகும். இதன் அளவு 15 சென்ரி மீட்டர் உயரம், 5 சென்ரி மீட்டர் நீளம். இதனுள்ளே காணப்படுவது அதிசக்திவாய்ந்த ரங்ஸ்ரன் மின்குமிழ். ஓர் இடத்துக்கு ஒளி பாய்ச்ச வேண்டுமாயின் இவ் விளக்கைப் பாவிப்பவர் இதன் நுண்ணிய புளோறசென்ற் மின்குமிழை வெளிக் கொணரவேண்டும். உடனே அது 360 பாகை வெளிச்சத்தைத் தரும். அதிசக்தி வாய்ந்த இப் புளோறசென்ற் மின்குமிழை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. இவ் விளக்கின் விலை 30 டொலர் மாத்திரமே.

நியூஸ்வீக், 'ஜூலை' 1993

பந்தைக் கண்டு பிடிக்கும் கருவி

சரியாக அடிக்கப்படாத கோல்ப் பந்துகள் அநேகமாகக் காணாமற் போவதுண்டு. இவற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சி நேரவிரையத்தைக் கொண்டுவரும். முரட்டுத்தனமாக அடிக்கப்பட்ட பந்துகளை விரைவாகக் கண்டுபிடிப்பதற்கு இப் பொழுது ஒரு புதிய கருவி வந்திருக்கிறது. இதன் பெயர் ''தஸ்காண்டிராக் 18.''



இக் கருவி மினிசோற்றா நகரத்திலுள்ள மினியாப்பொலிஸ் என்னுமிடத்தில் ''லில் ஓர் பிற்ஸ்'' என்னும் கம்பனியால் விற்கப்படுகிறது. கோல்ப் பந்து வெளியிடும் மூலக் கூற்று அலை நீளத்தைக் கொண்டு இக்கையினுள் அடக்கக்கூடிய கருவி அதை இனங் காணுகிறது. தனது பந்து வீழ்ந்த இடத்திற்கு விளையாட்டு வீரர் இக்கருவியைக் கொண்டு செல்லுமிடத்து ''ஸ்காண்டிராக்'' அதன் உயர் தொழில் நுட்பத்தோடு கோல் போன்ற உணர் கொம்பை பந்திலிருந்து எழும் சமிக்ஞைகளின் திசைக்குத் திருப்பும். இவ்விதம் பந்திருக்குமிடத்தை இலகுவிற் கண்டு பிடிக்கலாம்.

எலும்பு போல் வரண்ட பற்று

பற்றுகள் குறைந்த அளவு தொழில் நுட்பமுடையனவாகவே நீண்டகாலமாக இருந்து வந்தன. அவை எளிய, மலிவான ஆனால் அதிக பயனுள்ள வைத்திய சாதனமாகக் காணப்பட்டன. ஒரு குறைபாடு மாத்திரம் அவற்றில் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. அதாவது அவை நீர் உட்புகாது சாய்ந்திருப்பதற்குப் பதிலாக இலகுவில் நீர்புகுந்து ஈரமாக்கக் கூடியனவாயிருந்தன. ஆனால் இன்றோ உயர் தொழில் நுட்பம் பற்றுக்களைக்கூட அணுகி விட்டன. அரிசோனாவிலுள்ள டபிள்யு. எல் கோர்ச அசோசியேற்ஸ் இன்கோப் பரேட்டட் கொம்பனி நோயாளிகள் அணிந்து கொண்டு குளிக்கவும், தடாகத்தில் நீந்தவும், கோப்பைகள் கழுவவும் கூடிய ஒருவித இழைக்கண்ணாடியாற் செய்யப்பட்ட பற்றைக் கண்டுபிடித்துள்ளது. அரிசோனாவிலுள்ள இதே கொம்பனி தான் கோர்ரெக்சையும் கண்டுபிடித்தது. சாதாரணமாக மெத்தென்றிருக்கும் பற்றின் இடத்தை இப்புதிய கோரெக்ஸ் பொருட்களால் செய்யப்பட்ட இப்புதிய நீர் உட்புகாப் பற்றுக்கள் பிடித்துக் கொண்டன. இதே கோர்ரெக்ஸ் பொருட்களால் தான் பனிக்கட்டி மேல் சறுக்கு உடைகளும், மென் ஒட்ட உடைகளும், செய்யப் படுகின்றன இவ்வுடைகளுக்குள் நீர் உட்புக மாட்டாது. மேலும் இவற்றை அணிந்து கொண்டு இலகுவாகச் சுவாசிக்கவும் முடியும்.

இழைக் கண்ணாடியாற் செய்யப் பட்ட இந்தப் பற்றுக்கள் நனைந்தும் அவற்றிலுள்ள குமிழ்களாற் செய்யப் பட்டன போன்ற மெதுமெதென்ற கோடுகள் நீரை அதற்கென்றமைக்கப்பட்ட வழிகளால் வெளியேற்றி விடுந்தன்மையுடையன. ஒட்டும் தன்மையுடைய புறப்பக்கத்தைக் கொண்ட இப் பற்றுக்கள் எல்லாவித மாதிரி அளவுகளிலும் இடைக்கக் கூடியன.

நியூஸ்வீக், ஜூன் 14, 1993.

New Doc 2020-04-06 14.46.20_page-0003.jpg

புதியன அறிமுகம்

எஸ், எல். ஆர் ஈரத்தைக் காக்கும் உடுப்பு

கையால் குவியச் செய்யும் எஸ்எல்ஆர் கமராக்களை நீரினுள் அல்லது மணலினுள் பாதுகாக்க காற்று உட்புகவிடா நெளிந்து வளையக்கூடிய உறைகளை ஈவா மரைன் மாஸ்ரர் சீரிஸ் என்ற



ஸ்தாபனம் செய்கின்றது. விரல் நுனியால் ஆளக்கூடிய உள்ளே பொருத்தப்பட்ட உறையும், முற் பக்க கண்ணாடி சாளரத்திற்கு கமராவை இணைக்கும் வளையமும் அமைப்பில் பொருத்தப்பட்டுள் ளன. ஐந்து வகையான மாதிரி களின் விலை டொலர் 189 தொடக் கம் 219 டொலர் வரை.

தொலைபேசியைக் குழப்புதல்

1.5 இறாத்தல் நிறையுடைய கொண்டு திரியக் கூடிய ஒரு கருவி, மற்றவர்கள் கேட்டு விளங்கிக் கொள்ளாதவாறு தொலைபேசி பேச்சுக்களைக் குழப்புகின்றது. ஒலி அறிகுறிகளை இக்கருவி பலதரவு களைக் கொண்ட ஓர் அருவியாக



மாற்றுவதனால் ஒட்டுக் கேட்பவர் கள் வேறு ஒரு பொறியின் உதவி யின்றி பேச்சுக்களை விளங்க முடி யாது. கையடக்கமாக வைத்திருக்கக் கூடிய கணிப்புமானியின் அளவுடைய '3600 குழப்பி' மாதிரியொன்றின் விலை டொலர் 1,195.

காற்று நிரப்பக்கூடிய கூடாரம்


டோக்கியோ ரையர் அன்ட் றபர் ஸ்தாபனத்தில் இருந்து மோபி காற்றுக்கொட்டில் எனப்படும் காற் றால்நிரப்பக்கூடிய கூடாரங்கள் விற் பனைக்குள்ளன. மோட்டார் வாகன பற்றரிக்கு இணைக்கப்பட்ட ,ஊதி யால் ஐந்து நிமிடத்தில் கூடாரம் நிரப்பப்படுகின்றது. 220 சதுரஅடி



நிலப்பரப்பை உடைய பெரிய கூடாரத்தின் விலை 2690 டொலர். 129சதுர அடி நிலப்பரப்பை உடைய சிறியதின் விலை 1925 டொலர் ஆகும். இரண்டு மாதிரிகளும் ஊதியுடன் யப்பானில் கிடைக்கின் றன.

நீர் வாகனம்

மனித சக்தியால் இயங்கும் 11 அடி நீளமான அக்குவாரியிஸ் எனப்படும் நீர் வாகனம், படுத்தி ருக்கும் சைக்கிள் போன்றது.



காலால் மிதிப்பதுடன் கையால் நெம்புகளை அசைத்து மேலதிக சக்தியைப் பெறலாம். இதன் உயர்ந்த கதி மணிக்கு 10மைல் ஆகும். இருப்பிடத்தில் சாய்ந்து உடம்பின் மேற்பகுதியை அங்கும் இங்கும் அசைப்பதனால் மூன்று அடி நீளமான மிதப்புகளின் இறுதிப்பகுதிகளும் அங்கும் இங்கும் அசைந்து வாகனத்தை செலுத்தக்கூடியதாக இருக்கும். விலை 2000டொலருக்கும் குறைவு. எக்கோஸ்போட்ஸ், அமெரிக்கா, 179 ஏச். எஸ் ரி பெற்றலுமா சீஏ 94952.

சக்தியை மீதப்படுத்தல்

வீடுகளில் சுவரில் பொருத்தப்பட் டிருக்கும் சாதாரண ஒளி ஆளியைப் போன்றது. பதினைந்து நிமிடம் அல்லது மணித்தியாலத் திற்கு ஒரு தடவை மின்னோட்ட த்தை நிறுத்தும் வண்ணம் நிகழ்ச்சி திட்டமொன்று கருவிக்குள் அமைக் கப் பட்டுள்ளது. சக்தியை மீதப் படுத்த உதவுகின்றது. விலை 25 டொலர். ஹெம்கோ, பெட்டி 878' வெஸ்மிஸ்டர், சீஏ 92684.

நியூஸ்வீக், ஜூலை 1993.

வடிகட்டும் சாடி

கோப்பி கலக்கப்படும் நீரை வடிகட்ட இரு குவாட் சாடிக்குள் ஓர் உருளை அமைந்துள்ளது. குழாய் நீரில் இருந்து ஈயம் குளோரின் மற்றும் வேறு இரசாய னப் பொருட்களை வடிகட்டு வதற்கு இவ்வுருளையினுள் ஒரு வகைப் பிசினும் வலுவூட்டப் பட்ட காபனும் அடைக்கப் பட் டுள்ளன. மூடியில் உள்ள அளவு மானி எப்பொழுது இவ்வுருளை மாற்றப்பட வேண்டும் என்பதைக் காட்டும். இருநூறாவது தடவை நீர் ஊற்றி நிரப்பியின் மேல் மூடி தானாகவே பூட்டப்படும். புதிய உருளையினால் மாற்றப் படும்போது தரப்படும் திறப்பால் மட்டுமே பூட்டைத் திறக்கலாம். விலை ஏறத்தாள 35 டொலர்.

New Doc 2020-04-06 14.46.20_page-0004.jpg

புதியன அறிமுகம்

பாதுகாப்பு ரேடியோ (வானொலிப்பெட்டி)

தி ஹொரைசன் ஓம்னி மரைன் ரேடியோ ஆகிய மேற்கூறிய கருவி, தேசிய சமுத்திரம் சம்பந்தமானதும் வளிமண்டல நிர்வாகத்தினுடைய அறிகுறிகளைப் பெற்று அவசர வானியல் ஒலிபரப்புக்களை உடனடியாகக் கேட்கும் வண்ணம் உங்களை எச்சரிக்கும். உமது நிலையைக் காட்டும் கருவியுடன் இணைக்கப்பட்டால் உங்கள் சரியான நிலையைக் காட்டி கரையோரப் பாதுகாப்பிற்குத் தொடர்ச்சியான அறிவிப்புக்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஸ்ரன்டட் கொம்மியுனிகேஷன், கோப்பரேஷன் பெட்டி 92151 லொஸ் ஏஞ்சல்ஸ் ஏஏ 90009-2151.

றொபோ-ஹம்வீ- (மனிதனற்ற வாகனம்

கமராவின் உதவியுடன் வீதி அடையாளங்களைப் பின் பற்றி முன்னே நீர்மானிக்கப்பட்ட இடங்களுக்கு இம் மனிதனற்ற இராணுவ வாகனம் செல்லக்கூடியது. வாகனத்தைச் செலுத்துதல், நிறுத்தல், எரிபொருள் கொடுத்தல், பார்வைக் கருவிகள் யாவற்றையும் கணனி சொப்ற் வெயரால் ஆளப்படுகின்றன. வெளியில் இருப்பவர் ஒருவரால் சில செயற்பாடுகள் இப்போது ஆளப்படினும் தொடர் வண்டிக் கூட்டத்தில் ஒடக்கூடியவாறு ஒரு நாள் முற்றாகத் தானாகவே செயற்படக் கூடியது.

தங்கப் பதக்கச் சைக்கிள்

இறகுபோல் பாரங்குறைந்த விண்ட்ரைற்றர சைக்கிளில் வழமையான குறாய்களால் செய்யப்பட்ட சட்டத்திற்குப் பதிலாக காபன் நார் சேர்க்கையால் வடிவமைக்கப்பட்ட உடல் உண்டு. பார்சியோனாவில் நடைபெற்ற 92 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 4000 மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பிரித்தானிய சைக்கிள் ஓட்ட வீரர் கிறிஸ் போட்மன் விண்ட் சிற்றா வில் ஓடி புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டித்



தங்கப் பதக்கத்தையும் வென்றார். ஜெனரல் மோட்டோர்ஸ்க்கு உரித்துள்ள இங்கிலாந்தில் உள்ள லோட்டஸ் குறூப்பினால் அமைக்கப்பட்ட சைக்கிளில் சுமை தாங்கும் இடங்களில் தைத்தேனியம் புகுத்திகளும் காபன்-நார் கில்லுகளும் உள்ளன.

சக்தியுடைய மீன் துடுப்புக்கள்

நீரில் மூழ்குவதற்கு வழமையாக உபயோகிக்கப்படும் மீன் துடுப்புகளுக்குப் பதிலாக விசை மீன் துடுப்புகள் காலின் இயற்கையான ஈரடிப்பு உதைப்பைச் செயற்றிறன் கூடியதாக ஆக்க ஏதுவாக நெளியக்கூடியனவாகவும், வீ உருவத்தில் அமைக்கப்பட்டும் உள்ளன. இதன் காரணமாக 40




நூற்றுவீதம் கூடிய நேரம் ஒட்சினை உபயோகிக்கக் கூடியதாகவும், அதாவது களைப்புக் குறைவாகவும், 50 நூற்றுவீதம் கூடிய உதைப்பைப் பெறக் கூடியதாகவும் இருந்தது. பொலிமுறைத்தேன் ஆல் செய்யப்பட்ட மீன் துடுப்புகளின் விலை 70 டொலர் தொடக்கம் 90 டொலர் ஆகும். வெவ்வேறு நிறங்களில் கிடைக்கும் இடம்: போல் ஃபின், 28 அனாகாப்பா வீதி, சன்ராபாபரா ஏஏ 93101.

கூடுதலான சிறப்புள்ள ஒளிவாங்கி

★ கேபிள் கொழுக்கிகளுக்கு மாற்றீடாக இரு உள்ளக அன்ரினாக்கள் பொருத்தப்பட்டவை எந்த தொலைக்காட்சி சாதனத்துடனும் இயங்கக் கூடியவை.

வலது புறம் இருப்பது ஜெமினி தொழிற்சாலையின் ஜி 2000 அதன் விலை 50 டொலரிலிருந்து 60 டொலர் வரை.



இடது புறத்திலிருப்பது ரேக் ரெக்னோலஜீஸின் ரிவி 20. அதன் விலை ஏறக்குறைய 80 டொலர்.

இச் சாதனங்கள் மங்கலான இரட்டிப்பு விம்பம் தொலைக் காட்சித் திரையில் விழுவதையும் வீடியோ இரைச்சலையும் (Snow) குறைக்கக் கூடியவை.

ஜெமினி தொழிற்சாலைகள், 215 என்ரின் வீதி, மினீரன் நியூஜேர்சி 07014 ரேக் ரெக் னோலொஜில் கூட்டுத்தாபனம்: 233-8 றொபின்ஸ் ஒழுங்கை, வியோலெற், நியூயோர்க் 11791.

★ Cable (கடிப்பான வயர்)

கேபிள் கொழுக்கிகளுக்கு-கடிப்பான வயர் இணைப்புகளுக்கு.

New Doc 2020-04-06 14.46.20_page-0005.jpg

செய்திச் சரம்



உயர் மட்டப் பேச்சு வார்த்தை

உயர்அலுவலகப் பதவி வெற்றிடங்களை நிரப்பும் விடயத்தில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் காட்டிவரும் தாமதம் மந்திரிசபை உறுப்பினர்களின் கோபத்தைத் தூண்டியுள்ளது. பதவியேற்று நான்கு மாதங்களாகியும் அலுவலக உயர்மட்ட நிலையில் காற்பங்கிலும்குறைவான வெற்றிடங்களையே ஜனாதிபதி கிளின்ரன் நிரப்பியுள்ளார். இது நிர்வாகத் துறையின் சகல பிரிவுகளிலும் வேலை செய்ய முடியாத நிலைமையை உருவாக்கியுள்ளது. மந்திரிசபை கூடும்போதெல்லாம் இதுவே முக்கிய கதையாய் அமைகிறது என்று உயர் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

நிர்வாக உள்துறைப் பகுதியினர் சிலர் கிளின்ரன் மந்திரி சபையில் பல்துறை நிபுணர்களைச் சேர்ப்பதற்காக எடுக்கும் பாரிய தேடுதல் முயற்சியே இவ் அசாதாரண தாமதத்திற்குக்காரணம் எனக்குறைகூறுகிறார்கள். ஒவ்வொரு நியமனத்தையும் ஜனாதிபதி தான் தனிப்பட்ட முறையில் பார்த்துக் கையெழுத்திடவேண்டும் என்ற வற்புறுத்தலும் அண்மைக்காலமாக அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருக்கின்ற பொருளாதாரத் திட்டங்களுமே இத்தாமதத்திற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டுகின்றனர். கிளின்ரனின் நீண்டகால நண்பரும், வெள்ளை மாளிகையின் ஆளணிப் பணிப்பாளரும், ஜனாதிபதியின் எல்லாப் பிரயாணங்களிலும் அவரைப் பின்தொடர்பவருமான புறூயிஸ் லின்டஸி நியமனதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், அந்நியமனங்களை அரசியல்வாயிலாக நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதிக்குப் போதியளவு நேரம் கிடைக்கச் செய்வதில்லை என்பதே உண்மை. மந்திரிசபையின் 400 உயர் மட்டப் பதவி வெற்றிடங்களில், 163 வெற்றிடங்கள் நிரப்பப் பட்டுள்ளன. 230 இதுவரையிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 95 நியமனங்கள் உறுதிப் படுத்தப் பட்டுள்ளன.

நியூஸ்வீக், ஜூன்-7, 1993

வாகனம் நிறுத்தும் சித்திரக் கூடம்

பாரிஸ் காரர்களிடமுள்ள சிறப்பம்சம் என்ன வெனில், அவர்கள் எதையும் நளினமாணியில் செய்யக் கூடியவர்கள். சாம்ப்ஸ் எலிசிஸ் என்னும் வீதியை திருத்தி அழகுபடுத்தும் பணியை பிரெஞ்சு அதிகாரிகள் தற்போது முடித்துள்ளார்கள். இவ் வீதி சமீப காலமாக உல்லாசப் பிரயாணிகளுக்குரிய கடைகளுக்கும், உடன் உணவுக் கடைகளுக்கும் பிரசித்தமாகி வருகிறது. பிரதான வீதிக்கு சமாந்தரமாகச் செல்லும் பக்க வீதிகள் 65 அடிகளுக்கு அகலமாக்கப் பட்ட பக்க நடை பாதைகளால் பிரதியீடு செய்யப் பட்டுள்ளன. இதனால் இடிக்கப் பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடத்துக்கு ஈரப்பூச்சுச் சித்திரங்கள் வரையப் பட்ட நிலத்திற்குக் கராஜ் (கூடம்) ஒன்று உள்ளது. இதை பாரிஸ் நகர வடிவமைப் பாளர்கள் ''ஐரோப் பாவிலேயே மிக அழகானது,, என்று வர்ணிக்கிறார்கள்.

பொதுமக்கள் காட்சிக்கு

இந்தக் கோடை காலத்தில் பக்கிங்காம் மாளிகை பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து விடப்படும் எனும் செய்தி அரச மாளிகைக் காவலாளருக்கு உற்சாக மூட்டியுள்ளது. நுழைவுக் கட்டணம் 8 பவுண்களாகும். நுழைவுக் கட்டணத்தால் கிடைக்கும் வருமானம் சென்ற நவம்பர் மாதம் ஏற்பட்ட நெருப்பினால் சேதமடைந்த விண்சர் மாளிகையின் பகுதியைத் திருத்துவதற்குச் செலவிடப்படும். அப்பணத்தின் பெறுமதிக்கா? எனக் கேட்ட போது, 1982 ஆம் ஆண்டு அரச மாளிகை இரகசியங்களை வெளியிட்டமைக்கல் ஸ்பெக் என்பவர் இவ்வாறு கூறினார். அந்தப் பணத்திற்கு மகாராணியுடன் நான் ஒரு கோப்பை தேநீர் அருந்தி அவரது படுக்கையறையைச் சுற்றிப் பார்த்து அத்துடன் ஒரு சுற்று சாமானும் வெள்ளரிக்காயும் உண்டு களிக்க விரும்புகிறேன் என்று கூறினார்.

New Doc 2020-04-06 14.46.20_page-0006.jpg

இஸ்ரேலில் முதலீடு செய்தல்



சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தப்பட்ட மையை உடைத்தெறிவ தற்கு லிபியத் தலை வர் மோமர் கடாபி துடி யாய்த் துடிக்கிறார். இஸ்ரேல் முதலீட்டாள ரும், ஆயுதவியாபாரியும், முன்னாள் புலனாய்வுத் துறை உத்தியோகத்தரு மாகிய யாக்கோ நிம் றோடியின் கூற்றின்படி கடாபி காசா பிரதே சத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இஸ்ரேலுக்குத் தானே ஒரு விஜயத்தை மேற் கொள்ளத் தயாராகியி ருக்கிறார் என அறிகி றோம். சென்ற கிழமை 192 லிபிய யாத்திரிகர் கள் ஜெருசலத்தைத் தரிசிப்பதற்கு வேண்டிய உதவி புரிந்தவரும் இந்த நிம்றோடிதான். இவர் கடாபியின் காரியதரிசி யை (செயலாளரை) அட் டன்காஷோகியின் பாரி சிலுள்ள வீட்டிற் சென்று ஏப்ரல் மாதம் கண்டு கதைத்ததாக கூறுகிறார். கடாபி சமா தானக் குடும்பத்தைச் சேர விரும்புவது மாத்தி ரமன்றி அதற்குரிய செலவுகளையும் ஏற்கத் தயாராயுள்ளார் என வும் கூறுகிறார். இஸ் ரேல் கைப்பற்றியுள்ள காசா பிரதேசத்தில் பல நூறாயிரம் பாலஸ் தீனிய அகதிகளுக்காகக் கோடானு கோடி டொலர்களைச் செலவ ழிக்கக் கடாபி தயார் என அவருக்கு சமிக்ஞை கிடைத்துள்ளதாம். காசா பிரதேசத்தை மத்திய கிழக்கின் கொங் கொங் ஆக மாற்றுவதே அவரது நோக்கமாம். இது சம்பந்தமாக இஸ் ரேல்கடாபியுடன் பேச்சு வார்த்தையில் ஈடு படத் தயாரா? இஸ்ரேலின் பிரதி அந் நிய நாட்டு மந்திரியா கிய ''யோசிபெயிலின்'' இஸ்ரேலை விலைக்கு வாங்கமுடியாது என்று கூறுகிறார். எவ்வாறும் நிம்றோடி நம்பிக்கை இழக்கவில்லை. ஈரா வியப் பணயக் கைதிக ளுக்காக ஆயுதங்களைக் கைமாறும் விடயத்தில் தன் திறமையைக் காட் டியுள்ள இந்த அனுபவ சாலி இதிலும் பார்க்க நூதனமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதை கண்டி ருக்கிறார்.

சதித்திட்டம்

ஏட்டிக்குப் போட்டி

ஜோர்ஜ் புஷ் தனது பரிவாரங்களுடன் ஏப் ரல் மாதம் குவைத்துக்கு விஜயம் செய்த பொழுது புஷ்சின்மனைவி பாபறா புஷ், இராஜாங்கக் காரிய தரிசி ஜேம்ஸ் பேக்கர் உட்பட சகலரையும் கொலை செய்ய ஈராக் சதித்திட்டம் வகுத்தது உண்மைதான் என எஃப் பி ஐயும் சிஐஏயும் முடிவு கட்டியுள்ளன. வெள்ளை மாளிகையைச் சேர்ந்த சில உயர் அதி காரிகள் கிடைத்துள்ள ஆதாரங்கள் இந்த முடிவை உறுதிப்படுத் தப் போதுமானவை அல்ல என்று கருதுகின்ற போதிலும் தேசிய பாது காப்பு ஆலோசகர் அந் தோனி லேக் எவ்வகை யான பதிலடி நடவடிக் கையை வாஷிங்டன் மேற்கொள்ள வேண்டு மென்பதையிட்டு பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார் என நியூஸ் வீக் அறிவித்துள்ளது. இதில் ஒரு பிரச்சினை உள்ளது. அதாவது ஈராக் கில் மக்களைப் பாதிக் காது தாக்கக் கூடிய இராணுவ இலக்குகள் அனைத்துமே தாக்கப் பட்டு விட்டன. சதியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட 14 ஈராக் கியர்களிலும், குவைத்தி யர்களிலும் இருவர் தம் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். ஏனை யோர் சென்ற கிழமை நீதிமன்றத்தில் விசாரிக் கப்பட்டனர்.

ஷேக்ஸ்பியரின் மற்றும் ஒரு நாடகம்

சேலொக்கோம்ஸ் ஐப் போன்ற துப்பறியுட் நிபு ணர் ஒருவர் சேக்ஸ்பிய ரின் காணாமற்போன ஒரு நாடகத்தைக் கண்டு பிடித்துள்ளாரா? ''காடெனியோ''(1612 என்று அழைக்கப்படும் ஒரு நாடகத்தின் இணை ஆசிரியர் சேக்ஸ்பியர் எனக்கூறப்படுகிறது. ஆனால் இந்நூல் ஒரு பொழுதும் பிரசுரிக்கப் படவில்லை. அது தொலைந்து விட்டது என எல்லோரும் கருதி னர். இப்பொழுது நியூ யோர்க்கைச் சேர்ந்த சுவடி நிபுணராகிய சாள்ஸ் கமில்ரன் தான் அந்த நாடகத்தைக் கண்டு பிடித்துள்ளதாக கூறுகிறார். கையெ முத்து ஒப்பு நோக்கு தலே இவரது கூற்றுக்கு ஆதாரமாகும். சாள்ஸ் கமில்ரன் சேக்ஸ்பியரின் மரணசாதனத்தின் கையெழுத்தை பிரித் தானிய நூதனசாலை யின் வாசிகசாலையி லுள்ள, தலையங்கமற்ற கையொப்பமிடப் படாத 1612ஆம் ஆண்டுகையெ முத்துப் பிரதியுடன் ஒப் பிட்டு இவ்விரு தஸ்தா வேசுகளும் ஒருவரால் எழுதப்பட்டன எனக் கூறுகிறார். ஆகவே கையொப்பமிடப்படாத அந்நாடகம் காடெனி யோவாக இருக்க வேண் டும் என்கிறது அவரது கட்சி. இந்நூலின் கையெ முத்து சேக்ஸ்பியருடை யது என ஒரு நீதிமன் றத்தில் நிரூபிப்பதில் தனக்கு எவ்வித கஷ்ட முமிருக்காது எனக் கூறு கிறார்.

New Doc 2020-04-06 14.46.20_page-0007.jpg

செய்திச் சரம்

பொஸ்னியாவிற்கு ஆயுத விற்பனை



ஐ. நா. வி தி த் த பொஸ்னியாவிற்கு ஆயுத விற்பனைத் தடையை மீற எத்தனித்தமை பனாமாவின் ஜனாதிபதி நிசோமோ என்டாறா வைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு பிரபல ஐரோப்பிய ஆயுதவியாபாரிக்கும் உள்ள தொடர்பை வெளிக் கொணர்ந்துள்ளது. சென்ற மார்ச் மாதம் பனாமாவின் பாசிலோனித் தூதரகம் 30,000 தானியங்கி ஆயுதங்களும் 7 மில்லியன் சுற்று வெடிமருந்துகளும் ஒசெக் கும் மனி யிடமிருந்து வாங்க அதிகாரம் வழங்கியுள்ளது. ஆயுதத்தினதும் வெடி மருந்துகளினதும் பாரிய அளவு செக்கோசிலவாக்கியாவினதும் ஸ்பாவிய அதிகாரிகளினதும் கவனத்தை ஈர்த்தது. 1989-ம் ஆண்டின் அமெரிக்க படையெடுப்பின் பின்னர் பனாமா ஓர் இராணுவத்தை வைத்திருக்கவில்லை. வாங்கிய ஆயுதங்களையும், உரிய வெடிமருந்துகளையும் கப்பலேற்றுவதற்கு செக் அதிகாரிகள் தடைவிதித்தனர். இவை இறுதியாக பொஸ்னியா அரசின் இராணுவத்தை அடையவிருந்தன என்று ஸ்பானிய பொலிஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள். புகழ் பெற்ற ஐரோப்பிய ஆயுத வியாபாரி சேச்பிரங்கோயி பெற்றுக் கொண்டதாகவே இவ்வியாபாரத்துத் தரகர் எனக் குற்றஞ் சாட்டப் படுகிறது. என்டாறாவிலுள்ள சட்டக் கம்பனி பெற்றுனை பனாமாவில் பிரதி நிதித்துவம் செய்கிறது. அவர் பனாமாவில் பதிவு செய்த கப்பல்களும் பெல்மர் கம்பனிகளும் வைத்திருக்கிறார். பார்சிலோனியாவிலுள்ள பனாமாவின் தூதுவர் இந்தச் சட்டக் கம்பனியின் மூத்த பங்காளரின் சகோதரராவார். இத் தூதுவரின் வேலை விசாரணை முடியும் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் கெற்றாக்கி இந்த ஆயுத வியாபாரத்தில் நமக்கு ஈடுபாடில்லை எனக் கூறுகிறார்.

நியூஸ்வீக், மே 10, 1993.

என்னை ஆசீர்வதித்த ஒற்றன்

வத்திக்கானுக்குள் கொம்யூனிஸ்ற் ஒற்றர்கள் வேவு பார்க்கிறார்கள் என்ற கதையை யிட்டு பல வருடங்களாக வத்திக்கான் மௌனம் சாதித்து வந்தது. இறுதியில் சென்ற கிழமை தேவாலய அதிகாரிகள், சோவியத் ஒற்றர்கள் சுத்தோலிக்க குருமாராகப் பயிற்சி பெற்று வேலை செய்து வருகிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த விடயம் என்று ஒத்துக் கொண்டார்கள். கொம்யூனிஸ்ற் நாடுகளில் மதப் பிரச்சாரம் செய்பவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ''பொன்ரிஃபிக்கல் இன்ஸ்ரிற் ரியூற் ஒஃப் ஒறியென்ரல் ஸ்ரடிஸ்'' என்னும் ஸ்தாபனத்தின் 75 ஆவ் வருடாந்த மகாநாட்டில் இச் செய்தி வெளிபிடப்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் பணிப்பாளர் கிளாறன்ஸ் கலகர், பிதா செமினரியிலுள்ள சிலர் குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் மொஸ்கோவின் கே. ஜி. பி. க்கு வேவுபார்த்தனர் என்பதை ஏற்றுக்கொண்டனர். வத்திக்கானின் நீண்ட நாள் எதிரியாகிய சோவியத் அரசாங்கம் தமது ஒற்றர்கள் நிரட்டிய செய்திகளை சோவியத்தில் கத்தோலிக்க மதப் பிரச்சாரத்தை தடுப்பதற்கு உபயோகித்துள்ளார்கள்

இப்பொழுது வத்திக்கானின் மொஸ்கோவுடனான தொடர்பு சுமுகமாயுள்ளது. 1990ஆம் ஆண்டு இராஜரீகத் தொடர்புகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. அதனால் வேவு பார்க்கும் முயற்சிகள் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வெதிர் பார்ப்புச் சரியானதா என்பதை அறிவதற்கு வழியில்லை. நாம் அறிந்த ஊடுருவற்காரரை நாம் சகித்துக் கொள்கிறோம் என்று வத்திக்கான் உயர் அதிகாரியாகிய கார்ட்டினல் ஆச்சில் சில்வெஸ்ரினி கூறுகிறார். நாம் ஒரு பொழுதும் கண்டுபிடிக்காத ஊடுருவல்காரரே பிரச்சினையானவர்கள்.

சில ஒற்றர்கள் உண்மையாகவே குருத்துவத் தொழிலை மேற்கொண்டவர்களாயிருக்கலாம்; அவர்கள் கொடுத்து வந்த செய்திகளே அவர்கள் தமது சமயத்தைப் பின்பற்றுவதற்காகச் சோவியத் அரசாங்கத்திற்குச் செலுத்தும் கட்டணமாகும். மற்றவர்கள் சரியான கள்ளர்களாயிருக்கலாம்; அவர்களின் உண்மை வேடத்தைக் காட்டிக்கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை தெரிவிக்கவில்லை. இந்த விடயத்தில் ஒப்புக்கொடுத்தல் (confession) அதிகம் உதவக் கூடியதல்ல.


New Doc 2020-04-06 14.46.20_page-0008.jpg

காதில் விழுந்தவை

★ ''சுடவுளுக்காக சுடுவதை நிறுத்து! நீ ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கப் போகின் றாயா?

பொஸ்னியாவிலுள்ள பொற்ணிக்கா பகுதியினுள் பிரவேசித்துக் கொண்டி ருந்த ஐ. நா. துருப்புக்களின் அணி மீது சுடுவதைத் தவிர்க்குமாறு ஒரு துப்பாக்கி வீரரை குறோஷியன் இராணுவ உத்தி யோகத்தர் பாங்கோஸ்ரானிக் கட்டளை யிட்டார்.





★ ரஷ்ய இராப் பாடகர் டீம். லி பல்லோல் தனது சங்கீதத்தைப் பற்றிக் கூறியபோது:

''நாம் அநேகமாக ஆங்கிலத்தில்தான் தட்டிப் பாடுவோம். ஏனெனில் ரஷ்ய மொழி யில் அது முட்டாள் தனமானதாக ஒலிக்கும் இது ஒருவகை குறைபாட்டை நிறைவு செய் யும் மொழியாக உள்ளது. இதில் ஆங்கிலச் சொற்களும் ரஷ்ய இலக்கணமும் இடம் பெறுகின்றன.

★ ''வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு பற்றுச்சீட்டுக்கள் பெற மொஸ்கோ எங்க ளுக்கு நிதி ஒதுக்கவில்லை.''

கொலம்பியா மாவட்டத்திற்கு வாகனங் களை நிறுத்தி வைப்பதில் ஏற்பட்ட தவறுக் காக 3.9 மில்லியன் டொலரை அபராதமாக முன்னைய சோவியத் யூனியன் அரசாங்கம் செலுத்த வேண்டி இருந்தபோது, வாஷிங் டனில் உள்ள ரஷ்ய ஸ்தானிகராலயத்தில் பொது நலன் பேச்சாளரான ஸேர்கேய் குஸ்நெற்ஸொவ் கூறியது.



New Doc 2020-04-06 14.46.20_page-0009.jpg

காலத்தின் தேவை



தேசியத் தலைவரின் செய்தியிலிருந்து:

கல்வி என்பது அறிவுசார்ந்தது.

ஒருவன் தன்னைப் பற்றியும், தனது சமூகவாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்குக் கல்வி அத்தியாவசியமானது. கல்வியறிவு ஒருவனது ஆளுமையைச் சிறப்பிக்கின்றது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது. அவனை முழுமனிதனாக்கி விடுகின்றது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து, வளர்ந்து வருகின்றது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகின்றது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட துறை சார்ந்த படிப்புக்கள் ஒரு பரந்த உலகப்பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறை சார்ந்த பள்ளி, கல்லூரிப் படிப்புக்களோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவை புங்கூட

நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறையென்ற வரம்பிற்குள் மட்டும் ஒதுங்கி நின்று விடக்கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும், தேவைக்கும் பயன்படும் வகையில் நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளும் வகையில் நாம் எமது பொது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவே எம்மைச் சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகின்றது.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

New Doc 2020-04-06 14.46.20_page-0010.jpg

ஜெனரலின் தேர்தல்

அதிகம் கேள்விப்படாத இராணுவத் தலைவரொருவர் முறுகல் நிலையைத் தணித்துள்ளார்

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் பிறப்பிக்காத நாளென்று யூலை 19 கணிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தலைவர் ஜெனரல் அப்துல் வாகீத் காக்கர்தான் இதற்குக் காரணமானவர். பிரதமர் நவாஸ் ஷரிபுக்கும் ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்குமிடையில் தோன்றிய மோதல் நிலையின் பின்பு இருவரின் இராஜினாமா நேரத்திலும் இவர் வழமைக்கு மாறாக தனது இராணுவத்தை தெருக்களில் உலாவவிடாது தங்கள் இருப்பிடங்களில் வைத்திருந்தார். ''இராணுவம் பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றியுள்ளது. காரணம் இருந்தும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது'' என்று புதிய ஜனாதிபதி வாசிம் சஜ்ஜாத் தெரிவித்துள்ளார். அரசியற் தலைமைப்பீட மாற்றத்தை அமைதியாக நடக்க உதவியதற்காக ஆய்வாளர்கள் ஜெனரல் வாகீத்திற்கு புகழாரம் சூட்டியுள்ளார்கள். இம்முறை ஜனநாயகத்தை காப்பாற்றியது இராணுவம் தான் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

சென்ற ஜனவரி மாதம் இராணுவத் தலைவர் ஜெனரல் அசிப் நவாஸ் ஜான்ஜுவா இறந்தபோது ஆசியாவின் ஆறாவது மிகப்பெரிய இராணுவத்திற்குத் தலைவராக வாகீத் நியமிக்கப்படுவாரென ஒருவரும் நினைத்திருக்கவில்லை. இவர் உருவத்தில் சிறியவரான படியால் ',சின்ன வாகீத்'' என்ற பட்டப்பெயர் இவருக்கு உண்டு. இவருக்கு அரசியல் அனுபவம் கிடையாது. அத்துடன் இஸ்லாமாபாத்தின் ஆளும் வர்க்கத்துடன் இவருக்குப் பலமான உறவுகள் இல்லை. எனினும் இவருக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. இவருடைய குடும்பம் பாகிஸ்தானில் மிகப் பிரசித்தமான வகையில் ஒன்றாகும். தேச பிதா முகம்மது அலி ஜின்னாவின் நெருங்கிய தோழர் வாகீத்தின் மாமன் சர்தார் (குலத்தலைமைப் பட்டப்பெயர்)



இந்த நேரத்தின் மனிதன் வாகீத் வெற்றியடைந்தவர்களில் ஒருவர் பெனாசீர் பூட்டோ.

அப்துல் றாப் நிஷ்தர் ஆவார். பாகிஸ்தானின் ஸ்தாபகர்களில் ஒருவராக நிஷ்தர் ஏற்கப்பட்டுள்ளார். பலுச்சிஸ்தான் மாகாணத்தில் பஷ்து மொழி பேசும் காக்கர் குலத்தைச் சேர்ந்தவர் வாகீத். பல தலைமுறைகளாக இவர்கள் வடமேற்கு எல்லை மாகாணத்தின் தலைநகர் ஆகிய பெஷாவரில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

56 வயதுடைய வாகீத் எல்லைப் பிரதேச இராணுவ அணியில் அதிகாரியாக 1959 இல் சேர்ந்தார். அவர் கனடாவிலும் றவால்பின்டி இராணுவக் கல்லூரியிலும் பயிற்சி பெற்றார். 1965 இலும், 1971 இலும் இந்தியாவுடனான போர்களில் பங்குபற்றிய அனுபவம் இவருக்குண்டு. பலுச்சிஸ்தான் தலைநகர் குவெற்றாவிலுள்ள 12 ஆவது இராணுவ அணித்தளபதியாக இருக்கும் போதே பாகிஸ்தானின் பதினொராவது இராணுவத் தலைவராக இவர் நியமனம் பெற்றுள்ளார். நான்கு மூத்த அதிகாரிகளுக்கு மேலால் இவருக்கு இந்த நியமனம் கிடைத்துள்ளது. இவர் நேர்மையானவரென்றும், தொழில்முறைச் சிறப்புடையவரென்றும் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகீத் தலைமை தாங்கும் இராணுவம் பணத்தையும் அதிகாரத்தையும் குறியாகக் கொண்டுள்ளது. தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 26.8 வீதத்தை அது தனதாக்கிக் கொள்கிறது. இதில் இராணுவத் தளபாடக் கொள்வனவில் கடனுக்கு வாங்கப் படுவனவற்றிற்கு கொடுக்கப்பட வேண்டிய வட்டி சேர்க்கப்படவில்லை. ஒருவிதத்தில் பார்த்தால் இராணுவமே பாகிஸ்தானில் மிகப் பெரிய வியாபார ஸ்தாபனமாகும். அதற்கு காலை உணவுத் தாவியக் கொள்வனவிலிருந்து வங்கி முதலீடு வரை நெருங்கிய தொடர்புண்டு. பாகிஸ்தானின் 46 வருடச் சரித்திரத்தில் பாதிகாலம் இராணுவமே ஆட்சி செய்துள்ளது. 1988 ஆம் ஆண்டு குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட விமானத்தில் இறந்த சியாஉல் ஹக் தான் பாகிஸ்தானை ஆண்ட இறுதி இராணுவ ஜெனரலாவார்.

நேரடியாகத் தலைமைப் பதவியை தம் கையில் வைத்திராத காலத்திலும் அரசியல் தலைவர்களை ஆட்டி அசைக்கும் கலையை இராணுவம் நன்றாகப் பயின்று வைத்திருக்கின்றது. அரசியற் கொள்கைகளில் தலையிடுவது மக்களால் தெரிவு செய்யப்பட்டோருக்கு புத்திசொல்வது என்றெல்லாம் பாகிஸ்தான் இராணுவம் செயற்படுகின்றது. இரகசிய பொறிக் கதவையும் இயக்கியுள்ள

New Doc 2020-04-06 14.46.20_page-0011.jpg

னர். சியா உல்ஹக் இறந்தபின் இராணுவத் தலைமைக்கு வந்த மிர்சா அஸ்லாம் பெக் என்பவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே 1990 இல் பிரதமர் பெனாசிர் பூட்டோ தனது பதவியை இழந்தார் என்று பலர் கருதுகின்றனர். இராணுவத்தின் ஆதரவற்ற அரசியல் தலைவர்கள் பதவியில் நிலைப்பது அபூர்வம். பாகிஸ்தானின் முக்கோண ஆட்சிப் பீடத்தில் - ஜனாதிபதி, பிரதமர், இராணுவத்தலைவர் - இராணுவத் தலைவரே அதிசக்தி வாய்ந்தவர் என்று சொன்னால் மிகையாகாது. ஆங்கில தினசரி பத்திரிகையான ''த நியூஸ்'' ஆசிரியர் மலீகா லோதி சொல்கிறார்: ''தங்கள் பக்கம் சார்பாக இருந்தால் இராணுவத் தலையீடு அரசியல்வாதிகளுக்கு விருப்புடையதாகும்'' என்று.

அண்மையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நடந்த அதிகாரப் போட்டியில் ஜெனரல் வாகீத் தொடக்கத்தில் தலையிட விரும்பவில்லை. பிரதமர் நவாஸ் ஷரிப் வயது 44, ஜனாதிபதி குலாம் இஷாக்கான் வயது 78, அரசியல் சாசனபடி ஓர் அரசைக் கலைக்க அதிகாரமற்றவரென கணை தொடுத்தார். ஜனாதிபதியோ தனக்கு அதிகாரமுண்டு என்று வாதிட்டு அரசைக் கலைத்தே விட்டார். ஊழல் மலிந்துவிட்டதாகவும் அரசை நடத்த பிரதமருக்கு வல்லமை இல்லையெனவும் ஜனாதிபதி குற்றம் சாட்டினார். மே மாதம் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் ஆட்சிக் கலைப்பை நிராகரித்தது. முறுகல் நிலை விஸ்வரூபம் எடுத்தது. மாகாணங்களில் மோதல்கள் ஆரம்பமாகின. ஜூன் மாதப் பிற்பகுதியில் லாகோர் நகரில் சமஷ்டிப் படையினருக்கும் மாகாணக் காவல் துறைக்குமிடையில் பிரதமர் ஷரிப் ஒரு மோதலை உருவாக்கச் செயற்பட்டபோது ஜெனரல்வாகீத் தலையிட நேர்ந்தது. இவருடைய தலையீடு மோதல் நிலையை தணிக்க உதவியது.

இறுதியில் ஜூன் மாதம் 30ஆம் திகதி இராணுவத்தின் ஆழ்ந்த கவலையை வாகீத் பிரதமர் ஷரிபிற்க்கு தெரிவித்தார். அடுத்த நாள் ஷரிப் சார்புப் பத்திரிகைகள் இராணுவத்தை ஜனாதிபதி பக்கம் சார்ந்து விட்டதாக குற்றஞ் சாட்டின. திடீர் கோபம் கொள்ளும் குணமுள்ள வாகித் கோபாவேசமானார். இதன்பின் நிலைபரம் மாறிவிட்டது. வெளியில் தோன்றும் சந்தர்ப்பங்களையும் மறுத்து விட்டு ஜெனரல் வாகித் நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதையே தனது முதற் கருமமாகக் கைக்கொண்டார்.

இதற்கிடையில் பெனாசிர் பூட்டோவின் ஆதரவாளர்கள் பிரதமர் ஷரிபை தூக்கி எறியும்படி கோரி 280 கிலோ மீற்றர் ''நெடிய ஊர்வலத்தை'' இஸ்லாமாபாத்தை நோக்கி நடத்தப்போவதாக தெரிவித்தார். ஜூன் 15இல் தங்கள் பயணத்தை ஆரம்பிப்பதற்காக லாகூரில் கூடினர். ஜெனரல் வாகித் தனது பொறுமையை இழந்தார். அவர் உடனே தனது படையைத் தலைநகருக்கு அனுப்பினார்; ஆனால் தெருக்களில் உலாவ வேண்டாமென்றும் ஆணை பிறப்பித்தார். பின்பு இராஜினாமாக்களை அவர் பேச்சுக்கள் மூலம் நடத்தி வைத்தார். இராணுவம் தலையிடாத தேர்தல் நடாத்தப்படும் என்ற உத்தரவாதம் கொடுத்த பூட்டோவின் நெடிய ஊர்வலத்தையும்நிறுத்திவைத்தார். பிறைடே ரைம்ஸ் என்ற லாகூர் தினசரி ஆசிரியர் சேத்தி சொல்கிறார்: ''இராணுவத்தை நடுநிலை வகிக்கச்செய்தவர் ஜெனரல்வாகித் ஆவார்''என்று.

வாகித்தின் பொறுமையே முறுகல் நிலையை வளர விட்டது என்று சிலர் தெரிவிக்கின்றனர். இவருக்கு முன் இப்பதவியிலிருந்த ஜெனரல் ஆசிப்பும் இராணுவத்தை அரசியலில் தலையிடாமல் வைத்திருந்தார். ஆனால் சிந்து மாகாணத்தில் நிலைமை கட்டுக்கடங்காமல் போக அவர் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டி வந்துள்ளது. இதுபோன்ற நிலைமைகளைச் சமாளிப்பதில் வாகித்திலும் பார்க்க ஆசிப்புக்கு கூடிய அனுபவம் உண்டு. இளைப்பாறிய உயர் இராணுவ அதிகாரி ஒருவர் சொல்கிறார்: ''அவர்(வாகித்) தலையிடத் தயங்குவது அனுபவக் குறைவால் தான்; தீர்க்கமான முறையில் முன் கூட்டியே அறிவுறுத்தல் செய்யப் பட்டிருந்தால் நிலைமை சீராகியிருக்கும்''என்று. பாகிஸ்தான் சரித்திரத்தில் அண்மைக்காலம் தான் இராணுவச்சட்டம் அமுலாக்கப்படாத காலமாகும். 1988ஆம் ஆண்டுக்கும் இவ்வாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பல சந்தர்ப்பங்களில் இராணுவச்சட்டம் வெளியிடப்பட்டிருக்கலாம். ஆனால் அரசியல் வாதிகள் இராணுவத்தின் பரிந்துரையின் படி நடந்தபடியால் இராணுவத் தலையீடு தேவையற்றதாகியது என்று அவர் தொடர்ந்து கூறியுள்ளார்.

இந்தத் தலைமைப் போட்டியில் ஜெனரல் வாகித் சக்திமானாகத் தோற்றினாலும் இதில் உண்மை வெற்றி பெனாசிர் பூட்டோவுக்கே. தேசியப் பேரவைத் தேர்தல் ஒக்டோபர் 6இல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாணத் தேர்தல்கள் ஒக்டோபர் 9 இல் தொடரும். பூட்டோவுக்கு வெற்றியீட்ட நல்ல சந்தர்ப்பம் உண்டு. காபந்து அரசுப் பிரதமர் மொஈன் குறேஷி நடுநிலை வகிக்கும் நோக்குடன் தனது நிர்வாக அங்கத்தவர்கள் தேர்தலில் பங்கேற்க வேண்டாமெனப் பணித்துள்ளார். தூக்கியெறியப்பட்ட பிரதமர் ஷரிப் பலமிழந்த நிலையிலுள்ளார். பூட்டோவுடன் நிற்கும் இஷாக்கான் தேர்தலில் நிற்கும் சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. முன்னாள் பிரதமர் ஷரிப் 1990 ஆம் ஆண்டுத் தேர்தலில் பல தில்லுமுல்லுச் செய்து பதவிக்கு வந்ததாக பூட்டோ குற்றம் சாட்டுகிறார். அதன் பின் தான் அவர் தேர்தல் சீர்திருத்தத்தையும் புதிய தேர்தலையும் கோரியுள்ளார். மீண்டும் பதவிக்குவர அவருக்கு நல்ல அறிகுறிகள் தோன்றுகின்றன. இதற்காக அவர் ஜெனரல் வாகித்துக்கு நன்றி கூற வேண்டும்.

ஏசியாவீக், ஒகஸ்ட் 4, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0012.jpg

ஒரு மாவீரனின் நிழல்



ஔசான் மணமகள் கின் கியி (Khinkyi) யும் 1942ல். பர்மிய சுதந்திரத் திற்கு முன் தலைவராயிருந்த இவரின் கொலையின் பின்னணியில் இயங்கினார்கள் என்பது பற்றி புதிய கேள்விகள் எழுந்துள்ளன.

தேசிய வீரர்கள் எவ்வளவு காலம் நிலைப்பார்கள்? இந்த நாட்டில் வெகு காலமில்லை. தான் பதினெட்டு மாத வாழ்வுக்கு மேல் கொடுக்க மாட்டேன் (Aung San) ஆங்சான், தனது படு கொலைக்குப் பதினெட்டு மாதம் ஆறு நாட்களுக்கு முன் பாக.

ஜூலை 19 அன்று பர்மா தனது தியாகிகள் நாளைக் கொண்டாடும் நாட்டின் சுதந்திரத்திற்கு வழி நடத்திய ஆங்சான் கல்லறையில் கல் முகம் படைத்த இராணுவத் தளகர்த்தர்கள் மலர் வளையம் சாத்துவார்கள். பின்பு மரியாதை மௌனம் செய்வார்கள். ஒரு பலமான செழிப்பான பர்மாவைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே ஒரு தலைவன் ஆங்சான் என்பதையும் 1947 இல் அவருடைய கொலை இதைத் தடுத்து விட்டதையும் பெரும் பான்மையான பர்மிய மக்கள் நம்புகின்றனர். ஆனால் இக் கொலை இராணுவ ஆட்சியாளர்களுக்கு இந்த வரண்ட நாட்டின் ஆட்சிப் பீடத்தைக் காலப் போக்கில் கொடுத்துவிட்டது. ஆசிய நாடுகளின் அரசியல் சரித்திரத்தில் ஆங்சான் கொலை ஒரு தீராத மர்மமாகவே பலரின் கருத்திலுள்ளது.

உயிரோடிருக்கும் பலரிலும் பார்க்கத் தனியொரு மனிதனுக்கு இதைப் பற்றிக் கூடுதலாகத் தெரியக்கூடும். இளைப்பாறிய ஜெனரலும் திரை மறைவில் அரசியல் பலவானுமாகிய 82 வயதுடைய நீவின் தான் அவர். ஆங்சானுடைய ஆறு மந்திரிகளினதும் கொலையால் பெரும் இலாபம் பெற்றவர் இவர்தான். தன்னாட்டைப் பிரிந்து அவுஸ்திரேலியாவில் வாழும் முன்னாள் பர்மிய கடற்படை அதிகாரி கின் ஔன்ங் (Kin Oung) எழுதுகிறார் ''ஆங்சான் கொலை இவரை மகிழ்வித்திருக்கும். அதியுயர் பதவிக்குப் போட்டியாக இருந்தவர் இதனால் ஒழிந்தார்'' அண்மையில் பிரசுரித்த ஆங்சான் கொலையைச் செய்தது யார் என்ற நூல் இவரை இந்த இயந்திரத்துப்பாக்கிக் கொலைகளுடன் தொடர்பு படுத்தவில்லை. ஆனால் இத்தப்பாதகச் செயலைப் பற்றியும் ஜெனரல் நீவின் பற்றியும் பல தகவல்களை இப் புத்தகம் தருகின்றது

ஆங்சான் தலைமையில் இயங்கிய முப்பது தோழர்கள் என்ற அணியில் நீவின்னும் அங்கத்தவராவார். இந்த முப்பது தோழர் குழுத்தான் பர்மிய சுதந்திர இராணுவத்தை நிறுவியது என்பது சரித்திரம். 1948 இல் பர்மா சுதந்திரம் அடைந்தவுடன் யூநூ

ஒரு தீர்க்கப்படாத கொலை பலவான் நீவின்னைப் (Ne Win) பின் தொடர்கின்றது

(U Nu) பிரதம மந்திரி ஆனார். நீவின் இராணுவத் தலைமைப் பீட உப தளபதி ஆக நியமனம் பெற்றார். 1962 இல் நீவின் யூநூவைத் தள்ளி வைத்த பின் ஆட்சியைக் கைப்பற்றினார். 1988 இல் நீவின் பதவியில் இருந்து இறங்கும் போது பல வளங்கள் நிறைந்த தனது நாட்டை உலகின் மிக வறிய நாடுகள் என்ற நிலைமைக்கு உள்ளாக்கினார். ஜனநாயகச் சார்பு கிளர்ச்சிகளைத் தணிக்கவே இவர் பதவியிலிருந்து இறங்கினார். இந்தக் கிளர்ச்சிகளைப் பர்மிய இராணுவம் மிகவும் கொடூரமாக அடக்கியுள்ளது. ஆனால் இன்று ஆட்சியிலிருக்கும் குழு நீவின் கட்டளைப்படி செயற்படுகின்றது. ஆனால் ஆங்சானின் ஆவி இவரை இன்றும் ஆட்டிப் படைக்கின்றது. எதிர்க் கட்சியினரின் வருங்கால எதிர்பார்ப்புக்கள் யாவும் நியாகி ஆங்சானின் மகள் ஆங்சான் சூகீ (Ang San Suu Kyi) என்ற மாதில் தங்கியுள்ளன. 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இவர் ரங்கூன் நகரில் வீட்டு மறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

ஆங்சானின் அரசியல் எதிரியாகிய யூசோ (USaw) வும் இன்னும் ஐவரும் 1947 ஆம் ஆண்டுப் படுகொலைகளுக்காகத் தூக்கிலிடப்பட்டுள்ளனர். நூலாசிரியர் கின் ஔன்ங் யூ சோ தான் இக் கொலையை திட்டமிட்டு நடத்தினார் என்பதை மறுக்க வில்லை. அரசியல் எதிரிகளை முற்றாக களை எடுப்பதற்கு (பர்மிய மொழி

New Doc 2020-04-06 14.46.20_page-0013.jpg

யில் தோக்கே தின்யே என்பார்கள்,) இக் கொலைகள் நல்ல ஓர் எடுத்துக் காட்டு என்று அவர் எழுதுகிறார். பர்மியத் தலைவர் ஆங்சானைக் கொலை செய்வதால் தனக்கு அரசை ஏற்று நடத்தும் படி அழைப்பு வரும் என்று யூசோ நம்பினார். இந்த நூலாசிரியரின் தந்தை தான் யூசோவைக் கைது செய்த அணிக்குத் தலைமை தாங்கினார். ஆகையால் அவர் தனது புத்தகத்தில் சில புதிய விடயங்களைத் தரக் கூடியதாக இருக்கின்றது. அவர் எழுதுகிறார்:இக் கொலைகள் நடக்க ஒரு வருடத்திற்கு முன்பாக நீவின்னும் அவருடைய தோழமை ஜெனரல் அவுங்கீ (AUNG GYI) யும் யூசோ வைத் தாக்கும் படி உத்தரவு கொடுத்தார்களாம்.

இந்த உத்தரவின் உள் நோக்கம் யூசோவைக் கொலை செய்வதற்கல்ல, யூசோ ஆங்சான் மீது சந்தேகப் பட்டு அவரைத் தாக்க வைக்கவே என்கிறார் ஆசிரியர். தாக்குதல் நடத்தியவர்களை ஆங்சான் அணியின் சீருடையில் செல்லுமாறு கட்டளை கொடுக்கப்பட்டதாகவும், இவர் தகவல் தருகின்றார். இத் தாக்குதலில் யூசோ கண்ணில் காயம் அடைந்தார். சென்ற வருடம் இந்த ஆசிரியரின் கூற்றுப் போலொன்றை பாங்கொக் நகரிலுள்ள பர்மிய உரிமை இயக்கம் வெளியிட்டுள்ளது. மேலும் இந்த நூலாசிரியர் அச்சமயத்தில் பர்மிய ஆளுநராக கடமையிலிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதி யூசோவைத் தாக்கியவர்கள் நீவின் பொறுப்பிலுள்ள 4 ஆவது பர்மிய அணியைச் சேர்ந்தவர்களென்று தனது அரசுக்கு அறிவித்துள்ளார். ஆனால் என்னவென்று சொல்ல முடியாத காரணங்களுக்காக அவர் இலண்டனுக்கு அனுப்பிய தந்தி ஆங்சான் கொலை விசாரணையில் தாக்கல் செய்யப்படவில்லை.

பர்மிய சிறுபான்மையினங்களின் ஒன்றாகிய கரன் இனத்தவர் வெளியிடும் தகவல்களின் படி இக் கொலையில் வேறு காரணிகளும் உண்டு. 1986 ஆம் ஆண்டில் அவர்கள் வெளியிட்ட அறிக்கைப் படி ஆங்சான் சிறுபான்மை இனத்தவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுக்க இணங்கியிருந்தாரென்றும் இதற்கு எதிர்ப்பான கடும் போக்காளர்களே இக் கொலையைக் செய்திருக்கலாமென்பதே, இதையே தனது நெடியதோர் பேச்சில் இராணுவ ஆட்சிப்பீடத் தலைவர் சோ மௌன்ங் (SAW MAONG) 1990 இல் எதிரொலித்திருக்கக் கூடும். அவர் சொன்னார்: ''ஜெனரல் ஆங்சான் கொள்கைகளில் திருப்தியற்ற இருவர் அவரை அழிக்கும்படி நீவின்னைக் கேட்டுக் கொண்டனர். ஆங்சான் இறந்த பின் அவ்விடத்தை நீவின்னை எடுக்கும் படியும் அவ்விருவர் கேட்டுக் கொண்டனர். அவர்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றனர்'' என்று. பல புறச்சான்றுகளையும் தொடர் பற்ற வேறு தடயங்களையும் நோக்குங்கால் யூசோ தனித்தியங்கவில்லை என்ற முடிவுக்கு வர முடிகின்றது என்கிறார் இந்த நூலாசிரியர். இந்த சூழ்ச்சியில் பங்கு கொண்ட வேறு நபர்கள் ஒரு போதும் அடையாளம் காணப்படப் போவதில்லை. கொலை வழக்கு முடிந்த பின்பும் துப்புத் துலக்குவதில் ஈடுபட்ட இருவர் 1948 இல் இறந்தனர். பிரதமர் யூநூவின் வெளிவிவகார அமைச்சராகவிருந்து இராஜிநாமாச் செய்த ரின் றுட் (TIN TOT) குண்டுத் தாக்குதலில் இறந்தார். ரங்கூன் நகர் காவற்றுறை அதிகாரி கொலின்றூக் (COLIN TOOKE) கடும் பாரிச நோயால் இறந்தார். ஆனால் இவர் கொலை செய்யப்பட்டதாகவே இவருடைய தோழர்கள் நம்புகின்றனர். இவருடைய இரகசிய ஆவணக் கோவைகள் எதிரிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன.

நீவின் இன்று வரை காலத்தை வென்றுள்ளார். 'தோக்கே தின்யே' விளையாட்டில் இவரை ஒருவரும் மிஞ்சமுடியாது இவ்விளையாட்டுக்கு நேர்த்தமிழ், ''எதிரியை முற்றாக அழித்தல் என்பது பொருள்,) அவர் இராணுவ முதல்வராக அதிகார பீடத்திற்கு வந்தது பல தகுதி வாய்ந்த அதிகாரிகளை வேலை நீக்கம் செய்தும், இட மாற்றம் செய்தும் தன்னைப் பலப் படுத்திக் கொண்டார். இவர்களில் இராணுவத் தளபதி றான்லா ஒஉன்ங், இந்த நூலாசிரியரின் தந்தை உப-தளபதியும் அடங்குவர். தனது பொறுப்பில் உள்ள 4 ஆவது பர்மிய றைபிள்ஸ் அணிமூலம் நாட்டில் தனது பிடியை இறுக்கிக் கொண்டார். இவ்வணி இப்போது செயலிழந்த பர்மிய பொதுவுடைமைக் கட்சியின் 1948 ஆம் ஆண்டுத் தாக்குதல்களிலிருந்தும் கரன் இனத்தவர்களின் போராட்டங்களிலிருந்தும் நாட்டைக் காத்துள்ளது. 1962 ஆம் ஆண்டில் இவர் நாட்டின் ஆட்சியை கைப்பற்றிய பின் அமைத்த புரட்சிகர ஆட்சிக் குழுவில் அங்கம் வகித்த ஜெனரல் ஒருவர் சொல்கிறார்; ''படை வீரர்கள் நீவின் மீது பேரன்பு பாராட்டினர்'' என. அதித அன்பு வெறுப்பாக மாறிய ஒருவர் இருக்கத் தான் செய்கிறார். இவர் தான் ஜெனரல் ஊங்கியி (AUNG GYI) இவர் நீவின் உடைய உப படைத் தலைமைக்குழு அதிகாரியாகக் கடமையாற்றியவர். நீவின் மீது வெறுப்புற்று 1963 இல் இராஜி நாமாச் செய்தவர். 1988 இல் பர்மாவில் நடந்த நாடளாவிய கொந்தளிப்புக்குக் காரணம் இவர் நீவின்னுக்கு எழுதிய காரசாரமான கடிதங்களே என்று சொல்லப் படுகின்றது. தற்சமயம் வர்த்தக மோசடி செய்தவர் என்ற குற்றம் சுமத்தப் பட்டு இவர் மறியலில் இடப்பட்டுள்ளார்.

நீவினைப் பதவியில் வைத்திருப்பது அவருடைய தந்திரமே. முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் சொல்கிறார்'' ஒரு நாளாவது அவர் தன் வாழ்வில் போரிட்டதுமிடையாது. ஆனால் அவர் தந்திரோபாயங்களில் வல்லவர்'' என. தனது எதிரிகளை வேலை நீக்கம் செய்வது மிகக் குறைவு. முதல் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பார்-பின்பு பதவியில் இருக்கும்போது செய்யும் குற்றங்களை அவதானித்து அவரைத் தண்டிப்பார். மறைந்திருந்து

New Doc 2020-04-06 14.46.20_page-0014.jpg

செயற்படுவதில் நீவின் அதி சூரர். பிரதமர் யூநூ தன்னைப் பதவியிலிருந்து கவிழ்த்தவர் நீவின் என்பதைச் சந்தேகப் பட்டதே கிடையாது. பிரதமர் யூநூ பதவி இறக்கம் செய்யப்பட்டுக் கைதாகிய போது தனது செயலாளரிடம் பின்வருமாறு சொன்னார்: ''இதன் பின்னணியில் யார் செயற்படுகிறார்களோ நானறியேன். ஆனால் ஜெனரல் நீவினுக்கு ஒரு தீங்கும் வரக்கூடாதென்று ஆண்டவனை வேண்டுகின்றேன்.'' நேர்மைக்கும் சுற்றிவளைக்காமல் நேர் வழியைக் கடைப்பிடிக்கும் தன்மை கொண்ட ஆங்சான் நீவின் மீது நம்பிக்கைக் குழுத் தலைவர் பதவிக்கு அவர் நீவினை நிராகரித்து வேறொருவரை அமர்த்தினார்.

கடந்த ஒரு வருடமாக நீவினை வெளியில் காண முடியவில்லை. ரங்கூன் மாநகரிலுள்ள வெளிநாட்டுப் பார்வையாளர் சொல்கிறார்: ''அவருடைய வயதிற்கு அவர் நல்ல திடகாத்திரமாக இருக்கிறார். அவர் இன்னும் ஓயவில்லை'' என பர்மிய புரட்சிகர ஆட்சிக் குழுவில் நீவின் உடன் பதவி வகித்த தோழர் ஒருவர் சொல்கிறார், ''தற்போது ஆட்சியிலிருக்கும் இராணுவ அதிகாரிகள் எல்லோருடனும் நீவின் சிரமம் தவறாது தொடர்புகள் வைத்திருக்கிறார்'' என்று. இப்போது உளவுப் பகுதித் தலைவராக இருக்கும் லெப்ரினன்ட் ஜெனரல் கின்நுன்ற் (Khin Nyunt) கொள்கை விளக்கத்திற்கும் தொடர் நடவடிக்கைகளுக்கும் நீவினைத் தவறாது நாடுகிறார். இவரும் பர்மாவை ஆளும் சகல இராணுவ அதிகாரிகளும் நீவினின் கைப்பிள்ளைகளே. நாடு கடந்து வாழும் தேசிய ஜனநாயக இயக்கத் தலைவர் வின் கெற் (WinKhet) சொல்கிறார்: ''இன்றைய தலைவர்கள் யாவரும் தங்கள் பதவிக்கு நீவினுக்குக் கடன் பட்டவர்களாவார்கள்'' என்று.

1990 ஆம் ஆண்டு இராணுவ அதிகாரிகள் அனுமதித்த தேர்தல்களில் மேற் குறித்த தேசிய ஜனநாயக இயக்கம் வெற்றியீட்டியது. ஆனால் அதே இராணுவம் அவர்களை ஆட்சி அமைக்கத் தடையாய் உள்ளது. இவ்வியக்கத்தின் தலைவர்களில் பலர் இன்று மறியலிடப் பட்டுள்ளார்கள். நோபல் பரிசு பெற்ற ஆங்சான் சூகீ ஜனநாயகவாதிகளின் தார்மீக நட்சத்திரமாக இருக்கின்றார். இன்யா ஏரியின் இருபக்கத்திலும் ஒன்றை யொன்று பார்த்தபடி சூகீ, நீவின் இருவருடைய வாசல் ஸ்தலங்களும் இருக்கின்றன. ஆனால் சூகீ தடுப்புக் காவலில் இருக்கின்றார். தனது தந்தையின் கொள்கைக்கும் ஞாபகத்திற்கும் வாரிசாக அவர் திகழ்கிறார். பர்மிய சரித்திரத்தில் தனது இடம் ஆங்சான் என்ற மாமனிதனின் நினைவுகள் மறைந்துவிடும் என்ற நித்திய பயம் நீவின் மனதில் உண்டு.

அண்மைக் காலத்தில் நீவின் தனது சாவைப் பற்றி எண்ணத் தொடங்கியுள்ளார். 1987 ஆம் ஆண்டு வேர் அலங்காரமிக்க மகாவிசய என்ற புத்த கோயிலைக் கட்டும்படி கட்டளையிட்டுள்ளார். சாவின் பின் போகுமிடத்தில் பல நன்மைகள் விகாரைகள் கட்டுவோருக்கு வருமென்பது பர்மிய நம்பிக்கை ஆகும். ஆனால் நீவின் இறந்த பின் நடக்கப் போவதென்ன? ஒன்று மட்டும் கூறலாம். உளவுப் பிரிவுத் தலைவன் கின்நுன்ற் இராணுவ ஆட்சிபீடத் தலைவரும் பிரதமருமாகியதான் சுவே (Than Shwe) உடன் மோதுவது நிச்சயம். கின்நுன்றின் அதிகாரத்தைக் குறைக்குமாப்போல் இராணுவ அதிகாரியாக லெப்ரினன்ட் ஜெனரல் மௌன்ங் அய்யி (Maong Aye) பதவியில் இருத்தப்பட்டுள்ளார். நீவின் இறந்த பின்பும் பயங்கரமான எதிரியை முற்றாக அழிக்கும் பர்மிய விளையாட்டாகிய தோக்கே தின்யே தவறாது தொடரும்.

தூரநோக்கு ஜப்பான்

சூமோ மல்யுத்தத்தில் அடிபிடி


ஜப்பானியத் தேசிய விளையாட்டாகிய சூமோ மல்யுத்தம் தனி ஆண்கள் மாத்திரம் உள்ளடக்கிய உலகமாகும். இப்போது இந்தத் தனித்துவத்திற்கு ஆபத்து வந்துள்ளது. புதிய ஜப்பானியக் கல்வி மந்திரி றியோக்கோ அக்கமாற்சு என்ற பெண்மணி இந்த விளையாட்டின் மீது பால்பாகுபாடு என்ற குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். இப் போட்டிகளின் முன்னணியில் நிற்கும் மல்லர்களைத் தெரிவு செய்யும் குழுவில் (ஜப்பானிய மொழியில் இதன் பெயர் யொக்கோசூனா) பெண்களும் அங்கம் வகிக்க வேண்டுமென்று இவர் அடம் பிடிக்கத் தொடங்கியுள்ளார். அஜானுபாகுவான இந்த மல்லர்கள் மோதும் களத்தில் (இதற்கு ஜப்பானிய மொழியில் டொஹ்யோ என்று பெயர்) பெண்களும் உட்பிரவேசிக்க விடப்பட வேண்டுமென இவர் மேலும் வாதிட்டுள்ளார். 1990ஆம் ஆண்டு போட்டிகளில் வென்ற மலைக்கு முன்பு கல்வி மந்திரியாகப் பதவி வகித்தவர் அவரும் ஒரு பெண்மணிதான் பரிசளிப்பதற்காக உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஜப்பானிய சூமோ மல்யுத்தக் கழகம் இவ்விளையாட்டையும் அது நடக்கும் இடத்தையும் புனிதமான தெய்வீகம் கலந்த ஜப்பானியப் பண்புகளின் இருப்பிடமாகக் கருதுகின்றது. ஆனால் இப்பதவி மோதல் நிலைக்கு வருமானால் கல்வி மந்திரி அக்கமாறுக வெல்வது நிச்சயம். ஏனென்றால் ஜப்பானிய சூமோ மல்யுத்தக் கழகம் கல்வி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ்வருகின்றது.

New Doc 2020-04-06 14.46.20_page-0015.jpg

"நட்புக்கள்" சினத் தொடர்பு

அந்தத் தூங்கு முஞ்சி தென் பர்மிய மீன்பிடிக் கிராமம் மிகவும் அமைதியாகக் கைப்பற்றப்பட்டது. சென்ற வருடம் அண்மையிலுள்ள மலை உச்சியில் இராணுவ அணியொன்று நிலை கொண்டது. இந்த அணியில் சீருடை தரியாத பொது மக்கள் உடையில் இருந்த ஆறு பேர்கள் சீனர்கள் என்ற வதந்தி உலாவியது. இவர்கள் ஆறுபேரும் ஒரு ராடர் மற்றும் ஏவுகணை நிலையில் கட்டப்படுவதை மேற் பார்வையிட வந்தவர்களென்று சொல்லப்படுகின்றது. ஜனவரி மாதம் போறவுங் என்ற பெயருடைய அந்த கிராமத்தில் வசித்தவர்கள் தங்கள் 500 வீடுகளிலிருந்து அகற்றப்பட்டு வேறு இடத்தில் அமர்த்தப்பட்டனர். தூரப் பாயும் ஏவுகணை செலுத்தி இராணுவ அணிகள் இரண்டு அக்கிராமத்தை தங்கள் பிடியில் கொண்டுவந்தன.

இதற்கு முன்பு ஐராவதி நதியோரத்தில் சீன நிபுணர்கள் ராடர் மற்றும் கடற்படைத் தளங்களை அமைக்கிறார்கள் என்ற செய்தி பரவத்தொடங்கியுள்ளது. இன்றும் இந்துசமுத்திரத்தைப் பார்த்தபடி பர்மிய கொங்கோதீவிலும் இவை அமைக்கப்படுகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பர்மியர்கள் சீன ஆதிக்கத்தை வெறுத்தவர்களென்று சரித்திர ரீதியிலாக அறிகிறோம். ஆனால் இன்று சர்வதேச அரங்கில் தனித்து விடப்பட்ட பர்மாவுக்கு சீனாவின் நட்பு ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.



சீன பர்மிய ஒத்துழைப்பு இராணுவ உதவியோடு நிற்கவில்லை. 1988 ஆம் ஆண்டு பர்மாவின் வடக்கெல்லை சீனாவுடனான தடையற்ற வியாபாரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. அன்று தொட்டு சினத் தயாரிப்புகள் பர்மாவுக்குள் தாராளமாக வரத்தொடங்கிவிட்டன. ஐ.நா.வின் வளர்ச்சித்திட்ட அறிக்கையொன்று சீனாவில் தயாரிக்கப்பட்ட நுகர்ச்சிப்பொருட்கள் பர்மாவுக்குள் தாராளமாக வருவதால் பர்மிய தயாரிப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கின்றது.

வியாபாரத்தைத் தொடர்ந்து சீன மக்களும் பர்மாவில் பெருமளவில் குடியேறத் தொடங்கியுள்ளனர். மண்டலே, ரங்கூன் போன்ற நகரங்களில் சீன இனத்தவர்களுக்கு பர்மிய மொழி போதிக்கும் பள்ளிகள் பெருகத் தொடங்கியுள்ளன. பர்மிய அரசு சீனாவை வரவேற்கத் தொடங்க சீன எதிர்ப்பும் நாட்டில் வளரத் தொடங்கியுள்ளது. சென்ற ஏப்ரல் மாதத்தில் ரங்கூன் நகரத்திலுள்ள சீன ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக குண்டொன்று வெடித்ததாக அறிக்கைகள் தெரிவித்தன.

★★

எதிரிகளின் குறிகளை அழிக்கும் சின வழிநடாத்தும் ஏவுகணை செலுத்தி: குடிமக்கள் எதிர்ப்பு

"அராஜகம்"

பர்மாவின் அதிபயங்கரக் கைதிக் கூண்டின் உட்புறம்.

55 – இரவில் கேட்கும் அலறல்களால் தான் அதிர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். "கொடூரமான சித்திரவதையில் அறிவிழந்து அலறும் குரல்களை பல இரவுகள் கேட்டிருக்கிறேன்" என்றார் அவர். இப்போது பர்மாவை விட்டு விலகி பாங்கொங்கில் இருந்தபடி பர்மிய அரசுக் கெதிராகச் சிறுபத்திரிகையொன்றை வெளியிடுகிறார்.

"அது நகரத்திலுள்ள இருண்ட கோட்டை போன்றது" என்றார் முன்னாள் பள்ளிப்போதனாசிரியர் ஒருவர். 1963 ஆம் ஆண்டு மாணவர்களை கலகம் செய்யும் படி ஏவினார் என்ற குற்றத்திற்காக, பர்மாவின் பாதுகாப்புகள் மிகவும் கூடுதலான இன்சைன் மரியற் சாலையில் இவர் ஒன்பது வருடம் கழித்துள்ளார். சிறுபாண்மை கரன் இன எழுத்தாளர் மௌன்சின் கீ (Maung Sin Kye) வயது 59. அதன் குளிர்ந்த சீமேந்து நிலத்தை நினைவு கூருகிறார். "அதுதான் மிகவும் மோசமானது. இரவில் தூக்கமின்றி நடுங்கிக் கொண்டே கிடப்பேன்" என்கிறார் அவர். ஹிலா::பேய் (Hla phay) வயது பர்மியத் தலைநகரிலிருந்து வடதிசையில் 16 மைல்களுக்கப்பால் இந்தப் பிரச்சித்தமான இன்சைன் மரியற்சாலை இருக்கின்றது. நகரத்தின் கோட்டை என்று வர்ணிப்பதில் தப்பில்லை. எட்டு ஹெக்ரர் நிலப்பரப்பில் இது கட்டப்பட்டுள்ளது. உயர்ந்த பாதுகாப்புச் சுவர்கள் சுற்றி வருகின்றன. இதன் நடுவில் செங்கட்டியும் மரத்தினாலான பல கட்டடங்கள் இருக்கின்றன. இரண்டு மீற்றர் நீளம் மூன்று மீற்றர் அகலம் கொண்ட சிறு அறைகளில் 8,000 கைதிகள் நெருக்கி அடைக்கப்பட்டுள்ளனர்.

New Doc 2020-04-06 14.46.20_page-0016.jpg

இவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு சோறும், மீன் பசையுமாகும். இதில் பலர் சமூகவிரோதக் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள். இவர்களுடன் அரசியற் கைதிகளும் சேர்த்து அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தான் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாவார்கள்.

இன்சைனிலிருந்து விடுதலை பெற்ற அதிர்ஷ்டசாலிகள் இங்கு சித்திரவதை சர்வசாதாரணம் என்கிறார்கள். மேற் சொன்ன எழுத்தாளர் மௌன்ங் சின் கீ மூன்று தடவை இங்கு அடைக்கப்பட்டுள்ளார். இவருடைய புனைபெயர் மான் நியுன்ற் மௌன்ங் (Mahn Nyunt Maung) இவருடைய எழுத்துக்கள் பர்மா நாடெங்கும் பிரசித்தம். இராணுவ உளவுப் பிரிவினர் தங்கள் வதைகளைத் தொடர்வதற்காக பிரத்தியேக கூடங்கள் இங்கு இருப்பதாக இவர் தெரிவிக்கிறார். பரப்பப்பட்ட கற்களுக்கு மேலால் முழங்காலில் வேகமாகச் செல்லும்படி கடி நாய்களை பின் புறமிருந்து ஏவுவார்கள். நீண்ட நேரம் கைதிகளின் தலைமேல் தண்ணீர் சொட்டுப்போடும்படி ஒழுங்கு செய்தும், மர்ம உறுப்புக்களை சிகரட் நெருப்பால் சுட்டும் சித்திரவதை செய்வார்களென்றெல்லாம் இவர் எழுதியுள்ளார்.

அண்மைக் காலத்தில் மிகக் குறைந்தது ஐந்து அரசியல் கைதிகளாவது இறந்திருப்பார்கள். இளைப்பாறிய கடற்படை அதிகாரியும் எழுத்தாளருமாகிய மௌன்ங் தோகா (Maung Thawka) இன்சைனிலிருந்து ரங்கூன் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட மூன்றாவது நாள் இறந்தார். இது 1991 இல் நடந்தது. முன்னாள் மாணவர் அவைத் தலைவர் டின் மௌன்ங் வின் (Tin Maung Win) நெடுநாள் சித்திரவதையின் பின் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்தார். இறந்தவர்களில் மிகவும் முக்கிய மாணவர் ஷான். சிறுபான்மை யினத்தைச் சேர்த்தவரும் பர்மாவின் முதலாவது ஜனாதிபதியுமாகிய சவ ஷ்வே தைக்கே (Sao Shwe Thaike) ஆவார். 1962 ஆம் ஆண்டு பல வான் நீவின் ஆட்சியைப் பிடித்த பின் இவர் கைது செய்யப்பட்டு இன்சைனில் அடைக்கப் பட்டார். இங்கு இவர் மாரடைப்பால் இறந்தார்.

பேதி நோய் (DYSENTERY) தான் மிகப் பெரிய உயிர்க் கொல்லியாக இருக்கின்றது. அடுத்து பாரிச வாத நோயாகும். (Paralysis) இந்த நோய்கள் பெரும் பாலும் வயோதிபக் கைதிகளைப் பீடித்துள்ளன. இவர்களை குளிர்ந்த நிலத்தில் உறங்க விடப்பட்டுள்ளதால் இது சம்பவிக்கின்றது. அரச எதிர்ப்பாளர் டின் யூ (Tinu) வாத ரோகத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். தேசிய ஜனநாயக இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இவருக்குத் தனியான படுக்கை இருக்கை அறை கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இன்னுமொரு தேசிய ஜனநாயக இயக்கத் தலைவர் வின்ரின் (Winttin) என்பாரும் இன்சைனில் நோய்வாய்ப் பட்டுள்ளார். இவருக்கு குடற்புண் நோய் காணப்படுகின்றது. இவர்கள் யாவரின் உயிர்களுக்கும் நிச்சயம் ஆபத்து உண்டு. ஏனென்றால் சரியான மருத்துவ வசதி இந்த மறியற் சாலையில் கிடையாது.

சென்ற வருடம் இராணுவச் சட்டம் பர்மாவில் நீக்கப்பட்ட போது விடுதலை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோர்களில் மௌன்ங்சின் கீயும் ஒருவராவார். ஐராவதி நதியோரத்தில் குடியிருந்த கரன் சிறுபான்மை இனத்தவர்கள் பர்மிய இராணுவத்தால் கொல்லப்பட்டபோது அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். இதற்காக இவர் 1991 இல் கைது செய்து இன்சைனில் அடைக்கப் பட்டார். மார்ச் மாதம் முன்னாள் அமெரிக்கக் காங்கிரஸ் அங்கத்தவர்கள் றொபேட் லெகெற் செய்மோர் வூல்ப்பேர்ன் ஆகியோர் இன்சைன் மறியற் சாலைக்கு வருகை தந்தனர். இங்குள்ள அரசியற் கைதிகளைச் சந்திக்கும் முதலாவது பிற நாட்டவர்களும் இவர்களாவார்கள். அமெரிக்காவிலுள்ள ஒரு சில மறியற் சாலைகளிலும் பார்க்க இது நன்றாகவே பராமரிக்கப் படுகின்றது என்று அவர்கள் சான்றிழ் கொடுத்துள்ளார்கள். மௌன்ங் சின்கீ இதை அசட்டை செய்துள்ளார். தனது விடுதலை ஒரு கண் துடைப்பென்றும், ஆட்சியாளரின் நன்னடத்தை விளம்பரமென்றும் அவர் தெரிவித்துள்ளார். இன்று பர்மா நாட்டில் ''குடிமக்கள் ஒரு நித்திய பயச் சூழலில் வாழ்கிறார்கள்'' என்று அவர் துணிந்து கூறுகிறார். தாய்லாந்து நாட்டு எல்லையோரத்தில் கரன் இனத்தவர்களின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசத்தில் இவர் இப்போது குடியிருக்கின்றார். இந்த எழுத்தாளர் சொல்கிறார்: ''இன்னுமொரு முறை இன்சைன் மறியற் சாலைக்குச் செல்லும் நிலையம் எனக்குக் கிடையாது'' என்பதாக.

ஏசியாவீக், ஜூலை 21, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0017.jpg

"ஆத்மாவின் பிரச்சினை"

∴ப்றெற்றிலினுக்குப் பின், ஜகார்த்தா கிழக்குத் திமோரில் புதிய சோதனைகளை எதிர்நோக்குகிறது

கிழக்கு திமோரின் தலைநகர் டிலி. அங்கு செல்வோர்க்கு இது குசுகுசுப்போர் நகரமோ என நினைக்கத் தோன்றும். உளவு சொல்வோரும் இராணுவப் புற அரண்களும் நிறைந்த இடம். ஆனால் இந்தோனேசிய ஆட்சியைக் குறைசொல்வோர் தனது அபிலாஷைகளைச் சந்தைகளிலும், கிறீஸ்தவ ஆலயங்களினுள்ளும், அன்றேல் தம் வீடுகளிலும் வாய் திறந்து சொல்கின்றனர். அவர்களுக்கு ஆபத்துக்கள் அதிகம். ஒரு திமோரியன் சொல்கிறான்: ''அயல் நாட்டான் ஒருவனுடன் பேசுவதைக் கண்டால், என்ன பேச்சு நிகழ்ந்தது என்று விசாரிக்கப் படும்.'' என அங்கு சிறுபான்மையினராக வாழும் சீன இனக் கடைக்காரன் கூறுகிறான்: இது வெறும் எதிர்ப்பல்ல தொழில்கள் வேண்டும் என்ற போட்டியே'' என. பிறர் கூறுகிறார்கள்: ''இது அதிலும் பார்க்க ஆழமானது'' என்று ''வெறும்பணம் மட்டுமல்ல இது ஒரு ஆத்மார்த்த பிரச்சனை'' என்கிறார் உள்ளூர் அரச தொடர்பற்ற உள்ளூர் நிறுவனம் ஒன்றின் தலைவரான ஃப்ளாறென்ரினோ சார்மென்ரோ. முன்னாள் தேசாதிபதி மாரியோ கரஸ்கலாஓ கூறுகிறார்: ''கிழக்கு திமோர் மக்கள் சுதந்திரத்தை நேசிக்கிறார்கள்'' என்று.

இந்தோனேசிய அதிகார வர்க்கம் சனானா குஸ்மாவோவை ஆயுட்காலத் தண்டனையளித்து விலக்கி வைத்திருக்கலாம். அவர் தலைமை வகித்த கிழக்கு திமோர் தீவின் ஆட்சி எதிர்ப்பு இயக்கமான ஃப்ரெற்றிலினுடைய முதுகெலும்பை உடைத்து விட்டதாகப் பெருமை பேசலாம். ஆனால் அவர்களது பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை. முன்னாள் போர்த்துக்கேய குடியேற்ற நாடாயிருந்த அந்நாட்டின் 774,000 மக்களின் உள்ளங்களைத் தம் வசமாக்கும் பாரிய பணி இன்னும் ஜகார்த்தா ஆட்சியாளர்களுக்குண்டு. 1976இல் இந்தோனேசியா தனது 27ஆவது மாகாணமாகக் கிழக்குத் திமோரைச் சேர்த்துக் கொண்டதை ஐ. நா. இன்னும் 'அங்கீகரிக்க



டிலியில் இந்தோனேசிய படைவீரர்: கிழக்கு திமோரை பணம் சம்பாதிக்கும் இடமாகக் கருதுகிறார்கள்

வில்லை. லிஸ்பனில் போர்த்துக்கேய ஆட்சிப் பீடமும், சர்வதேசக் குழுக்களும் இத்தீவில் நடைபெறும் மனித உரிமைப் பறிப்புச் செயல்களைக் குறை கூறிய வண்ணம் இருக்கின்றனர்.

அங்கு நிகழ்வனவற்றின் 'வேர்களை' வரலாற்றில் காண்போம். 19ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கலும், நெதர்லாந்தும் சிறிய சுந்தா சங்கிலித் தொடர்த் தீவுக்கூட்டத் திலுள்ள திமோரைத் தம்மிடையே பங்கு போட்டுக் கொண்டன. இந்தோனேசியா ஒல்லாந்திடமிருந்து, 1949 இல் தனது சுதந்திரத்தைப் பெற்றபோது மேற்கு திமோர் தவிர ஒரு மாகாணமாயிற்று. கிழக்கு திமோர் தொடர்ந்து போர்த்துக்கேய ஆட்சியிலிருந்தது. 1974 இல் போர்த்துக்கலின் தலைநகரான லிஸ்பனில் ஓர் இராணுவச் சதியால் அரசாங்கம் மாறியது. புதிய அரசு பழைய குடியேற்ற நாடுகளைக் கலைத்து விடும் கொள்கையைக் கடைப் பிடித்தது. கிழக்கு திமோரின் தலைவிதியை நிர்ணயிக்கக் குடியொப்பம் ஒன்றை வைப்பதாக அறிவித்தது.

அக்காலத்தில் அமைக்கப்பட்ட அரசியற் கட்சிகளுள் ஒன்று ஃப்ரெற்றிலின். இது 'ஒரு புரட்சி முன்னணி. கிழக்குத் திமோரின் சுதந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டது. திமோரிய ஜனநாயக மக்கள் சங்கம் இந்தோனேசியாவுடன் இணையவேண்டும் என்று வற்புறுத்தியது. திமோர் ஜனநாயக சமாஜமும் தொடக்க காலத்தில் சுதந்திரக் கொள்கையுடையதாகவேயிருந்தது. அதுவும் பின் இந்தோனேசியாவுடன் இணைய வேண்டும் என்றே தீர்மானித்தது. இவ்வாறு மூன்றிட்ட கட்சிகளிடையே உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. 1975, நவம்பர் 28 இல் ஃப்ரெற்றிலின் கிழக்கு திமோர் சுதந்திரநாடு எனப் பிரகடனம் செய்தது. (அக்கட்சி பொதுவுடை

New Doc 2020-04-06 14.46.20_page-0018.jpg

மைச் சார்பானதுஎன்று ஜகார்த்தா ஆட்சியாளர் கருதினர்) ஒன்பது நாட்கள் சென்றதும், இந்தோனேசியப் படைகள் அங்கு இறங்கின.

பல ஆண்டுகளாக ஜகார்த்தா தனது புதிய மாகாணத்தை இணைத்து வைத்திருப்பதற்குப் பெரும் பொருள் செலவிட்டது. ஆதார வேலைத்திட்டங்களாகிய வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், விமானத்தளம், கடற்றுறைமுகம் ஆகியவற்றை அமைத்தலில் ஈடுபட்டது. திமோரியர் பெரும் பாலோர் கிறீஸ்தவராதலால் அவர்களது தலைநகரான டிலியில் ஒரு புதிய ஆசனக்கோவில் அமைக்கப்பட்டது. பெரிய காற்பந்து மைதானமும் அமைந்தது. 1976 இல் இத்தலைநகரின் சனத்தொகை 25,000, இப்பொழுது சனத்தொகை 125,000.

ஆனால் பிடிவாதமாக ஃப்ரெற்றிலின் கட்சி சுதந்திர உணர்வு மங்கிப் போகாமல் பார்த்துக்கொண்டது. ஒரு கட்டத்தில். இந்தோனேசியப் படைகள் திமோரியரை அயலில் உள்ள தீவு ஒன்றுக்கு நாடு கடத்தியது. (அடுத்த சிறுகட்டுரையைப் பார்க்கவும்.) இராணுவம் கொடுமைகள் செய்தது. விசாரணை இன்றி மறியல் போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டது. சமீப காலத்தில் உலகம் கிழக்கு திமோரை மறந்து விட்டது. 1991 இல் கொல்லப்பட்ட ஒரு திமோரிய வாலிபனின் மரணச் சடங்கில் பங்கு பற்றிய மக்கட் கூட்டத்தின் மீது படைவீரர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். குடிசனங்கள் பலர் இறந்தனர். அடுத்து குஸ்மாவோவின் வழக்கும் ஆயுட்கால மறியலும் உலகின் கவனத்தை ஈர்த்தன.

இந்தோனேசியாவிலுள்ளபலர் இவ்வளவு போர்ச் செலவும் தேவையா என்று சிந்திக்கின்றனர். ஓர் ஒய்வு பெற்ற மேற்கு திமோர் பாராளுமன்ற உறுப்பினர், ''நாம் கிழக்கு திமோருக்கு படையனுப்பியிருக்க வேண்டியதில்லை, இம்மக்கள் எம்மிலிருந்து வேறுபட்டவர்கள். பெருந்தொகைப் பணத்தைப் பல ஆண்டுகளாக இறைத்தும், எமக்குத்



எதிர்காலக்கலவி புதிய தேசாதிபதி மக்களின் ஆள் ஆகவே நம்பிக்கை குடுபெறுகிறது

தலைவலிகளே மிஞ்சியுள்ளன'' என்று கூறுகிறார். ஆனால் ஜனாதிபதி சுகார்ட்டோவின் அரசாங்கமோ கிழக்கு திமோர் இந்தோனேசியாவின் ஒரு பகுதியே என்று உறுதியாகக் கூறுகிறது. பொருளாதாரக் காரணிகள், இராணுவக் காரணிகளுக்கு ஆதரவு தருகின்றன. கிழக்கு திமோரின் கனிப்பிராந்தியமான திமோரி இடைவெளியில் இந்தோனேசியாவும், அவுஸ்திரேலியாவும் இணைந்து எண்ணெய் வள ஆய்வுகளை நடத்துகின்றன.

மேற்குலக நாடுகள் பேசும் மனித உரிமைகள் என்ற எண்ணக்கரு இங்குள்ள நிலைபரத்துக்கு ஏற்றதன்று என்பது ஜகார்த்தாவின் வாதம். ''இந்த விவாதம் இந்தோனேசியாவுக்கு எதிராக எழுப்பப்படும் விமர்சனக்குரலை அமுக்கப் பயன்படவில்லை என்பது உண்மைதான்'' என ஏற்றுக் கொள்கிறார் வெளிநாட்டு விவகார உயர் அதிகாரியான ஹாதி வயரபி. வெளிநாட்டமைச்சர் அல்அலதாஸ் வியல்வாவில் ஜூன் மாதம் கூடிய மனித உரிமைகள் மகாநாட்டுக்குச் சென்றார். ஆசுக்குறைந்த பட்சம் (அங்கு கூடியோர்) இந்தோனேசியாவின் விவகாரம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. (பிறநாடுகளில் உள்ள மனித உரிமைப்பிரச்சினை போன்றது அல்ல) என்ற அளவுக்காவது ஒத்துக்கொள்ளச் செய்வேன். ''என்று அவர் போகுமுன் ஜகார்த்தா செய்தியாளருக்குக் கூறினார். சர்வதேச பத்திரிகைகளில் கிழக்கு திமோர் பற்றிப் பிழையான செய்திகள் திரித்துப் பிரசுரமாவதாக அவர் முறையிட்டார். ''நீங்கள் ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் பிரசுரித்தால் சாதாரண வாசகர்களது மனதில் அது மெய்போலப் படும்'' என்றார். ஐ.நா. தனது பொதுச் செயலர் பூட்ரோஸ். பூட் ரோஸ் காலியைக் கிழக்கு திமோர் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணும்படி பணித்துள்ளது. சென்ற ஆண்டு பெப்ரவரி மாதம் அவர் தனது சொந்தத் தூதுவராவ அமன் வாக்கோ (கினியா நாட்டினர்) வை டில்லிக்கு அனுப்பினார். வாக்கோ இரண்டாம் முறையும் நான்கு மாதங்களுக்கு முன் அங்கு விஜயம் செய்தார். வாக்கோவின் கூற்றுப்படி அவரது பொர்க்கள் பல ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளன. ஏப்ரலில் அவர் குஸ்மாவோவை வைக்கண்டு பெற்றோலின் தலைவர் நன்றாக நடத்தப்பட்டார் என அறிவித்தார். படைகளின் தொகை கிழக்கு திமோரில் குறைக்கப்படுவதாக வந்த அறிக்கைகளையும் சரி பார்த்தார் வாக்கோ. அங்கு 30,000 படைவீரர்கள் இருக்கிறார்கள்.

New Doc 2020-04-06 14.46.20_page-0019.jpg

இத் தூதுவர் தமது கண்டுபிடிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்க மறுத்தார். ''நீங்கள் காணும் முடிவுக்கு தான் பொறுப்பாளியாயிருக்க முடியாது'' என்று பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு உரைத்தார். சில அவதானிகள் பழைய படைகள் போகப் புதிய படைகள் அந்த இடத்திற்கு வருவதாக நம்புகிறார்கள். அவர்கள் கருத்துப்படி படைகளுக்கு இது நல்ல போர்ப் பயிற்சிக் களம் என்று படைத் தலைமையகம் நம்புகிறது. படைகள் அந்நாட்டின் முக்கிய ஏற்றுமதியான கோப்பி வியாபாரத்திலும் தொடர்பு கொண்டுள்ளதாம். இதுஓர் ஆய்வாளரது கருத்து. சிவில் நிர்வாக அதிகாரிகளுக்குச் சிறிது சுதந்திரம் கொடாவிட்டால், இராணுவம் பணம் சம்பாதிக்கக் குறுக்கு வழிகளைக் கையாளும்.

ஜகார்த்தாவில் தேசாதிபதியாகக் கிழக்கு திமோரில் புதிதாகப் பதவியேற்றுள்ள அபிலியோ சோ அர்ஸ் கூறுகிறார்: ''எனக்கு உண்மையான அதிகாரம் இருக்கிறது. ஒரு குறித்த பிரதேசத்தில் இனிப் படை தேவை இல்லை என்றால் நான் அதனைக் குறைத்து விட முடியும் அவர் வருகை (வரையறைக்குட்பட்ட) நம்பிக்கையை அளிக்கிறது'' என்று. ஒரு திமோரியர் கூறுகிறார்; ''அவர் மக்களின் ஆள். ஏற்கனவே அவர் தமது நிர்வாக உதவியாளர்கள் அனைவரும் திமோயரிராகவே இருக்க வேண்டும் இராணுவ அதிகாரிகளல்லர்''என்றுகூறிவிட்டார்.வரும் காலம் விவசாய விருத்தி, மீன்பிடி இயலுமானால் சுற்றுலாப் பயணத் தொழில் என்பவற்றின் மூலம் தீவின் பொருளாதாரத்தைப் பொருக்க வேண்டும் என்று பேசப்படுகிறது.

உள்ளூர்ப் பொருளாதாரத்துக்கு ஊக்கமளித்தல் அவசியம். வேலையின்மை பெரும் பிரச்சினையாயுள்ளது. டிலியில் நீர்க்கரையோரமுள்ள நந்தவனங்களில் இளைஞர் நாள் முழுவதும் வீண் பொழுது போக்கிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. கிழக்கு திமோர் விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பாளரான சார்மென்ரோ ஜகார்த்தா மேலும் அதிகம் சேவைகளை வழங்கவேண்டும் என்று கூறுகிறார். ''அரசாங்கம் அளிக்கும் நிதியில் 10 வீதம் மட்டுமே கிழக்கு திமோரில் தங்கி நிற்கிறது. சார்மென்ரோவின் கணிப்பின் படி இங்கு தொடங்கிய பல சிறு கைத் தொழில்கள் ஜவா நாட்டுப் பாரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய பொருள்களை வழங்குவே உதவுகின்றன.''

சாமென்ரோ மேலும் கூறுகிறார்: ''எமது குறைபாடு யாதெனில் அரசாங்கமே நம்பிக்கையீனத்துடன் செயல் புரிகிறது. திமோரி கடற் பிரதேச எண்ணெய் வள ஆய்வுக்குரிய ஆதாரம் மேற்கு திமோரில் தான் அமைந்துள்ளது. இது திமோரியரின் சுய கௌரவத்துக்குப் பாதிப்புண்டாக்குகிறது. மக்கள் பால் அனுதாபம் இல்லாத போக்கினால் அவர்களும் அரசு குறித்த உணர்ச்சியற்ற சடமாகக் காணப்படுகிறார்கள். அதனால் அரசிலிருந்து மேலும் அந்நியப் படுத்தப் படுகிறார்கள்'' என்று. சென்ற மாதம் முன்னாள் தேசாதிபதியும் தற்பொழுது ஜகார்த்தாவில் வெளிநாட்டமைச்சில் பணி புரிபவருமான சுரஸ்கலாவோ சென்ற மே மாதம் கிழக்கு திமோரிலிருந்து படைகளைத் திருப்பியழைக்க வேண்டும் என்றார். ''மக்களை நம்ப வேண்டும், ஐயங்களைக் களைய வேண்டும்'' என்பது அவர் பொன் மொழி.

போர்த்துக்கேயர் இப் பிரதேசத்தைப் புறக்கணித்தனர். எனினும் இம் மக்களுக்கு இப்போது உள்ளதிலும் கூடிய சுதந்திரத்தை அளித்தனர். குடியேற்ற நாடாயிருந்த காலத்தை ஆசையுடன் திரும்பி நோக்கும் ஒரு திமோரிய பிரசை நினைவு கூருகிறான்: அக் காலத்தில் என்னூர் விட்டு மற்றொரு நகருக்குப் போகவேண்டுமானால் ஒருவித தடையுமின்றிப் போக இயலும். நான் அவுஸ்திரேலியா செல்லக் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தால் உடனே கிடைக்கும். காசு இருந்தால் போதும் என பழைய இனிய நினைவுகள் இன்றும் அன்றாட வாழ்வில் போர்த்துக்கேய மொழியை உபயோகிப்பதில் துலங்குகின்றன. கோவிலுக்குப் போவது இளைஞரிடையே அதிகரித்து வருகிறது.

அந்நிய வெறுப்பு ஃப்றெற்றலீன் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றது. அதன் கருத்துப்படி ஒரே வழி குடியொப்பம் வைத்து மக்களின் முடிவைப் பெறுவதே. இந் நெறியைக் கடைப்பிடிப்பதே சரியென ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 2 வாக்குகளாலும், பொதுச் சபையில் எட்டு வாக்குகளாலும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். அவுஸ்திரேலிய டார்வின் நகரில் வதியும் ஃப்றெற்றலீன் பேச்சாளரான அர்பிரடோ பெரேய்ரா கூறுகிறார்: ''நாம் தோல்வியினை ஏற்கத் தயார், ஆனால் அதனை சட்டரீதியாகச் செய்யட்டும்'' என. ஜகார்த்தாவின் கருத்து வேறுவிதமாயுள்ளது. 1976 இல் பொது மக்கள் சபை ஒன்றிணைவதை ஏற்கும் தீர்மானத்தை அங்கீகரித்த அன்றே மக்கள் இந்தோனேசியாவுடன் சேர்த்து விடச் சம்மதித்து விட்டார்கள். ஆனால் டிலியில் இன்று பரவும் குகுகுப்பு அங்குள்ள மக்களின் கருத்து என்ன என்பதைப் பரகசிய மாக்குகின்றன.

-ஏசியாவீக், ஜூன் 23, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0020.jpg


அமைதியற்ற பிரதேசம்

இஸ்லாமாபாத்திலிருந்து
— சலமத் அலி —

ஆப்கானிஸ்தானில் ஒரு ஸ்ரிங்கர் (STINGER) ஏவுகணை வாங்க வேண்டுமா? நூற்றுக் கணக்கான வை விற்பனைக்கிருக்கின்றன. இவை சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகப் போராடிய முஜாஹிதீன்களுக்கு சிஐஏ தாராளமாகக் கொடுத்தவையாகும். யுத்தம் முடிந்த படியால் அவைகளைத் திருப்பி வாங்க சிஐஏ விரும்புகிறது. ஆனால் முஜாஹிதீன்கள் கேட்கும் பெருவிலையை அவர்கள் கொடுக்க முடியவில்லை. ஆனால் தஜிகிஸ்தானில் போராடும் முஸ்லிம் போராளிகளுக்கு மலிவு விலையில் கொடுக்கப் படுகின்றன. இந்த ஏவுகணைகள் தோளிற் சுமந்து செல்லக் கூடியவையாகும். 1980 களில் ஆப்கானிஸ்தான் போரில் நூற்றுக் கணக்கான ருஷ்ய சுடுகலன் பொருத்திய உலங்கு வானூர்திகளை இவை பலி கொண்டன. இது ஓர் அமெரிக்க தயாரிப்பாகும். ஆப்கானிஸ்தானிலிருந்து ருஷ்யாவை விரட்டுவதில் இந்த ஆயுதம் பெரும் பங்கு வகித்தது.

தஜிகிஸ்தானில் நடக்கும் இரண்டு வருட உள்நாட்டுப் போரில் ஸ்ரிங்கர் பாவிக்கப்படுவதாக ஆதாரமில்லா விட்டாலும் பாவனைக்கு வரலாம் என்ற பயம் ருஷ்யாவுக்கும் இப்போரில் தொடர்புடைய மத்திய ஆசியக் குடியரசுகளுக்கும் உண்டு. இந்த உள்நாட்டு யுத்தம் ஆப்கானிஸ்தானையும் பாதித்துள்ளது. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தஜிகிஸ்தான் அகதிகள் தெற்கு எல்லையைக் கடந்து ஆப்கானிஸ்தானுக்கு வந்துள்ளனர். ஆப்கான் தஜிச் எல்லையைக் கடந்து யுத்தமும் ஆப்கான் நாட்டிற்குள் நுழைந்து விட்டது.

டுஷான்பே விமான நிலையத்தை ருஷ்யத் துருப்புக்கள் பாதுகாக்கின்றன.



பத்து வருடங்களுக்கு முன் ஆப்கான் யுத்தம் எப்படி இருந்ததோ அது போன்று தஜிகிஸ்தான் யுத்தமும் இருக்கின்றது. முஸ்லிம்களை எதிர்த்து பொதுவுடைமைவாதிகள் போராடுகின்றனர். தனியார் தலைமையில் குழுக்களாகப் பிரிந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் மோதுகின்றனர். குலவாரியாகவும் பிரிந்து நின்று எதிரும் புதிருமாக சண்டையிடுகின்றனர். பரந்த இஸ்லாம் போராளிகளும் இதில் கலந்துள்ளனர். ஐ.நாவும் இங்கு பிரசன்னமாயுள்ளது.

தஜிகிஸ்தான் உள்நாட்டுப்போர் ஆப்கானிஸ்தானுக்கும் பரவுகின்றது

சென்ற மார்கழி மாதம் முஸ்லிம்களும் ஜனநாயகவாதிகளும் கூட்டாக அமைத்த அரசை பொதுவுடைமைச் சார்புக் கட்சியொன்று கைப்பற்றியபின் இப்போரில் ருஷ்யாவின் பங்கு பெருகத் தொடங்கியுள்ளது. இப்போது ஜனாதிபதியாக இருக்கும் இமாம் அலி ரக்மனோவ் என்பாருடைய அரசு இஸ்லாமிய போராளிகளாலும் அவர்களுக்கு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளிலிருந்து பண உதவி செய்பவர்களாலும் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரக்மனோவ் அரசுக்கு நாலு கட்சிகளிடமிருந்து எதிர்ப்பு உள்ளது. அவையாவன: முகம்மது ஷரிப் ஹிமற்சாடா தலைமையில் இயங்கும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக் கட்சி, சடாம் யூசுப் தலைமையில் ஜனநாயகக் கட்சி, அப்துல் ஜப்பார் தாசிர் தலைமையில் தேசிய முன்னணி மற்றும் அமீர் பெக் வழி நடத்தும் வாலே படக்ஷன் குழு என்பவையாகும். வெளிநாட்டு இராணுவம் தஜிகிஸ்தானை விட்டு வெளியேற வேண்டுமென நாலு கட்சிகளும் ஒரே குரலில் கேட்கின்றன. மேலும் கட்சிச் சார்பற்ற நடுநிலை அரசொன்று தேர்தலை நடத்த வேண்டுமென்பதும் அவர்களுடைய அடுத்த கோரிக்கையாகும்.

தன்னாட்சி நாடுகளின் கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் ருஷ்ய, உஸ்பெக், கிர்கிஸ் துருப்புக்கள் தஜிகிஸ்தான் மண்ணில் நிலை கொண்டுள்ளன. மோதல்கள் பெருகத் தொடங்க தஜிகிஸ்தான் ருஷ்யாவுடன் சென்ற மே மாதம் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. இதன்படி 1999 ஆம் ஆண்டு வரை ருஷ்யத் துருப்புகள் தொடர்ந்து தஜிகிஸ்தானில் தங்கியிருக்கும். இதற்குப்பின் தனது பாதுகாப்பைச் சீர்ப்படுத்த முடியுமென தஜிகிஸ்தான் அரசு எதிர் பார்க்கின்றது.

ருஷ்யப் படை ஒரு றைபிள் பிரிவும் (201 ம்), 200 தாங்கிகள் கொண்ட அணியும் உள்ளடக்கியதாகும். ஜூலை மாதம் 21 ஆம் திகதி ருஷ்யா இன்னுமொரு அணியை அனுப்பி வைத்துள்ளது. தஜிகிஸ்தான் போராளிகள் எல்லையைக் கடந்து இருபத்தைந்து ருஷ்ய இராணுவத்தினரைக் கொன்றதிற்குப் பதிலடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ருஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் இந்த உயிரிழப்பால் கோபம் கொண்டுள்ளார். எல்லைப் படைத் தளபதியை வேலை நீக்கம் செய்ததோடு ஒக்கஸ் நதி ஆப்கான்-தஜிக் பொது எல்லை அல்லவென்றும் அது ருஷ்யாவுக்குச் சொந்தமான பிரத்தியேக எல்லையென்றும் அவர் பிரகடனம் செய்துள்ளார். இத்துடன் புத்திசாலித்தனமாக தஜிகிஸ்தான் தலைநகர் டுஷான்பேக்கு தனது வெளிவிவகார அமைச்

New Doc 2020-04-06 14.46.20_page-0021.jpg

சர் அந்திரீ கொசிறெவ் என்பாரையும் தூது அனுப்பியுள்ளார். இந்தத் தூதின்படி தஜிகிஸ்தான் அரசை எதிர்ப்பாளருடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். இதற் கிடையில் ஆப்கானிஸ்தான் அரசு யெல்சினின் எல்லைப் பிரகடனத்தை நிராகரித்துள்ளது. ஒரு போர் நிறுத் தத்தைக் கொண்டு வர ருஷ்யா முயற்சித்தாலும் உண்மையில் சண்டை பெருகத் தொடங்கியுள் ளது. ஆப்கானிஸ்தானிலுள்ள தஜிகிஸ்தான் அரச எதிர்ப்புப் போராளிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்களையும், தூரப் பாயும் குண்டுத் தாக்குதல்களையும் ருஷ்யா நடத்தியுள்ளது. இது ஜூலை 30 இல் நடந்தேறியது.

ஜூலை மாதம் போர் தொடர்ந்து நடைபெற்றாலும் அதை நிறுத்த பலதரப்பட்ட இராஜ தந்திர முயற்சிகள் எடுக்கப்பட்டன. ருஷ்யத் தூதுவர்கள் காபுல், தெகரான், இஸ்லாமாபாத் நகரங் களுக்கிடையில் பறந்து திரிந்தனர். மத்திய ஆசியாவில் அமைதியை நிலை நாட்டுவதற்காக சவுதி அரே பியாவையும், துருக்கியையும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் நாடுகளையும் சேரும்படி கோரும் தீர்மானத்தை ருஷ்யாவும் மத்திய ஆசிய நாடுகளும் நிறைவேற்றின.

சமரச முயற்சிகளில் ஈடுபட்ட ஒரு சிலருக்கு அவர்கள் எதிர் பார்த்ததிலும் மேலாகத் தலைவலி கிடைத்துள்ளது. ஐ.நா.வின் பிரத் தியேகத் தூதுவர் இஸ்மத் கித் தானியும் தஜிக் அரச எதிர்ப்புத் தலைவர்களில் ஒருவரான ஹிமற் சாடாவும் இஸ்லாமாபாத்தில் சந்தித் தார்கள். அப்போது தனது கட்சி ஸ்ரிங்கர் வாங்கியுள்ளதாக ஹிமற் சாடா பகிரங்கப் படுத்தினார். இதைத் தங்களுக்கு விற்றவர்கள் ஆப்கானியர்களென்றும் அவர் தெரிவித்தார். இஸ்லாமாபாத்திற்கும் அமெரிக்க அரசுக்கும் ஸ்ரிங்கர் விவகாரம் பெரும் முரண்பாடாக அமைந்துள்ளது. அதனால் இஸ்லா மாபாத் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டிய அவசியமிருந்தது. ஹிமற்சாடாவை உடனடியாகத் தனது நாட்டுக்குத் திரும்பிப் போகும் படி பாகிஸ்தான் அவரைப் பணித் தது. தன்வசம் ஸ்ரிங்கர் உள்ளது என்ற ஹிமற்சாடாவின் வாக்கு மூலம் தஜிகிஸ்தான் யுத்தத்தை புதியதோர் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இந்தச் சக்தி வாய்ந்த ஏவுகணையின் பிரவேசம் யுத்தத்தைக் குறுகிய எல்லைகளுக் குள் அடக்க முடியாதவாறு செய்து விடும்.

(F) வார் ஒஸ்ரோன்
எக்கனமிக்றிவியூ
ஒகஸ்ட் 12, 1993

சரித்திரத்தின் முன்னோடிகள்

பொதுவுடைமைக் கட்சிதான் சீனாவின் மிகப் பெறுமதி வாய்ந்த மூலதனம் எனப்படுவது ஏன்?

கடந்த ஒன்றரை தசாப்தங்களாக, மனிதகுலத் தின் கிட்டத்தட்ட காற்பங்கிற்கு மேலானவர்களுக்கு அமைதியும் ஸ்திரமான அரசாங்கமும் கொடுத்த அமைப்பு எது? இரண்டு நூற்றாண்டிற்கு மேலான பின்னடைவை நிறுத்தியது யார்? உலகின் மிகப் பழமை வாய்ந்த நாகரிகத்தை அது புதைத்திருந்த குழியிலிருந்து மீட்டு மீண்டும் பெருமைக்கு வழிகாட் டியது யார்? கோடிக்கவளக்கான மக்களை வறுமைச் சேற்றிலிருந்து மீட்டு அவர்களுடைய மூதாதையோர் ஒருபோதும் காணாத சுகவாழ்வைக் காட்டிய தலை வர்கள் யார்? இன்னும் முக்கியமாக இப்பூவுலகின் மிகப்பெரிய நாட்டின் உறுதிக்கும் எதிர்வரும் காலத் தில் அதன் முன்னேற்றத்திற்கும் இணையற்ற சக்தி யாக விளங்குவது எது? உண்மையில் மக்களுக்கு நிகரான அந்த நாட்டின் மூலதனம் யாது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சீனாவின் பொதுவுடைமைக் கட்சி என்பது தான். இந்தப் பதில் சிலரைத் திடுக்கிடச் செய்தால் அல்லது தொண்டை யில் தடக்கிடச் செய்தால் ஒரு சத்திய சோதனை செய்யவேண்டியது அவசியம். ஒரு வேளை அந்தப் பெயர்தான் பிரச்சினையாக இருக்கலாம். திடுக்கிடு வோர் அப்பொருளை சீனச் சீர்திருத்தக் கட்சி என்றோ அல்லது சீனாவின் மத்திய கட்சி என்றோ அழைக்கலாம். இன்று சீனாவை ஆளும் கட்சி பெய ரளவில் தான் பொதுவுடைமைக் கொள்கையுடைய தாகும். பொதுவுடைமைக் கோட்பாடுகளை மாத்திரம் அது துறக்கவில்லை.பொதுவுடைமைக் கட்சிக்கே உரிய அங்க அடையாளங்களையும் தூக்கி எறிந்துவிட்டது. இப்போது சுத்தியலையும் அரிவாளையும் காண்பது அரிதாகி விட்டது. உத்தியோக பூர்வமான மாநாடு களிலும் கட்சியின் உயர்பீடத்தில் அங்கம் வகித்த வயோதிபரின் மரண வீட்டில் மையப் பெட்டியைச் சுற்றியபடியும் தான் இக்கொடி காணப்படும் சில சந்தர்ப்பங்களாகும். உத்தியோக பூர்வப் பத்திரிகை களில் எப்படி பணம் பேணுவது என்று புத்திகூறும் வியாசங்கள் இல்லாத சமயங்களில் பூஷுவாக்கள் மீது அரைமனத் தாக்குதல்கள் நடாத்தப்படும்.

New Doc 2020-04-06 14.46.20_page-0022.jpg



சீனாவின் ஆட்சியாளர்களுக்கு கௌரவமும் மதிப்பும் கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. 1949 மாவோ சேதுங் சீனக்குடியரசைப் பிரகடனப் படுத்திய நாட்தொட்டு கட்சி நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாத்து, அது பிளவு படாமல் கண்காணித்து வந்துள்ளது. இது பெரியதோர் சாதனையாகும். சீனாவின் சரித்திரத்தில் நாம் மீண்டும் மீண்டும் படிக்கும் பாடம் அந்தப் பெரிய நாட்டை ஒன்றாக வைத்திருக்க மத்தியில் சக்திவாய்ந்த ஆட்சி ஒன்று தேவை என்பதாகும். சீனாவின் ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஐரோப்பிய அல்லது தென் கிழக்காசிய நாட்டின் பரப்பளவும், சனத்தொகையும் மொழி வேறு பாடும் உடையதாகும். சீனாவின் மத்தியில் பலம் குறைந்த காலத்தில் சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் தங்கள் ஆட்சியை ஆங்காங்கு நிலை நாட்டியுள்ளார்கள். இக்காலங்கள் சீனாவின் உள் நாட்டு யுத்தங்களும் படையெடுப்புக்களும் நிகழ்ந்துள்ளன. சீனப் பொதுவுடைமைக் கட்சி பல ஆதாரபூர்வமான கொடுமைகளைச் செய்துள்ளது. ஆனால் கடந்த பதினைந்து வருட காலத்தில் திரு. டெங்சியாவோ பிங் ஆட்சியின் கீழ் சீனப்பொதுவுடைமைக் கட்சி நாட்டின் தேவைகளுக்கமைவாக ஒரு முற்போக்கு சக்தியாக வளர்ந்துள்ளது.

அண்மைக்கால நிகழ்வுகள் மத்தியில் பலக்குறைவால் வரும் நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன, ஒரு வருடத்திற்கு மேலாகி கூடுதலான தவித்துவத்துடன் இயங்கத்தொடங்கிய தலைவர்களால் செய்யப்பட்ட தடையற்ற செலவுகளாலும் முதலீடுகளாலும் நாடளாவிய பணவீக்கம் கிளம்பியுள்ளது. அத்தியாவசியமான நிதி முறையற்ற அல்லது சந்தேகத்திற்கிடமான செலவுகளுக்குச் சென்றுள்ளது. அதிர்ஷ்டவசமாக தலைநகர் பீகிங் மீண்டும் தனது அதிகாரத்தை நிலைநாட்டத் தொடங்கியுள்ளது. உப-பிரதமரும் நாட்டின் பொருளாதாரத் திட்டமிடலுக்குப் பொறுப்பானவருமாகிய சூ. றொன்ஜி நிலமையைக் கட்டுப்படுத்த கூடுதலான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளார். மாகாணவாரியாக உள்ள உயர்மட்டத்தவர்களை நேர்பாதைக்குக் கொண்டுவரவும் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தவும் இவர் சென்ற வாரம் தனது கொள்கையை வெளியிட்டுள்ளார். சந்தைப் பொருளாதாரச் சீர்திருத்தத்திலிருந்தும் பின்வாங்கப்போவதில்லையென்றும், மத்திய அரசுத் தலையீட்டையும் அழுத்தத்தையும் மீண்டும் கொண்டு வரப்போவதில்லையென்றும் இவர் தெரிவித்துள்ளார். ஆனால் மிகவும் புத்திசாலித்தனமான சீர்திருத்தங்களை இவர் கொண்டு வந்துள்ளார். பழமை வாய்ந்த சீனாவின் வங்கிகளில் மாற்றங்கள், வட்டி வீதத்தைக் கூட்டுதல் அரசசார்பான செலவுகளைக் குறைத்தல் போன்றவை இந்தச் சீர்திருத்தங்களில் அடங்கும். கிராமப் புறங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் போது அரசு பணத்திற்குப் பதிலாக, பணம் பின்பு கொடுக்கப்படும் என்ற சீட்டுக்கொடுக்கும் முறையையும் இவர் ஒழித்துள்ளார். விவசாயிகள் மத்தியில் பல காலமாக நிலவிய அதிருப்தி இந்த நடவடிக்கையால் அழிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பெறுமதியை இன்னுமொரு காரணத்திற்குமாக எடுத்தியம்பவேண்டியுள்ளது. இந்தத் தசாப்தத்தின் மிகுதி வருடங்களில் இரண்டு நிகழ்வுகள் சீனாவுக்குப் பெரும் சோதனை தருவனவாகும். பொதுவுடைமைப் பொருளாதாரத்திலிருந்து இறுதியாக முழு சந்தைப் பொருளாதாரமாக மாறும்போதும் வயதில் முதிர்ந்த டெங்சியாவோ பின்காலப் போக்கில் இறக்க இவருக்கு வாரிசாக வரும் இளைய தலைமுறையினர் எடுக்கப்போகும் நடவடிக்கைகளுமாகும். மத்தியில் பலமான கையொன்று தேவை இல்லையேல் நாட்டில் குழப்பம் நிச்சயம். வட-கொரியா வெடிக்கப்போவதாக மிரட்டும் அணுகுண்டுக்கு அடுத்ததாக ஆசிய கண்டத்தின் அமைதியைக் குலைக்கும் நிகழ்வு சீனாவின் நெருக்கடிதான். சீனாவில் உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்தால் போர்க் காலத்தில் வியட்னாமையும், கம்போடியாவையும் விட்டுவிட்டு ஓடிய மக்களிலும் பார்க்க சீனாவையும் விட்டு விலகுவார்கள் என்பது திண்ணம்.

இராணுவத்தின் உதவி இல்லாமலே சீனாவை ஒருமையுடன் வைத்திருப்பதிலும் அந்த நிலையைக் காப்பதிலும் சீனாவின் பொதுவுடைமைக்கட்சி அளப்பற்ற பங்கு வகிக்கின்றது. இக்கட்சி இந்தத் தசாப்தத்தின் மிகுதிக் காலத்தில் வரும் சோதனைகளை எதிர்கொள்ள இன்னும் பலத்துடனும், ஒற்றுமையுடனும் எளிதில் தன்வசம் உள்ள சக்தியைப் பிரயோகிக்கக் கூடிய வல்லமையுடனும் இருத்தல் அவசியம்.

New Doc 2020-04-06 14.46.20_page-0023.jpg

தேசிய நன்மைகளைக் கருத்தில் எடுத்தால் ஜனநாயகக் கோட்பாடுகள் பிற்போடப்பட வேண்டியது அவசியமாகும். மேற்குலக ஜனநாயகத்தை சீனாவில் புகுத்துவது புத்தியல்ல. அது அபாயகரமானது சீனாவின் தற்போதைய நிலைமையில் அது நாட்டைப் பிளவுபடுத்தும். பிரிவினை வாதிகளுக்கு ஊக்கம் அளிக்கும். ஒருமைப்பாட்டையே அழித்துவிடும். மேற்குலக மாதிரி ஜனநாயகத்தைப் புகுத்தத் துடிப்போர் ஒன்றை மறந்துவிட்டார்கள். அதாவது சீனாவின் 900 மில்லியன் மக்கள் எழுத்தறிவு, படிப்பறிவு அற்றவர்கள். இது நீங்கும் வரை வாக்களிக்கவும் ''ஜனநாயக உரிமை'' களை அனுபவிக்கவும் அவர்களால் இயலாது. ஜனநாயகம் அவர்களுக்கு ஒரு விளங்காத புதிராகவே இருக்கும்.

எதிர்வரும் சோதனைகளிலும் தடைகளிலும் சீனா வெற்றி கண்டபின் அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றிச் சிந்திக்கலாம். டெங் ஆதரவாளர்கள் சில மாற்றங்களைக் கொண்டுவரப் பார்த்தார்கள். ஆனால் பழமை விரும்பிகளின் காலப் பிழையாலும் இது கைகூடவில்லை. நிலமை மோசமாக முன் டெங்சியாவோ பிங் பொருளாதார சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசியல் திருத்தங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார். சீரான சந்தைப் பொருளாதாரமும் புதியதோர் அரசியல் தலைமைப் பீடமும் குறைவிலாது செயற்படத் தொடங்கியபின் மக்களுக்கு அரசியல் ஞானமும் பின்பு வாக்குரிமையும் கொடுக்கலாம். இதுவும் பரீட்சார்த்தமாகவே செய்தல் வேண்டும். டெங் ஆதரவாளர்கள் எப்படி நாட்டுக்குப் பயன் தரும் பொருளாதார மாற்றங்களைத் தெரிவு செய்து மிகுதியை நிராகரித்தார்களோ அது போன்று அரசியல் துறையிலும் செய்தல் நலம்.

கட்சி பற்பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதில் மிகவும் பாரதூரமானது- ஊழல். இதைக் குறைக்கவேண்டியது மிக மிக அவசியம். இல்லாவிடில் நாடளாவிய கொந்தளிப்பு ஏற்படும். கட்சியின் பலம் குறைந்துவிடும். நியனாமன் சதுக்கம் மாதிரியான சம்பவங்கள் ஊழல் காரணமாக நிகழலாம். சீனப் பொது மக்களை ஊழல் செய்து சுய சம்பாத்தியம் செய்யும் அதிகாரிகளை வெறுக்கிறார்கள். அதுவும் சந்தைப் பொருளாதாரம் பெருக அதிகாரத் துஷ்பிரயோகமும், மோசடிகளும் செய்வதற்கு வாய்ப்புக்கள் கூடுதலாக வரும். அதிகாரிகளின் சட்டங்களை விலக்கி நாட்டின் சட்டத்தை நிலைநாட்டுவது இன்னுமொரு உடன் தேவையாகும். இதுவும் ஊழலுடன் சம்பந்தப்பட்டது தான் இது இரண்டும் குறையும்போது நாடு பெற்ற பொருளாதார வெற்றிகள் கூடிய தொகையான மக்களுக்குப் போய்ச்சேர வாய்ப்புண்டு. இன்னும் பல பொருளாதார வெற்றிகள் ஈட்ட உத்வேகம் கிடைக்கும்.

ஒரு காலத்தில் முற்போக்குக் கொள்கைகளைப் புகுத்துவதில் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கு இயலாமை வரலாம். நாட்டின் மாற்றங்கள் வர ஆளும் கட்சியிலும் மாற்றங்கள் வரலாம். இக் கட்சி இன்னும் கூடிய முற்போக்கு வாதியாக வரலாம். அல்லது அப்படியான கொள்கைகள் உள்ள இன்னுமொரு கட்சி அவ்விடத்திற்கு வரலாம். அதற்கு இதுவல்ல நேரம். தற்சமயம் பொதுவுடைமைக் கட்சியே நிலைபெற வேண்டும். அது பிழைவிடும் போது தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். தேவையற்ற கூடுதலான கண்டனம் பயனற்றதாகும். எதிர்வரும் காலத்திற்கேற்ற வகையில் கட்சி தன்னையும் மாற்றி நாட்டிற்கும் மாற்றம் கொடுக்க வேண்டியுள்ளது. கட்சிக்கு அதற்கிருக்கும் பெரும் சுமையை மனதில் கொண்டு நாம் இரக்கமும் புரிந்துணர்வும் காட்டவேண்டும். இந்தப் பிராந்தியத்தின் நலனும் ஏன் இந்த உலகின் நலன்கூட இக் கட்சியின் எதிர்கால வெற்றியில் தங்கியிருக்கின்றன.

ஏசியாவீக், ஜூலை 21, 1993

இஸ்ரேல் – சிரியா பேச்சுக்கு இணக்கம்

அடுத்த வார இறுதிக்குள் இஸ்ரேலுடன் பேச்சு நடாத்தி ஓர் இணக்கம் காணப்படுமென சிரியா அறிவித்ததையடுத்து மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சு வார்த்தையில் வெற்றி ஏற்படுமென்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

சிரியாவிற்கும், இஸ்ரேலுக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியிலிருந்து கடுமையானவையாகவே இருந்து வருகின்றன.

அரபு இஸ்ரேல் யுத்தத்தின் போது இஸ்ரேல் கைப்பற்றிய கோலான் குன்று பகுதியிலிருந்து முற்றாக வாபஸ் பெறவேண்டுமெனச் சிரியா கோருகிறது.

இது பற்றிப் பேச்சு நடாத்த இஸ்ரேல் மறுத்து விட்டது. எல்லைகளைத் திறந்து விடவும் தூதரகங்களை அமைக்கவும் இஸ்ரேல் இணங்கியதால் இஸ்ரேல் சிரியாப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலிருந்து வந்தன.

New Doc 2020-04-06 14.46.20_page-0024.jpg

ஒரு புதியவகையிலான ஆதிக்கப் பிடி

''சுயெஸ் கால்வாய்க்குக் கிழக்கே'' பல்லாண்டுகளாகச் சமாதானம் பேணி வந்தது பிரிட்டன். 1960 இன் பிற்பகுதியில் அந்தப் பிரதேசத்திலிருந்து பிரிட்டன் தனது படையணிகளைத் திரும்பப் பெற்றுக் கொண்ட பின்னர் பாரசீக வளைகுடாப் பகுதியில் அந்தப் பிரதேசத்தினரின் பாதுகாப்பு அமைப்பு ஒன்றைத் தோற்றுவிக்க அமெரிக்கா முயன்றது. வாஷிங்டன் அந்தப் பகுதியில் ஒரு புதிய வகையிலான அதிகாரச் சமநிலையைத் தோற்றுவித்தது. முதலில் ஈரானின் பக்கமும் பின்னர் ஈராக்கின் பக்கமுமாக அது சாய்ந்து நின்றது. சதாம்குசைன் குவைத் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டபோது அவரைத் தடுத்து நிறுத்த வெளியார் தலையீடு அவசியமாகிறது. இப்போது சுயெஸ்லிற்குக் கிழக்கே அமெரிக்கா தான் அமைதியைப் பேணிவருகிறது. அதிகாரச் சமநிலைத் தந்திரோபாயம் இப்போது பலனளிப்பதாயில்லை என்று கிளின்ரன் நிர்வாகம் கருதுகிறது. இரண்டு சவால்விடும் நாடுகளை அது எதிர் கொள்ள வேண்டியுள்ளது. ஈரான், ஈராக் ஆகிய இரண்டுமே மீளவும் ஆயுத பலம் பெற்று வருகின்றன. மேலை நாடுகளுக்கு எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துகின்றன. பாரசீக வளைகுடாவுக்கூடான எண்ணெய் விநியோகத்திற்கு ஆபத்து விளைவிப்பனவாயுள்ளன. ஒன்றை முடிப்பதற்காய் அடுத்ததைக் கட்டியெழுப்புவதை விட இரண்டையுமே ஒடுக்கி வைக்கவே வாஷிங்டன் இப்போது விரும்புகிறது. ''இரட்டைப்பிடி'' அல்லது ''இரட்டை ஆதிக்கம்'' பற்றிய கொள்கையை அமெரிக்கா இன்னமும் வெளியிடவில்லையாயினும் அந்தப் பிராந்தியத்தில் பாரிய அளவிலான அமெரிக்க நடமாட்டம் தேவைப்படுகிறது என்பது மட்டும் மிகவும் தெளிவாகவுள்ளது. பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்க வேண்டும் என்று கிளின்ரன் விரும்பியுள்ள இந்த வேளையில் இந்தமாற்றம் இவ்வித நிலையை உருவாக்கியிருக்கிறது.

சதாமே மிக உடனடியான ஆபத்தாவார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் படுமோசமாகத் தோற்கடிக்கப் பட்டிருந்தும் கூட ஜூன் 27 இல் கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் ஏதாவது சேதம் விளைவித்திருந்தாலும் அது மிகமிகக்குறைவானது என்று கூறுமளவிற்கு ஈராக்கில் ஜனாதிபதி அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ளார். ஏவப்பட்ட எறிகணைகளின் பெறுமதியோ

ஈராக் புத்துயிர் பெறுதலைத் தடுத்தல்- ஈரானையும் கட்டுப்படுத்தல் அமெரிக்காவின் கடினமான பொறுப்பு

பல கோடிக்கணக்கான டொலர்களாகும். ஏவப்பட்ட 23 ரோமோஹவாக் ஏவுகணைகளுள் அநேகமானவை தேவையான இலக்குகளைத் தாக்கத் தவறவில்லை, மிகவும் அச்சுறுத்தலளிக்கும் முக்காபாரத் எனப்படும் சதாமின் பல நோக்குப் பொதுப் புலனாய்வு அமைப்பின் தலைமைச் செயலகம் தாக்கி அழிக்கப்பட்டது. 3 ஏவுகணைகள் இலக்குத்தவறி 8 குடிமக்களைப் பலி கொண்டது. அமெரிக்கர்கள் இந்தத்தாக்குதலுக்குத் தம் ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். நீயூஸ்வீக் நடத்திய கருத்துக் கணிப்பில் கிளின்ரன் சரியானதைச் செய்ததாக 71 விழுக்காட்டினரும், எதிராக 20 விழுக்காட்டினரும் வாக்களித்திருந்தார்கள். ''எமது முழுநோக்கமாக விருந்தஈராக்கிய புலனாய்வுவலுவை முடமாக்கி விட்டோம் என்று ஜனாதிபதி உரிமை கோரியுள்ளார்.

இந்த வெற்றியை கிளின்ரன் மிகைப்படுத்திக் கணிப்பீடு செய்துள்ளார் என்றே நிர்வாக மேலதிகாரிகள் கருதுகிறார்கள். ''ஈராக்கின் ஆட்சிப்பீடம் பற்றிய விமர்சிப்புக்குக்'' காரணமான ஆறு பாதுகாப்பு புலனாய்வு அமைப்புக்களில் முக்காபாரத் ஒன்று மட்டுமேயாகும் என்பது அண்டைய கிழக்குக் கொள்கை தொடர்பான வாஷிங்டன் சமூகத்தில் ஈராக் கவலிப்பாளரான மைக்கல் ஈசற்ஸ்டட் என்பவரின் கருத்தாகும். விசேட குடியரசுக் காவலர் ஜனாதிபதியின் மர்ம முறையிலான விசேட பாதுகாப்பு நிறுவனம் என்ற மூன்றும் சதாமுக்கு மிகவும் முக்கியமானவையாகும். கடந்த ஏப்ரலில் குவைத்தில் தோற்கடிக்கப்பட்ட புஷ் கொலை முயற்சியைப் போன்ற பயங்கரவாதச் செயல்களைச் செயற்படுத்தும் ஈராக்கின் வலிமையை அற்றொழிக்கும். அமெரிக்க இலக்கில் ஒரு சிறுபகுதி கூட. இந்தத்தாக்குதலால் ஆட்களில்லாத முக்காபாரத் அழிப்பால் நிறைவெய்தவில்லை என்பதே புலனாய்வுத் துறையினரின் கணிப்பீடாகும்.

பாலைவனப்புயல் நடவடிக்கையில் தோற்கடிக்கப்பட்ட பின்னர்

New Doc 2020-04-06 14.46.20_page-0025.jpg

சதாமின் மரபுவழி இராணுவ சக்தி வியக்குமளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. அவர் தனது படையத்தின் அளவைச் சிறிய தாக்கி அதே வேளை முன்னேற்றகரமான பயிற்சியாடு மீளமைத்துவருகிறார். போருக்கு முந்திய இராணுவத்தை விடக் காலப் போக்கில் இது மிகவும் திறன் வாய்ந்ததாக அமையும். நேசநாடுகளின் விமானம் பறக்கக்கூடாத பிரதேசக்கட்டுப்பாட்டால் ஓரளவு பாதிப்பு ஏற்பட்ட போதிலும் தென் ஈராக்கிலுள்ள சியாற் முஸ்லிம் கிளர்ச்சியாளர் விடயத்தில் அவர் கை ஓங்கியுள்ளதோடு அவருக்குத் தேவையேற்படும் போது குர்திஸ் கிளர்ச்சியாளர்களை மடக்கி அடக்கும் அவரது படையினர்கள் வலிமை பெற்றுள்ளனர். இவ்வாறான சதாமின் முன்னேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கத்தைய பதில் நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி அமெரிக்கா மிகநெருங்கிய நேசநாகளுடன், குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ் போன்றவற்றுடன் இரகசியமாக ஆலோசனை நடத்தியுள்ளது. பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய தரப்பினரின் தகவல்களின்படி நேசநாடுகளின் விமானத் தாக்குதலே வழியாகும். என்பதை பெரும் அளவில் நாம் இருப்பைக் கொட்ட வேண்டும் என்ற வார்த்தையில் கருத்தொருமித்துள்ளார்களேயன்றி தரைவழிப்படை நடவடிக்கை பற்றி எவரும் உறுதி கூறவில்லை.

இறுதியாக சதாமின் புதுமாதிரியான இராணுவம் அவரை வெகு தொலைவுக்கு இட்டுச் செல்லும். சென்ற ஆண்டின் முற்பகுதியில் 1990 இன் இறுதியில், ஈராக் குவைத்தையும், சவூதிஅரேபியாவையும் ஆக்கிரமிப்பது போன்ற காட்சியைச் சோதனை செய்தது புஷ் நிர்வாகம். பென்ரகன் திட்டமைப் போர் அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் போது அமெரிக்கா நாலு அல்லது ஐந்து படைப்பிரிவுகள், மூன்று போர்க் கப்பல்கள் இராணுவக் குழுக்கள், கடல்வழித் திடீர்த்தாக்குதல் பிரிவு, 19 வான்படைக்கூட்டம் என்பன கொண்டே பதிலடி கொடுக்க வேண்டிவரும் என்று தீர்மானித்தனர். அந்தக் கருத்திட்டத்தால் ஏற்படக் கூடிய அளவு அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் 54 நாள் போரின் பின்னர் வெற்றி பெற்றன.

போருக்கு முன்னர் ஈராக் பெற்றிருந்த இராணுவ உற்பத்தித் திறனில் பெரும் பகுதியை அது மீளமைத்துக் கொண்டுள்ளது. மரபுவழிப் போராயுதங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்காவது உற்பத்தி நடைபெறுகிறது. போரில் சேதப்படுத்தப் பட்ட பகுதிகளை உபயோகித்து சோவியத்



தைவுகளிலிடமிலிருந்து ஈராகியர்கள் தமது உடல்களை வெளியே இழுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ரி-72 வகைக் டாங்கிகளை ஈராக்கியர்கள் இணைத்து வருகிறார்கள். இதவிலும் மிகவும் பயங்கர ஆயுதங்களைச் செய்யும் வலுவை நேசநாடுகளின் குண்டுவீச்சும், அதன் பின்னான ஐ.நா.பரிசோதனையும் அழித்தொழித்தது. ஈராக்கியர்கள் இரசாயன அணு உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திறனை மீளப்பெறக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள் என்கிறார். அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் வெளியுறவுக்குழு உறுப்பினரான றொம்லன் ரோஸ் இம்மாதிரியான ஆயுதங்களைச் செய்வதற்கான உற்பத்தி வசதிகளை இன்னமும் ஈராக் இரகசியமாக வைத்திருக்கக்கூடும் என்று நம்புகின்றனர். அமெரிக்க ஐ.நா. அதிகாரிகள் இவ்வாறான வசதிகள் அதனிடம் இப்போதைக்கு இல்லாது போனாலும் ஐ.நாவின் தடைகளும் பரிசோதனைகளும் நிறுத்தப்பட்டால் ஈராக் ஐந்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் அணுக்குண்டை உற்பத்தி செய்யவும் ஓர் ஆண்டு காலத்திலுள் இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கவும் முடியும் என்பது சீஐஏயின் மதிப்பீடாகும்.

அதிக எண்ணிக்கையிலான தடை வெடிப்புகள் இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான மூல வளங்களனைத்தையும் ஈராக் சொந்தத்திலேயே தேடிக்கொள்ள முடியும். திறமை மிக்க சனத்தொகையும் அதனிடமுண்டு. இந்த வகையில் அது முன்னேறுவதைத் தடை செய்வதோ அல்லது வேகத்தைக் குறைப்பதோ அந்த நாடு முழுவதையும் ஒரு நிரந்தர தொழில் நுட்பத் தடுப்புக்குள் கொண்டு வருவதன் மூலம் தான் சாத்தியமாகும். இவ்வகையான தடுப்பு ஒரேஒரு முறைதான் உலகத்திலேயே தடை முறைப் படுத்தப்பட்டது. முதலாவது உலகப் போரின் பின்னர் ஜேர்மனிக் கெதிராக இவ்வித தடை மேற்கொள்ளப்பட்டும் ஹிட்லர் மீள் வலுவடைந்ததை நிறுத்த முடியவில்லை. ஈராக்கிற் கெதிரான ஐ.நா. தடைகள் மிக நீண்ட காலத்துக்கு நீடிக்கப் போவதில்லை. ஈராக் எண்ணெய் விற்பனை மீதான கட்டுப்பாடுகள் சீக்கிரம் நீக்கப்படவேண்டியேற்படலாம். நுளைகள் மிகவும் அதிகமாகவுள்ள ஈராக்கின் எல்லைப் புறங்களிலே தடை வெடிப்புகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

New Doc 2020-04-06 14.46.20_page-0026.jpg

ஈராக்கின் பரம வைரியான ஈரான் அந்த நாட்டிற்காக எண்ணெய் விற்பனை செய்வதோடு கப்பற் துறைத் தொழில் நுட்பத்தையும் விற்று வருகிறது. இது நடப்பதாக நம்பப்படுகிறது. ''அவர்களுக்கு மேற்குலகோடுள்ள வெறுப்புணர்வு இரு நாடுகளுக்குமிடையிலான வெறுப்புணர்விலும் பலம் வாய்ந்ததாகும்'' என்கிறார் ஒரு பென்ரகன் அதிகாரி.

வளைகுடா தொடர்பான கிளின்ரனின் குழப்ப நிலை முக்கியமாகப் பின்னவரின்—ஜோர்ஜ் புஷ்—தப்புக் கணக்கால் தோற்றுவிக்கப்பட்டதாகும். சதாமின் தோல்வியில் மரணத் தறுவாய்க்குச் செல்வதற்கு முன்னர் போரை புஷ் நிறுத்தியது முதற் காரணமாகும். அதன் பின் சியாற்களையும் குர்திஷ் மக்களையும் கிளர்ச்சிக்குத் தூண்டிவிட்டு முழு அளவிலான ஆதரவு வழங்காமல் விட்டமையாகும். அப்போதிருந்து வளைகுடாவில் அமெரிக்கர் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையில் ஒட்டிக்கொள்ளவேண்டியதாயிற்று. விமானம் பறப்பதற்குத் தடை செய்யப்பட்ட பிரதேசத்தைக் கண்காணிப்பதற்கு நேச நாடுகள் போர்க்காலத்தில் பறக்கவிட்ட போர் விமானங்களிலும் பார்க்க அதிகமாகவே பறக்கவேண்டியதாய் விட்டது. சென்ற வாரம் கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட பாக்தாத்தை இலக்காகக் கொண்ட ஏவுகணைத் தாக்குதலின் பின்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரூஸ்வெல்ட், ஜோன்ஹோவர் என்ற இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா வளைகுடாவுக்கு அனுப்பவேண்டியதாய் விட்டது. ஈரான், ஈராக் ஆகிய இரண்டு நாடுகளையும் ஆதிக்கப் பிடிக்குள் வைத்துக் கொள்ள இந்த வகையான நடவடிக்கையால் வரையறையற்ற எதிர்காலத்திற்கு நீடிக்கப்படலாம். அமெரிக்காவின் படை வலுவின் பெரும் பகுதியை இது ஆக்கிரமிக்கும் காங்கிரசின் ஆய்வுச் சேவை அறிக்கையின்படி. வளைகுடாவில் ஒரு விமானந் தாங்கிக் கப்பலை நிரந்தரமாக விட்டு வைப்பதென்பது சுழற்சி முறையில் இயங்குவதற்கும் மீள் பிணைப்புகள் செய்வதற்கும் ஆறில் இருந்து ஒன்பது வரையிலான விமானந் தாங்கிக் கப்பல்களின் சேவை தேவைப்படுமாம். உலகளாவிய ரீதியில் தனது பொறுப்புக்களை யாற்றக் கிளின்ரன் நிர்வாகத்திற்கு 10 விமானந்தாங்கிக் கப்பல்கள் மட்டுமே தேவைப்படுமாம். பனிப் போருக்குப் பிந்திய காலத்து நேசப் படைகள் ஈராக்கையும், ஈரானையும் தம் ஆதிக்கப் பிடிக்குள் வைத்துக் கொள்வதென்பது மிகவும் சிக்கலும், கடினமும் நிறைந்த விடயமாகும்.

வாஷிங்டனில் நசல்வாட்சன்,
ஜோன் பரியாதியோருடன்
டக்ளஸ் வோணர்
நியூஸ்வீக், ஜூலை 12, 1993

குர்திஷ் மக்களின் (றவுலட்) சூது விளையாட்டு

அச்சமும் பயமும் சதாமிடம் அடிபணியச் செய்யுமா?

குர்திஷ் பண்ணைக் கட்டடத்தின் தரையிலே ஒரு பெண்ணைப் பார்க்கிறோம். கையிலும் முழங்காலுமாக ஊர்ந்து சென்று முளை விட்ட கோதுமை மணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுக்கிறாள். அந்தக் கட்டடத்திற்கு ஊர்வலமாக வந்து சிந்திச் சிதறிக் கிடக்கும் கோதுமை மணிகளைத் திரட்டும் குர்திஷ் பிச்சைக்காரப் பெண்களில் இவள் கடைசி ஆள். ''கடவுளின் பெயரால் எங்களுக்கு உண்ண ஏதாவது கொடுங்கள்'' என்று கேட்டு ''அழுது சத்தமிட்டு அரற்றுவார்கள்'' என்று வடக்கு ஈராக்கின் ஷேக்ஹாஷேம் கிராமத்தின் 75 வயதினரான மொகமட் மவுலூத் கூறுகிறார். ''இது உலக அழிவுக்கானது போலத் தெரிகிறது'' என்று சொல்லும் அவர் தனது தலைவர்களையோ பாக்தாத்திலுள்ள குர்திஷ் மக்களின் எதிரிகளையோ குறை கூறுவதாயில்லை. மேற்கு அமெரிக்காவையும் அதன் நேசநாடுகளையுமே குறைப்பட்டுக் கொள்ளுகிறார்: ''சதாம் முன்னர் செய்ததைப் போன்று இருபது வெளிநாடுகள் மக்களுக்கு உதவ முடியாதனவாகவுள்ளன'' என்று.

சிலவாரங்களுக்கு முன்னர் கூட இவ்வித உணர்வுகள் நடைமுறைக்கு கொவ்வாததாக இருந்திருக்கும். அநேகமான குர்திஷ் மக்கள் சதாமை அறவே வெறுக்கிறார்கள். கூட்டாய இடப்பெயர்வு, கிராம அழிப்பு, நச்சுவாயுப் பிரயோகம் என்பனவே சதாம் அவர்களுக்குக் கொடுத்த வெகுமதிகள். அவருடைய ஆட்சியில் மீண்டும் இருப்பதை விட சாவதையே பலர் விரும்புகிறார்கள். வயதில் முதிர்ந்த வரான மவுலூத் தனது மனந் திறந்து பேசியதை எவரும் எதிர்க்கவில்லை. ஈராக்கிய தாக்குதல்களிலிருந்து மிகவும் பாதுகாப்பு வழங்குவதென்ற ஐ. நா. உறுதிமொழி வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் வெளிநாட்டு உதவியில் அவர்களுக்கிருந்த நம்பிக்கையும் அதனோடு கூடவே விடுதலைக் கனவுகளும் மறைய ஆரம்பித்துள்ளன. ''உலகில்லாமல் திண்டாடும் மக்களை கதந்திரம் திருப்திப்படுத்த முடியாது'' என்பது குர்திஷ் பாராளுமன்ற உறுப்பினரான பலாக்காதீன் காக்கேயின் கருத்தாகும். வேறு எந்தப் பக்கமும் திரும்பமுடியாத நிலையில் குர்திஷ் சமூகத்தின் சகல மட்டத்திலுமான மக்கள் தாம் ''மிருகம்'' என வருணிக்கும் மனிதவிடம் இருந்து பெறக்கூடியதைப் பேசிப் பெற்றுக் கொள்ள வேண்

New Doc 2020-04-06 14.46.20_page-0027.jpg

டும் என்ற கருத்தை முன்வைக்க ஆரம்பித்துள்ளார்கள்.

அவர்கள் சலன புத்தியோடி ருக்கவில்லை. மேல்நாட்டு உதவி களையும் அவர்கள் நட்டாற்றில் கைவிடுவதையும் நன்கு அனுபவித்து உணர்ந்தவர்கள் அவர்கள். பிரிட் டனின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் சென்ற வாரம் அறிவித்துள்ளது போன்று ''படிப்படியான சந்ததி யில்லாப் படர்துரோகம்'' இடம் பெறும் சாத்தியங்கள் தெரிகின்றன. ''துருக்கியிலும் ஈரானிலும் எனது மக்கள் அகதிகளாக வேண்டும் அல்லது சதாமிடம் சரணடைய வேண்டும் இதைவிட வேறு வழியே யில்லை'' என்கிறார் குர்திஷ் தலைவரான மசாவுத் பர்சானி. ஈராக்கிய குர்திஷ்தான் சிதறுமா னால் சதாமின் கொடிய சர்வாதி காரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் போராட்டத்தின் வலுவான கருவியை வாஷிங்டன் இழந்து விடும். இருதரப்புக்கும் எதிராகக் காலம் செயற்படுகிறது; யார் வெல் லப் போகிறார்கள் என்பதை என் னால் நிச்சயப்படுத்திக் கூற முடிய வில்லை'' என்கிறார் அந்தப் பிர தேசத்தில் பணிபுரியும் ஓர் அமெ ரிக்க அலுவலர்.

நேசநாடுகளின் வான் பாது காப்பும் மேற்கத்தைய நாடுகளின் பலகோடி டாலர் உதவிகளும் கிடைக்கின்ற போது குர்திஷ் மக் கள் ஏன் தோற்க வேண்டும்? பல்லாயிரக் கணக்கான வெட்டுக் களைச் செயற்படுத்துவதில் வல்ல வர் சதாம். குர்திஷ் பொருளாதா ரத்தைச் செதுக்கியழித்து அவர் களுடைய நிறுவனங்களைச் செய லற்றதாக்கி குர்திஷ் மக்களுக்கு உதவ முன்வந்துள்ள வெளிநாட்டு உதவிப் பணியாளர்களைப் பய முறுத்தி வருபவர் அவர். ''இந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பின்மை உணர்வு மிகவும் வலுவாக உள் ளது'' என்கிறார் சாக்கோ என்ற இடத்தில் உள்ள நேசநாடுகளின் சிறிய தொடர்பு மையத்தில் பணி புரியும் அமெரிக்க இராணுவ கேணல் ஜெரால்ட் பீ. தோம்சன்.

உளவியற் போர்: குவைத் தின் ஆக்கிரமிப்பாளரான சதாம் பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இலகுவில் முயல மாட்டார். ஆனால் அவரது உளவியற்போர் செயற்றிறமை வாய்ந்ததாகும். குர்திஷ்களின் தலைநகரமான ஏர்பில்லின் முப்பு றமும் நூற்றுக்கணக்கான கவச வாகனங்கள் தரித்து நிற்க எல் லைப்புறத்தில் 30,000 ஈராக்கிய குடியரசுக் காவலர்கள் குவிக்கப் பட்டுள்ளனர். மே மாதத்தில் ஒரு வாரத்தில் ஈராக்கிய தேசியக் காங் கிரஸ்ஸின் குர்திஷ் அராபிய எதி ரணி உறுப்பினர்கள் அமெரிக்க உப-ஜனாதிபதி அல்பெட் கோறே யையும், வெளியுறவு அமைச்சர் வோறன் கிறிஸ்தோபரையும் சந் தித்துக் கொண்டிருந்த வேளையில் ஏர்பில்லுக் கண்மையிலுள்ள பல விவசாயக் கிராமங்களை சதாமின் படையினர் எறிகணை கொண்டு தாக்கினர். பிரான்சு நாட்டு நிவா ரண நிறுவனம் ஒன்று நடத்தி வரும் ஆரம்பக் கல்விக்கூட பால் வழங்கும் நிலையத்திற்குள்ளே பயங்கரவாதிகள் கைக்குண் டொன்றை வீசினர். குர்திஷ் தாழ் நிலப் பிரதேசங்களினூடாக சதா மின் கனரக வாகனங்கள் இரவில் கடந்து செல்லும்போது நேசநாடு களின் வான்பலம் நகரங்களைப் பாதுகாக்கப் போதுமானதாக இல்லை என்பதைத் தளிப்பட்ட அளவில் அனைவரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அந்தப் பணி யைச் செய்து முடிக்கும் ஆழ்ந்த பலம் குர்திஷ்களிடமும் இல்லை.

இப்போதைக்கு சதாம் ''தனது திட்டத்தை இராணுவ நடவடிக் கையிலிருந்து பொருளாதார நட வடிக்கைக்கு மாற்றியுள்ளார்'' என்கிறார் டோஹீக் நகர முதல்வ ரான பதில் மொறாவி. வளை குடாப் போருக்கு முன்னர் அச்சிட் டுப் புழக்கத்தில் விடப்பட்ட 25 டினார் நோட்டுக்கள் செல்லுபடி யற்றவை என்று அறிவித்துள்ளார் சதாம். தெற்கில் ஈராக்கியர்கள் தமது பழைய தாள்களைப் புதிய வற்றுக்கு மாற்ற அனுமதிக்கப்பட் டார்கள். வடக்கில் அது நடை பெறவில்லை. ஒரே நாளில் குர்திஷ் களின் நாணய விநியோகத்தின் மூன்றில் ஒருபங்கு அழிக்கப்பட்டு விட்டது. 1991 ஆம் ஆண்டிலி



கூப உதவி – வடக்கு ஈராக்கிலுள்ள குர்திஷ் மக்கள் குளிர்காலத்திற்காக தானியங்களைச் சேமிக்கிறார்கள்

ருந்து குர்திஷ்களுக்கான உணவு, எரிபொருள், மருந்து ஏனைய அத் தியாவசியப் பொருட்கள் அனைத் தையும் தடைசெய்துவிட்ட சதாம் முழு ஈராக்கிற்குமான ஐ. நா. பங்கீட்டை இதன் மூலம் ஈடு செய்துள்ளார்.

பாக்தாத்தின் இத்தகைய தடை களால் வெறுப்படைந்த பல உதவி வழங்கும் நிறுவனங்கள் ஈராக்கிய அரசின் அனுமதியில்லாமலேயே வடக்கில் இயங்கி வருகின்றன. இதற்கான சதாமின் எதிர் நடவ டிக்கை பயங்கரவாதம் தான். சென்ற ஜனவரியில் பதுங்கியிருந்து காக்கியதில் ஒரு பிரித்தானிய உதவிப்பணியாளர் கொல்லப்பட்ட தோடு மார்ச்சில் ஒரு பெல்ஜிய

New Doc 2020-04-06 14.46.20_page-0028.jpg

நாட்டவருக்கும் அதே முடிவு ஏற்பட்டது. இப்போது சகல வெளி நாட்டவர்களும் விரைவு வண்டிகளிலேயே பிரயாணம் செய்வதோடு ஈராக்கிய தாக்குதல் படையினரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயந்திரத் துப்பாக்கி தாங்கிய பெஷ்மெர்கா குரந்தடி படையினரின் உதவியை நாடிவருகின்றனர். ஒரு மேற்கத்தைய நாட்டவரைக் கொல்பவருக்கு 7000. டொலர்கள் முழுத்தொகையாக வழங்க சதாம் முன்வந்துள்ளார் என்று வதந்திகள் தெரிவிக்கின்றன. ஏர்பில்லில் பணிபுரியும் அனுபவம் மிக்க நிவாரணப் பணியாளரொருவர் ''எம்மைப் பயமுறுத்த அவர்கள் முடிந்த அனைத்தையும் செய்கிறார்கள். ஒருவரையுமே நம்ப முடியாது'' என்று கூறினார். அவருடன் பணிபுரியும் அவரது கூட்டாளிகளைப் போலவே தனது பெயரை வெளியிட அவர் விரும்பவில்லை. தாக்குதலுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு விடுவர் என்ற அச்சம் எல்லோரிடமும் இருந்து வருகிறது. இன்னும் சிலர் கொல்லப்பட்டால் தனியார் உதவிக் குழுக்கள் அங்கிருந்து வெளியேறி விடவே விரும்புகின்றன.

ஈராக்கின் பிரதேச இறைமையை நிலைநிறுத்தும் முயற்சியில் மேற்கத்தைய நாடுகள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ''ஈராக்கிலிருந்து எம்மைத் தனிமைப்படுத்த அரசு முயலுகிறது. உலக சமூகம் அது முடியாது என்கிறது'' என்று சொல்கிறார் குர்திஷ் பாராளுமன்ற உறுப்பினரான அஹமட் பவாமி. குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களோடு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் பலம் வாய்ந்த நட்பு நாடான துருக்கி, ஈராக்கில் சுதந்திர குர்திஷ்தான் உருவாகும் கருத்தை ஒருபோதும் ஆதரிக்க மாட்டாது என்பது சதாமுக்கு நன்கு புரியும். ''துவாரமிடும் ஒரு கருவி போன்றது வடக்கு. அதனைச் செயற்பட வைக்கிறார் சதாம்''. அங்காராவிலுள்ள மேற்கத்தைய பொருளாதார நிபுணர் ஒருவரின் அபிப்பிராயம்இதுவாகும்: ''இதற்குப் பின்னால் நின்று இடி



களில் சிலவற்றைத் தாங்கிக் கொள்ளுகிறோம்.''

உயிர் - உதவி முறைகள்

துருக்கியின் தீதான அழுத்தத்தைக் குறைக்கவே வளைகுடாப் போரின் இறுதியில் பத்து இலட்சம் குர்திஷ் மக்கள் எல்லைப்புறத்துக்கு வந்தபோது பாதுகாப்புப் புகலிடங்களை மேற்கு நாடுகள் உருவாக்கின. அப்போதிருந்து அவர்களது பிரச்சினைகளை மனிதாபிமான ரீதியிலேயே மேற்குலகம் அணுகி வருகிறது. அவசரகால உதவியில் முக்கியத்துவம் காட்டப்படுவது ஒரு பொறியாக உருவெடுப்பதாக குர்திஷ் தலைவர்கள் கருதுகின்றார்கள் ''நாங்கள் பங்களாதேசோ, சூடானோ, சோமாலியாவோ அல்ல'' என்று கூறுகிறார் பதில் மொறாவி. குர்திஷ்களை தன்னிறைவெய்தவிடாமல் மேற்குலகம் அவர்களுக்கு உயிர்-உதவி முறைகளை நடைமுறைப்படுத்துகிறது என்பது அவரது கருத்தாகும்.

எதிர்வரும் கோதுமை அறுவடையின்போது தான் குர்திஷ் மக்களின் சுய உதவி நம்பிக்கை பூர்த்தியாகும். ஒவ்வொரு காலையிலும் 100 பாகை வெயிலின் வெப்பத்தில் விவசாயிகள் தமது மெலிந்த உடல்களோடு சதாமினால் தடைசெய்யப்பட்ட சகோமின் எண்ணெய்ச் சொட்டுகளோடும், அரிவாள்களோடும் இயங்குகிறார்கள். பயிர்கள் செழிப்பாக இல்லை. (விமானம் பறப்பதற்குத் தடையாயிருப்பதால் பூச்சி மருந்துகள் தெளிக்கப்படுவதில்லை) காளான் நோயால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் ஏர்பில்லில் உள்ள பிரதேச அதிகாரிகள் 200,000 தொன் அறுவடையை எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கோதுமையை வாங்குவதற்கு 5 கோடி டொலர்கள் கிடைத்தால் எதிர்வரும் குளிர்கால உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியும். இதுவரை 68 லட்சம் டொலர்களே பெறப்பட்டுள்ளது. மேலும் உதவி கிடைக்காவிடில் கோதுமையின் பெரும் பகுதியை பாக்தாத்திற்கே விற்க வேண்டும்.

வெளி உலகிலிருந்து அதேகமாகத் துண்டிக்கப்பட்டுள்ள ஏர்பில்லின் அதிகாரிகள் தாவியத்தைக் கொள்வனவு செய்யப் போதிய பணத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகிறார்கள். ஒவ்வொரு நாளும் மேலைநாட்டு உதவி ஒளிமங்கிவருகிறது. சுதந்திரமொன்றில்லாது போனாலும் குர்திஷ் தானை அடிமை நிலையிலின்றும் காத்துக்கொள்ள ''சூதாட்டம்'' நடத்தவேண்டியுள்ளது என்று கருதுகிறார் நிதி அமைச்சர் டாறோ ஷேக் நபி. றிது நேரத்தவனைக்குப்பின் வருத்தம் தோய்ந்த புன்னகையோடு ''ருஷ்ய சூதாட்டம் போன்றதாக இருக்கிறது'' என்கிறார்.

ஏர்பில்லில் கிறிஸ்தோப்பர் டிக்கி

நியூஸ்வீக், ஜூலை 12, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0029.jpg

தாங்கள் ஏன் விலை கொடுக்க வேண்டும் என்று வினாவுகிறார்கள் பாக்தாத்திலுள்ள ஈராக்கியர்கள்

"நீங்கள் சதாமைத் தாக்கவில்லை"

ஹிஷாம் மகிழும் அவரது நண்பர்களும் பேசுவது, கேலி செய்வது, நடப்பது எல்லாமே அமெரிக்கப் பாணியில்தான். பாக்தாத்தின் புது நகர்ப்பகுதியிலே வாழுகின்ற வசதி மிக்க சிறுவர்களைப் போன்றே இவர்கள் தோளிலே கடைக்குப் போகும் பைகள் தொங்குகின்றன. நரம்பிலே பெப்சி ஓடுகிறது. ''நாங்கள் அமெரிக்க படங்களையே பார்க்கிறோம்'' என்கிறான் அகமட் பயிஸ். இவன் ஒரு 19 வயது இளைஞன். செம்மஞ்சள் நிற காலங்கியும் தரைப்பந்து விளையாட்டுத் தொப்பியுமணிந்து காணப்படுகிறான். தங்கள் விருப்புக் குகந்த திரையுலக நட்சத்திரங்களைப் பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஹிஷாமுக்கு மைக்கல் போங்ற்ற கிய புலனாய்வுச் சேவையின் மையச் செயலகத்தை நோக்கி ஏவப்பட்ட அமெரிக்க ரொமாஹவ்க் ஏவுகணை பலிகொண்டதோடுகுறித்த இலக்கையும் அழித்து விட்டது. இந்த ஏவுகணைத் தாக்குதல் நிகழ்ந்த வேளையில் அத்தாரின் வீட்டிலிருந்து ஆறு அடிகள் தொலைவில் உள்ள தன் படுக்கையறையில் இறிஷாம் என்ற வைத்திய மாணவன் இருந்திருக்கிறான். ''நான் இன்னமும் உயிரோடிருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். மட்டற்ற மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாயுள்ளது'' என்கிறான். அவன் சீக்கிரம் மேலும் தாக்குதல்கள் நிகழக்கூடும் என்று அஞ்சுகிறான். அமெரிக்காவின் ஆபத்தான பக்கங்களை அவனும் அவனுடைய நண்பர்களும் பார்த்திருக்கிறார்கள் ''யா'' (ஆம்) என்கிறான். கலவரப்பட்டுள்ள பொறியியல்மாணவனான ஹைதர்: ''சலிப்பு ஏற்படுகிற போது இன்னொரு குண்டை வீசுவார்கள்'' என்கிறான்.

இந்தப்போர் மீண்டும் ஆரம்பிக்கும் என்றே எல்லா ஈராக்கியர்களும் நம்புகிறார்கள். சர்வாதிகாரியை விட்டுத் தாம் ஏன் பாதிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் ஆதங்கமாகவுள்ளது. ''எமது உணர்வுகள் என்றைக்கும் இப்போது போன்று தாழ்வுற்றிருந்தது கிடையாது. அவர்கள் சதாமைத் தாக்கவில்லை. எம்மில் மேலும் பலரை மட்டுமே தாக்கியுள்ளார்கள்.'' என்பது உஷாமின் அயலில் வாழும் ஒரு மூதாட்டியின் கருத்து. கப்பலில் இருந்து செலுத்தப்படும் இந்த ஏவுகணைகள் நரம்புகளையே செயலிழக்கச் செய்ய வல்லவையாகும். ஆறு மாதகாலத்துள் இது இரண்டாவது தாக்குதலாகும். ஐ. நா. வின் ஆயுதபரிசோதகர்களுடனான பேச்சுவார்த்தைகள் தொடர் தாக்குதல்களுக்கு இடமளிக்குமென்பதால் ஈராக்கியர்கள் அடிக்கொரு தடவை அண்டவெளியை அண்ணார்ந்து பார்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் பொருளாதாரத் தடைதான் அன்றாட வாழ்க்கையில் ஈராக்கியர்களின் உயிர்களை அதிகமாகப் பலிகொண்டு வருகிறது

அரபுலகத்தின் புகழ்பூத்த ஓவியக் கலைஞர் லெய்லா அல் அத்தார் என்கின்ற ஈராக்கியப் பெண்மணியையும் அவரது கணவரையும் சென்ற ஞாயிறு காலையில் அவரது வீட்டிற்கு அண்மையிலுள்ள ஈராக் சதாமோ இதற்கு இசைவாக்கம் அடைந்து விட்டார். பல வேளைகளில் தமது செழுமைபற்றியும் பறை சாற்றிக் கொள்கிறார் அவர். ஏப்ரலில் நடந்த அவரது பிறந்த நாள் விழாவிலே அவர் ஒரு தங்க ரதத்திலே சவாரி செய்வதையும் பெரிய அளவிலான பிறந்தநாள் கேக் ஒன்றை வெட்டுவதையும் தொலைக் காட்சியில் பார்க்க முடிந்தது. இவ் வளவுக்கும் ஈராக்கிலே சீனி கிடைக்காத பொருட்களுள் ஒன்று என்பது மட்டுமல்ல பாரம்பரியமான பல்லாவோ அல்லது தவகால இஸ்லாமிய நீதிகளோ உண்பதென்பது சட்டபூர்வமாக மரணதண்டனைக்குரிய குற்றமாகும்.

இதன் எதிர் விளைவுகள் சதாமின் பிடிக்கு வலுவூட்ட வல்லனவாகும். அன்றாட வாழ்க்கையின் இடர்ப்பாடுகள் மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்கவே அவகாசம் அளிப்பதில்லை. இந்த நிலையில் மாற்றப் புரட்சிக்குத் திட்டமிடுவது முடியாத காரியம். சராசரி அரச உத்தியோகத்தரின் மாத வேதனம் மாதமொன்றிற்கு 300

மைப் பிடிக்கும். ஹைதர் டெபாசி ரொம்குறூசுக்கு வாக்களிக்கிறான். அகமட் ஜூலியா றொபட்சைப் பற்றி வாயினிக்கக் கதைக்கிறான்- அவன் சமீபத்தில் தான் திருமணம் செய்து கொண்டான் என்ற செய்தி அப்போது தான் அவனுக்குச் சொல்லப்படுகிறது. அது கேட்டு அவன் நாடகப் பாணியில் முனகுகிறான். அவனது காதலுணர்வு நரம்புகள் வழியாகக் கீழிறங்குகிறது. நாட்டின் பாரிய தொல்லைகளின் நடுவில் அகமட்டின் சிறிய துன்பவியலை எண்ணி மற்றவர்கள் உரக்கச் சிரிக்கிறார்கள். இந்த நகைப்பின் மத்தியில் முன்னர் தமது அண்டை வீடாக இருந்து இப்போது தரை மட்டமாகி விட்ட இடத்து இடிபாடுகளுக்குள் தமது பணியை ஆரம்பிக்கிறார்கள்.

New Doc 2020-04-06 14.46.20_page-0030.jpg

டினார்கள் தான். அடிப்படை அரச உணவுப் பங்கீட்டை நுகர்வதற்கு இந்தத் தொகை 10 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாகும். ஒரு ஐ. நா. அறிக்கையின்படி மிகுதி நாட்களுக்கு ஒருவர் தனது வேதனத்தின் ஐந்து மடங்கைச் செலவிட வேண்டும். வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்காக ஒவ்வொருவரும் இரண்டாவது தொழிலை மேற்கொள்ள வேண்டிய கட்டாயமுள்ளது. வெளியுறவு அமைச்சகத்தில் மோட்டார் வாகனத் தரிப்பிடத்தில் நிற்கும் வாகனங்களில் அரைவாசி இரவு வீபச் சாரத் தொழிலில் ஈடுபடுவோரால் செலுத்தப்படும் வாடகைக் காரர்களாகும்.

அவர்கள்தான் அங்கே அதிர்ஷ்ட சாலிகள். உயிரோடு வாழ்வதற்காகத் தம்மிடமுள்ள கடைசிப் பொருட்களையும் விற்கவேண்டிய அளவிற்குத் தள்ளப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களே ஈராக்கில் இன்றைய பெரும் பான்மையினராவர். கோடைகால சீதோஷ்ணநிலை அநேகமாக 105 பாகை பரனையிட்டைத் தாண்டும் அந்த நாட்டிலே மத்தியதர வகுப்பினருக்குக் குளிரூட்டிகளும், குளிர் சாதனப் பெட்டிகளும் ஆடம்பரப் பொருள்களாகி, கைக்கெட்டா தவையாகி விட்டன. இன்று ஈராக்கிய நாட்டின் 50 வீழுக்காட்டினர் ஏழைகளாவர். போஷாக்கின்மை என்பதே சாதாரண நிலையொன்றாகி விட்டது. போருக்கான நட்ட ஈடு வழங்குதல், ஐ. நா. செயற்பாட்டின் செலவினங்களை ஏற்றல், நிவாரண விநியோகங்களுக்குப் பணம் செலுத்தல் போன்ற ஐ. நா. வின் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டிருந்தால் இந்தத் துன்பங்களிலிருந்து சதாம் மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஈராக்கிய இறைமை உரிமையில் தலையிடுவதாகவும், நாட்டின் வளங்களிலும், மக்களிலும் சதாமுக்குள்ள கட்டுப்பாட்டை முறியடிப்பதாகவும் கருதி ஈராக்கிய அரசு இவற்றை ஏற்க மறுக்கிறது.

இழந்த ஏவுகணைகள்

தமது எதிர்காலம் பற்றிய ஈராக்கியரின் ஆழமான தடுமாற்றம் அரச கட்டுப்பாட்டிலுள்ள புதினத் தாள்களிலேயே பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன. அரச தினசரியான அல்—ஜமுரியாவின் ஓர் ஆசிரியத் தலையங்கம் சென்ற வாரத்தில் ஈராக்கிய ஏவுகணைகளின் இழப்புப் பற்றி மனக்கவலை வெளியிட்டதோடு, தனது நாடு மீண்டும் ஆயுத வலுப் பெற்று ரொமாஹவ்க் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் பயமுறுத்தலை மேற்கொள்ளவேண்டும் என்று கூறியுள்ள அதே வேளையில் உத்தியோக பூர்வமான செய்தி நிறுவனம் நடத்திய ''கருத்துக் கணிப்பில்'' 30 வீழுக்காடு ஈராக்கியர்கள் அமெரிக்க இலக்குகளைத் தாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் தனது ஆயுதக் கைத்தொழிலை ஐ. நா. பரிசோதிக்கும் விடயத்தில் அரசு ஓரளவு சில அம்சங்களில் துணிவுடன் நடந்து கொள்ள ஆரம்பித்துள்ளது. இந்த அறிக்கைகள் பற்றி பாக்தாத்தில் உள்ள வெளி நாட்டு இராஜதந்திரிகள் சமாதான முயற்சியாகும் என்று கூறியுள்ள போதும் ஒருவர், ''இந்த அரசின் செயற்பாடுகளுக்கும், பிரதிகூலங்களுக்கும் எந்த ஒரு திட்டவட்டமான வரையறையும் கிடையாது'' என்று சொல்லியுள்ளார்.

ஈராக்கிய மக்கள் தமது கௌரவத்தையும், கனவுகளையும் தம்மாலியன்ற அளவு பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டியவர்களாகியுள்ளனர். லெய்லா அல்—அத்தாரின் வீட்டு இடிபாடுகளுக்குள்ளே ஹிஷாமும் அவனது நண்பர்களும் துண்டுகளைப் பொறுக்கி எடுக்க முயலுகிறார்கள். 30 அடி உயரமான எரிமலையின் வாய்ப் பகுதி போன்ற இடத்தின் பக்கங்களில் வெடித்துச் சிதறிய கட்டுமானங்களைக் கொண்டு அழிவு நடந்த இடத்திற்கும் அடுத்த வீட்டிற்கும் இடையில் புதிய சுவர் ஒன்றை எழுப்ப அவர்கள் முயலுகிறார்கள். ''நாங்கள் செங்கற்கள் சேகரிக்கின்றோம்'' என்றான் ஹைதர் என்ற பொறியியல் மாணவன். ''அமெரிக்காவில் சொல்வதைப் போல, நாங்கள் திரும்பவும் கழலப் பார்க்கின்றோம்'' என்ற நம்பிக்கையோடு சொல்கின்றான் அவன்.

பாக்தாத்தில் நிறிஸ்தோப்பர் டிங்

நியூஸ்வீக், ஜூலை 12, 1993

வெளியிடப்படாத அறிக்கை

நீண்டகாலமாக எதிர்பார்த்து வந்த பாரசீக்குடா நாட்டு வான் யுத்தத்தைப்பற்றிய அறிக்கையை அமெரிக்க வான்படையினர் மூடிமறைத்து விட்டனர். வளைகுடா வான் யுத்தத்தின் ஆய்வைப் பற்றி அறிக்கையொன்றை வெளியிட பென்ரகன் நிட்டமிட்டிருந்தது. இது வளைகுடா வான் யுத்தத்தின் பல மில்லியன் டொலர் பெறுமதியான மீளாய்வு (விமர்சனம்) ஆகும். வான்படையின் மனமாற்றத்தை இரு காரணிகள் உண்டாக்கியிருக்கலாம். முதலாவதாக கூட்டு வானபடைத் தாக்குதல்கள் ஈராக்கின் உள்கட்டமைப்பின் பெரும்பகுதியை அழித்திருக்கக்கூடுமாயினும் கேந்திர ஸ்தானங்கள் மீது வீசிய குண்டுகள் யுத்தத்தின் பலாபலனைப் பாதித்திருக்குமென்பதற்குப் போதிய சான்றுகளில்லை. இரண்டாவதாக வான்படையின் தாக்குதல்கள் எதிர்பார்த்த அளவுக்கு, இடம்பெயரக்கூடிய ஸ்கட் ஏவுகணைச் செலுத்திகள் தாக்குதலில் வெற்றி பெறவில்லை. இவ்வாறு அந்த ஆய்வுடன் தெருங்கிய தொடர்புடைய ஒருவர் கூறுகிறார். சேர்பியர்களின் ஆட்டிலறிக்கு எதிராக எங்களுக்குக் கிடைக்கக்கூடிய வெற்றியைப் பற்றி வளைகுடா யுத்தத்தின் அடிப்படையிலேயே வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் அபிப்பிராயங்களை வெளியிடக்கூடும்.

New Doc 2020-04-06 14.46.20_page-0031.jpg

கலப்பு நோக்கங்கள்

அச்சமும் இலாப நோக்கும் கலந்து ஆசியான் தொகுதி சீனாவை நோக்குகின்றது

1985 இல் மலேசியப் பிரதம மந்திரி டடுக் செரி மகாதீர் முகம்மது பீக்கிங் சென்றிருந்த போதும், சீனாவின் பக்கபலம் பெற்று பொதுவுடைமைக் கலகக்காரர் அவரது அரசாங்கத்துக்குரிய பாதுகாப்புப் பிரச்சினையைக் கொடுத்துக்கொண்டிருந்தனர். ஆனால், 14, ஜூன் 1993இல் அவர் சீனத்தலைநகரில் பிரதமர் லிபெங்கைச் சந்தித்த போது, இரு பகுதியினரும் ஒரு விடயத்தில் பூரண ஒற்றுமையுற்றிருந்தனர். அதாவது மேற்கே ஆசிய அரசாங்கங்களைக் கவிழ்க்க முயற்சி செய்வதாக குறை கூறினர்.

சீன வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் கூ. ஜீ யான்மின் பிரதமர் லியின் வார்த்தைகளை எடுத்துக் காட்டிக் கூறினார்: '' ஜனநாயகம் என்பது ஓர் இலட்சியமன்று; அது ஒரு வழியே. ஜனநாயகம் மனித உரிமைகள் பற்றிய ஒரு குறித்த எண்ணக் கருவைத் (வெளியே இருந்து) திணிப்பதை எதிர்க்க வேண்டும்'' என மகாதீர் இதை முழுவதும் ஒப்புக் கொண்டார். ''இதுவெல்லாம் மேற்கு எம் நாடுகளில் குழப்பங்களைத் தூண்டி, எம்மைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரச் செய்யும் முயற்சிகளே'' என்ற மலேசியத் தலைவரின் வாசகத்தை வு எடுத்துக் காட்டினார்.

பயமும் வருவது நன்மைக்கே என்ற கொள்கையும் சேர்ந்து ஆசியான் (குழு அங்கத்தவ) நாடுகளிடையே சீனாவின் எழுச்சி பற்றிய கருத்தை நிர்ணயிக்கின்றன. அவை பீக்கிங் விடயமாகத் துணிகரமான இராஜதந்திரத்தை அனுட்டிப்பதற்கு இவ்விளக்கமே பொருந்தும் போலும். ''வருங்காலத்தில் ஒரு பொருளாதார, அரசியல் அதி வல்லரசு ஆகும் சாத்தியக்கூறு பற்றிச் சீனாவை நாம் மதித்தே ஆகவேண்டும். ஆசிய-பசிபிக் நாடுகளின் நலனுக்குச் சீனாவை ஆக்க ரீதியாக இப் பிரதேச விவகாரங்களில் ஈடுபடச் செய்ய வேண்டும்'' என்று மலேசிய வெளிவிவகார மந்திரி தாதுக் அப்துல்லா படாவி சமீபத்தில் ஒரு பேச்சில் குறிப்பிட்டார்.

சீனாவின் பொருளாதாரம் அதிவிரைவாக விரிவடைவதன் வசீகரம் இப்படி அதனைக் குறித்துச் சாதகமான உளப்போக்கைக் கடைப்பிடிக்கத் தூண்டுவது இயற்கையே. மகாதீர் சீனா சென்றபோது 290 மலேசிய வர்த்தகப் பிரமுகர்களும் உடன் சென்றனர். அநேக கூட்டு முயற்சிச் செயற்றிட்டங்கள் கையெழுத்திடப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. இரு நாடுகளும் பொருளாதார ஒத்துழைப்பைத் தூண்டும் முகமாக (ஸ்தானிகரில் குறைந்த) வர்த்தகப் பிரதிநிதிகளைப் பரிமாறிக் கொள்ளச் சம்மதித்துள்ளன. கோலாலம்பூர் பங்குமாற்றுச் சந்தையில் சில கம்பனிகளின் பங்குகள் உச்ச விலையில் விற்கப்படுகின்றன. காரணம் அவை சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப் போவதாகக் குசுகுசுப்பு பரவியதே.

வர்த்தகம் ஒரு புறமிருக்க, மகாதீரின் விஜயம் ஒரு விசாலமான இராஜதந்திர வீச்சு எனலாம். ''மலேசியாதான் முதன் முதலாக ஆசியான் நாடுகளின் அங்கீகாரத்தோடு சீனாவை ஆசியான் குழுவின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு 1993 இல் வரவேற்றது என்ற விடயத்தை நீங்கள் மறந்து விடக்கூடாது. அதன் விளைவாகத் தொடர்ந்த செயற்பாடே இது'' என்று பதாவி 'தூரகிழக்குப் பொருளாதார நோக்கு' சஞ்சிகை நிருபருக்குக் கூறினார். அந்த முன்னோடி முயற்சியின் பயனாகச் சென்ற மே மாதம் ஆசியான் நாடுகள் வருங்கால பிரதேசப் பாதுகாப்பு விவாதங்களுக்குச் சீனாவை அழைப்பதென முடிவு செய்துள்ளன.



ஸ்பார்ட்லிஸ்: சீனாவின் விட்டுக் கொடுப்பு குறைவாகத் தெரிகிறது.

சீனாவுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படவேண்டும் என்ற போக்கு மகாதீரின் திட்டமான 'கிழக்காசிய பொருளாதாரக் குழு' என்ற பிராந்திய அமைப்பை உருவாக்கும் யோசனைக்குத் தூண்டுதல் ஆகும். மகாதீரின் இக் கருத்தை அவர் பீக்கிங்கில் வீயைச் சந்தித்தபோது முற்றாக அங்கீகரித்தார்.

மகாதீர் சீனாவுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மேற்கு நாடுகளில் கூடிய நம்பிக்கை வைப்பதைக் குறைக்க விரும்புகிறார் என்று அவதானிகள் நியமுறுகின்றனர். அவரது கி. ஆ. பொ. குழுத் திட்டம் அதிக வரவேற்பைப் பெறவில்லை. மகாதீர் மேற்குலகு குறித்து எதிர்மறை நோக்குடையவராயிருப்பதே இப் போக்குக்குக் காரணம் என்கிறார் ஒரு பிரதேசப் பகுப்பாய்வாளர்.

New Doc 2020-04-06 14.46.20_page-0032.jpg

சீனாவுடன் நல்ல தொடர்புகள் ஏற்படுவதற்குச் சீனாவின் இப் பிரதேசத்துக் கேந்திரிய (இராணுவ) நோக்கங்கள் குறித்து எழும் அச்சத்தைப் போக்க வேண்டும்; அது இயலுமோ என்பது ஐயமே. கடந்த ஓராண்டாக ஸ்ப்றாற்லி, பரஸெல் தீவுக் கூட்டங்கள் தமக்கென உரிமை கோரும் அரசுகள், இப் பகுதியில் சீனப் படைகள் அதிகரிக்கப் பட்டிருப்பதையும், இவை தனது கடற் பிரதேசத்தின் எல்லைக்குள் உள்ளவை எனச் சீனா சட்டமியற்றி அறிவித்ததையும் அச்சத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

பீக்கிங் சந்திப்பில் சீனா இப் பிரதேசத்தின் இராணுவ அச்சுறுத்தல் ஆகும் என்றது ''வியப்பான கட்டுக் கதை'' எனத் தள்ளிவிட்டார் மலேசியா, சிங்கப்பூருக்கு ஜூன் தொடக்கத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் செய்த சீனப் பாதுகாப்பு மந்திரி சிஹ யோஷியன் தமக்கு விருந்தளித்த இரு நாடுகளுக்கும் ஸ்பிறாற்லி தீவு விடயமாகச் சீன அரசு பலாத்காரத்தை பிரயோகிக்காது என வாக்குப் பண்ணினார். மலேசிய பாதுகாப்பு மந்திரி டாதுக்செரி நஜீப் துன் ரஸாக் அவ்வாக்குறுதியில் திருப்தியடைந்தவர் போலக் காணப்பட்டார். ''சீனா இப்பொழுதும் தொடர்ந்தும் நன்மை விரும்பும் வல்லரசாகவே விளங்கும்'' என்று தாம் கருதுவதாகக் குறிப்பிட்டார். ஆனால் இராணுவ நிர்வாகம் இதே கருத்தைக் கொண்டுள்ளதோ என்று தெரியவில்லை.

பூசலுக்குக் காரணமான நில உரிமைப் பிரச்சினையைத் தீர்க்கும் வழி வகைகளை நாடும் நிபுணர்கள், சீனா தன் உரிமை பற்றிய விடயத்தில் இன்னும் கடுமையாகி வருகிறது என்றே கருதுகின்றனர். இப் பூசலில் புரூணை, மலேசியா, பிலிப்பைன்ஸ், தைவான், வியட்நாம், சீனா ஆகிய நாடுகள் பங்குடையன. சில இராணுவப் பகுப் பாய்வாளர் கருத்து சீனா தனது இராணுவ பலத்தை இப் பகுதியில் அதிகரிக்கும்வரை இந்தோனேசியா ஆரம்பித்து வைத்த உத்தியோகப் பற்றற்ற சமாதானப் பேச்சுக்களை ஆதரிப்பது போலக் காட்டிக் கொள்ளலாம் என்பதாகும்.

கோலாலம்பூரிலிருந்து
மைக்கல் விடியோ

-(F) வார் ஒஸ்ரேன் எக்கனமிக் ரிவியூ, ஜூன் 24, 1993

எல்லையில் தீ

லெபனான்: பலத்த ஷெல் தாக்குதல்கள் அகதிகளை தீவிரவாதிகளாக்கும்

1978 ஆம் ஆண்டு பலஸ்தீனியரின் தாக்குதலுக்கு எதிராக இஸ்ரேலியர் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பொழுது அயுகிஷாம் தெற்கு லெபனானை விட்டு ஓடினார். 1982 ஆம் ஆண்டு அவர் ,'ஒப்பரேசன்பிஸ்''(சமாதானம்)இருந்துதப்பிக் கொண்டார். பெய்ரூட் நகரத்தை இஸ்ரேலியர் முற்றுகையிட்டு கைப்பற்றிய பொழுது யாசீர் அரபாத் லெபனானில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டார். அதன் பின்பு இஸ்ரேலுக்கு எதிராக, சிற்றி முஸ்லிம் தீவிரவாதிகள் தோன்றினார்கள்

47 வயதுள்ள அயுகிஷம் அகதிகள் நிறைந்து வழியும் பெய்ரூட்டில் உள்ள ஒரு முஸ்லிம் பாடசாலையில் தனக்கு என்ன உணவு கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது, இப்போ நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது என்று கவலை தெரிவித்தார். இந்த முறை கிராமம் நாசம் அடைந்து வயல்கள் எரிந்து விட்டன, முந்திய இரண்டு ஆக்கிரமிப்பின் குறிக்கோள் பலஸ்தீனியரின் எதிர்ப்பை நீக்கிவிடவே, ஆனால் இப்பொழுது லெபனார்களை நீக்கிவிடவே.

பாதுகாப்பு வலயத்தில் முஸ்லிம் தீவிரவாதிகளை பாய்ந்து தாக்கும் நடவடிக்கைகளுக்கு பழிவாங்கு முறையாக இஸ்ரேல் தனது தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலிய பிரதமமந்திரி யிற்சாக் ராபின் இரக்கமற்ற யுத்த தந்திரத்தைக் கையாளுகிறார். இவருடைய போர் வீரர்கள் ஜெற் விமானங்கள், கெலிகொப்டர்கள், கப்பல்கள், பிரங்கிப்படகுகள் லெபனானில் சிற்றி முஸ்லிம்களின் வயல்களை வேண்டுமென்று தீமயமாக்கி ஆயிரக்கணக்கான மக்களை பெய்ரூட்டின் வடக்கே தள்ளினர். ஒரு நாளிலே 5,500 ஷெல்கள் 70 கிராமங்களில் விழுந்து வெடித்தன. இதில் 130 பேர் இறந்தனர். குறுகிய காலத்தில் ஈரானால் உற்சாக மூட்டப்படும் கிஸ்புல்லா இயக்கத்தை உடைத்தெறிந்தது. ஆனால் காலப்போக்கில் கோபமூட்டப்பட்ட அகதிகள் தீவிரவாதிகளுடன் சேர்ந்து யிற்சாக் ராபினுக்கு பெருந்தலையிடி கொடுக்கக்கூடும்.

ஒரு கிழமை போரின் பின்பு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் வோரன் கிறிஸ்தோபரின் உதவியால் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. இந்த வாரம் கிறிஸ்தோபர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்து ஊசலாடிக்கொண்டிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தை

New Doc 2020-04-06 14.46.20_page-0033.jpg



பொறுப்புள்ள செயற்பாடு: தீச்சுவாலையாகக் காட்சியளிக்கும் இஸ்ரேலின் வடபகுதி ''பாதுகாப்பு வலயம்''

யைத் தொடக்க முயற்சிப்பார். இந்த பேச்சுவார்த்தைக்காக ராபி னுடைய போர்வீரருக்கு கைவிலங்கு பூட்டு போடமாட்டாது என்று கிஸ் புல்லா மிகத்துணிச்சலுடன் கூறி னார்; வடக்கே தங்கள் இனத்தவர் மேல் தாக்குதல் நிறுத்தாவிட்டால் நீங்கள் தெற்கே திரும்பிப் போக மாட்டீர்கள் என்று.

பெய்ரூட்டில் நியூஸ்வீக் சஞ்சி கைக்கு பேட்டி அளிக்கும்போது கிஸ்புல்லா பதில் செயலாளர் நெயம் கவீம் இப்படிக் கூறினார். ''எங்கள் பிரதைகளைக்குழப்பினால் இஸ்ரேலை நாங்கள் குழப்புவோம் என்று.

யிற்சாக் ராபின் லெபனான் பிர தம மந்திரி நாபிக் அல்காரியைத் தீவிரவாதிகளை தடைசெய்யும்படி வற்புறுத்துவார், அப்பொழுது கிராம வாசிகள் கிஸ்புல்லாவுக்கு எதிராக போரிடுவார்கள் என்று எதிர்பார்க் கப்படுகிறது. நாங்கள் இந்த தீகி லான போரை மற்றப்பக்கம் திருப்பி விட்டோம் என்று இபிரெம் சினே கூறுகிறார். இப்படிச் செய்வதன் மூலம் பிரதமர் காரிரி, சிரியா ஜனாதிபதி காபெஸ் ஆஸாத்தை சிற்றி தீவிரவாதிகளிக்கு ஆயுத உதவி அளிக்க வேண்டாமென்று கேட்கச் செய்யலாம்.

இஸ்ரேலிய பத்திரிகை ஒன்றின் வாக்கெடுப்பு மூலம் 93 வித மக்கள் இதனை விரும்புகிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. இந்த வருடம் கிஸ்புல்லா இஸ்ரேலுக்கு எதிராக 60 ரொக்கெட் தாக்குதலை நடத்தி யுள்ளார். அத்துடன் தீவிரவாதிகள் 7 இஸ்ரேலிய வீரர்களைப் பாது காப்பு வலயத்தினுள் சென்ற மாதம் கொன்றுள்ளார்கள்.

சிறுபிள்ளைகளுக்கு இடையே பெரும் பரபரப்பு உண்டாகியுள்ளது. 10 வயது லெபனான் சிறுவன் கூறி னான்; அவர்கள் எங்கள் நாட்டை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் ஆத லால் நாங்கள் வேறு நகரம் செல் கின்றோம் என்று.

இஸ்ரேலியரின் உந்து சக்தியால் உண்டாக்கும் தாக்கங்களைப் பல நாடுகள் கண்டித்துள்ளன. சமாதா னத்தைக் குழப்பும் கிஸ்புல்லா தீவிர வாதிகளுக்குப் பல கினேகிதரில்லை.

கிஸ்புல்லா இஸ்ரேல் எல்லையில் தாக்குதல் நடத்தமாட்டார் என்று கூறினார் என சனிக்கிழமை இஸ் ரேல் அறிவித்தது. தாக்குதல் நடத் தப்பட்டால் பதில் தாக்குதல் நடத் துவோம் என்று இஸ்ரேல் கூறியது.

ஞாயிறு காலை தீவிரவாதிகள் தாக்கினார்கள். ஆனால் இது பேச்சு வார்த்தையை முற்றாகத் தடை செய்யாது, என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

நியூஸ்வீக், ஒகஸ்ட் 9, 1993

ஜேர்மன் சுறாக்களுக்கு விருந்து

சோவியத் சாம்பிராஜ்யத்தின் உருக்குலைவினால் வீழ்ச்சியடைந்த ருஷ்யக் கம்பனிகளை ஜேர்மனியப் பெருஞ் சுறாக்கூட்டம் விரைவாக விழுங்கிவிடும் என பொருளியல் நிபுணர் ஜோசியம் கூறினார். ஆனால் அவர்கள் ஜேர்மனியில் ஏற்படப் போகும் பொருளாதாரப் பின்ன டைவைக் கருத்திற் கொள்ளவில்லை. இப்பொழுது ஜேர்மனிய கைத்தொழில்கள் நீரில் மூழ்குந் தறுவாயிலுள்ளதால் வேட்டைக்குச் சென்றவர்களே வேட்டையாடப்படும் நிலை உருவாகியுள்ளது. தொடக்கத்திலேயே தனியார் மயமாக்கப்பட்ட ருஷ்ய வியாபார நிறுவனங்களிலொன்றான ''சொக்கோல் நிக்கி சாச்சனியிலுள்ள செல்ஸ்ரோவ் வேக் பிறினா'' என்னும் செலுலோக உற்பத்திக் கம்பனியை 250 மில்லியன் மார்க்குக்கு வாங்கியுள்ளது. சொக்கோல் நிக்கி ஒரு மில்லியன் மார்க்கைப் பணமாகவும் மீதியை நிலக்கரியாக வும், உருக்காகவும் மேற்கூறிய தொகையைக் கட்டும். ருஷ்யாவின் சுயநிர்ணய மாகாணமாகிய ''பஸ்கீர்'' இல் உள்ள அடிலிலோல் மினெறாலூல்'' என்னும் கம்பனியை 81 மில்லியன் மார்க்கிற்கு அரசுக்குச் சொந்தமான எண்ணெய்க் கம்பனியாகிய ''பஷிற்நேஃ்'' வாங்கியுள்ளது யாருக்குத் தெரியும்? ஒருநாள் ருஷ்ய மோட்டார் வாகனங்கள் செய்யும் கம்பனியாகிய ''வொல்கா ஒட்டோ வேக்ஸ்'' மேசிடிஸ்பென்ஸ் கம்பனியை வாங்கி உலகத்திலேயே மிகத் திறமை யான சொகுசு மோட்டார் கார்களைச் செய்யக்கூடும்.

New Doc 2020-04-06 14.46.20_page-0034.jpg

தைலத்திலே ஒரு கரடி

மத்திய ஆசியாவிலே ருஷ்ய ஏகாதிபத்தியம் உயிரோடு நிலைபெற்றுள்ளது

சோவியத் ருஷ்யா சிதைவடைந்த போது மத்திய ஆசியாவின் சுதந்திரம் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் நம்பிக்கைகள் அபரிமிதமாயின. ஆனால் பழைய பழக்கங்கள் இலகுவில் மறைந்து விடுவதில்லை. மத்திய ஆசியாவில் தொன்மையான அச்சங்களால் அரசியற் சீர்திருத்தங்களை விட ருஷ்ய நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1219 இற்கும் 1240 இற்குமிடைப்பட்ட காலத்தில் ருஷ்யாவின் 12 சிற்றரசுகள் செங்கிஸ்கானின் தங்கச் சைனியத்தால் விழுங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகள் ஈவிரக்கமற்ற ஏகமானத்துவம் காரணமாக ருஷ்யர்கள் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த அனுபவம் ருஷ்யர்களை ஐரோப்பிய எண்ணப்பாட்டிலிருந்து அப்புறப்படுத்தியதோடு ஏற்பட்ட தழும்பு மாறாமலிருந்தது. 1480 இல் மூன்றாம் இவான் பலமிழந்து கொண்டிருந்த மங்கோலியரின் பிடியிலிருந்து மஸ்கோவியை மீட்ட காலந் தொடக்கம் சுற்றிவளைக்கப்படும் ஆபத்துத் தொடர்பான நிரந்தர அச்சம் ருஷ்யர்களிடமிருந்து வந்தது. அந்த அச்சமே இன்றைக்கும் அதன் வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்கிறது.

மஸ்கோவைற்கள் கிழக்குப் பக்கமாகத் தாக்கி சைபீரியாவைக் கைப்பற்றினர். பின்னர் தென்புறம் திரும்பி மங்கோலிய சாம்ராஜ்யத்தில் எஞ்சியிருந்த சிற்றரசுகளைத் தமதாக்கினர். அடுத்த 400 ஆண்டுகளாக நாளொன்றிற்கு 140 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புக்குத் தமது ஆட்சியை விரிவாக்கினர். 1091 ஆம் ஆண்டில் மொஸ்கோவிற்கும் லண்டனுக்கு மிடையிலான மகா ஆக்கிரப்பு விளையாட்டு முடிவுக்கு வந்த போது ருஷ்ய சாம்ராஜ்யம் தற்போதைய தஜிகிஸ்தானின் மலைகளுக்கப்பால் விரிவடைந்திருந்தது.

இவ்வளவுக்குப் பின்னரும் மொஸ்கோவின் அச்சம் மாறவில்லை. நெப்போலியனின் இராணுவ ஆக்கிரமிப்பு ருஷ்சியர்களுக்கு மேற்கு முனையில் ஆத்திர மூட்டுவதாய் அமைந்தது. 1917 இல் நடந்த ஒக்டோபர் புரட்சியின் பின்னர் செஞ்சேனை நாட்டின் மிருதுவான பிரதேசத்தை ருஷ்யக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இரண்டாவது உலகப் போரின் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மத்திய ஆசிய நாடுகளிலும் தனது கட்டுப்பாட்டைத் தாபித்துக் கொள்ளும் ருஷ்யாவின் முயற்சிக்கான மூலோபாய முக்கியத்துவத்தை அமெரிக்க இராசதந்திரியான ஜோர்ஜ் கெனன் வோஷிங்ரனை நம்பும் படி விளக்கியிருந்தார்.



மாக்சிசம் என்பது "வெளி புலகம் பற்றிய ருஷ்யாவின் உள்உணர்வு அச்சத்தை" மறைக்கும் ஒரு "அத்தி இலையேயாகும்" என்று அவர் கூறியிருந்தார்.

இந்த சகாப்தத்தில் தனது இடம் எதுவென்பதை மிக்க அவாவோடு எதையும் வாசித்தறியும் திரு. தார்சுல்தான் நகர்பாயேவிற்குத் தெரியும். 1991 இல் பொது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கசாக்கிஸ்தானின் முதலாவது ஜனாதிபதியான போதும் அவரது அதிகார ஆட்சி கசாக்கிஸ்தானின் சோவியத் பழமையையும், அதன் பெற்றோலிய டொலர் எதிர்காலத்தையும் பிணைக்கும் பாலமாகவே யுள்ளது. கசாக்கிஸ்தான் சோவியத் சாம்ராஜ்யத்தின் ஓர் அங்கமாக இருந்த போதும் அவர் ஜனாதிபதியாகவே இருந்தார். ஏனைய மத்திய ஆசியாவிலுள்ள இவரைப் போன்ற தலைவர்களைப் போலவே பழைய அந்தஸ்தைப் பேணுவதன் மூலமே ருஷ்ய கரடியைத் திருப்தி செய்ய முடியுமென்று அவருக்குத் தெரியும். இந்தப் பிராந்தியத்தை கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்ளத்திடமான காரணங்கள் ருஷ்யாவுக்குண்டு. பருத்தியும் எண்ணெயும் தான் அவையாகும்.

மொஸ்கோ ஆறுதலாக ஒய்வெடுக்க முடியும். எண்ணெய்வளம் மிகுந்த அசர்பைஜானில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியான திரு அபுல்பாஸ் எல்ச்சிபே குடியரசின் பழைய சோவியத் தலைவர் திரு.கெயிதார் அலியேவிற்காகப் பதவி கவிழ்க்கப் பட்டுள்ளார். துர்க்மெனிஸ்தானின் பாரிய பெற்றோலிய கையிருப்புக்கள் கடந்த வருடம் நடந்த தேர்தலில் மறு முறையும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ள சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி சப்பார் முறாட் நியசோவின் மேற்பார்வையிலேயே உள்ளது. உலகத்திலேயே பருத்தி உற்பத்தியில் மூன்றாவது இடத்தை வகிக்கும் உஸ்பெக்கிஸ்தானின் ஜனாதிபதி முன்னை நாள் கம்யூனிஸ்டான திரு. இஸ்லாம் கரிமோவ் ஆகும். எதிர்க் கட்சிகளை மடக்கி சென்ற வருடம் நடந்த நாட்டின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் இவர் தெரிவு செய்யப் பட்டார். இந்த மூன்று நாடுகளும் இன்னமும் ருஷ்ய ரூபிளையே நாணயமாகப் பாவிக்கின்றனர்.

New Doc 2020-04-06 14.46.20_page-0035.jpg

விட்டத்தின் எல்லையில் நிலைமை அவ்வளவு சாதகமானதாக இல்லை. கிர்கிஸ்தான் அதன் கம்யூனிஸ்டல்லாத ஜனாதிபதி திரு.அஸ்கார் அக்காயேவால், ருஷ்ய அணியை விட்டு அப்புறப்படுத்தப் பட்டுள்ளது இஸ்லாமிய, ஜனநாயக கிளர்ச்சியாளருக்கெதிரான மிருகத்தனமான உள்நாட்டுப் போரின் பின்னர் தஜிகிஸ்தானின் பழைய தலைமை ஸ்திரமற்ற கட்டுப்பாட்டையே தன் வசம் வைத்துள்ளது. எதிரணிகளுக்கு ஆயுத உதவி வராமல் இருப்பதற்காக ஆப்கான் எல்லையைத் தனது படைகளைக் கொண்டு தடுத்ததன் மூலம் ருஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் இதற்கு உதவினார்.

பழைய சோவியத் மத்திய ஆசியாவை அமைதியாகத் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கும் ருஷ்யாவின் செயல் அதிக தலைப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. ''இஸ்லாமிய அடிப்படை வாதம்'' என்ற தோற்றத்திற்கெதிரான தொலைத் தொடர்புப் பிரச்சாரங்களில் மொஸ்கோ தங்கியிருக்கலாம். ஸ்ரேப்சில் முஸ்லிம் இதயங்களுக்கும், மனங்களுக்குமாக வெற்றான் இஸ்லாமாபாத், றியாத் என்பன போரிடுவது பற்றி மொஸ்கோ கவலைப்படுவது ஒரளவு நியாயமானதேயாகும். மத்திய ஆசியாவின் எல்லைகள் மொஸ்கோவிலேயே வரையப்பட்டன. அவை இப்போது முன்னொரு காலத்தில் பொஸ்னியா அமைக்கப் பட்டதைவிட வேறு விதமான தேசிய அடையாளத்தையோ இனப் பிரிவுகளையோ காட்டி நிற்கவில்லை. மொஸ்கோவின் கையாட்களின் இறுக்கமான ஆட்சி தப்பினால், போரபாயம் காத்திருக்கிறது. அவ்வாறான ஒரு நிலை உருவாகுமானால் ருஷ்யாவின் நிலையான அச்சங்கள் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை அது மீளவும் நிலைநாட்ட வழிகோலும் என்பது சந்தேகத்திற்கப்பாற் பட்ட உண்மை ஆகும்.

ஏசியாவீக், ஜூலை 14, 1993

அந்தக் கற்பனை இஸ்லாமியர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இஸ்லாமிய தீவிரவாதம் அசாதாரணமானது அதற்கு பெரு வரவேற்புமில்லை

''இஸ்லாம் என்னும் சுமையிற்றால் கட்டுண்டு இருங்கள்'', ''பிளவு படாதீர்கள்'' என்று தனது அடியார்களுக்குத் தீர்க்கதரிசி முகம்மது உபதேசம் செய்தார். முகம்மது நபிகளின் ஆணை பின்பற்றப்படவில்லை என்பதை அண்மையில் நடந்தேறிய இஸ்லாமிய நாடுகள் சந்திப்பு காட்டுகின்றது. ஐம்பத்திரண்டு இஸ்லாமிய நாடுகள், கராச்சி நகரில் சந்தித்தபோது அவர்கள் மத்தியில் ஜனநாயகத்திலிருந்து இஸ்லாமிய வங்கி நடைமுறை போன்ற பல்வேறு விடயங்களில் ஒருமைப்பாடு காணமுடியவில்லை. அங்கு பேசிய ஒரு பிரதிநிதி உலகின் சண்டை சச்சரவு நடக்கும் பதினேழு மையங்களில் பதினாலில் முஸ்லிம்கள் தொடர்பு பட்டிருக்கிறார்கள் என்று அங்கு கூடியவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம்கள் தம் மதத்தினருடன் போராடுவதையும் அவர் ஞாபக மூட்டினார். இதற்கான பரிகாரம் ஒன்றுமே அச்சந்திப்பில் முன்வைக்கப்படவில்லை. ஓர் இறுதி நிமிட உடன்படிக்கையாக பொஸ்னியாவில் உலக ஸ்தாபன நடவடிக்கையின் தேவையும், பாலஸ்தீனில் சமாதானப் பேச்சுக்கள் தொடர வேண்டுமென்றும், உலக வியாபாரத்தில் நாடுகளுக்கிடையில் நீதி கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர்கள் ஒத்துக் கொண்டனர். இறுதி அறிக்கையில் விபரிக்கப்பட்ட 80 விடயங்களில் ஒன்றில் மாத்திரம் எல்லோருடையதும் ஏகோபித்த உடன்பாடு காணப்பட்டது. அஃதாவது முஸ்லிம்களுக்கு வெளித்தோற்றப் பிரச்சினை என்று ஒன்று உண்டு என்பதே.

கிறிஸ்தவர்களின் கண்களில் ஒரு முஸ்லிம் வெள்ளை அங்கி அணிந்தவனாகவும், தடித்த உருவமும், கொடிய பார்வையுமுடையவனாகவும் தோன்றுகிறான். மேற்கு நாட்டு பத்திரிகைகள் மறைமுகமாகவும், சில சமயம் நேரிடையாகவும் இந்த எண்ணத்தை அவர்களிடம் ஊன்றச் செய்து விட்டன. வீட்டுக்குக் கீழ் பாதாள அறையில் அவனுக்கு ஒரு குண்டுத் தொழிற்சாலை உண்டென்றும், அவனுடைய பிள்ளைகள் ஒருசில நிமிடத்தில் ஏ.கே.47 ரகத் துப்பாக்கியைக் கழற்றிப் பூட்டிவிடுவார்களென்றும் இந்தப் பிரச்சாரம் தொடரும். மேலும் அவனுடைய தாதி மனைவி மாரும் தங்கள் அறியாமையில் மகிழ்வற்று வீட்டில் அடைபட்டுக் கிடப்பார்களென்றும், வெளியிற் செல்லும்போது தடித்த துணியில் ஆடைகள் அணிந்தபடி முகத்திரையுடன் தோற்றுவார்களென்றும் இந்த அந்நியத் நிபுணர்கள் செய்தி சொல்லும். நல்லதோர் குடிமகனின் கடமை இத்தனை இலட்சணங்களுள்ள இஸ்லாமியரைக் கண்டால் உடனே சிஐஏ க்கு அறிவித்தல் தரவேண்டுமென்றும் இக்

New Doc 2020-04-06 14.46.20_page-0036.jpg

கதை தொடரும். கோடிக்கணக் கான கிறிஸ்து மதத்தினர்களின் அறியாமையில் இஸ்லாம் மேற்கு லக அரசுகளுக்கும், சமயத்திற்கும், மனிதசமுதாயத்தின் சமூக வாழ் வுக்கும் பேரபாயம் என்ற எண்ணம் பதிந்து விட்டது. முஸ்லிம் என்ற வுடன் அவர்கள் நினைப்பதெல் லாம் பாலஸ்தீன விடுதலை இயக்க முன்னணித் தலைவர் ஜோர்ஜ் ஹபாஷ் (GEORGE HABASH) என்பாரைத் தான் சென்றவருடம் பிரஞ்சுக்காரர் இவரைக் கைது செய்யும்வரை இவர் உலகப் பயங் கரவாதிகளின் பட்டியலில் முதலி டம் வகித்தவர்களில் ஒருவராவார். ஆனால் இவர் ஒரு கிறிஸ்தவர், பாலஸ்தினியர்களில் பத்து வீதமா னோர் இந்த மதத்தைச் சேர்ந்த வர்கள். இவர்களில் அநேகமா னோர் தீவிர அரபுத் தேசியவாதி கள்.

இந்தத் திட்டத்தில் தான் ஒரு முக்கியமான கேள்வி எழுகின் றது. ஒரு கிறிஸ்தவன் செய்யும் தீய செயல்கள் மதத்தின் மேல் சுமத்தப்படுவதில்லை. ஆனால் ஒவ் வொரு இஸ்லாமியனின் செயல்கள் யாவும் அவன் மதத்தின் மேல் சுமத்தப்பட்டு முஸ்லிம்கள் யாவ ரும் மதவெறியர்கள் என்ற அபாண் டமான குற்றச்சாட்டும் முன்வைக் கப்படுகின்றது. இது ஏன்? பொஸ் னிய முஸ்லிம்களை கொடூரமாகக் கொலை செய்தும், முஸ்லிம் பெண் களைப் பாலியல் வன்முறைக்குட் படுத்தியும், சூறையாடல், தீவைத் தல் போன்ற குற்றங்களையும் செய்யும் சேபியர்கள் கிறிஸ்தவர் களாக இருந்தும் இப்பாதகச் செயல்கள் யாவும் கிறிஸ்துவின் பெயரால் செய்யப்படுகின்றன என்று ஒருவராவது முறையிட வில்லை. ஐரிஷ் குடியரசு இராணு வம் இலண்டனில் நடத்தும் குண்டு வெடிப்புக்கள் பாப்பரசரின் பெய ரால் செய்யப்படுகின்றன என்று யாரேனும் சொல்லியிருக்கிறார் களா? இல்லை. கறுப்பின மக்களை ஒடுக்குவதற்கென்றே அங்குராப்ப ணம் செய்யப்பட்ட கு.கிளக்ஸ் என்ற வெள்ளையரின் கும்பல் கிறிஸ்து பெயரால் அட்டூழியம் செய்கிறது என்று இதுவரை காலமும் குறைசொன்னது கிடையாது. டேவிற் கொறேஷ் என்ற மதவாதி செய்த கொலையின் பின்பும் தான் இயேசுவின் அவதாரம் என்று சொன்ன போதும் கூட கிறிஸ்து மதத்தைக் களங்கப்படுத்தவில்லை. சுருங்கக்கூறின் தனிக் கிறிஸ்தவர் களின் செயற்பாடுகள் கிறிஸ்தவ மதத்தின் மேல் சுமத்தப்பட வில்லை. ஆனால் இஸ்லாமுக்கோ வித்தியாசமான பார்வை!



இன்றைய முஸ்லிம்கள் அல் லாத உலகு, கிழக்காசியாவின் புத்த சமயத்தவர் உட்பட, ஒரு சில இஸ்லாமிய மத வெறியர் களின் செயற்பாடுகளால் இம் மதத்தின்மேல் பயமும், வெறுப் பும் கொண்டுள்ளது. ஆனால் இந்துக்களோ முஸ்லிம்க ளுடன் கலந்து வாழும் காரணத் தால் புரிந்துணர்வும் பரஸ்பர நல் லுறவும் கொண்டுள்ளனர். இதில் இந்துமத கடும் போக்காளரும் அடங்குவர். மலேசிய நாட்டில் பலவிதமான கலாச்சாரம் காணப் படுகின்றது. இங்கு முஸ்லிம் மத வெறியர்கள் கிறிஸ்தவ மதத்தில் காணப்படுவது போல மிகக் குறைத்தே காணப்படுகின்றனர். இன்றைய பல சமுதாயங்களில் முஸ்லிம்களைப் பற்றிய பல கற் பனைகளும், உண்மைக்குப் பொருத் தாத பல நம்பிக்கைகளும் பரவ லாக நிலவுகின்றன. இதில் மிகவும் கேலிக்குரியது முஸ்லிம்கள் அல்லா தோர் மீது இஸ்லாமிய மதத்தவர் கள் வெறுப்பை உமிழ்வதில் ஒரு மித்துள்ளார்கள் என்பதாகும். இதை ஒரு பார்வையாளர் பின் வருமாறு சொல்கிறார்: ''அவர் கள் புத்துயிர் பெற்ற சரித்திர எதிரிகள் அவர்களின் நம்பிக்கையும் நிகழ்ச்சிகளும் மேற்குடன் ஒத்துப் போகாதவையும் முரண்பாடா னவையும்'' கும்''என. முஸ்லிம்களின் ஒற்றுமையென்பது எவ்வளவு பொய் யானது என்பதை கராச்சி நகரில் அண்மையில் நடந்தேறிய இஸ்லா மிய நாடுகளின் சந்திப்பு எடுத்துக் காட்டுகின்றது. ஈராக்குக் கெதி ரான பன்நாட்டுப் படைகளில் பாகிஸ்தான், எகிப்து, மொறொக்கோ பங்கேற்றன. ஈராக் நாட்டுக்குச் சாதகமாக லிபியா, ஜோர்தான், யேமன் செயற்பட்டன. இந்த நாடுகள் யாவும் கராச்சி சந்திப்பில் பிர சன்னமாயிருந்தன! ஜோக்ஜக் கார்தா நகர் முஸ்லிமும் மெடினா நகர் முஸ்லிமும் தத்தம் கலாசா ரத்தில் மிகவும் வேறுபட்டவர் கள். முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக அங்கத்துவம் வகிக்கும் எரி பொருள் (பெற்றோல்) ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கழகத்தில் நடப்பவற்றைக் கவனித்தால்

New Doc 2020-04-06 14.46.20_page-0037.jpg

அங்கு மத ரீதியில் ஏ தே தனும் நடப்பதாகத் தெரியவில்லை. மேற் குலக நாட்டவர் பலர் இன்று கேட்கின்றனர்; பொஸ்னிய நாட்டு முஸ்லிம் சகோதரர்களைக் காப் பாற்ற முஸ்லிம் நாடுகள் யாதொரு நடவடிக்கையும் எடுக் காதிருப்பதின் மர்மம் என்ன வென்று? இதன் காரணம் மேற்கு நாடுகளின் காரணத்துடன் ஒத் துப் போகின்றது—பொஸ்னியா வில் தலையிடுதல் அவர்களின் தேசிய நலனுக்குகந்ததல்ல. சில வேளை இது மாறக்கூடும். சென்ற வாரம் ஒவன் பிரபு காலாட் படை களை அனுப்பி உதவும்படி முஸ் லிம் நாடுகளைக் கேட்டுக்கொண் டார்.

ஜிகாத் என்ற பதம் முஸ்லிம் அரசியல்வாதிகளாலும் தப்பாகப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அதே சமயத்தில் முஸ்லிம் அல்லாத வர்களும் இச் சொல்லைத் தப்பாகப் புரிந்துகொண்டுள்ளனர். இஸ்லாம் மதத்திற்கு அச்சுறுத்தல் வரும் போது அதைப் பாதுகாப்பதே இச் சொல்லின் உண்மையான அர்த்த மாகும். இதே கருத்தில் தான் கிறிஸ்தவர்களும் ''குறுசேட்'' என்ற பதத்தை விளங்கிக் கொள் கின்றனர். பல சமயங்களில் தேசி யப் போராட்டங்கள் மத யுத்தங் கள் என்று பிழையான விதத்தில் கணிக்கப்பட்டுள்ளன. பாலஸ்தீனப் பிரச்சினையின் ஆணிவேர் நிலப்பறி முதலாகும். குடியேறும் யூதர்கள் அரேபியர்களின் நிலத்தைக் கைப் பற்றினர். இதற்கு பல நூறு ஆண் டுகளாக யூதர்களுக்குத் துன்பம் செய்த மேற்கு நாடுகள் இப்போது ஈடு செய்வது போன்று யூதர்களுக்கு உதவுகின்றனர். ஆதியோடந்தமாக பாலஸ்தீனியப் பிரச்சினை ஒரு தேசிய எழுச்சிப் பிரச்சினையா கும். இதற்கு ஜோர்ஜ் ஹபாசும் ஒப்புதல் வழங்குவார். கராச்சியில் நடந்த முஸ்லிம் நாடுகளின் சந்திப் பில் பிலிப்பைன்ஸ் நாட்டு மோறோ தேசிய விடுதலை முன்னணித் தலை வர் நூர்மிசுஆரி தனது இயக்கம் மதச்சார்பற்றதென எடுத்துரைத் தார். இந்த முன்னணி முஸ்லிம் மக் கள் பெரும்பான்மையாக வாழும் மின்டானோ என்னும் தீவு முஸ் லிம்களின் தனிநாடாகவேண்டும் என்ற குறியுடன் போராடிவருவது தெரிந்ததே! ஆப்கானிஸ்தானின் மதச் சார்பற்ற அரசை நிலைபெறச் செய்யவே ருஷ்யா அந்த நாட்டில் அடியெடுத்து வைத்ததென்றும் வாதிடலாம். அண்மை நாடான தஜிகிஸ்தானில் ருஷ்யா மதத்திற் குப் பதிலாக அரச நாஸ்திகத்தை அரியாசன மேற்றியுள்ளதைக் காணலாம். ஆனால் ருஷ்யா வெளியேறியவுடன் ஓவ்வெராரு முஜாஹிதின் குழுவும் ஜிகாத்தின் உண்மைச் சொரூபம் உண்டு என்ற நம்பிக்கையில் மாற்றுக் குழுக்களை அழிக்கத் துணிந்துள்ளன.

20 ஆம் நூற்றாண்டின் கிறிஸ்து மதத்திலும் பார்க்க இஸ்லாம் உலக வாழ்வைப் பற்றி மிகவும் சிரத்தை காட்டுகின்றது. இங்கிலாந்து, கிறீஸ், டென்மார்க் போன்ற நாடு களில் தேசிய சமயங்கள் சட்டப்படி உண்டு. சில காலங்களுக்கு முன் இத் தாலியிலும் தெற்கு ஜேர்மனியிலும் கத்தோலிக்க மதகுருமார் மக்கள் வாழ்வில் பெரும் பங்கு வகித்த னர். இன்று ஈரான் நாட்டில் அயத்துல்லாக்களின் அங்கத்துடன் இதை ஒப்பிடலாம். இன்றோ கிறீஸ்துமதம் ஆத்மீக விஷயங்களு டன் தன்னை நிறுத்திக் கொண் டுள்ளது. முஸ்லிம் மதகுருமார் களோ உலக விவகாரங்களிலும், சமுதாய, அரசியல் நடவடிக்கைக ளிலும் பெரும் சிரத்தை காட்டு கின்றனர். ஆனால் வேறு மதங்க ளில் குருமார்களிலும் பார்க்க முஸ்லிம் மதகுருமார்கள் பக்தி சிரத்தை கூடியவர்களென்று கூற முடியாது. அதேபோன்று முஸ்லிம் மக்களும் வேறு மதத்தவர்களிலும் பார்க்கத் தெய்வ நம்பிக்கையில் கூடியவர்களல்லர். அலுவலக நேரத் தில் வேலையை நிறுத்திவிட்டு அல் லாவைத் தொழுவார்கள் என்ப தெல்லாம் வெறும் கட்டுக்கதை. இதே போன்றதுதான் கிரிக்கற் விளையாட்டையும் நிறுத்திவிட்டுத் தொழுகை செய்வார்கள் என்ற புனைகதையும், ஒரு மனைவிக்கு மேல் வைத்திருக்கும் முஸ்லிம்கள் மிக மிகக் குறைவு. மேற்கத்தைய நாட்டுக் கற்றறிந்தோர் கூட முஸ்லிம்கள் வீதிகள் கட்டுதல் வைத்தியசாலைகள் ஸ்தாபித்தல் போன்ற சேவையில் ஈடுபடாது விமானங்களுக்குக் குண்டு வைத்தல், மாடிக்கட்டடங்களைத் தகர்த்தல் போன்ற நாசகார வேலைகளில் நாட்டம் உடையவர்கள் என்று பிழையாக நம்புகின்றனர். அன் வார் சதாத் துணிந்து தனது உயி ரைப் பணயம் வைத்து இஸ்ரேலுக் குச் சென்றிருக்காவிட்டால் இன்று மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுக்க ளின் ஆரம்பம் கூடக் கண்டிருக்க மாட்டாது. இதன் காரணமாகவே அவர் தனதுயிரை இழந்தது வேறு விட யம். ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் இளவரசர் சத்து ருடீன் அகா கான் என்ற பெருமக னிலும் பார்க்க உலக சமாதானத் திற்கு வேறு ஒருவர் முயலவில்லை என்று துணிந்து கூறலாம்.

இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தி லும் பார்க்க ஆறு நூற்றாண்டும் புத்த சமயத்திலும் பார்க்கப் பன்னி ரண்டு நூற்றாண்டும் இளமை வாய்ந்ததாகும். இம் மதத்தில் இன்னும் பல பிரச்சினைகள் தீர்க் கப்படாமல் இருக்கின்றன. மதத் தீவிரவாதம் இதில் ஒன்றாகும். மருதிக்கும் அரசுக்குமிடையிலுள்ள பரஸ்பர உறவுகளும், பெண்கள் உரிமைகளும், நாளாந்த தேசிய குற்றங்களும், மதக் குற்றங்களும் இன்னும் பண முதலீட்டில் வட்டி வாங்குவது போன்ற பற்பல கருத்து முரண்பாடுள்ள பிரச்சினை களும் தீர்வற்ற நிலையில் இருக்கின் றன. மேற்குலகம் பொறுமையு டன் இருந்தால் முஸ்லிம்களும் முஸ் லிம் நாடுகளும் இப் பிரச்சினைக ளுக்குத் தகுந்த பரிகாரம் காண் பார்கள். கராச்சி சந்திப்பில் ஒரு பிரதிநிதி முன்வைத்த கருத்தை இவ்வுலகு தனது சிந்தனைக்கு எடுக்க வேண்டும். ''இஸ்லாம் என்றால் சமாதானம்; நாங்கள் தேடுவது அதைத்தான்.''

ஏசியா வீக், ஜூன் 16, 1993.

●

New Doc 2020-04-06 14.46.20_page-0038.jpg

இரத்தமும் அரும் பொருட்களும்

இத்தாலியின் உபிசி காட்சிக் கூடத்தை நாசமாக்கிய கார்க்குண்டு



ஒரு மரண அடி: புளோரென்சில் உபிசிக் காட்சிக் கூடத்'ல் தீயணைக்கும் படையினர்.

தெச்சுவாலை நூறு அடிகள் காற்றோடு மேலெழுந்ததாக நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார். சென்றவாரம் புளொரன்சிலுள்ள உபிசிக் காட்சிக் கூடத்துக்கு வெளியே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சுவர்களெல்லாம் கற்குவியல்களாயின. சாளரங்கள் தொலைவில் வீசி எறியப்பட்டன. அவைகளுள் வேறு கண்ணாடிகளும் சுக்கு நூறாகச் சிதறுண்டன. சிறு மட்ட ஓவியர்கள் மூவரின் ஓவியங்களைச் செப்பனிட முடியாத அளவிற்கு நாசமாக்கியதோடு, மேலும் 20 ஐச் சேதமாக்கிவிட்டது. குண்டு வெடிப்பு இத்தாலியின் சித்திரக் கலை வரலாற்றையே பாழடித்து விட்டது. புளொரன்சின் மறுமலர்ச்சிக்கால யெமடிசி ஆட்சியாளர்களுக்காக இது கட்டப்பட்டது. உபிசி மாளிகை உலகத்தின் தலை சிறந்த இத்தாலியக் கலை நுட்பப் பொருட்கள் அங்கே பேணப்படுகிறன. பயங்கரவாதச் செயல்களுக்கு இத்தாலியர்கள் நன்கு பழக்கப்பட்டவர்கள். ஆனால் இப்போது அவர்களது பாரம்பரியப் பண்பாடும், பெருமையும் அழிவின் இலக்காகியுள்ளன.

பொட்டி செலியின் ''வீனசின் பிறப்பும்'', மைக்கல் அஞ்சலோவின் ''புனிதக் குடும்பமும்'' அங்கே பாதுகாக்கப்பட்டு வரும் விலை மதிக்கமுடியாத அரும் பொருட்களுள் அடங்கும். இவைகளெல்லாம் மிகச் சமீபத்தில் தான் வெடிக்காத கண்ணாடிக் கேடயங்களால் காப்பிடப்பட்டன. அப்படியிருந்தும் சேதம் பலகோடிக்கணக்கான டொலர்களைத் தாண்டிய தோடு தோராயமும் ஆரம்பிக்கும் காலத்தில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் தலைசிறந்த இடங்களில் ஒன்றை மூடிவிடும் அளவிற்கு நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக்குண்டுவெடிப்புஐவரைப் பலி கொண்டது. அவர்களுள் உபிசி மாளிகைக்குப் பக்கத்திலுள்ள மத்திய காலத்தைய கோபுரமொன்றின் காப்பாளர், அவரது மனைவி, இரண்டு குழந்தைகள் என்போரும் அடங்குவர். ''சுவர்களிலே இரத்தக்கறை படிந்துள்ளது'' எனக் கோபுரத்தை முதலில் சென்றடைந்த தீயணைப்பாளரான சன்ட்றோ பான்ரோசி தெரிவித்தார். ''குண்டு வெடிப்பு எவ்வளவு கொடுமையானது என்பதைக் கற்பனை செய்வதே கடினமானது'' என்கிறார் அவர்.

சிவில் பாதுகாப்பு இயக்குநரான எல்வேவோ பஸ்ரொறேல்லி ''இது ஒரு கார்க்குண்டு'' என்று கூறுகிறார். குண்டு வெடிப்பு நிகழ்ந்த நிலமணித்தியாலங்களுக்கு இதன் பொறுப்பாளிகள் யார் என்பது தெரியவில்லை. (ஒரு வலதுசாரிக்குழு தொலைபேசி மூலம் உரிமை கோரியபோதும் அதை எவரும் பாரதூரமானதாகக் கருதவில்லை.) ஆனால் இத்தாலியின் தேசிய பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டத்தைத் தொடர்ந்து உள்நாட்டுப்பாதுகாப்பு அமைச்சர் நிக்கோலா மன்சினோ ''இது மாபியாப் பயங்கரவாதத்தின் செயல்'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். அப்படியாயின் இரண்டு வார காலத்துள் இது இரண்டாவது நிகழ்வாகும். மே 14 இல் றோமில் ஒரு வதிவிடத் தொடர்கட்டடத்தை நாசமாக்கிய குண்டு வெடிப்பில் 23 பேர் காயமடைந்தனர். மொறீசியோ கொஸ்பான்சேரா என்ற தொலைக் காட்சிப் பேச்சுக் காட்சியாளரை இலக்கு வைத்தே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பது விசாரணையாளர்களின் முடிவாகும். இந்த மரணப் பிராந்தியத்துக்குள் அவர் நுழைவதற்குச் சில விநாடிகளுக்கு முன் அது நிகழ்ந்ததால் அவர் உயிர் பிழைத்துள்ளார். அவர் ஒரு மாபியா எதிர்ப்புக் கருத்துப் பிரச்சாரகர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தேக நபர்கள்: றோமிலும் புளொரன்சிலும் நடந்துள்ள குண்டு வெடிப்புப் பற்றிய கருத்து வெளியிட்டுள்ள நிபுணர்கள் இவையிரண்டும் இத்தாலிய அரசுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் மாபியா விடுக்கும் எச்சரிக்கை முயற்சியாகும் என்றும், எல்லாத் தலைவர்களுக்கும் தலைவனான சல்வட்டோர் (றோட்டோ) றீனா உட்பட நூற்றுக்கணக்கான மாபியாக் குற்றவாளிகள் எனச்

New Doc 2020-04-06 14.46.20_page-0039.jpg

சந்தேகப்படுவோரைச் சுற்றி வளைத்துப் பிடித்ததன் மூலம் தாம் முடக்கப்பட்டு விடவில்லை என்பதை உணர்த்துவதற்காகவுமே இவை நிகழ்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இரண்டு வாரங்களின் முன்னர்தான் அதிகாரிகள் றீனாவின் உடனடி உதவியாளரான பெனெடெற்றோ (நிற்றோ) சன்ரப்பவோலாவைக் கைது செய்திருந்தனர். ''அடித்தளத்தில் இயங்கும் இந்தப் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு அரசின் சகல சக்திகளும் உபயோகப் படுத்தப்படும்'' என்று கூறியிருக்கிறார். பிரதம மந்திரி காயோ அசெச்றியோசியாம்பி, இலஞ்ச ஊழல்களால் அரசே பலவீனப்பட்டு சிதறுண்டுள்ளது. இந்த ஊழல்களைத் தொடர்ந்து கடந்த ஏப்ரலில் நடந்த மக்கள் வாக்கெடுப்பில் நாடு நிர்வகிக்கப்படும் முறையிலேயே மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதியில் தொண்டர்களும் தொழில் ரீதியிலானவர்களும் இணைந்து சிதைபாடுகளுக்குள் பணியாற்றினர். 260 இறாத்தலுக்கும் அதிகமான நிறையைக் கொண்டிருக்க வேண்டும் என்று கருதப்படும் அந்தக் குண்டு தொல்பொருட்களைக் கொண்டிருந்த காப்பகம் ஒன்றைத் தன்னகத்தே உள்ளடக்கியிருந்த மத்தியகாலக் கோபுரத்தை எரித்தே விட்டது. காப்பகத்தில் மிகத் தொன்மை வாய்ந்த பல்லாயிரக் கணக்கான கையெழுத்துப் பிரதிகளும், விவசாயம் தொடர்பான நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் அநேகமானவை குண்டு வெடிப்பால் அழிந்தே விட்டன. உபிசி காப்பகப்பகுதிகள் பல மாதக்கணக்கில் மூடப்பட வேண்டியிருக்கும்.

இந்த வெடிப்பிற்கு மறுதினம் தமது துயரத்தை வெளிக்கொணர 20,000 மக்கள் நகரத்தின் வீதிகளால் ஊர்வலம் சென்றனர். ''இந்த ஈவிரக்கமற்ற கொலையூகோஸ்லாவியாவிலும் மோசமானது'' என்று தனது கவலையைத் தெரிவித்துள்ளார் உயர் நிலைப்பள்ளி மாணவனான கியான்னி போர் செல்லி.'' நான் சரஜேவோவில் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல் உணருகிறேன்'' என்கிறார் உபிசி திரும்பவும் திறக்கப்படும் போது இத்தாலிய மக்கள் தேசிய சொத்து விடயத்தில் இனி எப்போதுமே பாதுகாப்பு உணர்வோடு வாழ முடியாது.

புளோரின்சில்
நிக்கோபோ விவறெல்லி.

நியூஸ்வீக், ஜூன், 1993

சேதமாக்கப்பட்டவை:

உபிசி காட்சியகம்: மேற்குக் காண்போர் கூடச் சுவரை குண்டு வெடிப்புப் பிளந்து விட்டது. அதுவே வசாரி நடைபாதையுமாகும். சில சிலைகள் சிதைக்கப்பட்டுள்ளன. 3 ஓவியங்கள் அழிந்து விட்டன. மேலும் 20 சேதமாக்கப்பட்டுள்ளன.

ரோறே டெல் பல்சி: தொன்மையான விவசாய ஆவணங்களைக் கொண்டிருக்கும் மத்திய காலக் கோபுரம் இது. இது வெடித்துச் சிதறி அதன் காப்பாளரும் அவரது குடும்பமும் பலியாகினர்.

ஆற்று முகம்: ஆர்னோக்கடைகளும், சிற்றுண்டிச் சாலைகளும் கடுமையாகச் சேதமாகியுள்ளன.

சேதமாகாதவை:-

வெடிக்காத கண்ணாடிக் கேடயங்களால் பாதுகாக்கப்பட்ட பொட்டி செலியின் ''வீனசின் பிறப்பும்'' மைக்கல் அஞ்செலோவின் ''புனித குடும்பமும்'' உட்பட வேறு சில சேதமாகவில்லை.

New Doc 2020-04-06 14.46.20_page-0040.jpg

பெஸ்ற்! மிக்-29 விமானத்தில் பறக்கப் போகிறீர்களா?

மொஸ்கோவிற்கு உல்லாசப் பிரயாணம் மேற்கொள்ளும் பலர் கிறெம்ளின் மாளிகையின் கம்பீரமான சுவர்களையும், லெனினின் சமாதிக்கு வெளியேயுள்ள கோடுகளையும், பசிலிக்கா பேராலயத்தின் வட்டவடிவமான கோபுர அழகையும் பற்றிய பசுமையான நினைவுகளோடு திரும்புவர். ஆனால் சென்ற எச்சுகுறள் இதற்கு ஒரு விதிவிலக்காவார். அமெரிக்கப் பொருட்கள் வர்த்தகம் புரியும் இவர், சென்ற பெப்ரவரியில் ருஷ்யாவிற்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவர் வேறுவிதமான நிகழ்வுகளை மகிழ்வோடு சுமந்தார். படைய விமானியின் உடையணிந்து யக்-52 இராணுவப் போர்ப் பயிற்சி விமானத்தின் விமானிகள் முன் அறையில் சிரமப் பட்டுத் தொற்றி ஏறி மொஸ்கோவின் கூரைகளுக்கு மேலெல்லாம் விமானக் குத்துக்கரணம்' சுழற்சியெல்லாம் செய்த மறக்க வொண்ணாநினைவுகளோடுதிரும்பி வந்துள்ளார். பணவசதி படைத்தவர்களினதும் வான்வெளியிலே சஞ்சரிக்க விரும்புபவர்களினதும் விருப்பத்திற்கமைய இவ்வாறு விமானச் சவாரியை ஒழுங்கு செய்யும் ''எம்முடன் பறந்திடுங்கள்'' என்ற புதிய ருஷ்ய நிறுவனத்தின் வாடிக்கையாளராகவே எச்சுகுறள் இருந்திருக்கிறார். ''உலகின் தலை சிறந்த செயற்பாட்டு விமானமொன்றில் மேலே பறந்துவிட்டு வரும் போது அதற்கான காசோலையைக் கொடுத்து விட்டு 'மிக்க நன்றி' என்று சொல்லிவிடைபெறுவதற்குச் சமனான எதுவுமே இருக்க முடியாது'' என்கிறார் எச்சுகுறள். அவர் மீண்டும் ஜூன் மாதம் மொஸ்கோ சென்றார். இம்முறை மேலும் உயர்ந்த ரக எல்-39 இராணுவப் போர்ப் பயிற்சி விமானத்தில் பறப்பதற்காகவே பிரயாணம் மேற்கொண்டார்.


உண்மையில் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் பொழுது போக்குக்காக யாக் விமானமொன்றில் மனிதர் ''கனவுகளுடன் பறக்க முடிந்தது இது.'' முறுக்கு, ஓசை எழுப்பும் என்ற செஞ்சேனையின் பாடலை ஒலிப்பதிவு செய்தது போலாகும். சிறிது அளவு களியாட்ட அமைப்புணர்வு வெடித்துச் சிதறிவிட்ட சோவியத் சாம்ராஜ்யத்தில் வெகுதூரத்துக்கு கொண்டு செல்லக் கூடியதென்பதற்கு ''எம்முடன் பறந்திடுங்கள்'' ஓர் நல்ல எடுத்துக் காட்டாகும்.

போர் விமானங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. ஒரு குத்துக்கரண முதற்றர விமானியான அன்ட்றீ ஸ்ம்ஸ்லாயேவினால் தோற்றுவிக்கப்பட்ட ''எம்முடன் பறந்திடுங்கள்'' ருஷ்யாவின் உச்ச விமான நிறுவனங்களில் பணிபுரியும் விமானிகளை வாடகைக்கு அமர்த்துகிறது. அவர்களே பணம் பணமாகக் கொட்டத் தயாரான வாடிக்கையாளருக்குப் பயிற்சியளிக்கிறார்கள். மொஸ்கோவைச் சுற்றியுள்ள பன்னிரண்டு இராணுவ விமானத் தளங்களில் ஏதாவது ஒன்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. எதிர்கால வானப் பிரயுக்களுக்கு ஒவ்வொரு வரவு செலவுக்கும் ''வேடிக்கையாகத் தலைகீழாகப் பறப்பதிலிருந்து வான்போர்ப் பயிற்சிக்கு மிக் 29 விமானத்தை உபயோகிப்

களியாட்ட அமைப்பாளர்கள்:

ஒரு புதிய ரஷ்ய நிறுவனம் உங்களை ஜெற் போர் விமானத்தின் விமானிகள் அறையில் கட்டணத்திற்கு விடுகிறது.

Digitized by Arunachalam Foundation Tamileelam Archive



''மிக உயர்ந்த'' விநோதங்கள் விற்பனைக்குண்டு

திருப்தியற்ற வாடிக்கையாளர்.

முன்னைய காலங்களில் ஆரம்பம் லினின் வரவு செலவுத் திட்டத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்த இராணுவ விமானங்கள், இப்போது நம்பிக்கையிழந்த நிலையில் பணத்தேவைக்காக முந்தைய நாட்களில் பரம இரகசியமாகப் பேணப்பட்ட இரகசியமான

பது வரை மணியொன்றுக்கு 125 டொலர்கள் செலவாகிறது. இரண்டு நாட் பயிற்சிக்கும் ஒரு மணித்தியாலம் வானிலே உல்லாசமாகப் பறப்பதற்கும் 18,000 டொலர்கள் செலவிடுவதற்கு, பென்ரகன் அளவிலான கொள்கலன் வைத்திருக்கும் தனவந்தர்களுக்கே சாத்தியமாகும்.

New Doc 2020-04-06 14.46.20_page-0041.jpg

இதனிலும் பார்க்க சிறிதளவு சிக்கனமானதும் (அதனிலும் பார்க்க மகிழ்ச்சி தரக்கூடியதும் விமானப் பிரயாணத்தின் போது பார்த்து இரசிக்கும் ''ஜுராசிக் பார்க்'' கிலும் அதிகம் சந்தோஷமானதுமான) இன்னொரு விமானப் பயிற்சிப் பயணத்திற்கும் அவர்களிடம் வழியுண்டு. 27000 மீற்றர்களுக்கு மேல் உயர்ந்து வெண்முகில் விளிம்புகளையும் தாண்டி மிக் 31 இல் 12000 டொலர்களுக்குப் பறக்கும் விமானப் பயணம் அது. அங்கே போர் விமான இயந்திரம் செயலிழக்கப்படுகிறது.

பயங்கரத்துக்கு நீங்கள் இனித் திரும்பச் செல்லப் போவதில்லை என்பது போல மயிர்க்கூச்செறியும் விதத்தில் பல கிலோ மீற்றர்களுக்கு விமானத்தைக் கீழே விழச் செய்கிறார் விமானி. சடுதியாக இயந்திரம் மீளவும் செயற்பட வைக்கப்படுகிறது.

ருஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சிலுள்ளவரும் பகிரங்கமாகப் பாதுகாப்புப் பற்றிய கவலையை வெளியிடவில்லை. வெளிநாட்டவர் தங்களது விமானிகளின் அறையில் புகுந்தது பற்றியும் எவரும் அக்கறைப் படவில்லை. ''ஒரு விமானத்தின் தரக்கணிப்பை அறிந்து கொள்ள மிகுந்த தகைமையும்அனுபவமும் வேண்டும்'' என்கிறார் மொஸ்கோவிலுள்ள வெளிநாட்டுத் துதுவராலய பாதுகாப்பு அதிகாரி ஒருவர். ''பாதுகாப்பு அமைச்சிற்கு ஏதாவது கவலை இருக்குமானால் அது நங்களுக்கு அந்தப் பணம்வந்து சேரவில்லையே என்பதைப் பற்றித் தான்'' என்றும் கூறுகிறார் அவர்.

''எம்முடன் பறந்திடுங்கள்'' நிறுவனம், கொடுப்பனவுகளை இராணுவ விமானத்திற்கு நேரடியாகவே செலுத்தி விடுகிறது. உள்ளூர்த் தளபதிகள் இந்த வசதிகளைக் குத்தகைக்கு விடவே விரும்புகிறார்கள். காரணம் அவை பயன்படாமலிருப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஏரோபுளோட் விமானத்தின் நாடான ருஷ்யாவில் ''பறப்பதும்'' சுகம் பெறுவதும் ஒன்றிணைந்து செல்வதில்லை. ஆனால் ''எம்முடன் பறந்திடுங்கள்'' நல்ல வசதியை அளித்திட முயல்கிறது. விமானத்தில் தரமான அனைத்தும் அளிக்கப்படுகின்றன.

கிறெம்ளினின் உயர்மட்டத்தினர் ஸ்மிஷ்லாயேவ் போன்ற இடைத் தரகர்களைப் படங்களிலிருந்து அகற்றும் நாள் வெகு தொலைவிலில்லை. ''எம்முடன் பறந்திடுங்கள்'' நிறுவனத்தின் சிறகு துண்டிக்கப்படுவதை அனுமதிக்கத் தயாராயில்லை. ஆரம்பப் பயிற்சியாளருக்கு நெறிகாட்டும் புதிய வழிகளையும் அவர்கள் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். விமானங்களை வாடகைக்கு அமர்த்தும் வியாபாரத்திலும் ஸ்மிஷ்லாயேவ் ஈடுபடத் தொடங்கியுள்ளார். இந்தக் கோடை காலத்தில் உண்மை நிலையை அறிந்து கொள்ளும் பணியிலீடுபடும் 200 ஐரோப்பிய வர்த்தகப் பிரமுகர்களுக்கு ருஷ்யாவைச் சுற்றி விமானம் மூலம் காட்டவும் அவர் ஒழுங்கு செய்துள்ளார். நல்ல போர் விமானங்களைப் பொறுத்தமட்டில் வெகு சீக்கிரம் பாதுகாப்பு அமைச்சு தன்னை இயங்காமற் செய்து விடும் என்று நம்புகிறார் ஸ்மிஷ்லாலேவ். வர்த்தகராகவே பிறந்த உணர்வோடு ஸ்மிஷ்லாலேவ் ''மிக் விமானத்தில் பறக்கும் விருப்பமிருந்தால் வெகு சீக்கிரமே அதைச் செய்து விடுவது நல்லது'' என்கிறார்.

மொஸ்கோவின் ருஷ்சிசினோ
விமானத் தளத்தில்
ஒலிவி பாபாக்கியன்.

நியூஸ்வீக், ஒகஸ்ட் 2, 1993.

அதற்காகச் செபிப்போமாக

நிக்கரகுவாவில் எதுவென்றாலும் ஒரு விவாதத்தைத் தொடங்குவதாக விருக்கிறது. செப்ரெம்பர் 4 ஆந் திகதி திறக்கப்படவிருக்கும் புதிய றோமன் கத்தோலிக்க தேவாலயமே மனகுவாவில் தற்போது தேவாலயங்களால் கடுமையாக விவாதிக்கப்படும் விடயமாகும். சிலர் அதைத் தேசிய எழுச்சியின் சின்னமாக களிப்புடன் வரவேற்கிறார்கள். மற்றவர்கள் அதை 4½ மில்லியன் டொலர் செலவழித்துக் கட்டப்பட்ட தேவாலயத்தின் ஆடம்பரச் சூழலாவுகம் கடுமையான வறுமையால் வருந்தும் அந்நாட்டிற்கு ஓர் அவமானச் சின்னமாகவும் கருதுகின்றனர். அதைக் கட்டிமுடிப்பதில் ஏற்பட்ட மாதக்கணக்கான தாமதமும் ஒரு மில்லியன் டொலர் மேலதிக செலவும் இந்நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. நாட்டிலோ 60 வீதமானோருக்கு வேலை வாய்ப்பில்லை. அத்துடன் அங்கு மீண்டும் கெரில்லாப் போர் தொடங்கியுள்ளது. விவாதத்திற்குரிய மற்றொரு விடயம் அதன் உருவமைப்பாகும். ஆதரவாளர்கள் அதன் 21 ஆம் நூற்றாண்டுக் கம்பீரதோற்றத்தை மெச்சுகின்றனர். ஏனையோர் அதை ஓர் இராட்சத முட்டை வடிவான பெட்டிக்கோ அல்லது ஒரு எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைக்கோ ஒப்பிடுகின்றனர். ''நிக்கரக்குவா ஓர் அணு உலையைக் கட்டுகின்றது என நான் அறிந்திருக்கவில்லை'' என ஓர் இத்தாலிய உல்லாசப் பயணி கூறினார்.

New Doc 2020-04-06 14.46.20_page-0042.jpg

சிறப்புக் கட்டுரை

பொஸ்னியாவில்

இரத்தக் குளியல்

சாகிறெப் நகருக்குச் செல்லும் விமானம் கிளம்பும் நேரம் முதலிய விபரங்கள் எனது தொலைபேசி இணைப்பில் பதியப்பட்டிருந்தன. பிரயாண முகவரி அலுவலகத்தில் பயணச்சீட்டைப் பெற்றுக்கொண்டு விமானத்தில் ஏற வேண்டியதுதான் பாக்கி, சாகிறெப்பில் நான் வந்து இறங்கிய போது நான் தொடர்பு கொள்ள வேண்டியவர் எனக்காகக் காத்திருந்தார். அவர் ஒரு வண்டியும் ஓட்டுநரும் எடுத்து வந்திருந்தார். இதுவரை எல்லாம் நலம்.

நான் தொடர்பு கொண்டவர் ஆங்கிலேயர். ஆனால் வெகு நன்றாக குறோசியன் மொழி பேசும் வல்லமை உடையவர். நாங்கள் போகுமிடம் குறோசியாவிலுள்ள சுப்பானியா என்னுமிடம் என்று அவர் எனக்குத் தெரிவித்தார், சாகிறெப் நகரிலிருந்து இவ்விடத்துக்கு எங்கள்பிரயாணத்திற்குப்பத்துமணித்தியாலம் எடுக்கும் என்று அவர் எனக்கு அறிவுறுத்தினார். இப்பிரயாணம் நடந்து கொண்டிருந்த போது என்னுடன் தொடர்பு கொண்டிருந்தவருக்கு மேலதிக விபரங்களை நான் சொல்லி வைத்தேன். என்னுடைய பணி அவ்வளவு கஷ்டமானதல்ல. ஆனால் ஒரு தாக்குதலில் எனது தோழர்களை நான் ஈடுபடுத்த முன் இரண்டு விடயங்களைச் சரிபார்த்துக் கொள்வேன். ஒன்று முன்கூட்டியே ஒத்துக்கொள்ளப்பட்ட சகல தளபாடங்களும் கைவசம் உள்ளனவா, இரண்டு எங்களைச் சேவைக்கு அமர்த்துபவர் எங்களுக்குரிய பணத்தைச் சரிவர



போர்முனையில் இந்தப் பக்கம் தொடக்கத்தில் 150 பேர் கொண்ட குறோசிய போர்வீரரால் பாதுகாக்கப்பட்டது. ஸ்னைப்பர் தாக்குதலுக்கு அவர்கள் நாளாந்தம் 3 அல்லது 4 போராளிகளை இழந்தனர். ஸ்னைப்பர் தாக்குதல்களைக் குறைக்க நினைத்து 10 எம் எம் கனன் பதிலடி கொடுக்கிறார்கள்.

வைத்திருக்கின்றாரா என்பதே. அடுத்ததாக எமக்குப் பணம், எங்களுக்குத் தேவைப்படும் வாகனங்கள், பாவனைக்குரிய ஆயுதங்கள், போர் நடக்கும் இடத்திற்கண்மையில் எமக்கோர் தளம் ஆகியவற்றை ஒழுங்கு செய்ய அவர்களிடம் வசதிகள் உண்டா என்பதைப் பார்ப்போம். இந்தத் தொழில் முழுக்கமுழுக்க ஒரு 'தனியார் நடவடிக்கை'. எங்களுக்குப் பணம் தருபவர் ஒரு குறோசியன் / (பொஸ்னியா)செல்வந்தர் ஆவார். அவருடைய நகரத்திற்குக் கட்டுப்பாடான ஆயுதமேந்தாத சேர்பியாப்போராளிகள் (அவர்கள் பொழியில் செற்நிக் எனப்படுவர்) வருகை தரப் போகின்றார்கள் என்றும் செய்தி கிடைத்துள்ளது.

சுப்பானியாவுக்கு நான்வந்ததும் எங்களைக் கூலிக்கமர்த்துபவருக்கு நான் வந்துவிட்டதாக என்னோடு தொடர்பு வைத்திருப்பவர் தகவல் கனுப்பினார். இதன்பின்ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. அந்தச் செல்வந்தருக்கு நான் பின்வருமாறு அறிவித்தேன். நான் அவ்விடம் வந்ததின் காரணம் தருவதாக ஒத்துக்கொண்ட ஆயுதங்களும் பணமும் தயாராக இருக்கின்றனவா என்று எனது கண்ணால் பார்ப்பதற்கேயாகும்.

மேலும் இதன்பின் எனதுமொழி பெயர்ப்பாளரின் உதவியுடன் பயிற்சி நடத்தப்படும் இடத்தையும், பயிற்சி கொடுக்கும் ஆறிலிருந்து எட்டுப்பேர் கொண்ட குழுவுக்கு கொடுக்கப்படும் வசதிகளையும் அவர்கள் வரும் முன்னே பார்வையிட்டேன். இத்தப் போர்ப் பயிற்சி பதினான்கு நாட்கள் வரை எடுக்குமெனவும் எனதுகுழுவுகளும் அவ்விடம் பரீட்சயமானதென்றும், அக்காலத்தில் வுக்வகோர் கற்றி வளைக்கப்பட்டிருந்ததென்றும், விண்கூச்சியைச் சுற்றி மும்முனையில் சேர்பியப்படைகள் இருந்தனவென்றும் நான் அவர்களிடம் தெரிவித்தேன்.

அந்த ஒப்பந்தம்

யாவற்றையும் நான் அவர்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிவிக்க விரும்பினேன். நாங்கள் பேசிக்கொண்டவை யாவும் சரிவர நிறைவேற்றப்படும் வரை எனது குழுவினர் ஒருவரும் வரமாட்டார்களென்று நான் திட்டவட்டமாக அறிவித்தேன். இதை அவர் ஒத்துக் கொண்டார். எனக்கு முற்பண

New Doc 2020-04-06 14.46.20_page-0043.jpg

தரப்பட்டது. அவர் முதலீடு செய்யும் பணத்திற்கு அவர்களுக்குக் கிடைக்கப் போகும் சேவை விபரங்களைச் சுருக்கமாக எடுத்துரைத்தேன்.

1. பயிற்சிக்கு முன்வருவோருக்கு 'போர்க் கலையில்' பயிற்சி வழங்கும் வல்லமையும் அனுபவமும் மிக்க ஆறிலிருந்து எட்டுப்பேர் கொண்ட குழுவினரைத் தர நான் ஒத்துக் கொண்டேன். இந்த ஆசான்கள் யாவரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் பதவி வகிக்காத ஆனால் அதிகாரிக்கு நிகரானவர்கள் என்ற சேவை விபரங்களை சுருக்கமாக எடுத்துரைத்தேன்.

2. பயிற்சி, காலாட்படையினருக்குரிய (Infantry) பல்வேறு திறமைகளை பயில்வோருக்குப் புகட்டுவதில் அடங்கும். நேரக்குறைவு பெரும் தடங்கலாக இருப்பதால் அடிப்படைப் போர்த் திறன்களே பயிற்றப்படும். முதலும் மிகவும் முக்கியமானது மாவது ஆயுதங்களைக் கையாளும் பரீட்சையும் சுய பாதுகாப்பும் போரில் இருபக்கத்திலும் ஆயுதங்கள் உண்டு. ஆயுதங்கள் எதிரியைக் கொல்லவே பாவிக்கப்படல் வேண்டும். சொந்தப் பக்கத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடாது. நான் சொல்வது அவருக்குப் புரிந்தது. நண்பர்களுக்கே ஆபத்தான ஆயுதப் பாவனை பொஸ்னியா-கெர்செகோவினாவில் சர்வ சாதாரணமான நாளாந்த நிகழ்ச்சியாகும்.

3. பயிற்சி பெறும் ஒவ்வொருவனும் போர் நடக்கும் வேளையில் உட்காயம் படாது சுயபாதுகாப்புத் தேடும் அடிப்படை நெறியையும், காயமடைந்தால் அல்லது நண்பர்கள் காயமடைந்தால் கொடுக்க வேண்டிய முதலுதவி போன்ற மருத்துவ சிகிச்சைப் போதனையையும் பெறுவான். இதனால் போர் முனையில் உயிர் தப்பும் விகிதம் கூடவே செய்யும்.

4. ஆயுதங்களை வெவ்வேறு பாகங்களாகக் கழற்றுதல், ஒன்று சேர்த்துப் பொருத்துதல், பின்பு ஆயுதங்களைத் தயார் நிலையில் வைத்திருக்கும் அப்பியாசம் போன்றவை போதிக்கப்படும். போரிடும் போது ஆயுதங்களைப் பேணும் விதமும் பயிற்றப்படும். தனியாக, சிறு அணியாக, பெரும் அணியாக எவ்வாறு தாக்குதல் நடத்துவது? எதிரியின் தாக்குதலை எவ்வாறு முறியடிப்பது போன்ற வித்தைகளும் சொல்லிக் கொடுக்கப்படும். மேலும் ''உண்மை நிலை'' ப் போர் பயிற்சியும் ''உயிர்'' ரவைகளுடன் அளிக்கப்படும். யுத்த முனை முதலுதவி மருத்துவப் பகுதி போன்றவையும் இப் பயிற்சியிலடங்கும்.

பயிற்சியில் நல்ல முன்னேற்றம் காட்டுவோருக்கு தலைமைப் பதவிக் கல்வியும் கட்டளை கொடுக்கும் தகைமைப் பயிற்சியும் தரப்படும். போரின் நிலைமை மோசமடைந்தால் மீகுதிப்போராளிகளை எவ்வாறு வழி நடத்த வேண்டும்; மறைந்திருந்து தாக்கும் தந்திரோபாயம்; மறைந்திருந்து நடத்தப்படும் தாக்குதலைச் சமாளிக்கும் கலை போன்றவையும் போதிக்கப்படும். நேரவசதி கிடைப்பின் எதிரியின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் நுழைதல், தாக்குதல், பின்பு தன்னிடத்திற்குத் திரும்புதல் போன்றவையும் பயிற்றப்படும்.

கட்டளைப்படி கொல்லுதல்

முழுப் பயிற்சியின் நோக்கம் பின்வருமாறு: துரிதமான, கூர்மையான அதிக பலன் தரவல்ல தாக்குதலை நடத்துதல், கைவசம் உள்ள ஆயுதங்களைக் கூடுதல் பயனுடன் பாவித்தல், பயிற்றப்படுவோர் மத்தியில் மனத்திடமும் நம்பிக்கையும் வளரச் செய்தல், கூர்மதியும் யுத்த தந்திரமும் துணிவுடன் செயற்படும் போது வெற்றி நிச்சயம் என்று மாணவன் மனதிற் பதிய வைத்தல் ஆகியவையே என்று நான் மொழி பெயர்ப்பாளன் வாயிலாக அந்தப் பணம் தரும் செல்வந்தருக்கு விளக்கினேன். நான் சொன்னவை அவரைத் திருப்திப் படுத்தியது. பின்பு அவர் எனக்கு உடனடி நிலை பரத்தை விளக்கினார். நெடுஞ் சாலை மூலம் பொஸ்னியா-கெர்செகோவினாவுக்குப் போவதற்கு 10 அல்லது 12 மணித்தியாலம் எடுக்குமென்றும், அடுத்த வாகன அணி 48 மணித்தியாலங்களுக்குப் பின்பே புறப்படுமென்றும் அவர் தெரிவித்தார். பொஸ்னியாவுக்குள் நுழைவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுமென்றும் தன்னைத் தனது கிராமத்தில் வந்து பார்க்கும் படியும் சொன்னார். பின்பு அவர் விடை பெற்றார். எங்களைப் பொறுத்த வரை தனது பெயர் ''சொம்மி'' என்று அறியத் தந்தார்.

குறோசியாவில் ஒரு சில அரசியல் வாதிகளும், இராணுவ அதிகாரிகளும் இருக்கிறார்கள். இவர்கள் போர் முனையில் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை கேட்கும் போதெல்லாம் தாம் மனம் வைத்தால் தருவார்கள். இவர்களுக்கு நாங்கள் கொடுத்த பட்டப் பெயர்: ''எப்போதும் நாளைக்கு.'' இந்த சொம்மியும் அப்படியான ஒருவரா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

பொஸ்னியாவுக்குச் செல்லும் வாகன அணி

குறோசியச் சாலைகள் நன்றாகவே இருந்தன. நாங்கள் சென்ற பாதை மலைகள் ஊடாகச் செல்கிறது. இதைக் கடந்த போது எங்கள் முன் பொஸ்னியா பரந்து கிடந்தது. பொஸ்னியாவுக்குள் இறங்கியபோது எங்குநோக்கிலும் குன்றுகளும் மலைத் தொடருமாக இருந்தன. மறைந்து தாக்க வசதியான பிரதேசம். திருடர்கள் தங்

New Doc 2020-04-06 14.46.20_page-0044.jpg

கவும் இடமுள்ள மலைப் பிரதேசம். இப்படி எனது கற்பனை ஓடியது. எனது இறுதியான தரிப்பில் எனது தேவைப் பட்டியல் ரொம்மிக்கு இரண்டாவதான மிலோஷ் என்பவரிடம் கொடுக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லப் பட்டது. இந்த மிலோஷ் என்பவரை அன்றிலிருந்து நாலு நாட்களின் பின்னே சந்திக்க முடியுமென்று எனக்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. இந்த நாலு நாளும் ஒரு குறோசியக் குடும்ப வீட்டில் நான் தங்கவைக்கப் பட்டேன். எனது மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் போரில் ஈடுபடும் குறோசியப் போராளிகளையும் தாமாகவே வந்து போரில் கலந்து கொண்ட முஸ்லிம் இளைஞர்களையும் நான் கூர்மையாகக் கவனித்தேன். போர்க்களத்தில் பேணப்பட வேண்டிய அடிப்படை முதலுதவி அறிவு அவர்களிடம் அறவே கிடையாது. காப்பாற்றப்பட வேண்டிய பலர் இந்தக் குறையால் மடிய நேரிட்டது. மூச்சு விடுதல், இரத்தப் போக்கு, முறிவுகள், எரிகாயம் பற்றிய ஆரம்ப அறிவு கூட அவர்களிடம் கிடையாது. மொழிபெயர்ப்பாளர் மூலம் நான் அவை பற்றிக் கூறியபோது அவர்களுக்கு வியப்பான புதினமாகவே இருந்தது.

நிலைமை அறிக்கை

பொஸ்னியாவின் றுல்லா என்ற பிரதேசத்தில் ''ஜீ ஆர்'' (GR)என்ற நகரம் உள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக நகரத்தின் முழுப் பெயர் குறிப்பிடப்பட வில்லை. வாகன அணியுடன் நான் வந்து இறங்கியவுடன் அங்கிருந்த குடிமக்களில் பெரும்பான்மையானோர் முஸ்லிம் மக்கள் என்பதைக்கவனித்தேன். அவர்கள் மத்தியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவியது. அதற்கு மேலாக அவர்களிடம் ஆயுதங்கள் என்று சொல்ல ஒன்றுமே இல்லை. ஜீ ஆர் நகரத்தின் வெளிப் புறத்தை நான் சுற்றிப்பார்த்தேன். முஸ்லிம்களுக்கும், பொஸ்னிய குறோசிய இனத்தவர்களுக்குமிடையில் நிலவிய வாழ்க்கைத்தர வேறுபாட்டை நான் உணர்ந்தேன். வறுமையில் வாடிய முஸ்லிம்களுக்கு குறோசிய இனத்தவர் ஒரு விதத்திலும் உதவியும் செய்ய முன்வரவில்லை. இவர்களுக்கிடையில் போராட்டம் ஆரம்பித்தவுடன் நிலைமையைச் சொல்லத்தேவையில்லை. பொது எதிரியாகிய சேர்பிய செற்றினிக் படையினர் அவர்களுடைய கிராமங்களைத்தாக்கியபோது இருபாலாரும் ஒன்று சேர்ந்தார்கள். அந்த நேரத்திலும் தரத்தில் குறைந்த ஆயுதங்களே முஸ்லிம்களுக்கு விநியோகிக்கப்பட்டன. பொஸ்னிய-குறோசிய இனத்தவர் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கையில்லை. யுத்தம் முடிந்தவுடன் தங்களுக்கு அரசியல் ஆதாயம் உண்டு என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் பொஸ்னியாவுக்காக போராட முன்வந்துள்ளனர். குறோசிய இனத்தவர்களும் சேர்பியர்களும் தங்களுக்கிடையில் நாட்டைக் கூறுபோட்டபின் தங்களுக்குக் கிடைக்கும் நிலமும் அதிகாரமும் மிகச் சொற்பம் என்பது முஸ்லிம்களின் பயமாகும்.



அவருடைய குழுவைச் சேர்ந்த ஒருவரால் 'லீ' காயமடைந்துள்ளார். படத்தின் பின்னணியில் சேர்பியர்களுடைய வீடுகள் எரிவதைப் பார்க்கவும்.

பொஸ்னியப் குறோசிய போராளிகளிடம் புதிய நல்ல தரமான ஆயுதங்கள் இருந்தன. குறோசிய நாட்டுப் படைகளின் உதவி அவர்களுக்கு எப்போதும் உண்டு. அந்நாட்டுத் தேசிய படை பொலிஸ் மற்றும் மிலிற்றியா எனப்படும் இன்னுமொரு விதப் படை அணி போன்றவற்றின் பூரண ஆதரவும் இவர்களுக்கு உண்டு. சேர்பியர்கள் வாழும் சிறிய கிராமங்கள் பொஸ்னிய, குறோசிய இனத்தவர்களால் தாக்கப்படுகின்றன. தாக்கப்படும் அப்படியான குக்கிராமங்கள் 5 அல்லது 6 கிலோ மீற்றர் குறுக்களவு கொண்டவையாகும். சகல ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் யாவரும் கொல்லப்படுகின்றனர். கிராமம் தீ மூட்டி அழிக்கப்படுகின்றது. இனச் சுத்திகரிப்பு இங்கும் நடைபெறுகின்றது. ஆனால் ஒப்பிட்டுப்பார்த்தால் சேர்பியர்தான் பெரும் குற்றவாளிகள் ஆவார்கள்.

இப்படியான தாக்குதலுக்குக் கட்டளையிடுவோர் தங்கள் படையினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை நான் அறிந்து கொள்ள முடிந்தது. செற்னிக்ஸ் எனப்படும் முறையான படையிற் சேராத சேர்பிய நாட்டுப் போராளிகளை இவர்கள் போர்க்கைதிகளாகப் பிடிக்கின்றனர். இந்த செற்னிக்ஸ் எனப்படுவோர் அநேகமானோர் தங்கள் குடும்பத்தையும் தங்களையும், தங்கள் சொத்தையும் பாதுகாக்கப் போராடும் வெறும் விவசாயிகளே. இத்துடன் எனது காதில் விழுந்த செய்திகளின்படி கூடிய சீக்கிரத்தில் சேர்பியப் படையினரும் செற்னிக்களும் கூட்டாக ஜீ ஆர் நகரத்தையும் அது சார்ந்த பிரதேசத்தையும் கைப்பற்றும் திட்டத்தைத் தீட்டியுள்ளனர் என்பதே. நான் கலந்து கொண்ட சந்திப்புகளில் நான் ஒன்றைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது பல குறோசிய இனத் தளபதிகள் பழைய பொதுவுடமை ஆட்சியில் பதவி வகித்த இராணுவ வீரர்கள் என்பதே. இவர்கள் என்னையும் எனது குழுவில் வந்த பின் அவர்களையும் தங்களுடன் இணைந்து

New Doc 2020-04-06 14.46.20_page-0045.jpg

கொள்ளும்படி இருமுறை கேட்டுள்ளார். இதுபோன்ற கோரிக்கைகளை நான் பெரிது படுத்துவதில்லை.

முடிவுகள்

தலைமைதாங்கத் துடிப்பவர்கள் கூடுதலாகவும் போராடுபவர்கள் குறைவாகவும் காணப்படுகின்றனர். மிக அண்மையில் சேர்பியப் படைகளும் செற்னிக்களும் தாக்கக் கூடும், அதைமுறியடிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தால் இச்சமயத்தில் பொஸ்னிய-குறோசிய உறவுகள் சுமுகமாக இருந்தன. சேர்பியர்களை புறமுதுகு காட்டவைத்துப் பின் இருபாலாரும் மீண்டும்போராடத் தொடங்குவார்கள் என்று நான் முடிவு கட்டியுள்ளேன். ஒவ்வொரு குழுவும் அதன் தலைவனும் தங்கள் சுய ஆதாயத்திற்காகப் போராடுகின்றனர். பிடுங்கினது இறுதி என்பதே அவர்கள் கோட்பாடு. இப்படியான குழுக்களுடன் இணைந்து போராடும் பிறநாட்டவர் ஒன்றை நன்றாக உணரவேண்டும். இவர்கள் சேர்ந்த குழுவின் எதிரிகள் இவர்களைக் கொல்லுவதில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்துவார்கள். பிறநாட்டுப் போராளிகளைக் கொல்லுவதில் பெரும் கௌரவம் தங்கியுள்ளது. இது உலகெங்கும் போர் நடக்கும் இடமெல்லாம் உண்மை. நான் சென்று பார்வையிட்ட போர்முனைகளெல்லாம் போராட்டம் நடத்தப்படும் முறையும், பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்த விதமும் எனக்குத் திருப்தி அளிப்பனவாகவில்லை. தற்பாதுகாப்புக்கென அவர்கள் ஒரு நடவடிக்கை எடுக்காதது பெரும் குறையாகும். தலைக்கு மேல்பாதுகாப்புத் தேவை என்பதை அவர்கள் சிந்தனைக்கெடுக்கவில்லை. தலைக்கு மேல்பாதுகாப்புத்தேவையானதோர் அம்சமாகும். டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் ஒன்றையும்நான் காணவில்லை ரவைகளைச் சொரிந்தும் அரைவட்டப் பாதுகாப்புக் கொடுக்கும் முறையும், ரவைகள் அடுக்கடுக்காக ஒன்றின்மேல் ஒன்றாகக் கொடுத்து பாதுகாத்துத் தரும் வழமையும் அவர்கள் அறியாததொன்றாகும். மேலும் போர் முனையில் முதலுதவியும் அவர்கள் அறியாததொன்றாகும். குறோசிய படைகளிடம் நல்ல ஆயுதங்களும் வாகனங்களும் இருக்கின்றன. சேர்பியப்படைகளால் கைவிடப்பட்ட டாங்கிகளைகுறோசியப்படையினர் புத்துயிர் கொடுத்துப் பாவிப்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். டாங்கிகளிற் பல ரி 54, ரி55 ரகத்தைச் சேர்ந்தவையாகும். ரி 64. ரி72 ரக டாங்கிகளும் என் கண்ணில் பட்டிருக்கின்றன. இப்போது போர் மந்த நிலையிலுள்ளது. இரு பகுதியும் போர் தொடுக்காது விலகி நின்றுள்ளன. ஆனால் சிறிய குறோசிய அணிகள் சேர்பியப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள நகரங்கள் கிராமங்கள் முதலியவற்றினுள் புகுந்து தாக்குதல் நடத்துகின்றன.

போரில் பிறநாட்டவர்

'ஜீஆர்' நகரில் கூட நான் பல பிற நாட்டவர்களைச் சந்தித்துள்ளேன். இவர்கள் தாங்களாகவே சுயவிருப்பின் பேரில் பொஸ்னிய, குறோசிய கார்பாகப் போராட வந்துள்ளனர். இவர்களில் ஒருவர் ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் பிரெஞ்சு பிறநாட்டுப் படையின் பரா மிலிற்றறிப் படையினர் அணியும் தொப்பியை அணிந்திருந்தார். நான் இரண்டொரு முறை இவருடன் பேசி இருக்கிறேன். பொஸ்னிய, குறோசியப்படையினரின் அபிலாசைகளில் நம்பிக்கையுள்ளவராக அவர் பேச்சிலிருந்து எனக்குத் தெரிய வந்தது. ஒரு கோப்பி அருந்தும் உணவகத்தில் அவரை நான் கடைசி முறையாக உயிருடன் கண்டேன். குறோட்-108 அணி' யைச் சேர்ந்த சிலருடன் அவ்விடத்தில் இருந்தார். அவரை விட அவருடைய நண்பர்களெல்லோரும் றொக் அன் றோல் நடனத்திற்காக ஆடை அலங்காரம் செய்திருப்பவர்கள் போல் தோன்றினர். அவர்களுடைய உடை சினிமாவுக்கு பொருத்தமானது, போர்முனைக் கல்ல. இந்தக்கோலத்தில் அவர்களைப் பார்க்கும் போது அவர்களுடைய ஒரு பாதம் புதைகுழியில் இறங்கி விட்டது போல் எனக்குத் தோன்றியது. அவர்களுடைய தயார் நிலையும் காட்டிக்கொடாது தன்னை மறைக்கும் உடையும் பூஜ்யமாகவே இருந்தன. தங்கள் தலைவனுக்கும் தங்கள் நம்பிக்கைக்கும் தங்கள் இன்னுயிரை ஈயத் தயாராக உள்ளனர். அதுபோதுமா? சிறிதுகால யுத்தப்பயிற்சியும்,தற்பாதுகாப்புப்'' போதனையும் அவர்களின் உயிர்த்துப்பும் விகிதாசாரத்தை உயர்த்தி விடும். நம்போ சினிமாப்படக் கதாநாயகன் அணியும் தலைப்பட்டியும் பல வர்ணம் கொண்ட சீருடையும் குறிபார்த்துச்சுடும் ''ஸ்னைப்பர்'' வீரனுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நாளொன்றுக்கு மூன்றிலிருந்து ஆறு போராளிகள் ஸ்னைப்பர் தாக்குதலுக்குப்பலியாகிக் கொண்டு வந்தாலும் தங்களைக்காட்டிக்கொடுக்கும் சீருடையை அவர்கள் மாற்றவேயில்லை.

புளித்துப்போன ஒப்பந்தம்: வேகமாகக் கிளப்பி தாமதமாக நில்

பொஸ்னியாவுக்குச் செல்லும் எப்பிரயாணமும் இவ்வகையைச் சேர்ந்தது. மிலோஷ் வருவாரென ஒரு நாள் முழுவதும் காத்திருந்தேன். அவர் வரவேயில்லை. உள்ளூர் தளபதியுடன் இது பற்றிப் பேசினேன். மிலோஷ் தனது முதல்வர் சொம்மியுடன் தனது கிராமத்தில் இருப்பாரென அவர் சொன்னார். அடுத்த நாள் அவர் வராவிட்டால் அவருடைய கிராமத்திற்குப் போவதாக நான் தீர்மானித்தேன். அடுத்த நாளும் அவர் வரவில்லை. எனது மொழிபெயர்ப்பாளன் மிரிசாத் என் பவருடன் நான் அக்கிராமத்திற்குள் சென்றேன். சொம்மி எங்களை வரவேற்றார். மிரிசாத் மூலமாக எனது செய்தியை சொம்மிக்குச் சொன்னேன் ''இன்றிரவுக்குள் நான் கேட்டவை யாவற்றையும் தரத் தவறினால் ஒப்பந்தம் முறிந்து விட்டதாக நான் தீர்மானிப்பேன். அத்துடன் அந்த நாட்டைவிட்டு நான் அகன்றுவிடுவேன்'' சொம்மி சொன்

New Doc 2020-04-06 14.46.20_page-0046.jpg

னார் மிலோஷ் அடுத்த நாள் வருவார் அவரையும் வைத்துப் பேசுவோம், அதுவரை ரொம்மியின் வீட்டில் தங்கலாம் என்று. நான் ஒத்துக் கொண்டேன்.. அந்தக் குடியிருப்பு நடுத்தரப் பரப்பளவு கொண்டதாகும். 20–30 வீடுகள் அங்கு இருந்தன. அவை மிகப் பெரியனவாகவும் வசதிகள் கொண்டனவாகவும் இருந்தன. சில வீடுகளுக்கு முன்பாக மேர்சிடஸ் பென்ஸ் அல்லது பி. எம் டபிள்யூ கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. சாலைகள் மிகவும் நல்ல நிலையிலுள்ளன. பொதுப் பூந்தோட்டங்கள் நன்றாகப் பராமரிக்கப் பட்டிருந்தன. அக்கிராமத்தின் பல முனைகளில் ஆயுதபாணிகளான ஆண்கள் புகைத்தபடி பேசிக் கொண்டு நின்றனர். நான் அதிசயப் பட்டு அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களின் தோற்றத்தைப் பார்த்தேன். அவர்கள் வைத்திருந்தவை சிறு ரக மிகப் புதியவையும் மிக அண்மைக் காலப் பராமரிப்புமாகும். கைத்தாங்கலாக எடுத்துச் செல்லும் துவக்குகள் சீசற் (CZ) ரகத்திலிருந்து குலொக் (Glock) வகையைச் சேர்ந்தவையாகும். மிகவும் உயர்ந்த ரக பெரேட்டாக்களும் (Beretas) இதில் அடங்கும். அவர்களிடம் ஸ்ரேயர், ஸ்னைப்பர், றைபிள்கள் இருந்தன. நல்ல இன ஏகேயும் அவர்களிடம் இருந்தது. குறோசியப் போரில் இரத்தம் சிந்திய மிகவும் துணிச்சலான 'எலிக் கூட்டம்' எனச் சொல்லிப் பெயர் வாங்கிய குறோசிய அணியும் அங்கிருந்தது.

அங்கு நடை பயின்ற பெண்களும் மிகவும் நேர்த்தியான ஆயுதங்களையே காவித் திரிந்தனர். ஜீஆர் என்னும் முஸ்லிம்கள் பிரதானமாக வாழும் நகரத்திலும் பார்க்க இது வித்தியாசமான இடமாகும். ஜீஆர் நகரவாசிகள் முஸ்லிம்களும் சரி குறோசிய இனத்தவரும் சரி வைத்திருந்த ஆயுதங்களை குப்பையென ஒதுக்கிடலாம். இந்தச் செல்வம் நிறைந்த கிராமத்தில் ஒரு குறையுமில்லை என்றே சொல்லி விடலாம். இங்குதான் எனது மொழிபெயர்ப்பாளன் மிரிசாத் மூலமாக ரொம்மியின் இரகசியத்தைக் கண்டு கொண்டேன். பொஸ்னிய யுத்தத்திற்கு முன்பாக இந்தப் பிரதேசத்தில் சேர்பியர்களின் கையோங்கி இருந்த காலத்தில் அவர்களுக்கு எண்ணெயும் எரிபொருளும் ரொம்மிதான் விற்பனை செய்து வந்தார் என்பதுதான் அந்தச் செய்தி. இவர் என்ன விதமான மனிதர் என்பதை உங்கள் கற்பனைக்கு விட்டு விடுகிறேன். அக்கிராமத்தில் வாழும் அனேகமானோர் ஒருவருக் கொருவர் இனசனமானவர்கள். அதனால் அக்கிராமமே ஒரு பெரிய குடும்பம் போன்றதாகும். அடுத்த நாள் தனது ஆட்களுடன் மிலோஷ் வந்துவிட்டார். எனது தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியாதென்றும் ஒரு வாரத்தில் சகல ஒழுங்குகளையும் செய்ய முடியுமென்றும் அவர் சொன்னார். அடுத்த வெள்ளிக்கு முன் நான் கேட்ட ஆயுதளபாடங்கள் எனது கைக்கு வராவிட்டால் என்னை மறந்துவிட வேண்டியது நான் என்று நான் மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தேன். மேலும் எனது சகாக்களும் நானும் ஜீஆர் நகருக்கும் இந்தக் கிராமத்திற்கு மிடையில் போக்குவரத்துச் செய்ய வேண்டியிருப்பதால் இப் பாதையிலுள்ள தடை முகாம்களுக்கு எம்மீது தாக்குதல் நடத்த வேண்டாமென உத்தரவு இடும்படியும் நான் கேட்டுக் கொண்டேன். இதற்கு அவர் சம்மதித்து ''ஒரு பிரச்சினையும் இல்லை'' என்று தன் மொழியில் கூறினார்.

மாலைப் பொழுதில் மிரிசாத், என்னுடைய அடுத்த உதவியாளன் ஆகிய இருவரும் 5 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள ஜீஆர் நகருக்கு நடந்து போகத் தீர்மானித்து தங்கள் நடையை ஆரம்பித்தனர். நான் எங்களுடைய பொருட்களுக்குப்பாது காப்பாக அக்கிராமத்தில் தங்கப் போவதாகவும் நகரிலிருந்து அவர்கள் திரும்பி வந்தபின் சந்திப்போமென்றும் தெரிவித்தேன். அவர்கள்



தாக்குதல் நடந்தபின் ஒன்றுகூடல். 'லீ' யினுடைய இடது கை சுற்றிக்கட்டப் பட்டுள்ளது. உடனே வெளியே வருகின்றது 'சிலிவோலிக்' எனப்படும் மதுப்போத்தல். வெளிச்சமின்மை ஒரு பெரும் தடை.

யுத்தம் "சிலிவ்வாவிக்" எனப்படும் மதுவின் பிடியில்

சென்ற பத்து அல்லது பதினைந்து நிமிடங்களின் பின் சில வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தம் கேட்டது. இது இவ்விடத்தில் மிகவும் சாதாரண விடயமான படியால் நான் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. சில நிமிடங்களின் பின் நடையில் சென்றவர்கள் ஒட்டத்தில் திரும்பி வந்தார்கள். மிரிசாத் சொன்னார்: தாங்கள் கிராமத்தை விட்டு 500 மீற்றர்கள் வந்தபோது தங்கள் பக்கமாக சூடுகள் வரத் தொடங்கின என்று. நான் அவர்களைத் திரும்பிப்போக வேண்டாமென்றும் இவ் விடயத்தை விசாரிக்க வேண்டும் என்றும் தெரிவித்தேன். யார் அந்தத் தாக்குதலை நடத்தின என்று தங்களுக்குத் தெரியாதென்று மிரிசாத் தெரிவித்தார். பத்து நிமிடங்களுக்குப் பின் வாகனமொன்று அக்கிராமத்தினுள் நுழைந்தது. அதிலிருந்து இறங்கியவர்கள் முன்பு

New Doc 2020-04-06 14.46.20_page-0047.jpg

குறிப்பிட்ட ''எலிக் கூட்டம்'' எனச் செல்லமாக பெயரிடப்பட்ட குறோசிய அணியைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அப்போதுதான் போர்முனையிலிருந்து திரும்புகிறார்கள். அவர்கள் நன்றாக மது அருந்தியிருந்தார்கள். அவர்கள் சல்லாபத்தைக் காதுகொடுத்துக் கேட்டபோது யார் சுட்டதென்று எனக்குத் தெரிந்தது. இதற்குப் பொறுப்பானவர் 6 அடி 2 அங்குலம் உயரமான ஆண் மகனாவர். வயது நாற்பதிற்கும் ஐம்பதிற்கும் இடைப்பட்டதாகும். அவருடைய ஆடை அணி முழுவதும் கறுப்பு நிறத்தில் இருந்தன. கறுப்புக் காலணி, கறுப்புத் தோலினால் ஆன நீட்டுக் காற்சட்டை அவருடைய கோட்டு யாவும் கறுப்பு நிறமுடையனவாகும். கோட்டுதிறந்தே இருந்தது. அவருடைய சேட்டு வெள்ளை நிறம் உடையது, அதன் கழுத்துப்பட்டி காலஞ் சென்ற சினிமா நடிகரும், பாடகருமான எல்விஸ் பிறெஸ்லி ஆசைப்படக் கூடிய உயர்வுடையதாகும். அவருடைய தோளில் ஒரு கறுப்பு நிற ஸ்ரேயர் ஸ்னைப்பர் றைபிள் தொங்கியது. அவருடைய ஆடை அணியும் தோரணையும் அலாதியானது. இந்த நேரத்தில் ரொம்மி தோன்றினார் நானும் எனது தோழர்களும் உடனடியாக ஜீஆர் நகருக்குப்போகப் போவதாகவும், இதுபோன்ற கேவலமான நடவடிக்கையை நான் பொறுமையாக ஏற்கப்போவதில்லை யென்றும் அவருக்குத் தெரிவித்தேன். அவர் இதுஒரு கேலிச்சம்பவம் என்று தட்டிக் கழித்தார். வெள்ளிக் கிழமைக்கு முன்பாக நான் கேட்டவை யாவும் என்வசம் வந்து சேராவிட்டால் நான் ஒப்பந்தத்திலிருந்து விலகி விடுவதாக அவரிடம் மீண்டும் வலியுறுத்தினேன். அந்த மாலைப் பொழுதில் அந்தக் கிராமத்தை விட்டு ஜீஆர் நகரை நோக்கிச் செல்லும் போது நான் இவர்களுக்கும் யுத்தத்திற்கும் வெகு தூரம் என்று மனதில் நினைத்தேன். இவர்களுக்கு இது ஒரு விளையாட்டு; வெறும் அலட்சியமாக நடக்கிறார்கள் என்றும் எனது மனதிற் பட்டது. சேர்பியர்களும் அவர்களுடன் செர்னிக்ஸ் கோஷ்டியும் வரும்போது இவர்கள் என்ன தான் செய்யப் போகிறார்களோ தெரியாது, அப்போது நிலைமை கட்டுக்கடங்காது போய் விடும்.

பிரிட்டிஷ் இழப்புக்கள்

முன்பு நான் குறிப்பிட்ட ஸ்கொட்லாந்துப் போராளி (மல்கம் என்பது இவருடைய பெயர்) மரணம் அடைந்த விதம் நான் குறிப்பிடும் பயிற்சி குறைவுக்கும், போரை ஒரு விளையாட்டாக எடுப்பதால் வரும் வினைக்கும் தகுந்த உதாரணமாகும். அன்று மாலை மல்கமும் இன்னும் 15 வீரர்களும் ஜீஆர் நகர் குறோசிய – முஸ்லிம் முகாமிலிருந்து வாகனங்களில் புறப்பட்டனர். அண்மையிலுள்ள சிறிய கிராமத்திலுள்ள செர்னிக்சுகளை தாங்கள் தொலைக்கப்போவதாக மல்கம் எனக்கு அறிவித்தார். என்னையும் தங்கள் கோஷ்டியில் சேரும்படி அழைத்தார். என்னிடம் ஆயுத தள பாடங்கள் இல்லாத படியால் என்னால் முடியாதென்று பதில் கொடுத்தேன். தாங்கள் தாக்கப்போகும் கிராமத்தின் வரை படத்தையும் அவர் எனக்குக் காட்டினார். தாக்குதல் நடத்தித் திரும்பியபின் அமைதியாக காப்பி அருந்துவோமென்றும் அவர் எனக்குச் சொன்னார். நான் அவருக்கு அதிர்ஷ்டம் கிடைக்கட்டும் என்று வாழ்த்துக் கூறினேன். அதிகாலையில் அந்தத் தாக்குதல் நடந்தது. இதன் ஒலியை நான் இருக்குமிடத்திலிருந்து கேட்டேன். மிகவும் குறுகிய நேரத்தில் யாவும் முடிந்து விட்டன. இந்த நேரத்தில் வெளிச்சம் போட்டபடி மல்கம் சென்ற வாகனம் அதிவேகமாக முகாமுக்குத் திரும்பி வந்தது. வாகனத்தின் பின் பக்கத்தில் அவருடைய உடல் கிடத்தப்பட்டிருந்தது. அவர் மரணம் அடைந்து விட்டார். வேகம் கூடிய இரண்டு றைபிள் ரவைகள் இதைச் செய்து விட்டன. ஒரு குண்டு நெற்றி ஊடாகத் தலையையும் மற்றது கழுத்தையும் தாக்கியுள்ளது. அவருடைய உடல் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டு முதலுதவி மையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. ஐந்து நிமிடங்களின் பின் வைத்தியர் மல்கம் இறந்து விட்டாரென்று எங்களுக்கு அறிவித்தார்.

என்ன நடந்தது என்பதை அறியும்படி எனது மொழி பெயர்ப்பாளரைப் பணித்தேன். அவர் அறிந்து சொன்னது பின்வருமாறு: இவர்களால் தாக்கப்பட்ட இக் கிராமம் ஒரே வரிசையில் ஆறு வீடுகள் கொண்டதாகும். இந்த வீடுகளுக்கு முன்பாக ஒரு பதுங்கு குழி. இதில் ஒரு கனரக இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்டிருந்தது. தாக்குதல் நடத்துவோர் வகுத்த தாக்குதல் திட்டம் பார்வைக்கு மிகவும் கவர்ச்சிமானது. ஆறுபேர் கொண்ட இரு குழுக்களாகப் பிரிந்து முதலாறு பேர் வீடுகளுக்குப் பின்புறமாகத் தாக்க மிகுதி ஆறு பேரும் இயந்திரத் துப்பாக்கியை செயலிழக்கச் செய்து விட்டின் முன்புறத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும். வீட்டிற்குப் பின்புறம் தாக்குதல் நடத்துவோரிடம் ஆர்.பி.ஜி.-ஓ எஸ்.5ஏ, எம்.ஜி 42 சோயா (Zoya) போன்ற ஆயுதங்கள் இருந்தன. முன்பக்கத் தாக்குதல் குழுவில் மல்கம் இருந்தார். இவர்கள் வெற்றிகரமாக இயந்திரத் துப்பாக்கியைச் செயலிழக்கச் செய்தனர். பின்பு வீட்டுவரிசையை நோக்கி வெளி நிலத்தைக் கடக்கும் போது அந்த வீட்டிலுள்ள விவசாயி ஒருவர் மல்கமை நோக்கி இரண்டு சுற்று .22 ரவைகளைப் பாய்ச்சினார். யார் இந்த வெடியைத் தீர்த்தாரென்று குறிப்பாகத் தெரியாதென்றும் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கோஷ்டி புறப்படும் போது 15 ஆட்கள் அதில் இருந்தார்கள். ஒருவர் இறந்தார், வேறு ஒருவருக்கும் காயம்கூட இல்லை. இது ஒரு வெற்றிகரமான தாக்குதல் என்பதில் ஐயமில்லை. இச் சமயத்தில் அந்த வைத்தியர் என்னை அழைத்தார். இறந்த மல்கமின் ஆவணங்களை அவர் என்னிடம் தந்து அவருடைய குடும்பத்தினரிடம் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார். நானும் ஸ்கொட்லாந்தில் பிறந்தவன் தான். இதை வைத்தியருக்குத் தெரிவித்தபின் அவர் தந்தவற்றைப் பெற்றுக் கொண்டேன்.

New Doc 2020-04-06 14.46.20_page-0048.jpg

இறந்த மல்கமின் விரத்தைப் விதந்துரைத்து குறோசிய படைத் தளபதி ஒரு பத்திரத்தை என்னிடம் தந்துள்ளார். தமது படைக்கு இவர் ஆற்றிய சேவையையும் அவர் குறிப் பிடத் தவறவில்லை.

வெள்ளிக்கிழமை வரு முன்பதா கவே நான் இலண்டனில் உள்ள எனது குழுத் தலைவருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிக் கூறினேன். அவர் வெள்ளிவரை பார்க்கும் படியும், ஒன்றும் கிடைக் காவிட்டால் நாடு திரும்பும் படியும் என்னைப் பணித்தார். நான் இதன் பின் ரொம்மியின் கிராமத்திற்குச் சென்றேன். ஆயுதத் தளபாடங்கள் ஒன்றும் தரப்படவில்லை. என்னால் இவ்விடத்தில் தொடர்ந்து தங்க முடியாது, நான் எனது நாட்டிற்குத் திரும்பப் போகிறேன் என்றெல்லாம் அவரிடம் சொன்னேன். நான் கேட் டவை தரப்படாவிட்டால் ஒரு வித மான ஆயுதப்பயிற்சியும் வழங்க முடியாதென அவருக்கு மிகவும் சுருக்கமாகத் தெரிவித்தேன். அவர் கிளிப்பிள்ளைபோல் மீலோசுடன் பேசும்படி திருப்பித் திருப்பிச் சொன் னார். அவருடன் நான் மூன்று முறை பேசிவிட்டதாகவும் அவர் தனது மொழியில் 'சுற்றா' – நாளைக்கு என்று ஒவ்வொரு முறையும் சொன்னார் என்று ரொம்மிக்கு அறிவித்தேன். இது வல்லத் தொழில் செய்யும் விதம் என்று கூறிக் கொண்டு எனது பயணப் பைகளை எடுத்துக் கொண்டு ஜீஆர் நகரை நோக்கி நடையைக் கட்டினேன். ரொம்மிக்கு வருத்தம்தான். ஆனால் அவருக்கு இப்படியெல்லாம் சொல்லடி கொடுப் பதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஏதோ நான் வந்து போனதிற்குப் பணம் கிடைத்தது, அதுவரை எனக் குத் திருப்தி.

டெவென்ரா (*Deventa*)

ஜீஆர் நகரை விட்டுக் கிளம்பி னோம். ஆனால் எனது மொழி பெயர்ப்பாளனும் நானும் டெவென் ராவுக்குப் போய் போர்முனையில் என்ன நடக்கிறது என்று பார்த்து விடுவதெனத் தீர்மானித்தோம். இவ்விடத்தில் சேர்பியப் படைகள் இடைவிடாது தாக்குதல் நடத்து கிறார்களென்றும், அவர்களுடைய கனரகத் தாரப்பாயும் எறிகணைகள் இருபத்திநாலு மணித்தியாலமும் பாய்ந்த வண்ணம் இருக்கின்றன என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன். பல்வேறு முஸ்லிம் குறோசிய படை கள் இந்நகரத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருந்தன. இழப்புக்கள் மிக வும் கூடுதலாக இருந்தன. டெலென் ரர் நகரின் சுற்றாடலில் உள்ள போர்முனை ஜீஆர் நகரச் சுற்றா டலில் உள்ளவை போல் இருந்தது. இங்கும் தலைக்கு மேல்பாதுகாப்பு கள் பொடாது தாக்குதல்களை தலையில் வாங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களுடைய ஆயுதங்க ளும் திருப்தி அளிப்பனவாக இல்லை. இந்த நகரில் லீ (Lee) என்ற பெய ருடைய பிரிட்டிஷ் காரனைச் சந்தித் தேன். இவருக்கு 21 வயது. இவரும் இவருடைய சகாக்களும் சேர்பியப் படைகளுக்கும் செக்னிக்களுக்கும் பெரும் தொல்லை கொடுத்தபடி இருந்தார்கள். ஆனால் இவர்கள் கைலிருந்ததோ ஊடுருவித் தாக் குதல் நடத்துவதற்கு ஒவ்வாத கிறிய ரக துவக்குகளும். டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களுமே, ஒவ்வொரு மாலை யும் இவர்கள் கிரமம் தவறாது தாக் குதல் நடாத்தி எதிரிகளுக்குப் பெரும் நஷ்டம் கொடுத்து வந்தார்கள்.

நண்பர்களே எம்மைச் சுட்டு வீழ்த்தும் அபாயம்

படைகளிற் சேராத சேர்பியத் தாக்குதற் காரர்களைத் துரத்தி விட்டு சில கட்டடங்களை விடுதலை செய்யும் போது லீயுடன் கூட வந்த போராளி ஒருவர் மனத்திடம் இழந்த நிலையில் கலக்கமடைந்து தனது கையில் உள்ள ஆயுதத்தை இயக்கத் தொடங்கினார். லீ கையில் காயம் அடைந்தார். வேறு பல ர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் கள். ஜீஆர் நகரில் மல்கம் உயிரி ழந்ததை இவருக்கு நான் விவரித் தேன். இங்குள்ள போராளிகள் மத்தியில் காணப்படும் குறைகளை நாங்கள் பேசிக்கொண்டோம். போர் முனையில் நடக்கும் விதம், ஆயுதங்களைப் பேணுதல், முதலுதவி பற்றிய அறிவு போன்றவை பயிற்சி ஒன்றினால் தான் பெறமுடியும்; லீ இது உண்மை தான், ஆனால் இந்தப் போரில் பயிற்சி கொடுப் பதற்கு ஒருவருமில்லை என்று கையை விரித்தார். தன்னையும் தனது சகாக்களையும் இது வரை யும் காப்பாற்றி வந்தது அதிர்ஷ்டம் ஒன்றே என அவர் தெரிவித்தார். கடந்த மூன்று மாதங்களாகத் தான் போராடி வருவதைச் சொல்லி தனது ஆத்ம திருப்தியைத் தெரிவித்தார்.

லீ முன்னாள் பிரிட்டிஷ் இரா ணுவ வீரராவார். விமானத்திலி ருந்து விரியும் குடையுடன் பாய்ந்து தாக்கும் பரா (Para) என்ற பிரி வைச் சேர்ந்தவர். தனது தோள் களில் சருமவியாதி வந்ததாகவும் இதன் காரணமாக வைத்திய பரி சோதகர்கள் தன்னை வேறு பிரிவுக்கு மாற்றியதாகவும் தெரிவித்தார். இதை ஆட்சேபித்து பிரிட்டிஷ் இரா ணுவத்தை விட்டு விலகி இருந்த போது குறோசிய மொஸ்லிய யுத்தம் தொடங்கியதைக் கேள்வி யுற்றார். குறோசிய, இனத்தவர் களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு உதவவேண்டுமென பேரவாப் பட் டார். இதன் காரணமாக இந்த யுத்தமுனைக்கு வந்துள்ளார். அவர் சேர்ந்திருந்த அணியினர் அவருக் குப் பெருமதிப்புக் கொடுத்ததை நான் கவனித்துள்ளேன். தன்உயிரைத் துச்சமென மதித்து அவர் போரா டிய திறனை மெச்சிப் பலரும் பேசி னார்கள். இவரின் பிரிவு பிரிட்டிஷ் இராணுவத்தின் இழப்பாகும். அவ ருக்கு வெகு உன்னதமான பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அதன் பலனை அவர்கள் பெறமுடியாதது வருத்தம் தருவதாகும். அவருடைய மனநிலையை என்னால் விளக்கக் கூடியதாக இருந்தது. போராட்ட வாழ்வுக்குச் சகாக்களைத் தேடும் போது நான் லீயைத் தான் முதலா வதாகச் சேர்த்துக் கொள்வேன். அவர்மேல் நான் வைத்திருக்கும் பெரு மதிப்பின் அடையாளம் இதுதான்.

இத்தக் கட்டுரையை ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் பங்கு பற்றிய எனது பாட்டனார் றோபோர்ட் மக் இன்னிஸ் என்பாருக்கும், அண் மையில் உயிரிழந்த மல்கம் பிறேம், பியறி ஆகியோருக்கும் அர்ப்பணிக் கின்றேன்.

கொம்பற்றும், செலைவலிலும்

New Doc 2020-04-06 14.46.20_page-0049.jpg

பில் கிளின்ரனுக்கான பாதுகாப்பு



பில் கிளின்ரன் ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் ஆனபோது, அவரது அந்தரங்க வாழ்க்கைக் குரிய உரிமை, துப்புரவாகத் துடைத்தெறியப்பட்டது. இப்போதிருந்து, இனி எஞ்சியுள்ள வாழ்நாள் பூராவும், கிளின்ரனும், மனைவி கிளாரியும் அமெரிக்க இரகசிய சேவைப்பிரிவினால் பாதுகாக்கப்படுவார்கள்.

தனது பதவிக்காலத்தின் முடிவில், கிளின்ரன் தம்பதியினர் எங்குதான் சென்று வாழமுடிவு செய்யினும் அங்கெல்லாம் அவர்கள் இந்த இரகசிய பிரிவின் கையாட்களால் இரவும், பகலும் பாதுகாக்கப்படுவர். கிளாரி கடைத்தெருவுக்குப் போகவிளையும் போதெல்லாம் ஓர் உளவாளியும் கூடப் போவார். தன் கணவர் ஒருவரோடு வெளியிடமொன்றில் மதிய போசனம் பண்ண கிளாரி விரும்பினால், அவர்களுக்கு எதிர்த்த மேசையில் ஒரு கையாள் காவலிருப்பார். தம் புதல்வி "செல்சியாவிற்கு" ஓர் ஆடம்பரமான திருமண வைபவத்தை நடாத்தினால் அங்கும் மேற்சொன்ன பிரிவினர் பிரசன்னமாகியிருப்பர்.

உலகின் மிகத்தீவிரமானதும், செலவுமிக்கதுமான, பிரங்கமான பாதுகாப்பைப்பெறும் தம்பதியர் என்ற முறையில் அமெரிக்காவின் அதிபரும், முதற் பெண்மணியும் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஏராளம் வாய்ப்புக்களை எதிர் கொள்வர். கடுப்பான முகமும் விறைப்பான கழுத்தும், வண்ணக் கலப்பற்ற ஆடையுமாய், சதா துப்பாக்கியுடன் உலவும் வலிய ஆண்கள், பெண்டிரிடையே வாழும் யதார்த்தத்தைப் பழகிக்கொள்ள!...

குறிப்பிட்ட இரகசிய சேவை; உண்மையில், பிரங்கமானதொன்று; காரணம், அமெரிக்க அதிபர் போகுமிடமெல்லாம் அவரைச் சூழ்ந்து காணப்படும் அந்தச் சிரிக்காத ஆண்களையும், சில தருணம் அதே தன்மையுடைய பெண்களையும் அவதானித்திராத ஒரு பத்திரிகை வாசகரோ அல்லது தொலைக்காட்சி நோக்குநரோ அங்கேயிருக்க முடியாது.

கட்டையாகக் கத்தரித்த தலைமுடியும், நீண்ட அங்கிகளும் கறுப்புக் கண்ணாடியும், பார்த்த மாத்திரத்தில், இவர்களிடையே ஓர் உருவ ஒற்றுமையைக் காட்டுவதோடு, மேலங்கியில் இடப்புறத்தில் காணப்படும் ஒரே மாதிரியான தெறி னிகளும், கழுத்துப் பட்டியின் கீழாக ஊரப்பித்துச், சுருண்டு, காதோரமாய் தலைக்குள் மறையும் நுண்ணிய பிளாஸ்ரிக் குழாய்களும் இந்த மனிதர்களிடம் ஒருவித அச்சத்தையும் தோற்றுவிக்கிறது.

எல்லா உளவாளிகளும் கூடவே, மணிக்கட்டில் ஒரு நுண்—ஒலிவாங்கியைப் பொருத்தி அதனைக் கையூடாக நீண்டு செல்லும் இழையொன்றினால் தம் இடுப்பைப் பட்டியிலுள்ள தொடர்புச் சாதனத்தோடு இணைத்திருப்பர். மணிக்கட்டோடு மெல்ல முணுமுணுத்தால் போதும்...சக உளவாளிகளுக்கோ, அல்லது எங்காவது ஒரு லிமுசியில், ஓர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு மையத்துக்கோ செய்தி சென்று விடும்.

மிகத் தீவிரமான மௌனத்தைக் கடைப்பிடித்த போதிலும், இவ்விரகசிய சேவைப் பிரிவினர் அனைவருமே தம்மை ஒரு பெருமைக்குரிய, மிகச் சிறந்த அமைப்பின் அங்கமாகக் கருதுகின்றனர்.

ஏபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்ட 1865 இல் தான் "அமெரிக்க சேவைப் பிரிவு" தாபிக்கப்பட்டது. உள்நாட்டுப் போரின் முடிவில், நாட்டுக்குள் பெருகி வந்த கறுப்புப் பணமோசடிக் காரர்களைக் கட்டுப்படுத்துவது இதன் நோக்கமாயிருந்தது. இவ்வமைப்பு அமெரிக்க நிறைசேரியின் ஒரே பிரிவாய் இயங்கியதோடு, நிதியியற் குற்றங்களை விசாரிக்கும் பொறுப்பினையும் கொண்டிருந்தது.

"ஜேம்ஸ் காவீல்ட்" 1881 இல் கொல்லப்பட்ட பின், 1901 இல், நியூயோர்க்கின் பல்வலோ நகரில் ஒரு இளச்சிக் கும்பலின் தலைவனால் ஜனாதிபதி "வில்லியம் மக்கின்லி" கொலை செய்யப்பட்டதானது 36 வருடங்களுக்குள் நிகழ்ந்த மூன்றாவது அதிபர் படு கொலையாய் முடிந்

New Doc 2020-04-06 14.46.20_page-0050.jpg

தது. கிளர்ந்தெழுந்த மக்கள் எதிர்கால அதிபர்களுக்கும் இதே கதி நேராமல் பாதுகாக்கவேண்டும் என்று வற்புறுத்தியபோது அப் பணி இரகசிய சேவைப் பிரிவிடம் பாரம் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த அரசுத் தலைவர்கள் அனைவரும் தப்பிக் கொண்டனர். 1963 இன் அந்த நவம்பர் நாள்வரை ரெக்ஸஸ் மாநிலத்தின் ''டலஸ்'' நகருக்கூடாக அதிபர் ஜோன் கெனடியின் மோட்டார் வாகன அணி சென்று கொண்டிருக்கையில் மீண்டும் அதே வேட்டுச் சத்தம்: அப்படு கொலையை விசாரித்த ''வாரன் குழு'' அரசுத் தலைவர் பாதுகாப்புக்கான, இரகசிய சேவையின் ஆளெண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்தது.

1968 இற்கும், 92 இற்குமிடைப்பட்ட காலத்தில், இப்பிரிவுக்கான செலவீடு 17.6 மில்லியனிலிருந்து 471 மில்லியன் டொலராக, அபரிமிதமாக அதிகரித்தது. சீரற்ற, இப்பாரிய அதிகரிப்பு, எப்பொழுதும் நீண்டு கொண்டே போகும். ''பாதுகாக்கப்பட வேண்டியவர்களின்'' பட்டியலைக்காட்டி ஒரு பகுதிவிளக்கம் அளிக்கப்படுகிறது. அதிபர், உபஅதிபர், மற்றும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள்; முன்னாள் தலைவர்கள் இந்த வகையில் நால்வர் இப்போது அமைப்பின் பாதுகாப்பின் கீழ் உள்ளனர். (ரிக்சட் நிக்ஸன் சொந்தத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்துக் கொள்கிறார்.) அவர்தம் மனைவியர், இவர்களில் லின்டன் ஜோன்சனின் விதவை, கெடி பேட் மற்றும் பழைய அதிபர்களின் '16' வயதை அடையாத குழந்தைகள், விருந்தாளித் தலைவர்களும் மனைவியரும், ஏனைய மதிப்பார்ந்த வெளிநாட்டினர், விசேட காரணங்களின் நிமித்தம் வெளிநாடு செல்லும் அமெரிக்காவின் பிரதிநிதிகள் என்போரை இப்பட்டியல் சுட்டி நிற்கிறது.

1968 இல் தேர்தல் பிரச்சாரத்தின் போது, லொஸ் ஏஞ்சல்ஸில் நிகழ்ந்த ''றொபேட் கெனடியின்'' படுகொலையைத் தொடர்ந்து, ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி பதவிகளுக்கான வேட்பாளர்கள், அவர்களின் மனைவியர் கூட இப் பட்டியலில் சேர்த்துச் கொள்ளப் பட்டுள்ளனர்.

வியந்தகு மனிதர்கள்: இரகசிய சேவையின் ஒற்றர்கள் தமது பாதுகாப்புத் தந்திரோபாயங்களை ஒருபோதும் வெளியாருடன் பகிர்ந்து கொள்வதில்லை; ஆனால் 1992 ஜூன் இல், அவசரகால நிலைமை ஒன்றின் போது, தம் பதில் நடவடிக்கை எவ்வாறமையும் என்பது பற்றிய, அரிதான ஒரு விளக்க நிகழ்வை மக்கள் முன் அரங்கேற்றினார்கள்.

அதிபர் ஜோர்ஜ் புஷ்சும், அவரது உதவியாளர்களும், பனாமாவின் ஜனாதிபதி கிலெமோ என்டாறா, பாரியார் சிதம் பனாமா நகரில் ஊர்வலமாய் வந்த போது, அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியாளரைத் தூரவைக்கும் நோக்கில் உள்ளூர்க்காவற்றுறை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததோடு, வானை நோக்கிச் சுட்டது.

சிறிய கொள்கலன்களிலின்றும் கண்ணீர்ப்புகை வெளிப்பட்டமறு கணமே, தளத்தில் புஷ்சுடன் நின்றிருந்த உளவுப்பிரிவினர் அவரையும், துணைவியையும் சூழ்ந்து கொண்டனர். அவர்களது கைகளில், எங்கிருந்து வந்தன என்று வியக்கும் வண்ணம் வேட்டைத் துப்பாக்கிகள் மற்றும் யூசி—இயந்திரத் துப்பாக்கிகள் உள்ளிட்ட பல நவீன ஆயுதங்களோடு அதே கணத்தில், முன்னொரு போதும் மக்களிடையே காணப்படாத எதிர்த்தாக்குதற் குழு ஒன்று பிரமுகர்களின் வரிசைக்குப் பின் புறமிருந்து எழுந்தது. துலக்கமான நீலச் சீருடையும், அதிரடிப்படைக்குரிய கறுப்புக் காலணிகளும், வாயுத்தடுப்பு முகமூடிகளுமாய்க் காணப்பட்ட அவர்களின் கைகளில் ''எம்—16'' துப்பாக்கிகள்.

அவர்களின் வரிசையிலிருந்து, புஷ், மனைவி பாப்ரா ஆகியோர் பாதுகாப்பாக அப்பால் அழைத்துச் செல்லப்பட்டபோது, இருவருக்கும் குண்டு துளைக்காத மழைக் கால மேலங்கிகள் வழங்கப்பட்டன. ஏறத்தாள உடனடியாகவே, வாகன அணியொன்று, எச்சரிக்கை ஒலி எழுப்பியபடி அச்சதுக்கத்தை விட்டு, சிறிப்பறந்தது. அந்த அணியிலே அதிபருக்குரியதும் ஒட்டுதின் பகுதி பிரத்தியேகமாகப் பாதுகாக்கப்பட்டதுமான ஒரு வாகனமும், வெள்ளை மாளிகை அதிகாரிகள் மற்றும் இரகசிய சேவையினரது வாகனங்களும் அடங்கியிருந்தன. சொல்லப் போனால் அவ்வாகனங்களில் அதிபரையும், மனைவியையும் தவிர, அனைவருமே இருந்தனர்.

பக்கத்துத் தெருவொன்றில் நிறுத்தப்பட்டிருந்த, சிறப்பான, பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய, உளவாளிகளால் சூழப்பட்ட ஒரு வாகனத்தில் புஷ்சும் மனைவியும் அமர்ந்திருக்க, வேறு சில கையாட்கள் அந்தப் பகுதி அவர்கள் புறப்பட்டுச் செல்வதற்கு உகந்தமானதாவென்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

பாதுகாத்துச் செல்லும் ஊர்தி அணிகள், தப்பும் வழிகள், அவசரகால அப்புறப்படுத்தல்கள் .. இவையெல்லாம் இரகசிய சேவையின் முன்னேற்பாட்டுக் குழுக்களால் வகுக்கப்படும் விரிவான திட்டத்தின் பகுதிகள். இக் குழுவினர் அதிபரின் எல்லா உத்தியோகபூர்வ பயணங்களுக்கும் முன்பதாக, பிரயாண மார்க்கம்பற்றிய விபரங்களை பரிசீலித்துத் தேவைப்படும் ஆள், மற்றும் ஆயுத வலுவைத் தீர்மானிக்கின்றனர். ஜனாதிபதி வந்து சேர்வதற்குச் சற்று முன்பாகக் குறிப்பிட்ட பகுதி முழுவதும் மோப்ப நாய்கள், இலத்திரனியற் சாதனங்கள் கொண்டு பரிசோதிக்கப்பட்ட பின் தடைசெய்யப் படுகிறது. அதன் பின் இரகசிய சேவை

New Doc 2020-04-06 14.46.20_page-0051.jpg

யினரின் அனுமதிச் சிட்டையின்றி ஒருவரும் அவ் வலயத்துக்குள் வரவோ அல்லது அதிபர் பத்திரமாய்ப் புறப்பட்டுச் செல்லும்வரை அவ்விடத்தை விட்டு வெளியேறவோ முடியாது.

எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டியவரைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வலயத்தைப் பராமரிக்க இரகசிய சேவை எத்தனிக்கிறது. அதிபருக்கு மிகவும் அணித்தாக, இத்தகையதொரு அரண், அவரது பாதுகாப்பிற்கென நிரந்தரமாய் நியமிக்கப்பட்ட பிரிவினரால் உருவாக்கப்படுகிறது. இவர்கள் அதிபரோடு ஒரே விமானத்தில் பறப்பவர்கள். கூட்டங்களில் அவருக்கு மிக அருகில் நிற்பவர்கள், அவரது சிறப்பு வாகனம் புறப்படும் போதெல்லாம், விசேடமாய் வடிவமைக்கப்பட்ட வண்டியொன்றில் நெருக்கமாய்ப் பின் தொடர்பவர்கள். எதிர்த்தாக்குதல் குழுக்கள், கூட்டத்தினரிடையே கலந்து காணப்படும் அதிகாரிகள், உயர்ந்த சாளரங்கள், கூரைகளில் நிற்கும் சிருடை தரித்த தொலை தூரத்திற்குக் குறி பார்த்துச் சுடும் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இவர்களெல்லோரும் மேலதிகப் பாதுகாப்பு வட்டங்களைத் தோற்றுவிப்பவர்கள்.

ஆபத்தின் பாதையில்: அதிபரைக் காக்க வேறு வழியில்லாத பட்சத்தில், தன் உயிரை அர்ப்பணித்தாகிலும் முயல வேண்டும் என்று தன்னிடம் எதிர்பார்க்கப்படுவதை எல்லா ஒற்றனும் உணர்ந்திருக்கிறான். அவர்களது நிறுவனத்தின் மொழியில் இது, ''ஆபத்தின் பாதையில் நிற்றல்'' என்றழைக்கப்படுகிறது. மணிக்கணக்கான நீண்ட, அலுப்பு மிகுந்த பயணங்கள், பாதுகாப்புக் கடமைகள் காரணமாய் அதிபருக்கான நிரந்தரக் காவற்பணியில் ஐந்து வருடங்களுக்கு மேல் தாக்குப் பிடிக்கக் கூடியவர்கள் வெகு சிலரே. அதன் பின்பு, இவர்கள் பொதுவாக மோசடிகள் மற்றும் பிற குற்றங்களை விசாரிக்கும் பிறிதொரு பிரிவுக்கு இடம் மாற்றப்படுகிறார்கள். ஆனால் எந்த நேரத்திலும் இவர்கள் மீளவும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படலாம். அப்போது இந்த மனிதர்கள் சனக் கூட்டத்தில் கலந்து நின்றபடி வித்தியாசமான வடிவத்திலான பொதிகளோடு நிற்கும் கிலேசமான முகங்களைத் தேடிக்கொண்டிருப்பர்.

கூட்டத்தினரிடையே அசாதாரணமான நடத்தைகளைக் கண்டறிய உளவாளிகள் பயிற்றப்பட்டிருந்தபோதிலும், அவை ஓர் அச்சுறுத்தலாக உருவெடுக்குமா என்பதை அவர்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இது ஒரு பெருஞ்சிக்கலான பணி: காரணம் சனநெருசலான தெருக்கள் எப்பொழுதுமே எதிர்வு கூறமுடியாத வன்முறைகளைக் கொண்டிருக்கலாம்.

'பாதுகாக்கப்படவேண்டிய ஒருவருக்கு' மிரட்டல் கடிதம் எழுதும் ஒவ்வொருவரும் பிடிபடும் பட்சத்தில், இரகசிய சேவையினரால் பேட்டி காணப்படுகின்றனர். அநாமதேயக் கடிதங்களை எழுதுவோர் அநேகமாகக் கையெழுத்தின் தன்மைகளைப் பரிசீலிக்கும் விசேட கணணி மூலம் இனம் காணப்படுகின்றனர். ஆயினும் கடிதக்காரர் ஆபத்தானவரா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட உளவாளிக்குரியது.

1975 இல் அதிபர் ''ஜெரால்ட் ஃபோர்ட்'' அவர்களைக் கொல்லப்போவதாய் மிரட்டற் கடிதமெழுதிய ''சாரா ஜேன் மூறி'' யினை உளவாளிகள் பேட்டி கண்டு, அவர் ஆபத்தானவரென முடிவு செய்தனர். மறுதினம், ''சான் பிரான்சிஸ்கோ'' வில் ''மூறி'' அதிபரைச் சுட எத்தனித்தார். அதிஷ்டவசமாக கூட்டத்திலிருந்த ஒருவர் அவரது துப்பாக்கியைப் பறித்து விட்டார்; இரகசிய சேவையின் 'மிகச் சிறந்த வேளை' அதுவாகத் தானிருக்கும்.

1981 இல், ''ஜோன் ஹிங்கிலே'' அதிபர் ''றொனால்ட் றீகனை நோக்கி ஆறு குண்டுகளைத் தீர்த்தபோது நிறுவனம், பழைய குற்றத்துக்கு நல்ல முறையில் பரிகாரம் தேடிக் கொண்டது. சிறப்புக் கையாள் ''ரிம் மக்கார்த்தி'' கவசமாக ஜனாதிபதிக்கு முன் பாய்ந்து தன் அடிவயிற்றில் ஒரு குண்டை வாங்கிக் கொண்டார்... ஒரு சன்னம் நிசைகெட்டுச் செல்ல, பிறிதொன்று செய்திப் பிரிவுச் செயலர் ''ஜேம்ஸ் பிராடி'' யையும், வேறொன்று காவற்றுறையைச் சேர்ந்த ஒருவரையும் காயப்படுத்தியது. இரண்டு தோட்டாக்கள் றீகனின் விசேட பாதுகாப்புடன் கூடிய வாகனத்தில் பட்டுத் தெறித்தன; இவ்வாறு தெறித்த குண்டுகளில் ஒன்று தான், றீகனை உளவாளி ஒருவரால் அவர் வாகனத்துள் தள்ளப்படும்போது தாக்கியது.

''ஹிங்கிலே'' துப்பாக்கிச் சூட்டுக்குப் பிற்பாடு எட்டு வருடங்களாக, 1989 வரை, உளவாளிகள் தம் துப்பாக்கிகளை வெளியே எடுப்பதைக் காணமுடியவில்லை. 89 இல் இத்தாலியில் ஆர்ப்பாட்டக்காரர், புஷ் அவர்களின் வாகனத்தை மறிக்க முயலும் வரை இந்நிலை தொடர்ந்தது. இப்படி நீண்ட இடைவெளிக்கொரு தடவை, தமது நிறமையைக் காட்ட வேண்டி ஏற்படுவது நிறுவனத்தின் வினைத்திறன் மிக்க சேவைக்குச் சான்று பகர்வதாய் ''இரகசிய சேவை'' மார்தட்டிக் கொள்கிறது.

இரகசிய சேவையின் பயிற்சி மையம், ''மேரிலான்டின்'' நாட்டுப் புறத்தில் ''பெல்ற்ஸ்விலி'' என்ற சிறிய பட்டினத்தையொட்டி, 500 ஏக்கர் பரப்பில், மரப்பலகையால் எல்லைப் படுத்தப்பட்டு, உயர்ந்த கம்பி வேலியால் சூழப் பட்டுக் காணப்படுகிறது. இங்குதான் ஆண்களும், பெண்களும் சிறப்பான உளவாளிகளாக உருவாவதற்கான தமது பயிற்சியின் ஆரம்பத்தை அரங்கேற்றுவர்; ஒரு வருடம் நீடிக்கும் இப்பயிற்சியில் போதை மருந்துப் பரிசோதனைகள், பொய்யினைத் துப்புத் துலக்கும் குறுக்கு விசாரணைகள் உள்ளடங்கும்.

New Doc 2020-04-06 14.46.20_page-0052.jpg

உண்மையாகவே விசேடமானவர்கள்

புதிதாகச் சேர்க்கப்படுவோர் நிறுவனத்தின் குறிக்கப்பட்ட ஆயுதங்களான 9 எம். எம். தானியங்கிக் கைத்துப்பாக்கிகள், றெமிங்ரன் மற்றும் யூசி–துப்பாக்கிகளால் உள்ளரங்கம், வெளிப்புறம் இரண்டிலுமே இலக்குகளைத் தாக்கப் பழகுகிறார்கள். நெரிசலான ஒரு தெருவில், இலக்குகள் கதவு வழியாகக் கூடத் தப்பிக்கவல்ல ஒரு சூழ்நிலையில் சுடுவதா, இல்லையா என்பதை உளவாளிகள் கணப் பொழுதிற்குள் தீர்மானிக்கவேண்டியிருக்கும். சிறுகற்கள் பதித்து அதன் மேல் தார் பூசி வேகத்தை பரிசோதிக்கும் முகமாக கறுப்பு இறப்பரினால் குறியிடப்பட்ட பாரிய பரப்பொன்றின் மீது 17, 18 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த நான்கு கதவுகள் கொண்ட விநோத வாகனங்களை மாணவர்கள் அதிவிரைவாகச் செலுத்துகிறார்கள். இதிலிருந்து அவர்களது பயிற்சி ஜனாதிபதி பயன்படுத்தும் பெரிய கவசப் பாதுகாப்புடன் கூடிய ''கடிலாக்'' மற்றும் ''லிங்கன்'' வகை வாகனங்களைக் கையாள்வது வரை முன்னேறும். ஆட்சித் தலைவரின் பழைய வாகனங்கள் சில ''பெல்றீஸ்விலி''க்கு அனுப்பப்பட்டு அவற்றை மிகக் குறுகிய இடைவெளியில் மிகக்கூடிய வேகத்துடன் எவ்வாறு திருப்புவது என்பது பற்றி பயிற்றப்படுகிறது.

பெல்ற்ஸ்விலி அதிநவீன ஆயுதக் கிடங்கொன்றையும் கொண்டிருக்கிறது; புதிதாகத் தயாரிக்கப்படும் சுடும் ஆயுதங்கள் அனைத்தும் அங்கே பரிசோதிக்கப்படுவது மட்டும் அன்றி விசேட கருமங்களுக்கான பிரத்தியேகமான ஆயுதங்கள் வடிவமைக்கவும் படுகின்றன.

எந்த வகையிலான விசேட நடவடிக்கைகள்? . . . .

''வெறும் விசேடமானவை'' என்று குழப்பம் தருமொரு புன்னகையோடு பதிலளிக்கிறார் பயிற்சிக்குப் பொறுப்பாயிருக்கும் சிறப்பு உறுப்பினரான ''மிக்கி மில்லர்''.

இரகசிய சேவை, அதன் சாதனைகள், மதிப்பு வசதிகள், மற்றும் உளவாளிகளின் தரம் குறித்து பெருமைப்படுகிறது; ஆயினும் தன்னை நிலைத்திருக்க வைப்பதான விடயத்தில் தொடர்ந்தும் அது தீவிரமான மௌனத்தை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ''பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி எம்மால் பேசமுடியாது; பேசப் போவதும் இல்லை'' என்கிறார் வோஷிங்ரன் தலைமை அகத்திலுள்ள பொதுமக்கள் விவகார அலுவலகத்தைச் சேர்ந்த விஷேட அதிகாரி 'பில்போர்ந்' .... ''நாம் ஒருபோதும் அப்படிச் செய்வதில்லை, செய்யப் போவது மில்லை'' என்கிறார்.

''கிளின்ற் ஈஸ்ற்வுட்'' பிரதான பாத்திரமேற்கும் 'திக்கோட்டியில்' என்ற திரைப்படம் மூலம் இந்நிறுவனம் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப் படுகிறது. அமெரிக்காவில் கடந்த மாதம் வெளியிடப்பட்ட இத்திரைப்படம் எதிர்வரும் இலையுதிர்காலத்தில் தென்கொரியா, ஜப்பான், மற்றும் தாய்லாந்திலும் திரையிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. கொலையாளியாக இருக்கக்கூடிய ஒருவரைப் பின்தொடரும் இரகசிய சேவையின் உளவாளியாய் ''ஈஸ்ற்வுட்'' நடிக்கிறார்.

இரு ஒய்வு பெற்ற உளவாளிகள் இப்படத் தயாரிப்பு நிறுவனத்தால் ஆலோசகர்களாய் அமர்த்தப்பட்டுள்ளனர், தனது தந்திரோபாயங்கள் அம்பலப்படுவதையிட்டு •இத் தாபனம் தன் கவலையை வெளிப் படுத்தும் அதே நேரம் உளவாளிகளோ தமது பணிக்குக் கிடைத்த இக்கவர்ச்சிகரமான அங்கீகாரத்தையிட்டு அந்தரங்கமாய் அகமகிழ்வர் என்பதில் ஐயமில்லை.

ஆக மொத்தத்தில் உளவாளியாகத் தோன்றும் ''கிளின்ற் ஈஸ்ற்வுட்'' வழக்கம் போல் தனக்குரிய குற்றவாளியைப் பிடித்து விடுகிறார் . . . . . அதிபர் பிழைத்துக் கொள்கிறார். இதைவிட மேலாக இரகசிய சேவை எதனைக் கேட்க முடியும்?

—ரசல் மில்லர்—

றீடேர்ஸ் டைஜஸ்ட், ஒகஸ்ட், 1993

பெரு நாட்டின் சர்வஜன வாக்கெடுப்பு

பெரு நாட்டின் புதிய அரசமைப்புச் சட்டம் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு எதிர்வரும் ஒக்ரோபர் 31 ஆம் திகதி நடைபெறுமென ஜனாதிபதி அல்பர்ரோ பியுஜிமோரி அறிவித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு பியுஜிமோரி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். தற்காலிகமாக நீதிமன்றங்களை மூடினார். இடதுசாரிக் கெரில்லாக்களுக் கெதிராகத் தனது கையைப் பலப்படுத்த அவர் முடிவெடுத்துள்ளார்.

பெருவில் 80 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் 226 பக்கங்களைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அறிக்கையைக் கடந்த வாரம் தயாரித்து முடித்தது.

60 தினங்களுக்குள் இந்தப் புதிய அரசமைப்புச் சட்டம் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும். அதற்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும். அரசமைப்புச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டால் 1995 ஆம் ஆண்டில் பியுஜிமோரி மீண்டும் தெரிவாக வழி பிறக்கும்.

இதே வேளையில் கெரில்லாக் குழுக்களிற்கு மரண தண்டனை அளிக்கவும் வாய்ப்பு உருவாகும். காங்கிரஸில் உள்ள மிகப் பெரிய எதிர்க்கட்சியான கிறிஸ்தவக் கட்சி அரசமைப்புச் சட்ட அறிக்கையை நிராகரிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

New Doc 2020-04-06 14.46.20_page-0053.jpg

நெஞ்சுரங் கொண்டவருக்கு ஒரு நட்ட நடுநிசி

நிக்கரகுவா: தரங்குன்றிய கிளர்ச்சியாளர் திரும்பவும் கொண்டு வந்துள்ள போர்



விழிந்துக் கொண்ட பிசாசுகள்; எஸ்ரெலியில் இடம்பெற்ற சண்டைகள், கடந்த 3 ஆண்டுகளில் மிகவும் மோசமானவை.

மரயா டீ லொஸ் அஞ்சலெஸ் வடக்கு நிக்கரக்குவாவின் எஸ்தேலி நகரப் பொலா ளோஸ் மருத்துவ மனையில் ஒரு தாதி கரோலினா கொன்சாலெஸ் என்ற எட்டு வயதுப் புற்றுநோய்ச் சிறுமிக்கு வைத்திய பராமரிப்புகள் மேற்கொண்டிருந்த சமயம் அறையில் அவர்களைத் துப்பாக்கி ரவைகள் துளைத்து வருவதைக் கண்டார். இருபத்துநான்கு ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியாளர்கள் தம்மைத் துரத்தி வந்த அரசபடையினரிடமிருந்து தப்பி வந்து நோயாளிகளை மனிதக் கவசமாகப் பாவித்து தம்மைப் பிடிக்க வந்தவர்களோடு துப்பாக்கிச் சமர் புரிந்துகொண்டிருந்தனர். கரோலினாவின் முகத்தின்முன்னால் பிராணவாயு முகமூடியொன்றைப் பிடித்துக்கொண்டிருந்த மரயா அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூடும் அதிலிருந்து கிளம்பும் தீப்பொறிகளும் 'பிராண வாயுவை வெடிக்கச் செய்வதால் நோயாளி தங்கியுள்ள அறையே வெடித்துச் சிதறும் என அஞ்சிமூச்சு விட உதவும் பிராணவாயுக் கருவியை நிறுத்திவிட்டார். சில நிமிடங்களிலேயே கரோலினா உயிர் நீத்தார். ''இந்த நாட்டின் விஷச் சுழற்சிச் செயல்களுக்கு நான் பழக்கப்பட்டவள் என்று எண்ணியிருந்தேன். அவ்வாறான நெஞ்சுரத்தோடு தொடர்ந்தும் வாழ்வது கடினம்'' என்று கண்ணீர் மல்கத் தெரிவித்தார் மரயா.

நிக்கரகுவாவில் நிலவும் கஷ்டங்கள், வன்முறைகள், நம்பிக்கையின்மை என்பனவற்றோடு இந்த நாட்களில் வாழ்வதற்கு வழமைக்குப் புறம்பான துணிச்சல் வேண்டும். சென்ற வாரத்தில் எஸ்ரேலியில் இடம்பெற்ற மிகப்பெரிய பயங்கரமான போர் 10 வருடகால உள்நாட்டுப் போரின் பிசாசுகளை வெளிக் கொணர்ந்துள்ளது. அநேக திருப்தியிழந்த முன்னைநாள் சண்டிலிஸ்ராப் படைவீரர்களைக் கொண்ட 125 கிளர்ச்சியாளர்கள் மனகுவாவுக்கு வடக்கே 60 மைல் தொலைவிலுள்ள நகரத்துக்குள் புகுந்து வங்கிகளைக் கொள்ளையடித்துப் பொலிஸ் நிலையங்களைத் தாக்கத் தொடங்கிய போதுதான் முற்றுகை ஆரம்பமானது. சண்டினிஸ்ராக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நிக்கரகுவாவின் இராணுவத் தலைவர் ஹம்பெட்டோ ஒட்டகா சிறிது நேரமே முகம் கொடுத்துச் செலவிட்டார். 800 அரசபடையினர் இரக்கமற்ற முறையில் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

உந்து சக்திச் சாதனம் பொருத்தப்பட்ட எறிகுண்டொன்று கார்மென் றொட்றிகுவஸ் என்ற பருவப் பெண்ணொருவரின் வீட்டுக்குள் வெடித்த போது அவர் உறங்கிக் கொண்டிருந்தார். குண்டு வெடித்த பின் அதிர்வால் பாதிப்புற்ற போதும் அவர் இறக்கவில்லை. உடனடியாகவே மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். முன்னாள் தாரண மற்ற சண்டினிஸ்ராவுக்கெதிரான சண்டினிஸ்ரா போராட்டத்திற்கு வெளியே பலருக்குக் குழப்பம் ஏற்பட்டது. ''எவர் எந்தப்பக்கம் என்பது எதுவும் தெரியவில்லை'' என்றார் மருத்துவமனையின் மருந்து கலப்பவரான றபாயல் குவாரா என்பவர். ''எல்லோரும் ஒரே மாதிரியான சீருடையையே அணிந்துள்ளனர்'' என்று அவர் சொல்கிறார். இந்தத் தாக்குதலில் 40 பேர் வரையில் கொல்லப் பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவருமே கிளர்ச்சியாளர்கள் தான் என்றும் அரசு தெரிவிக்கிறது. அநேகமாகச் சாதாரண குடிமக்களான 100 பேர்வரை காயப் பட்டுள்ளனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் நடந்த கோரச் சண்டை இதுவேயாகும்.

வெயலட்டா சமோரா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தேர்தலுக்கு முந்திய 1990 ஆம் ஆண்டின் சமாதான உடன்படிக்கையொன்று இருந்தும் கூட அரசபடையினருக்கும் கிளர்ச்சிக் குழுவினருக்குமிடையிலான மோதல்கள் அன்றாட நிகழ்வுகளாக இருந்து வருகின்றன. இந்த ஆண்டின் முன்னாரம்பப் பகுதியில் மட்டும்

New Doc 2020-04-06 14.46.20_page-0054.jpg

85 சிறிய அளவிலான சண்டைகளில் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கிளர்ச்சியாளர்களில் அநேகர் படைக்குத் திரட்டப்படாத கொன்ராக்களாவர். ஏனையவர்கள் எஸ்ரேயிலிலுள்ளவர்களைப் போல இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள். 1980 ஆம் ஆண்டிலிருந்து 130,000 மாக இருந்த நிக்கரகுவாப் படையினரின் எண்ணிக்கை படிப்படியாக 15,000 க்குக் குறைக்கப்பட்டுள்ளது. மனகுவா உறுதியளித்தவாறு நிலம், கருவிகள், பணம் என்பவற்றை வழங்கவில்லை என்ற கோபம் கிளர்ச்சியாளருக்கு. கிளர்ச்சியாளர்கள் துணிச்சற்காரர்கள் மட்டுமே என்பது ஒட்டேகாவின் கணிப்பு. ''தாங்களே ஏழைகளின் ரொபின்கூட்கள் என்று இந்தக் குழுவினர் உணர்ச்சிவசப்பட்டு நினைக்கிறார்கள். மக்களை மூடராக்குவதை விட்டொழிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது'' என்று அவர் ஏளனம் செய்கிறார்.

ஒட்டேகாவும் செல்வாக்குமிக்க வரல்ல. தேர்தலுக்குப் பின் சமோரா அவரை இராணுவத் தலைவராக வைத்துக் கொண்டமைக்கு ஒத்துப்போக வேண்டும் என்பதே காரணமாகும். பழைமைவாதிகள் இதனை விரும்பவில்லை. அவர்கள் இவ்விருவருக்கும் எதிராகவே குரல் எழுப்புகிறார்கள்.

சண்டனிஸ்ராச் சித்தாந்தத்திற்காக ஒட்டேகாவையும் அவரை அதிகாரத்தில்வைத்திருப்பதற்காகச் சமோராவையும் அவர்கள் எதிர்க்கிறார்கள். பொதுவாக, இராணுவம் மனித உரிமைகள் விடயத்தில் கேள்விக்குரியதாக நடந்து கொள்வதாகவும், அதிகார துஷ்பிரயோகத்திற் கெதிரான உத்தியோக பூர்வ விசாரணைகளை ஒட்டேகா தடுத்து வருவதாகவும் விமர்சனமும் குற்றச்சாட்டுகளும் இருந்து வருகின்றன. கிளர்ச்சிக்காரர்களுக்கெதிரான சென்றவாரத்தைய எதிர்த்தாக்குதல்கள் மிக அதிகமானதும் வேண்டுமென்றே மிருகத்தனமாக இருந்ததாகவும் சிலர் நம்புகிறார்கள். முன்னை நாள் கொன்ரா எழுச்சிகள் பலவற்றை சண்டனிஸ்ரா படையினர் நசுக்கியுள்ளார்கள். தனது அணியிலுள்ள முதுபெரும் கிளர்ச்சியாளரை அது துடைத்தெறிந்து விடும் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். தனது தளகர்த்தர் சமோராவின் கட்டளைக்கமையவே தான் நடந்து கொள்வதாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள விமர்சகர்களுக்கு உணர்த்தும் நோக்கத்தோடு ஒட்டேகா இயங்குவதாகவே பார்வையாளர்கள் கூறுகிறார்கள். ஒட்டேகாவின் உண்மையான நோக்கம் எதுவும் புரிவதாயில்லை. ''சண்டனிஸ்ரா இராணுவத்தைத் தொழில் ரீதியான தாபனமாக மாற்றமுடியுமா எனப்பார்ப்பதற்கு எஸ்ரேலி ஒட்டேகாவுக்கு ஒரு சோதனைக் களமாக அமைந்த தெனலாம்'' என்றார் இலத்தீன் இராஜதந்திரி. ''அவர் அதில் சித்தியடைந்து விட்டார்.''

சேவையில்லாது போனமை

முன்னை நாள் சண்டனிஸ்ரா படையாளி அதிகாரியான விக்ரர் கலிதாசின் தலைமையிலான எஸ்ரேலி கிளர்ச்சியாளர்கள் தாம் சமோராவிடமிருந்து பொளாதாரச் சலுகைகள் பெறுவதற்காகவே தாக்குதல் நடத்தியதாகக் கூறுகிறார்கள். ''மக்களைத் துன்பத்திலே வாழவிட்டிருக்கிறது இந்த அரசு'' என்பது றொபேட்டோ என்ற 40 வயதுக் கிளர்ச்சித் தலைவரின் கருத்தாகும். ''எங்களிற் சிலருடைய மனைவிமார் விபச்சாரம் செய்து எம்மைக் காப்பாற்றுகிறார்கள்'' என்றார் அவர். சமோராவில் நிதிச் சிக்கன நடவடிக்கைகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறது ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் 60 வீதம் வரலாறவு உயர்ந்துள்ளது. சமூகநலச் செலவினங்கள் மிகவும் குறைவு. எல்லாவற்றிலும் கேவலம் அவருடைய கூட்டரசின் பங்காளர்களிடையேயுள்ள வேறுபாடுகள். சென்ற வாரம் மனகுவாவில் நடந்த ஒரு மாபெரும் சண்டனிஸ்ரா பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி டானியல் ஒட்டேகா (ஹம்பெட்டோவின் சகோதரர்) புதிய பொருளாதாரக் கொள்கைகள் இடம் பெறாது போனால் அரசு தனது ஆறுவருட ஆட்சியைப் பூர்த்தி செய்ய முடியாது போகும் என்று எச்சரித்தார்.

புதிய தேர்தல்கள் 1991 இல் நடைபெறுவதாயுள்ளது. அரசு புதியவேலை வாய்ப்புக்களை உருவாக்காது போனால் தங்களுக்குப் பின்னால் இருப்பதாக நிக்கரகுவா நினைத்திருக்கும் மிகப் பயங்கரச் சண்டைகள் காரணமாக அது துன்புற நேரிடும்.

எஸ்ரெலியில்
றிம பஜெட்

நியூஸ்வீக், ஒகஸ்ட் 2, 1993.

New Doc 2020-04-06 14.46.20_page-0055.jpg

ஆபிரிக்கா

ஷாரியா அமுலாக்கத்தின் விலை

தென் சூடானிய பட்டினிப் பிரதேசத்தின் இதய ஸ்தானத்தில் உள்ள அயோத் என்ற கிராமத்தில் மனித மண்டையோடுகள் பரவிக் கிடக்கின்றன. நாளுக்கு இரு முறை ஐ. நா. வழி நடத்தும் விமானங்கள் போஞ்சி, இறுங்கு கலந்த பாரிய உணவுப் பொதிகளைப் போடுகின்றன. ஏப்ரலில் சூடானிய மக்கள் விடுதலைப் படை (சூ. ம. வி. ப.) அயோத்தைத் தாக்கிச் சகல குடிசைகளையும் எரித்து 22,000 மக்களை வெளியேற்றி, ஓட முடியாதவர்களைக் கசாப்புச் செய்தனர். ஐ. நா. உதவிச் சேவையாளரும், தற்காலிகமாக ஒட்டம் பிடித்தமையால், அப் பிரதேசத்தில் ஒரு மாதம் உணவு பெற முடியவில்லை. இன்று ஒர் டசின் குழந்தைகள் நிர்வாணமாக, இருண்ட ஊத்தை வகுப்பறை நிலத்தில் கிடக்கின்றனர். எலும்புக் கூடுகள் போல் தம் கண்களில் மொய்க்கும் ஈக்களைத் துரத்தவும் கையில் வலு வற்றுக் கிடக்கின்றனர். ''உணவு கொடுக்கும் வேளையில் தாய்மாரைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. இல்லாவிட்டால், அவர்கள் தம் சொந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாலைக் களவெடுக்கின்றனர்'' என்கிறார் பிரெஞ்சுப் புனர்வாழ்வுச் சேவை நிறுவனமான ''உலகுக்கு மருந்து''ப் பணியில் ஈடுபட்ட வெரோனீக் பஸ்லா. ''இன்று 5—10 ஆட்கள் அசுதி முகாமில் இறப்பர்'' என்று எதிர்பார்க்கிறார்.


தீவிரவாத முஸ்லிம்களின் கண்ணில் சூடான் மாபெரும் வெற்றி பெற்ற நாடு ஷாரியா எனப்படும். இஸ்லாமியச் சட்டம் நாட்டின் அரசில் இடம்பெற்ற பின் தலைநகரான கார்ட்டூமில் குற்றம் வெகுவாகக் குறைந்துள்ளது. ஆனால் அதற்குக் கொடுத்துள்ள விலை மிக அதிகம். பத்தாண்டுகளாகக் காட்டும் அரசின் இஸ்லாமிய படைகளுடன் கிறிஸ்தவரும், பழங்குடி மதத்தவருமான புரட்சியாளர் (சூ.ம.வி.ப) செய்யும் போர், முடிவற்ற உள்நாட்டுப் பூசலையும், கற்பனைக்கு அப்பாலான கொடுந் துன்பத்தையும் தந்து 6 இலட்சம் மக்களை கொன்றுள்ளது. 35 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர் மேலும் 5 லட்சம் பேர் பட்டினியால் வாடுகின்றனர். 1989 இல் லெப். ஜெனரல் ஒமார் ஹஸான் அல் பஷீர் அதிகாரத்தைக் கைப்பற்றிச் சூடானை ஓர் இஸ்லாமிய அடிப்படைவாத அரசாக மாற்றியபின் போர் மேலும் தீவிரமடைந்துள்ளது. சூ. ம. வி. படையை வென்று தென் பகுதியிலும் ஷாரியா சட்டத்தை அமுல் செய்யக் கங்கணம் கட்டி நிற்கும் அல் பஷீர் சென்ற ஆண்டு புரட்சியாளர் மீது தீவிர தாக்குதல்களை நடாத்தினார். கிராமங்களில் விமானக் குண்டு வீசியும், குடிமக்களை வதைத்தும் வருகின்றனர்.

சூடான்: பல முஸ்லிம்கள் தீவிரவாத இஸ்லாமிய ஆட்சியில் வெற்றியைக் காண்கிறார்கள் ஆனால் போரும் பட்டினியும் தொடர்கின்றன

காட்டும் ஆட்சியாளர் சூ. ம. வி. படையைத் துரத்தியடிப்பதால் புரட்சி இயக்கத்திலும் முறிவுகள் தெரிகின்றன. அதனால் தென் சூடானியரின் துயரங்கள் மேலும் அதிகரித்துள்ளன. 1991 இன் பிற்பகுதியில் சூ. ம. வி. படையில் ஒரு பகுதி அதன் தலைவரான கேணல் ஜோன் சரான்கின் தலைமையைப் புறக்கணித்துப் பிரிந்து விட்டது. இவர் காட்டுமில் இஸ்லாமிய அரசு அற்று, மதச் சார்பற்ற அரசு உதிக்க வேண்டுமெனக் கேட்கிறார். றியாக் மசார் தலைமையில் இயங்கும் விலகிய பிரிவு அல்பஷீரை வெற்றி கொள்ள முடியாது ஆகையால் தென் சூடான் தனி அரசாக வேண்டும் என்கிறது. இப் பூசல் பழங்குடிக் குலப் போராக மாறி விட்டது. இரு வறிய புரட்சிப் படைகளின் சண்டையென்ற அளவுக்குக் கீழிறங்கி விட்டது. காராங் என்பவருடைய தோரித் பிரிவினைக் குழுவில் பெரும்பாலானோர் டிங்கா இனத்தவர். மசாரின் நாஸிர் பிரிவினைக் குழுவில் உள்ளோர் பெருமளவுக்கு நுவர் இனத்தவர். ஜூபா நகருக்கு வடகிழக்கேயுள்ள ''வறிய முக்கோணம்'' தான் இரு இனங்களுக்கும் இடையிலுள்ள எல்லைப் பகுதி. ஒவ்வொரு குழுவும் மற்றதன் குடிமக்களாகிய (சிவிலியன்) ஆதரவாளர்களைத் துன்புறுத்துகின்றனர். அதனால் இப் பிரதேசத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள்—1,450,000 பேர்) தம் வீட்டை விட்டு ஓடிவிட்டனர்.

1993 இல் சூடானுக்கு உதவ 190 மில்லியன் டொலர் வேண்டுமென்று ஐ. நா. தன் உறுப்பு நாடுகளில் உபகாரம் வழங்குவோரைக் கேட்டுள்ளது. இப்போது ஐ. நாவும் குழுக்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. மூன்று ஐ. நா. பணியாளரும், ஒரு நோர்வே நாட்டுப் பத்திரிகையாளரும் கடந்த இலையுதிர் காலத்தில் கொல்லப்பட்டனர். காராங் குழுவினரே குற்றஞ் சாட்டப்பட்டனர். சென்ற பங்குவி 27 இல் காங்கிரசின் படைகள் அவரது தாயகமான கொங்கொர் நகரைப் பிடித்தன. ''பிரஞ்ச உலக உணவுத் திட்டம்'' என்ற சேவை நிறுவனத்

New Doc 2020-04-06 14.46.20_page-0056.jpg



தென் சூடானில் உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட பஞ்சத்தில் கட்டுண்ட பிள்ளைகள் தம் பசியைப் போக்க ஐ. நா. அலுவலர்களின் கையைப் பார்த்து நிற்கிறார்கள்.

தொண்டர் றியாக் மசாருக்கு வெடி மருந்து வழங்கியதாக அச்சுறுத்தப்பட்டார். இத் தாக்குதல் காரணமாக ஐ. நா. நிவாரண வேலைகளை நிறுத்தியது.

கடும் கிருமி தொற்று நிலை

நிலைமை வெகு பயங்கரமாயுள்ளது ஐ. நா. உணவு வழங்கல் விமான மூலம் ஆரம்பித்த பின் தினசரி சாவு சராசரி 30 லிருந்து 1 அல்லது இரண்டாகக் குறைந்துள்ளது, ஆனால் சமீப காலப் போர்களால் பல நகர வாசிகள் பற்றைக் காடுகளுக்குள் சென்று விட்டார்கள். போகாமல் நிற்போர் மரங்களுக்குக் கீழும், அழுக்கு நாற்றமுடைய விறாந்தைகளிலும் நெருக்கமாக உறங்குகிறார்கள். பலர் காட்டு ஒநாய் இனவிலங்குகள், எலிகள் கடித்து விசர் வந்து (நீர்வடிய) நோயால் இறக்கிறார்கள். மூளையைத் தாக்கும் மலேரியா, காசநோய், சொறி சிரங்கு முதலிய தொற்று நோய்களும் பலரைப் பலிகொள்ளுகின்றன. கோல் என்னுமிடத்தைச் சார்ந்த டொமினிக் அல்பேட் என்ற ஒரே ஒரு மருத்துவர் ஜூலை முற்பகுதியில் வந்து சேர்ந்தார். சூ. ம. வி. படைத் தலைவர் பியோர் அஜாங் நிச்சயமாகத் தன்னால் றியக் மசாரின் படைகளைத் துரத்திவிட முடியும் என்று சபதம் செய்கிறார். யூ.ஆஇ என்ற இடத்தில் பகைவரிடம் தாம் கைப்பற்றிய பீரங்கிகள், பாரமான இயந்திரத் துப்பாக்கிகள் ட்றக் வண்டிகளைக் காட்டித் தம் திறமையைப் பறைசாற்றுகிறார். ''எமது பகைவன் ஒமார்—அல்—பஷீர், றியாக் அவனுடன் சேர்ந்து ஒத்துழைக்கிறான். அவனுக்குக் காட்டும் தலைநகரிலிருந்து கேட்டதெல்லாம் வழங்கப்படுகிறது'' என்று குற்றம் சுமத்துகிறார்.

றியாக்கின் குழு தமக்குக் காட்டும் ஆட்சியாளரின் உதவி ஏதும் கிடையாது என மறுக்கிறது. நிச்சயமாகக் காட்டும் அரசு இவ்விரு குழுக்களின் பேரால் இலாபம் அடைகிறது. கடந்த வரட்சிக் காலத் தாக்குதலில் பிரிந்து நிற்கும் சூ. ம. வி படையை எதிர்த்துப் பெரு வெற்றி ஈட்டியது. நைரோபியில் சென்ற ஜூன் மாதம் கராங் குழுவினருடன் நடந்த பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றதால் அடுத்த செப்ரெம்பரில் மழைக்காலம் முடிந்ததும் மீண்டும் அரசு பெரும் தாக்குதலை ஆரம்பிக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். சூ. ம. வி. படையின் இரு மாறுபட்ட குழுக்களிடையேயும் பகை விஷம் போல் ஏறுகிறது. தமது தலைமைக் காரியாலயமிருக்கும் அயோத் நகரில் தங்கியிருக்கும் படைத் தளபதி எலீஜா ஹொன் ரொப் ''நாங்கள் கராங் குழுவைத் தாக்கியே ஆக வேண்டும்'' என்கிறார். ஒரு பாடசாலைக் கரும்பலகையில் எழுதியிருந்த வாசகம் அங்கு இரு குழுக்களுக்கு மிடையே நிலவும் ஆபத்தான நச்சுவாயு நிலையைப் பறைசாற்றுகிறது. ''1993 டிங்காவோ நுவேரோ வாழ்வது அல்லது அழிவது என நிச்சயிக்கும் இறுதிப் போராட்ட ஆண்டாகும்'' காட்டும் நகரிலுள்ள ஜீவிரவாத முஸ்லிம்கள் கேட்டு மகிழும் கருத்து அது.

கொங்கோர் அயோத் நகரிலிருந்து ஜோஷுவா ஹம்மர்

நியூஸ்வீக், ஜூலை 19, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0057.jpg

ஒரு தேசத்தின் உதயம்

நீடித்த போரினால் விசாரமடைந்த எரித்திரியா ஆர்வத்துடன் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்கிறது.

சென்ற வாரம் நல்லனவற்றைத் தாங்கிவந்த மூன்று நாட்களில் எரித்திரியாவின் மக்கள் தமது மிகவும் அபாயகரமான நம்பிக்கையற்ற நிலையிலிருந்து விடுபட்டு கொண்டாட்டங்களில் இறங்கினர். ஏறக்குறைய 90 0000 எரித்திரியர் வாக்களிப்பதற்கு ஒட்டகங்கள் மூலமும், கழுதைகள் மூலமும், கால்நடையாகவும் சென்றனர். அவர்கள் ஏகோபித்த முறையில் ஒரு மரத்துக்கு வாக்களித்துச் சுதந்திர எரித்திரியாவுக்கும் வாக்களித்தனரெனலாம். குடியேற்ற வரலாற்றுக்கு வெற்றியுடன்கூடிய .வாரிசு உரிமைத் தொடர்ச்சியைப் பெற்ற முதலாவது அரசாக எரித்திரியா திகழ்கின்றது. ஐ. நா. வினால் மேற்பார்வை செய்யப்பட்ட மக்களின் கருத்தினை அறிவதற்கான பொது ஜனவாக்கெடுப்பு 1991 மே மாதத்திலிருந்து முடிந்த விடயத்தை உத்தியோக பூர்வமாக்கியது. 1991 மே மாதத்தில் கெரில்லாக்கள் எதியோப்பிய இராணுவத்தை முப்பதாண்டு உள்நாட்டுப்போரின் பின்னர் முறியடித்தனர். வரிசையாகக் கிளையில்லாத மரங்களால் சூழப்பட்ட மர நிழல் நிறைந்த விசாலமான பாதைகளையும், பலகாரங்களுடன் பானங்களையும் விற்கும் மிடங்களையும் உடைய இத்தாலிய ரால் நிர்மாணிக்கப்பட்ட தலைப் பட்டினமான அஸ்மாராவில் ஆயிரக் கணக்கானோர் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்ட தெருக்களில் ஆடியும் பாடியும் குதூகலித்தனர். வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்காகவும், களியாட்டத்தில் பங்கு பற்றுவதற்காகவும் ஜேர்மனியில் தலைமறைவாக வாழ்ந்த எரித்திரியர் யொஹனெஸ் இயாஸு அங்கு வந்திருந்தபோது கூறியது என்ன வெனில்: இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமது சந்தோஷம் போரில் கொல்லப்பட்டோரின் துக்கத்துடன் கலந்திருந்தது. ஆனால் இன்று காண்பது தூய உணர்வலைகள் என்பதாகும்.

உத்தேகம், இளைச்சி மங்கி மறையும் போது எரித்திரியர் மாறுபட்ட சூழ் நிலையில் தொடர்ந்து வாழ்வதற்து முக்கிய பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றது. போரினால் நாசஞ் செய்யப்பட்ட நாடு பல்கட்சி முறைக்கும், பொருளாதார மீட்சிக்கும் விரைந்து செல்லுமா? அல்லது ஒரு கட்சி முறைக்கும் பிளவுகள், கட்சி வேற்றுமை கட்கும் இடமளிக்குமா? இதனால் கண்டத்தின் பெரும்பகுதி பாதிப்புக்குள்ளாகலாம். எரித்திரியா ஆபிரிக்காவின் சிங்கப்பூராகத் திகழ்வதற்கு அதன் மறைந்துள்ள சக்தி அவ்வாறு நிகழக் கூடியதைத் தெரிவிக்கிறது என்று ஓர் இராஜதந்திரி பகர்கிறார். ஆனால் எரித்திரியா அடிப்படைப் பூஜ்யத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் முன்னைய கெரில்லாத் தலைவரும் தற்போது அதன் செயலாளர் நாயகமுமாகிய 46 வயது இலையாஸ் அபேவேர்க்கி நாடு ஜனநாயகப் பாதையில் முன்னேறுவதாக வற்புறுத்திக் கூறுகின்றார். அவர் மேலும் கூறுவது என்னவெனில்: எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி ஓர் ஒற்றைக்கல் (பாரிய கல்) விசையாக மாறியிராவிடில் இதனைச் சாதித்திருக்க முடியாதென்பதாகும். ஆனால் தொடர்ந்தும் அது எரித்திரியச் சமூகத்தைத் தன் உரிமையாகப் பெற முயற்சிக்குமா? இல்லை என்றே விடை அளிக்கப்படுகிறது.



சுதந்திரம் பற்றிய ஒரு பாடம்

ஐ. நா. வின் மேற்பார்வையில் நடைபெறும் மக்கள்கருத்துக்கணிப்புப் பற்றிய கூட்டத்தில் அக்கிராம மக்கள்.

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி ஒரு மார்க்ஸீயப் பொதுவுடமை இயக்கமாக ஆரம்பத்தில் தோன்றிய போதிலும் அதன் தலைவர்கள் பெருமளவில் அவர்களுடைய கொள்கைகளைக் கைவிட்டுவிட்டனர். அபேவேர்க்கி

New Doc 2020-04-06 14.46.20_page-0058.jpg

தனது தற்காலிக அரசாங்கம் உயர் பதவியில் உள்ள ஈ பி எல் எவ் அலுவலரை உள்ளடக்கிய சபையினால் கொண்டு இயக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றார். அன்றியும் இச்சபையானது (ஈ பி எல் எவ் —எரித்திரிய மக்கள் முன்னணி) நாட்டிற்கு ஒரு நிலையான அரசியல் அமைப்புச் சாதனம் அங்கிகரிக்கப் பட்ட பின்னர் கலைந்து விடுமெனக் கூறுகிறார். ஆனால் தேர்தல் களுக்கு ஒரு நேர அட்டவணையை வகுக்கவில்லை.

மழையின்மையால், வரட்சியால் பாதிக்கப்பட்ட பாலைவன மாகவும், செழுமையற்ற வரண்ட மலைகளையும் செங்குடலோரத்தில் கொண்டுள்ள எரித்திரியா எப்போதும் தனது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் மூலம் உச்சப் பயனைப் பெற்றுள்ளது. 1962 இல் பேரரசர் ஹெய்லி செலாஸி முன்னைய இத்தாலிய குடியேற்றமான எரித்திரியாவிற்குச் சுதந்திரத்தை வழங்க இணக்கம் தெரிவித்து நாட்டைக் கைவிட்ட பின்னர் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணிக் கெரிலாக்கள் எதியோப்பிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போர் தொடுத்தனர்: இப்போர் கூடுதலாக அகழிப்போராக நடைபெற்றது. இப் போரினால் மூன்று மில்லியன் சனத்தொகையில் 60, 000 எரித்திரியர் உயிரிழக்க நேரிட்டது. அத்துடன் இப்போர் எரித்திரியருடைய தன்னம்பிக்கை உணர்வை வலுப் பெறச் செய்தது. வெளிநாட்டவரின் உதவியின்றியே ஈ பி எல் எவ் போராளிகள் மருந்து தயாரித்து விற்பனை செய்வது சம்பந்தமான ஆய்வு கூடங்களை அமைத்துக் கொண்டனர். அன்றியும் ஆஸ்பத்திரிகளையும், பாடசாலைகளையும் அமைத்துக் கொண்டனர். சோவியத் ருஷ்யாவினால் வழங்கப் பட்ட போராயுதங்களுடன் போரிட்ட எதியோப்பியரைத் தாம் போரில் எதிரியிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைப் பயன்படுத்தித் தோற்கடித்தனர். "தனியாகப் போரை வென்றெடுத்தோம். அது எங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தியது" என்று ஓர் ஈ பி எல் எவ் அலுவலர் கூறுகிறார்.

கடந்த இருபதாண்டு காலத்தில் எரித்திரியர் தமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஒரே குறிக்கோளுடன் செயற்படத் தொடங்கியுள்ளனர். அனேகமான ஈ பி எல் எவ் போராளிகள் அவர்களுள 100 000 பேர் கூடாரங்களில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஊதிய மற்ற பொதுப் பணிகளிலேயே ஈடுபட்டுள்ளனர். பலதரப்பட்ட அதிகாரிகளுள்ள தாபன அமைப்பில் அடிமட்டத்திலிருந்து உச்சி வரையில் மிக எளிமையான வாழ்க்கை முறை காணப்படுகின்றது. அஸ்மாரா பல்கலைக் கழகத் தலைவர் அண்ட்ரூ பேர்ஹான் ஜியார்ஜிஸ் ஓர் இராணுவத் தளத்திலுள்ள நெருக்கமான ஆறு அறைகளை உடைய வீட்டில் நிதி அமைச்சருடனும் சேர்ந்து கூடி வாழ்கின்றனர். ஓர் இராஜதந்திரி வியப்புடன் தெரிவிப்பது என்னவெனில்: "இங்கு பூரணமாக இலஞ்சம் நேர்மையற்ற உண்மை இல்லை" என்பதாகும்.

உணவு உதவி

இப்படி இருந்த போதிலும் எரித்திரியா நம்பிக்கையற்ற ஆபத்தை உணர்ந்தும் பொருட்படுத்தாத பொருளாதார உருவில் காணப்படுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் போதிய அளவு மழைவீழ்ச்சி அந்த பஞ்சத்தின் பயத்தை முற்றாகப் போக்கி விட்டது. ஆனால் அரைப் பங்கு சனத் தொகையினரும் உணவு உதவியிலேயே தங்கியுள்ளனர். எதியோப்பியாவுக்கு ஏற்றுமதி செய்யும் சோற்று உப்பையும், சவூதி அரேபியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாட்டுத் தோலையும் தவிர வேறு எந்த ஏற்றுமதியையும் செய்யமுடியாத நிலையில் எரித்திரியா உள்ளது. எரித்திரியாவின் மதிப்புக் குறையாத செலாவணி வருடத்திற்கு பத்து மில்லியன் டொலர் மாத்திரமே இது அந்த நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள். தமது உழைப்பிலிருந்து அனுப்பும் தொகையாகும். யுத்தத்தின் போது சேதமடைந்த அல்லது கவனிப்பாரற்ற நிலையிலிருந்த வீடுகளையும், வீதிகளையும், ஆஸ்பத்திரிகளையும், வியாபார மற்றும் வதிகளையும் புனர்நிர்மாணம் செய்வதற்கு இரண்டு பில்லியன் டொலர் தேவைப்படுமென அரசாங்கம் கணித்துள்ளது. ஆனால் 1992 இல் உதவியாக 37 பில்லியன் டொலரை மாத்திரமே பெற்றுக் கொண்டது. வெளிநாட்டவர் அடிவேகத்துடன் நாட்டின் தனியார்துறையில் பங்கு கொள்ள முன்வரவில்லை. இருப்பினும் ஒரு குறுட்டுத்தனமான தாராள முதலீட்டுக் கோவை 1991 இல் புகுத்தப்பட்டுள்ளது. வியாபாரத்தில் ஈடுபடக்கூடியவர்கள் கடினமான போக்குடையவர்களாகவும், பிடிவாதத் தன்மை உடையவர்களாகவும் செயற்படுவதில் தாமதப் போக்குடையவர்களாகவும் இருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

தற்போதைக்கு எரித்தியர் ஈ பி எல் எவ் க்குப் பின்னால் ஒன்றுபட்டுள்ளனர். அஸ்மாராவிற்குத் தெற்கில் 25 மைல் தொலைவில் டெகம் ஹரி (DEKEMHARE) என்னும் பட்டினத்தில் அவர்களுடைய சந்தோஷம் தெருக்களில் சிந்தியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஈ பி எல் எவ் படையினர் அஸ்மராவை நோக்கி முன்னேறுவதைத் தடுப்பதற்காக எதியோப்பிய இராணுவத்தினர் கவசப் பீரங்கி மோட்டார் வாகனங்களையும், பீரங்கிப் படைகளையும் பயன்படுத்தியதால் நாற்றுக் கணக்கானவர்கள் மடிந்தனர். ஆனால் எதியோப்பியருடைய இம் முயற்சி பயனற்றதாகும். கடந்த வாரம் ஆலைகளின் தொழிலாளரும், பிள்ளைகளும் ஈ பி எல் எவ் போராளிகளுக்குப் பின்னால் சேதமுற்ற நிழல் மரங்கள் நிறைந்த சாலையில் அணிவகுத்து நின்றனர். இவர்களுக்கு முன்னால் கொடிகளால் அலங்

New Doc 2020-04-06 14.46.20_page-0059.jpg

கரிக்கப்பட்ட பொருட்களை தூக்கிக் கொடுக்கும் சுமைவண்டி காணப்பட்டது. ஏ கே-47 ரக துவக்குகளைச் சுமந்து கொண்டு கப் பீரமாகக் கெரிலாக்கள் முன்னர் குண்டுவீச்சுக்கு உள்ளான வாயுநிலையத்தையும், உணவு பதனிடும் இயந்திர சாதன நிலையத்தையும் குறைந்த வேகத்துடன் கடந்து சென்றனர். மக்களின் கருத்தை அறிவதற்கான பொது ஜனவாக்கெடுப்புக் குருதிசிந்தியும் போராடியும், தன்னலத் தியாகத்தின் மூலமுமே அடையப் பெற்றது என ஒருவர் கூட்டத்தினருக்குக் கூறினார். அதனை ஒரு போதும் மறக்க வேண்டாம் என்றும் சொன்னார். ஆகவே தற்போது எரித்திரியர்கள் அந்த ஆர்வத்தைக் கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்- போரில் வெற்றி மட்டும் அடைந்தால் போதாது.

ஜோசுவா ஹம்மர் (அஸ்மார்)
நியூஸ்வீக், மே 3, 1993

சமாதானத்தைப் பேணுவதில் ஏற்படக் கூடிய சந்தேகிக்கப்படாத அபாயங்கள்

ஐ.நா. தாபனம்: போரினால் சிதறுண்டுள்ள சோமாலியாவில் ஒழுங்கற்ற நிலையை ஏற்படுத்துதல் ஒரு கோஷ்டி முயற்சியாகவே உள்ளது.

இங்கு பல்பக்க முறைமை (இணக்கங்கள், ஒப்பந்தங்கள் போன்றவை - மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியினர் மேற்கொள்பவை) புதிய உலக முறையில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை அவதானிக்கலாம்.

கடந்தவாரம் தொடர்புச் சாதனங்களைத் தடுத்து ஓட்டுக் கேட்டபோது கிளர்ச்சித் தலைவர் யுத்தப்பிரபு தளபதி முகமது பாரா அய்டீட் இரகசியமாகத் தனது உதவியாளரை மொகஷ்திஷுவில் உள்ள ஒரு நாட்டுப்புற வதிவிடத்தில் சந்திக்க திட்டமிட்டதாக அறியப்பட்டது. ஐக்கிய அமெரிக்க கோப்றா உலங்கு வானூர்திகள் 70 டபிள்யூ ஏவுகணைகளைக் கொண்டும், பீரங்கிகளினாலும் அந்த வதிவிடத்தைத் தாக்கியதால் குறைந்தது ஐம்பது சோமாலியர் கொல்லப்பட்டனர். இதனால் ஏற்பட்ட கலகத்தில் நான்கு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அய்டீட் இந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அவ்விடத்தை விட்டு நழுவி விட்டார். இத்தாக்குதல் நடைபெறவிருப்பதாக யாராவது எச்சரித்திருக்க வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவின் நுணுகி அவதானித்து மேற்பார்வை செய்யும் ஓர் அமைப்பு ஒரு தடவைக்கு மேலாக ஐ.நா:வின் துருப்புக்களின் இத்தாலிய அங்கத்தவர்கள் அய்டீட்டுக்கு அவனது துருப்புக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி எச்சரிக்கை விடுத்தமையை கண்டு பிடித்துள்ளது. இதனை நியூஸ்வீக் சஞ்சிகை மூலம் மேல் நாடுகள் அறிந்து கொண்டது. இத்தாக்குதல் நடைபெற்ற மறுநாளே சமாதானத்தைப் பேணும் ஐ.நா.உயர் அலுவலர் கோவி அன்னான், இத்தாலியத் தளபதி புறூனோ லொய் பதவியிலிருந்து விலக்கப்பட்டதாக அறிவித்து விட்டார். இத்தாலியர் அய்டீட்டை முன்னெச்சரிக்கை செய்தனரா? தாங்களே சொந்த முடிவைச் செய்யுங்கள் என்று ஒரு பிரேஷ்ட ஐ.நா.அலுவலர் கூறினார்.

தளபதி வெளியேற்றப்பட்டமையை இத்தாலியர் எதிர்த்தனர். அன்றியும் லொய் அவர் பதவியில் நீடிக்கட்டுமெனக் கூறினார். சமாதானம் பேணுவாரின் குழப்பநிலை சோமாலியரைப் பாதிக்கவில்லை. விரைவில் இத்தாலியத் துருப்புக்கள் அய்டீட்டின் பிரதான போட்டியாளர் அலிமஹிதிக்கு விசுவாசமுள்ள படையினரின் சூட்டுக்கு இலக்காகினர். அலிமஹிதி மொகமதின் ஆதரவாளர், இத்தாலியர் இரகசியமாக அய்டீட்டுடன் இணைந்து கொண்டுள்ளனர் என குற்றஞ் சாட்டி அறிக்கை விடுத்தனர். கடந்த டிசம்பர் மாதம் சோமாலிய உள்நாட்டுப்போர் ஐக்கிய அமெரிக்காவின் 750 மில்லியன் டொலர் தலையீட்டினால் நிறுத்தப்பட்டது. அது மீண்டும் அதி விரைவான வேகத்தை அடைவது போல் தோன்றியது. ஐ.நா.துருப்புக்கள் அதன் செயற்படும் பிரதிநிதிகளானார்கள். நைரோபியில் உள்ள ஒரு சோமாலிய நிவாரண அலுவலரின் கூற்றின்படி, ஐ.நா.தமது செயலை அவ்வளவுக்கு அவலட்சணமாக்கிய

New Doc 2020-04-06 14.46.20_page-0060.jpg

தோடு நாட்டின் ஏனைய பகுதி களிலும் அரசியல் முறை நெருக்கடி நிலையை அடைந்து விட்டதென் பதாகும். அய்மூட் சமாதானத் தைப் பேணவந்தோரை இகழ்ந்து பரிகாசத்துடன் நோக்கியதோடு ஏனைய போர்ப் பிரபுக்களினது தைரியத்தையும் மீட்டெடுப்பதில் ஈடுபட்டுள்ளார். ''அவர்கள் தாம் குழப்பத்தை உண்டுபண்ணுவோம்'' என்று கூறுவதாக ஒரு சோமாலிய அலுவலர் கூறுகிறார்.

மொகதிஷ்ஷீவில் உள்ள குழப்பநிலை ஒரு கோஷ்டியின் தவறான முகாமைத்துவ முயற்சி யின் பலாபலனாகும். அங்கு உயிர் கள் பிரச்சினை இல்லாவிடில் அது நகைச்சுவைக்குரியதாகும். யூன் மாதத்திலிருந்து முப்பத்தைந்து ஐ.நா.சமாதானம் பேணுவோரும் குறைந்தது நூறு சோமாலியரும் போரில் இறந்துள்ளனர். இது பழக்க வழக்கத்திற்கு அமைவான நாடாக சர்வதேசக் குழுவினருக்கு முதலாவது பரிசோதனையாகத் தோன்றுகின்றது. இதனை ஐ.நா வின் ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதி மடலீன் ஆல்பிறைட், ஒருவருடைய உரிமைகளையும் அல்லது அதற்குக் கூடுதலானோர் செய்து கொள்ளும் இணக்கங்களையும் ஒப்பந்தங்களை யும் கொண்ட பலபக்கத் தன்மையது எனக்கூறுகிறார். சோமாலியாவின் நலிவுற்ற படையினருக்குச் சரிசம மாக நின்று மனத்திடமுடைய நல்லமுறையில் போராயுதங்களைக் கொண்ட ஐ.நா.தலைமை தாங் கும் சர்வதேச படையினருடன் போரிடும் தகுதி இருக்கவில்லை. இப்படிப்பட்ட கூட்டிணைப்பு கிளின்ரன் போர் உபாயத்தின் அச்சாணி என்பதில் வெள்ளை மாளிகையில் தடுமாற்றம் இல்லை. இதன் நோக்கம் உலகக் காவலர் பணியை மேற்கொள்வதில் ஏற்படும் முழுச் செலவையும் தாம் பொறுக் காது தவிர்ப்பதேயாகும். ஆனால் தற்போது சோமாலிய விவகாரம் பெரும் தோல்வி நிலையை அடை யக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது. அங்கு எழுப்பப்பட்ட பிரச்சினை என்னவெனில், ''சமா தானத்தை நிலைநாட்டுதல்'' என்பதற்கும், முதல்தர இராணுவ ஆக்கிரமிப்பை அதன் அபாயங் களுடன் அங்கு ஏற்படுத்துவதற்கும் கருத்தில் வேறுபாடேயன்றி அதற்கு மேல் அங்கு யாதேனும் இல்லை.

போரிடும் கட்சியினர் தமக்கு சமாதானம் பேணுவோர்! தேவை எனக் கேட்டால் மட்டுமே அங்கு ஐ.நா.சமாதானம் பேணும் முயற்சி பயன் அளிக்கும். இராஜதந்திரிகள் சமாதானத்தீர்வை அந்த நாட்டுப் போராளிகளிடமிருந்து வலிந்து பெற்ற பின்னரே கம்போடியாவில் நீல நிறத் தலைக்கவசம் அணிந்த போர் வீரர்கள் காலடி எடுத்து வைத்தனர்.

அத்தீர்வை முறியடிப்பதன் பொருட்டு மே மாதத் தேர்தல் களைக் கூட்டாகப் பகிஷ்கரித்தனர். அன்றியும் ஐ.நா.பணியாளரைத் தாக்கவும் முற்பட்டனர். ஆனால் சமாதானம் பேணுவோர் தமது முயற்சியை முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்தனர். வாக்குகளை வெளியில் கொண்டு வரும் முயற்சி யில் ஈடுபட்டனர். அவர்கள் புரட்சியாளருக்கு சவால் விடவில் லை. ஆகவே வெற்றிபெறுவதற் கான தந்திரோபாயம் இராஜதந்திர ரீதியாகத் தாக்கம் கூடியதாகவும் இராணுவ ரீதியாகச் சாத்வீக மானதாகவும் இருத்தல் வேண்டு மென ஐ.நா.அலுவலர் ஒருவர் கூறுகிறார். 1000,000 கணக்கில் கம்போடியர் வாக்களிக்க முன் வந்தனர். அங்கு ஆட்சி புரியும் கூட்டாட்சி உடையக்கூடியதாகவே இருந்தபோதிலும் அங்கு காணப் படும் நம்பிக்கையைத் தரக்கூடிய அறிகுறி என்னவெனில், கமரூச் ஐ.நா.சமாதானப் படையுடன் சேரக் கேட்டுள்ளதாம். இது முக்கிய மாக அங்குள்ள கட்சியினர் சமா தானத்தை விரும்பும் போது பயன் அளிக்குமென முன்னை நாள் ஐ.நா. சமாதானம் பேணும் நடவடிக்கை களுக்குப் பொறுப்புள்ள உப செய லாளர் கூறுகிறார்.

ஆனால் சோமாலியாவில் அப் படிப்பட்ட பெரும்பான்மையோரு டைய கருத்து இருக்கவில்லை. அய்மூட் சமாதானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த போது சமாதானம் பேணுவோர் தமக்குள்ளேயே சிறு சிறு சண்டைகளில் ஈடுபடலா யினர். மொகதிஷ்ஷுவில் பாகிஸ்தா னியத் துருப்புக்கள் யூன் 5இல் ஒளிந்



திருந்து தாக்கியபோது அவர்களுக்கு உதவிக்காகச் சென்ற இத்தாலியத் துருப்புக்கள் அவர்களுடைய அபாய க் குரலைச் செவிமடுத்தனர். ஆனால் அவர்கள் ஏழு மணித்தி யாலம் அங்கேயே இருந்து விட்டனர். தளபதி லொய் ஒரு கொள்கையைத்தனக்கெனத் தாபித் துக் கொண்டார். அது என்னவெ னில் உரோமுடன் உள்ள ஐ.நா


New Doc 2020-04-06 14.46.20_page-0061.jpg

சட்டவரைவை முடித்துக் கொண்ட பின்னரே, ஐ.நா.சட்டவரைவுகளுக்குத் தாம் கீழ்ப்படிதல் என்பதாகும். அந்த சம்பவத்தில் இருபத்து நான்கு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். அதிலிருந்து சோமாலியாவிலிருந்த மிகவும் பாரிய ஐ.நா. துருப்பாகிய பாகிஸ்தானியர் மூன்றாவது பெரும்பான்மைத் துருப்புக்களைக் கொண்டிருந்த இத்தாலியருடன் ஒத்துழைக்க மறுத்து விட்டனர்.

நகர்ப்புற யுத்தம்

''நாங்கள் அந்த நகரத்தை மீண்டும் ஏறக்குறைய 'ஐந்து நாட்களுக்குள் பிடிக்கப்போகிறோம்'' அந்த மறைந்திருந்து தாக்குதலுக்கு பின்னர் ஓர் உச்சப் பதவியில் உள்ள ஐக்கியஅமெரிக்க அலுவலர் முன்கூட்டியே இவ்வாறு சொல்லி வைத்தார். அதற்குப்பதிலாக அய்டீட்டின் மறைந்திருந்து தாக்குதல் மொகதிஷுவில்ஒரு கிழ்மட்டமான கெரில்லா யுத்தத்தை நிலைநிறுத்தி ஆதரவளித்து மேற்குத்தைய நிவாரண அலுவலர் மீண்டும் இடத்தைக் காண முற்பட்டனர். அவர்கள் அந்த சண்டை சோமாலியாவில் மேற்குத்தைய தலையிட்டின் ஆரம்ப நோக்கத்தை மறைத்து விட்டதென ஆட்சேபித்தனர்- அதன் ஆரம்ப நோக்கம் பரோபகாரமிக்க உதவியேயாகும். ஏனைய தேசங்களைச் சேர்ந்த தளபதிகளும் பின்பார்வையால் மட்டும் அறிந்து கொள்ளும் போர் உபாயத்தின் நிமித்தம் தமது தாய்நாடுகளுக்கு தொலைபேசித் தொடர்பு கொண்டனர். அய்டீட்டுடன் எதிர்த்து போரிட நேரிட்டதையிட்டு இத்தாலியத் துருப்புகள் விசேடமாக விசனமடைந்தன. உரோமாபுரி ஒரு காலத்தில் சோமாலியாவில் குடியேற்ற ஆட்சி அதிகாரத்தைப்பெற்றிருந்தது அதனால் அந்த நாட்டில் இனிமேல் தலைமைப் பதவியை அடையக்கூடிய அய்டீட்டுக்கு ஆதரவளிக்க முற்படுகிறது என்று ஐக்கிய அமெரிக்கப் பகுதியினர் சந்தேகித்தனர்.

ஐ.நா. வின் விசேட பிரதிநிதியான ஒய்வுபெற்ற ஐக்கிய



அமெரிக்க வான்படைத் தாக்குதலை அடுத்து [illegible] பணியில் கெமரூச் சொல்லிகள்

அமெரிக்கப் பரிபாலன அலுவலர் ஜோனதன் கௌ கூடுதலாக தனிமைப்படுத்தப்பட்டார். அவர் தனது மிகவும் பாதுகாப்பளிக்கப்பட்ட அரணைக் கடந்து அப்பாற் செல்ல அபூர்வமாகவே துணிந்தார். அய்டீட்டின் உப கூட்டுக் குடும்பத் தொகுப்பினர் கௌவிற்கு தமது பூரண ஆதரவுக்கு வாக்குறுதி அளித்தனர். பின்னர் அவரது காதுக்குக்கேட்காத தூரத்தில் தமது வாக்குறுதியை வாபஸ் வாங்கினர். தற்போது மொகதிஷு நம்பிக்கையை மீட்டெடுக்கும் நடவடிக்கையின் போது ஏற்பட்ட ஆபத்தான நிலை போன்று காணப்பட்டது. கௌ தனது சொந்த பாதுகாப்பையிட்டு மனச்சஞ்சலமடைந்தார். தான் தங்கியிருந்த வாகனத்தை விட்டு துணிந்து வெளியே இரவில் செல்வதால் துவக்குச் சூட்டுக்கு ஆளாக நேரிடும் என்பதால் ஒரு போத்தலில் தனது சிறுநீரைச் சேகரித்து தனது கட்டிலின் கீழ் வைத்துக் கொள்வார்.

இது வரையில் ஐ.நா. துருப்புக்களுக்குப்பரிபாலன வசதியையும், மதிநுட்பத்தையும் மிகவும் கூடுதலான (துவக்குச்) சூட்டு வலுவையும் அமெரிக்கர்கள் அளித்து வந்தனர். ஆனால் அவர்களுக்கு அவ்வளவு இழப்புகள் ஏற்படவில்லை. அமெரிக்கருக்குச் சோமாலியா குறைவாகக் கவலிக்கப்பட்ட உள்நாட்டு பிரச்சினையாகவே தோன்றியது. அது விரைவில் மாற்றமடையக் கூடியதாகவும் உள்ளது. அங்கு ஏற்பட்ட அழுத்தத்தை கூடிய முயற்சியின் மூலம் கூட்டத் தூண்டுதல் பாதிப்பின் மூலம் விரைவாக மாற்றமடையக் கூடிய சோமாலியாவில் உள்ள ஐக்கிய அமெரிக்கத் துருப்புகள் சென்ற வாரம் தெருக்களில் இறங்க முற்பட்டன. மொகதிஷு விமான நிலையத்திற்கு அண்மைப் பகுதிகளில் வீடுவீடாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். செனெட்டர் றொபேட் பயேட் போன்ற அரசியல் பிரபுக்கள் ஐ.நா. நடவடிக்கைகளில் ஐக்கிய அமெரிக்கா ஈடுபடுவதால் பல சிக்கலான பிரச்சினைகளுக்கு அது ஏதுவாகும் என எச்சரிக்கத் தவறவில்லை. கடந்த வாரம் பயேட் சகல ஐக்கிய அமெரிக்கத் துருப்புக்களையும் மூட்டை முடிச்சுகளுடன் வீட்டுக்குப் போகுமாறு அழைப்பு விடுத்தார். ஏனைய கூட்டுறவு முறையிலான பேராசைமிக்க அதிக செலவுள்ள சமாதானம் பேணும் நடவடிக்கைகளுக்கு விரிவான நிட்டங்களைத்திட்டி அவற்றை அறிவிக்குமுன்னர் வெள்ளை மாளிகை அய்டீட்டை தனது காலடியில் அடிபணியச் செய்ய விரும்பும். இதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டும்.

வோஷிங்டனிலிருந்து டொம்மான்லாண், ஜோண்பரியுடன் நைரோபியிலிருந்துஜோகுவாஹம்மர்

New Doc 2020-04-06 14.46.20_page-0062.jpg

அதிகம் தெரிந்த மனிதர்கள்

அல்ஜீரியா: அறிவுஜீவிகளே கொலைஞர்களின் இலக்கு

சென்ற மாதம் ஒரு காலைநேரம் அல்ஜீரியாவில் உள்ள மொகமட் புக்கோப்சாவின் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. தன் அயலவராக இருக்க வேண்டும் என்று நினைக் கிறார் அவர், 52 வயதாகும் புக் கோப்சா ஒரு பெயர் பெற்ற சமூகவியலாளர். அல்ஜீரியாவின் புகழ் மிக்க சிந்தனைத் தேக்கத் தின் தலைவரும்கூட. அன்று அவ ரது அனுமானம் துக்ககரமான வகையில் தவறாகி விட்டது. அவர் கதவைத் திறந்த போது கத்திக ளும் துப்பாக்கிகளும் ஏந்திய நால் வர் பலவந்தமாக அவரது ஆடம் பரமற்ற வதிவிடத்திற்குள் செல் கிறார்கள். அங்கே அவர் மடக்கிப் பிடிக்கப்படுகிறார். சட்டவிரோத மாக உள்ளே புகுந்த அவர்கள் புக்கோப்சாவின் சகோதரரையும், 17வயது மகனையும் கட்டிப் போடுகிறார்கள். அதைத் தொடர் ந்து புக்கோப்சாவின் மார்பிலும் கழுத்திலும் வயிற்றிலும் கத்தியால் குத்தி, இறுதியாகத் தொண்டை யைக் கிழித்துவிட்டுத் தப்பி ஓடும் வரையில் இரண்டு குடும்ப உறுப் பினர்களும் செய்வதறியாது இந் தப் பயங்கரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சென்ற வாரம் வரை புக்கோப் சாவின் கொலையாளிகள் யாரென்பது கண்டுபிடிக்கப்படாத அளவில் அவர்கள் தலைமறை வாகி விட்டார்கள். ஆனால் அவரு டைய கொலைக்கான காரணம் பற்றி ஒரு சில அல்ஜீரியருக்கே சந்தேகம் இருந்து வருகிறது. 1991 டிசம்பரில் நடந்த தேர்தலில் அடிப்படைவாத இஸ்லாமிய இரட்சணிய முன்னணியின் வெற் றியை மறைத்து இராணுவ அரசு தேர்தலை ரத்துச் செய்த நாள் தொட்டு தீவிரவாதிகள் அல்ஜீரி யாவின் மதச்சார்பற்ற அமைப்புக் கெதிராக இவ்விதமான ஈவிரக்க மற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆரம்பத்தில் இந் தத் தீவிரவாதிகள் பொலிஸ் அதி காரிகள் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள் என்போரை இலக்கு வைத்து இயங்கி வந்தார் கள். சமீபத்தில் தாக்குதல்கள் ஒரு புதிய திசையை நோக்கித் திருப்பி விடப்பட்டிருக்கின்றன. பிரான்சில் பயிற்றப்பட்ட அல்லது பிரான்சிய மொழி பேசும் எழுத்தாளர்களை, கல்வியாளர்களை, வேறுதொழில் புரிவோரைக் கொன்று வருகிறார் கள். சென்ற மூன்று மாதங்களுள் கொலையுண்டவர் ஆறாவது பிரபல அறிவுஜீவி புக்கோப்சா ஆவார். கொலையுண்டவர்களுள் எழுத்தா ளரும் டாக்டருமான லாடி விலிசி ஆக்கியோனும் பத்திரிகையாளரு மான சஹார் ஜவுட் உலகப் புகழ் பெற்ற உளவியல் நிபுணரான மஹீ வூட்பவுசெய்சி எழுத்தாளரான ஹபித் சென் ஹாத்திரி டிக்கோப் காவிக்கு முன்னர் உலகளாவிய மூலோபாயக் கல்விக்கான தேசிய கழகத்தின் தலைவராக இருந்த டிஜிலாலி லயப்ஸ் என்போரும் அடங்குவர். மேற்கத்தைய செல் வாக்குப் பெற்ற ஏனைய அறிவு ஜீவிகளுக்கு அவர்கள் அல்ஜீரியா வில் தங்கியுள்ள வரைக்கும் அவர் களுக்கு உயிராபத்து உண்டு என்ற எச்சரிக்கை மிகத் தெளிவாக விடப்பட்டுள்ளது.

இரகசியத் தாக்குதற் பட்டியல்:

புக்கோப்சாவின் கொலைக்கு அரச வன்மைான கண்டனம் தெரிவித்து அது ஓர் ஈவிரக்கமற்ற காட்டு மிராண்டித் தனமான செயல் என்று வருணித்துள்ளது. கைவச முள்ள அனைத்து வழிகளும் உப யோகிக்கப்பட்டு கடுமையான விதத்தில் நாட்டின் எதிர்காலத் துக்கு அச்சுறுத்தலாகவுள்ள பயங் கரவாதப் புற்று நோயை எதிர் கொண்டே தீருவோம்'' என்கிறது அரசு. ஆனால் 18 மாதங்களாக 20,000 உயிர்களைப் பலிகொண்ட வன்முறையை தடுத்து நிறுத்திக் கொள்ள முடியாமையை அரசு நிரூபித்துள்ளது. இஸ்லாமியத்தீவிர வாதிகள் ஓர் இரகசியத் தாக்குதல் பட்டியலைத்தயாரித்துள்ளதாகவும் 100 அறிவு ஜீவிகளின் பெயர்கள் அதலில் இடம்பெற்றுள்ளதாகவும் இந்தப்பட்டியல் நாட்டின் எல் லாப்பகுதியிலுமுள்ள மசூதிகளில் விநியோகம் செய்யப் பட்டுள்ள தாகவும் வதந்திகள் உலாவுகின் றன. அவை உண்மையா, பொய்யோ, எதுவாக இருந்தா லும் அல்ஜீரியாவின் கல்விகற்ற, வசதி படைத்தவர்கள் மத்தியில் உள்ள அச்சத்தை மேலும் வலுப் படுத்துகின்றன. ''இரவிலே வீட் டுக்குப்போக அஞ்சுகிறோம்: பக லிலோ பணிக்குப் போக அஞ்சுகி றோம்'' என்று அல்ஜியேசில் உள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒரு வர் கூறுகிறார். ''நாங்கள் அச்ச வாதத்தால் முடக்கப் பட்டுள் ளோம்'' என்கிறார் அவர்.

அல்ஜீரியாவின் அறிவு ஜீவி களை ஓர் அபாயமாகக் கருதி நாட்டின் தீவிரவாதிகள் அவர் களை இலக்காகக் கொண்டு தாக்கி வருகிறார்கள். அபாயமாக இல்லாதபோயினும் தாங்கள் அல்ஜீரியாவிலே அமைப்பதற்காக கனவு காணும் இஸ்லாமியக் குடியரசில் இவர்கள் வேண்டப் படாத சக்திகள் என்று நினைக் கிறார்கள் அடிப்படை வாதிகள்.

New Doc 2020-04-06 14.46.20_page-0063.jpg

ஆபிரிக்கா

அல்ஜீரியாவின் அறிவு ஜீவிகளில் அனேகர் பயிற்சியாலும், கண்ணோட்டத்தாலும் மிகக் கொடிய அளவு மேலைத் தேசக் கடைப் பிடிப்பாளர்களாவர். முஸ்லிம்களேயாயினும் பெருமளவில் இஸ்லாமிய அரசு என்ற தத்துவத்திற் கெதிரான மத சார்பின்மையைக் கைக்கொள்பவர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்கள் இடம் பெறும் அரசியல் முறையை முன் வைப்பவர்கள். அவர்கள் விரும்பும் ஜனநாயக முறையிலான அரசு இஸ்லாமியக் குடியரசொன்றின் கீழ் இயங்கவே முடியாது.

அல்ஜீரியாவின் சிதறுண்டு போயுள்ள அநேக அறிவு ஜீவிகள் பயங்கரவாதத்தின் ஆட்சியை ஒடோட விரட்டக் கங்கணம் கட்டியுள்ளனர். அல்ஜீரிய மக்களோடு ஐக்கியப்பாட்டை வெளியிட்டுள்ள அவர்கள் தமது சொந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற அச்சுறுத்தலுக்கு அஞ்சி வெளியேறப் போவதில்லை என்றும் கூறியுள்ளனர். 100 பேர் வரையிலான அல்ஜீரிய அறிவு ஜீவிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தனது நாடு அரசியல் புகலிடமளிக்கத் தயாராக இருப்பதாகச் சமீபத்தில் பிரான்சின் வெளியுறவு அமைச்சர் அலெயின் ஜீப்பே கோடி காட்டியிருந்தார். இந்த வசதி செய்து கொடுக்கப் படுமாயின் புக்கோப்சாவின் திகிலூட்டும் கொலையைத் தொடர்ந்து ஒரு சில அறிவு ஜீவிகள் முடிந்தபோது வெளியேறி விடுவது நல்லது எனக் கருதி விடக்கூடும்.

பாரிசிலிருந்து மாக்குஸ் மப்றி

நியூஸ்வீக், ஜூலை 19, 1993

ஒரு சந்நியாசியின் சரிதம்

சென்றகிழமை ரஷ்யச் சுவடிக்கூடக் காப்பாளர் ஒருவர் வெளிக் கொணர்ந்த ஒரு சாதாரண பாடசாலை அப்பியாசக் கொப்பி ரஷ்ய இராணி அலெக்சான்றாவுக்கும் சைபீரியச் சந்நியாசிகிரிகோரிறாஸ்புட்டினுக்குமிடையில் நிலவிய மர்மத் தொடர்பைப்பற்றிப் புதியதகவல்களைத் தரக் கூடும். பன்னிரண்டு பக்கங்களில் தெளிவற்ற கிறுக்கல்களில் காணப்படும் இவ்விபரங்கள் ரஷ்ய உயர் கல்விச் சஞ்சிகையில் இவ்வருட இறுதியில் வெளியிடப்படும் வரை பகிரங்கப்படுத்தப்படமாட்டாது. இவ்வாறு அரச வரலாற்றுச் சுவடிக் கூடத்தைச் சேர்ந்த டேவிட் ருஸ்கின் தெரிவித்துள்ளார். கையெழுத்து ஒப்பு நோக்கும்போது கடுமையான இலக்கணப் பிழைகளும் இந்த நாள் ஏடு றாஸ்புட்டினுடையது என்பதை உறுதிப்படுத்துவதாக மேலும் அவர் கூறியுள்ளார். றாஸ்புட்டினிடம் காணப்பட்டதாகக் கூறப்படும்மர்மச்சக்திகள் சாரையும் சாரினாவையும் அவர் அணுகக் கூடியதாகச் செய்ததுஎன்பர். தனது மனோவசியச் சக்தியால் குருதி உறையாத (Hemophiliacson) நோயினால் அழுந்திய மகனுக்கு சார் ஆறுதலளித்ததன் காரணத்தால் மிக விரைவிலேயே அலெக்ஸான்றாவின் ஆலோசகரானார். 1916 ஆம் ஆண்டு அரசியின் மேல்றாஸ்புட்டினின் வளர்ந்து வரும் செல்வாக்கை வெறுத்த தீவிரவாதிகளின் மாளிகைச் சதிக்குப் பலியானார். றாஸ்புட்டின் ஏன் இந்த நாளேட்டை வைத்திருந்தார் என்பது விளங்கவில்லை. ஆனால் இதில் தான் அரச மாளிகைப் பதவிப்பேரம் பேச்சுகளில் ஈடுபட்டிருந்ததை நியாயப்படுத்த எத்தனித்துள்ளார் என ருஸ்கின் கூறுகிறார். சார் குடும்பத்தினர் எளிமையானவர்களை நேசித்தனர் என்று றாஸ்புட்டின் கூறியுள்ளதாகச் சுவடிக்கூடப் பொறுப்பாளர் ருஸ்கின் கூறுகிறார். ●

ஒக்ரொபஸின் பிடி

பரக்குவேயின் ஆளுங் கட்சி ''தி ஒக்ரபஸ்'' என்னும் புனைபெயரால் அழைக்கப்படுகிறது. ஆட்சியிலிருக்கும் இந்த ''ஒக்ரபஸ்'' என்னும் பொலறேடாக் கட்சி எமக்குப் போதும்போதும் என்றாகி விட்டதா அல்லவா என்பதையிட்டு பரக்குவேயின் வாக்காளர் மே 9 ஆந் திகதி தீர்மானிப்பர். 1989 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜெனரல் அல்பிரெடோ ஸ்ரோஸ்னரின் இக் கட்சி சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலும் தனது பிடியைப் பரப்பியிருந்தது. வாக்கெடுப்புச் சரியாக நடந்ததால் 39 வருடங்களிற் குப்பின் முதன் முதலாக பரக்குவே மக்கள் ஒரு சிவிலியனைத் தமது தலைவராகக் கொள்வர். ஒக்ரபஸ் கட்சி அமைதியாக இத்தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. சென்ற கிழமை பரக்குவேயின் ஜெனரல் லினோ ஒவியடோ (Lino Oviedo) ''யார் விரும்பினாலென்ன, யார் விரும்பா விட்டாலென்ன, யார் கவலைகொண்டால் என்ன, யார் கோபித்தாலென்ன வேறொரு கட்சியை இராணுவம் ஏற்றுக் கொள்ளாது'' என அறிவித்துள்ளார்.

அங்குள்ள ஏனைய இராணுவங்கள் ஒவியடோவிற்கு தமது ஆதரவைக் கொடுத்தன. யார் அதிகாரத்திற்கு வந்தாலும் அவரை ஆதரிப்பேன் என ஜனாதிபதி ஜெனரல் அண்டிரஸ் றொட்டிரிகெஸ் உறுதியளித்துள்ளது மன்றிலினோ ஒவியடோவின் மேற்காணும் கூற்றையும் கண்டிக்கவில்லை. ''இராணுவ அதிகாரி சொந்த அபிப்பிராயத்தை வைத்திருப்பதற்கு உரிமை உடையவர். ஆகவே தமது கட்சிக்கு வாக்களிக்கும்படி சிபார்சு செய்யலாம்'' என மேலும் அவர் கூறியுள்ளார். அவர் கண்டனந் தெரிவிக்காததற்கு ஒரு காரணமென்னவென்றால் ஸ்ரோஸ்னருக்கெதிரான சதிக்கு ஒவியோதலைமை தாங்கியதே அச்சதிப் புரட்சி றொட்றிக்கெஸ்சை அதிகாரத்தில் அமர்த்தியது. ●

New Doc 2020-04-06 14.46.20_page-0064.jpg

கண்கண்ட சாட்சி

இப்பொழுது அது யாருடைய நிலம்

1788 இல் பிரித்தானியர் வருமுன், யாரும் அவுஸ்திரேலியாவில் வசிக்கவில்லை என்று சட்ட நூல்கள் கூறுகின்றன. பழங்குடி மக்கள் தவிர வேறு யாரும் இல்லை. 1982-ல் எடி மாபோ என்ற மெரியம் மக்களினத் தலைவர் அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார். ரோறெஸ் நீரிணையில் உள்ள மோரேதீவுகள் தம்மெரியம் இனத்தவருக்கே உரிமையுடையவை என்று வாதாடினார். 1992 ஜூனில் உயர் நீதிமன்றம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அத் தீவிலுள்ள நிலங்களுக்கு உரிமை கொண்டாடவும், குடியிருக்கவும், பயன்களை அனுபவிக்கவும் உரித்துடையவர்கள் அப்பழங்குடி மக்களே எனத் தீர்மானித்தது. மாபோவின் கனவு நனவாயிற்று. நீதிமன்றத் தீர்ப்பின் பாதிப்புகள் பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் வேறு பல இனக்குழுக்கள் பல்வேறு வழக்குகள் மூலம் தமது மண்மீது தமக்குள்ள உரிமையை நிலைநாட்ட முன்வந்தனர். மாபோவின் விதவை மனைவி பொனெற்றா கூறுகிறார்: "அவர்கள் கொஞ்சம் அவசரப்படுகிறார்கள், அதிகம் எதிர்பார்க்கிறார்கள், அதிவிரைவில் பெற ஆசைப்படுகிறார்கள்." கன்பெரா (தலைநகர்) முழுவதுக்கும் ஒரு இனக்குழு உரிமை கோருகிறது.



மேற்கு அவுஸ்திரேலியாவில் மோவஞ்சும் இனம் கோரும் உரிமையே இதுவரையில் மிக அதிகப் பரப்புடையது (கிம்பாளிப் பிரதேசத்தில் 220,000 ச. கி. மீ.) வர்த்தகத்துறையினர் கரங்கத் தொழில் பாதிக்கப்படும் என அஞ்சுகிறார்கள். கிம்பாளியில் பெரிய மாட்டுப் பண்ணையாரான டேவிட் ஹமான் தமது பண்ணையின் நிலப் பகுதி பழங்குடியினருக்கு வழங்கப்பட்டதையடுத்து வெளியேறியுள்ளார். வரலாறு ஏதோ ஒரு வகையில் மீண்டும் மீண்டும் நிகழ்கிறது.

ஏசியா வீக், ஜூன் 23, 1993


New Doc 2020-04-06 14.46.20_page-0065.jpg

ஆரம்பகால வாழ்வின் ஓர் எச்சம்

மனிதவியல் வரலாறு: ஒரு புராதன துணி ஒரு கதையைக் கூறுகின்றது

ஏனைய எல்லோரையும் போல் புதைபொருள் ஆராய்ச்சியாளரும் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை உடையவர்கள். புதைபொருள் நிலங்களை ஆராயும் பொழுது மட்பாண்டங்களையும், எலும்புச் சுவடுகளையும் மற்றும் பழங்காலக் கருவிகளையும், தேடுவார்கள். துணிகள் எப்பொழுதும் காணப்படுவதில்லை. அவற்றை அவ்வளவு பாரதூரமாகக் கவனிப்பதுவுமில்லை. நெதர்லாந்து நாட்டின் லேடன் நகரில் அமைந்துள்ள இனங்களுக்கான தேசிய மியூசியத்தில் கடமையாற்றும் துணி சம்பந்தமானபுதைபொருள் ஆராய்ச்சியாளர் கிலியன் வோஜெல்சங்–ஈஸ்ற்வூட் எங்களைப் பின்னும் படை என்றே எல்லோருக்கும் தெரியும் என்று கூறுகிறார். சில ஆராய்ச்சியாளர்கள் காணப்பட்ட புராதனத் துணிகளை என்ன செய்வதென்றறியாது எறிந்து விட்டார்கள் என்றும் கூறுகிறார்.

இவ்வாறு இனிமேல் நடைபெறுவது சாத்தியமில்லை. ஒரு பழங்காலக் கருவியைச் சுற்றியிருக்கும் வெள்ளை நிறப் பின்னப்பட்ட துணியின் பகுதியைத் துருக்கியில் உள்ள கேயனு என்னும் இடத்தில் ஐந்து வருடங்களுக்கு முன் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தனர். இத்துணியை வோஜெல்சங் – ஈஸ்ற்வூட் ஆராய்ந்து இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் உடைய கண்டுபிடிப்பு என்று கூறுகிறார். காணப்பட்ட துணிகளில் இவைமிகப்பழையமாதிரியானவை 10,000வருடங்கள்பழைமை வாய்ந்தவை. அரிய வெட்டும் கருவியாக உபயோகித்திருக்கக் கூடிய மான்கொம்பைச் சுற்றிய இத்துணி கொம்பிலிருந்து கல்சியத்தைப் பெற்றுள்ளது. ஒட்டுண்ணிகளிலிருந்து காலத்தின் பாதிப்புக்குள்ளிருந்தும் துணியைக் கல்சியம் பாதுகாத்துள்ளது. எலும்பு போன்று சேதனப் பதார்த்தங்களைக் கண்டுபிடிப்பதுவே மிகவும் அபூர்வம். ஆனால், துணிகளைக் கண்டுபிடிப்பது மேலும் அபூர்வமாகும் என்று வோஜெல்சங்–ஈஸ்ற்வூட் கூறுகிறார்.



8×4 சென்.மீற்றர் அளவுள்ள இச்சிறிய துணித்துண்டு வருங்கால வரலாற்றுப் புத்தகங்களுக்குப் பல பக்கங்களைச் சேர்க்கக்கூடியது. தென்கிழக்குத் துருக்கியில் தைகிறீஸ் நதியின் முகத்துவாரத்திற்கு அண்மையில் உள்ள கேயனு பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றைய கருவிகளுடன் ஆரம்ப நெயோலிதிக் கால வாழ்க்கையின் உட்பார்வையை இத்துணி தருகின்றது என்று வல்லுனர்கள் கூறுகின்றார்கள் இதன் காலம் ஏறக்குறைய கி.மு 8000 ஆகும். அக்காலம் ஒரு பூரண மாற்றம் அடைந்த காலமாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக வேட்டையாடியும், சேகரித்தும் திரிந்த வாழ்க்கையைக் கைவிட்டு மனித இனம் உணவுப் பயிர் வளர்த்து கிராமங்களை அமைக்கத் தொடங்கிய காலமாகும். வாழ்க்கை அமைதியாக மாறியது. ஓய்வு நேரங்களில் மக்கள் கைவினைப் பொருட்களைச் செய்தார்கள். வலைகள், ஆபரணங்கள், மற்றும் பைகள் போன்றவை மக்கள் கைவினைத் திறனும் சூழ்நிலைக்கேற்ற வாறு மாறும் தன்மை உடையவர்களாகவும் இருந்தார்கள் என்பதை இத்துணி காட்டுகின்றது என்று வோஜெல்சங் – ஈஸ்ற்வூட் கூறுகின்றார். முன்னர் நம்பப்பட்டபோதிலும் பார்க்க 1500 வருடங்கள் முன்னதாகவே விவசாயம், குடியிருப்புக்கள் தோன்றியுள்ளனவென்பதை இத்துணி காட்டுகின்றது. அவரும் சிக்காகோ பல்கலைக்கழக முன்னாள் புதை பொருளியல் பேராசிரியர் றொபேட் பிறெய்ட்வுட்டும் கூறுகின்றார்கள். கிராமப்புறக் கமத்தொழில் வாழ்க்கை முறையை எட்டமுன் எடுக்கப்பட்ட படிகளைப் பற்றி எமக்குக் கூடுதலான விளக்கம் கிடைக்கின்றது என்று கூறுகிறார் பிறேயிட்வுட்.

கிட்டிய கிழக்கு நாடுகளில் அதிகமாகக் காணப்பட்ட விடுகளுக்கு அண்மையில் வளர்க்கக் கூடிய நார்களைக் கொண்டுள்ள ஃபிளக்ஸ் எனப்படும் தாவரத்தில் இருந்து இத்துணி செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றது. புதைபொருளுக்காகத் தோண்டும் இடங்களில் அதிகமான ஃபிளக்ஸ் விதைகள் காணப்பட்டன. துணியின் பின்னலை அவதானிக்கும் பொழுது சோடி சோடியாக நூல்களை முறுக்கும் பொழுது இவற்றிற்கு இடையே இடைவெளி இருந்த காரணத்தினால் இத்துணி உடுபுடவைக்கு உபயோகிக்கப்பட்டிருக்கலாம். இவ்வகையான பின்னல் துணி மிருதுவானதாகவும், வளையக் கூடியதாகவும் இருக்கும் என வோஜெல்சங் ஈஸ்ற்வூட் கூறுகிறார். ஜேல பல்கலைக்கழக மனிதவியல் பேராசிரியர் ஃபிராங்ஹோய் அந்த நாட்களில் பின்னப்பட்ட கூடைகளும் இதே நுட்பத்தில் செய்யப்பட்டன எனக் குறிப்பிடுகிறார். ஃபிளாக்ஸ் உபயோகிக்கப்பட்டிருப்பின் தாவரத்தை நீரில் தோய்த்தெடுத்து நார்களைத் துணி செய்வோர் இலகச் செய்திருப்பர். நார்கள் வளையக் கூடியனவாகிய பின்கையால் முறுக்கப்பட்டிருக்கும். வோஜெல்சங் - ஈஸ்ற்வூட் போலல்லாது உடைகள் செய்யப்பட்டதாக ஹோய் நம்பக் கூடிய நிலையில் இல்லை. பிற்காலத்தில் தறிகள் கண்டுபிடிக்கப்படும் வரை பெரிய அளவில் துணிகள் செய்திருக்க முடியாது. எழுத்துத் தோன்றிய காலம் அளவி

New Doc 2020-04-06 14.46.20_page-0066.jpg

லேயே கிட்டிய கிழக்கு நாடுகளில் 3500 கி-மு. காலப்பகுதியில் துணி நெய்தல் பரவலாக நடைபெற்றிருக்கலாம் என்று கூறுகிறார்.

முப்பது வருடங்களாக புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கேயனுவில் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். 1963 ஆம் ஆண்டு தொடக்கம் இஸ்தான்புல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பிறெயிட் வுட்டும் அவர் மனைவியும் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். கடைசிக் குகை மனிதரின் காலந் தொடக்கம் கி.மு 15000 தொடக்கம் கி.மு 13.000 .வரைக்கும் ஆரம்ப காலக்குடியிருப்புகள் பற்றியும் இடைப்பட்ட காலத்தைப் பற்றியும் அதிக அளவு செய்திகள் பெறப்பட்டுள்ளன. கிட்டிய கிழக்கு நாடுகளில் பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பே மக்கள் தமது கோதுமையையும் பார்லியையும் பயிர் செய்தார்கள். செம்பைக் காய்ச்சி அடித்து ஊசிகள் கொளுக்கிகளைச் செய்யவும் இரத்தினக் கற்களை வெட்டவும் கட்டடப் பதார்த்தங்களை ஆக்கவும் தொடங்கிவிட்டார்கள். இவர்களின் சிறந்த செயற்பாடு கேயனு மற்றும் வேறு புதை கிடங்குகளில் காணப்பட்ட பெறாசோ தளங்களாகும். (அதாவது பளபளப்பான நிறங்களையுடைய, மினுக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட சீமெந்துத்தளம்)

ஹோல் கூறுவதின்படி இன்றைய இஸ்ரேலுக்கும் துருக்கிக்கும் இடையே வடக்குத் தெற்கு அச்சின் வழியே கேயனு பண்பாடு பரந்திருந்தது. ஆள்பவர்களோ அல்லது உயர்பதவியில் உள்ள தலைவர்களோ இருந்ததாகச் சான்றுகள் இல்லை. எல்லோரும் ஒரே சமூக அந்தஸ்தில் வாழ்ந்தார்கள். ஹோலுக்கு ஆச்சரியமாக இருப்பது யாதெனில், அக்காலத்திற்கும் பிரதேசத்திற்கும் வழமையில் இல்லாத திட்டமிடப்பட்ட பெரிய கூட்டங்களாக மக்கள் கேயனுவில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதேயாகும். அவர்களது வீடுகள் தட்டையான கூரைகளைக் கொண்ட செவ்வக வடிவமுடையவையாகும். பல சிறிய அறைகளைக் கொண்ட பலவீடுகளில் சில அறைகள் உணவுத் தானியங்கள் சேமித்து வைக்கப் பயன்பட்டன. இதே மாதிரித் திட்டமும் முன்னேச்சரிக்கையும் பிற்காலக்குடியிருப்புக்களில் காணப் படவில்லை. பழங்கால மனிதக் கூட்டங்களின் வாழ்க்கை முறைகளை அறிவதற்கு ஒருசிறிய துண்டு துணி உதவியது என்பது வோஜெல் சங்-ஒஸ்ற்லூட் இன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது எனலாம். புதை பொருளாகிய துணிவகைகள் இப் பொழுது ஓர் ஆழமான கல்விக் குரிய பாடமாகும் என்று அவர் கூறுகிறார். துணி நெய்தலில் துருக்கியின் பெருமை வாய்ந்த வரலாற்றை நோக்கும் பொழுது மிகப்பழைமை வாய்ந்த துணியின் மாதிரி தாய் மண்ணிலே பெறப்பட்டதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்றும் துருக்கியருக்குத் தலைதாழ்த்தி வணங்க வேண்டும் என்றும் பிறெயிட்வுட் குறிப்பிடுகிறார். வரலாறும் அவ்வாறே, மண்ணுக்குக் கீழே பெறப்பட்ட ஒவ்வொரு உட்பார்வைத் துரும்புடனும் அது மாற்றமடைகிறது.

எழுதியவர்:
நியுயோர்க்கிலிருந்து
றிச்சாட் .:பிரான்ஸ்பேகர்ஜூலியர்
பாரிஸ்ஸில் இருந்து
மெகன் டிஸ்லி

நியூஸ் வீக், ஜூலை 26, 1963

வரலாற்றில் சில மைல் கற்கள்

மிகப் பழைய துணியாகிய கேயனு துணி, மக்கள் வேட்டையாடி சேகரித்துத் திரிந்த வாழ்க்கையிலிருந்து அமைதியான கிராம விவசாயிகளாக மாறிய காலத்தை பின் நோக்கிக் கொண்டு செல்கின்றது என வல்லுநர்கள் நம்புகிறார்கள்.

கி. மு.	கி. மு.	கி. மு.	கி. மு.	கி. மு.	கி. மு.
18,000	15,000	8,000	6,000	3,500-3,000	1,500
வில்லும் அம்பும்	குகைச் சித்திரங்கள்.	நெய்யப்பட்ட துணி	கமம் செய்யும் கிராமங்கள்.	பெரிய அளவில் நாகரிக வளர்ச்சி: சில்லு, எழுத்து	உலோகத்தினால் செய்யப்பட்ட விவசாயக் கருவிகள்

New Doc 2020-04-06 14.46.20_page-0067.jpg

மீளுற்பத்தியிலும் சிறந்தது

நேற்றைய உதவாப் பொருள் நாளைய பொக்கிஷமாய் மாறும் வகையுண்டு. 2 ஆம் உலகப் போரின் பொழுது 40, 000 அமெரிக்கத் துருப்புகள் பப்புவா நியூகினியிலுள்ள பிஸ்மார்க் தீவுக் கூட்டத்தின் ஒரு சிறிய எமிறோ தீவில் தண்ணீர்த் தாகத்தால் தவித்தனர். அவர்கள் அந்த உஷ்ண வலய வெப்பத்தில் தம்மைக் குளிர்மையாக வைத்திருக்கும் பொருட்டு பல்லாயிரக் கணக்கான கொக்கோ கோலா குளிர் பானங்களை மடக் மடக் கெனக் குடித்தனர். ஒரு போத்தல் கொக்கோ கோலாவின் அன்றைய விலை 05 சதம் மாத்திரமே, தமக்கென உடையதாய சுழிவு நெளிவுகளைக் கொண்ட வெற்றுப் போத்தல்களை அகற்றுவதும் இலகுவாயிருந்தது. அமெரிக்க இராணுவத்தினர் அவை அனைத்தையும் கடலில் மூழ்க விட்டனர்.

சில வருடங்களுக்கு முன் எமிறோ தீவிலுள்ளோர் போத்தல்களை மீளுற்பத்திக்காக உருக்குவதன் மூலம் கொஞ்சப் பணம் சம்பாதிப்பதற்காகப் பழைய கொக்கோக் கோலா வெற்றுப் போத்தல்களைச் சேகரிக்கத் தொடங்கினர். பின்பு 1991 ஆம் ஆண்டு மைக்கல் கௌச் எனும் அவுஸ்திரேலிய வியாபாரியின் மனதில் அத் தீவில் கடற் றொழிலை வளர்க்கும் சாத்தியக் கூறுகளை ஆராயும் பொழுது இப் போத்தல்களை ஞாபகார்த்தச் சின்னங்களாக விற்கும் எண்ணம் உதித்தது. இரண்டாம் உலக யுத்தப் போர்களில் கோரல் கடலில் நடைபெற்ற மே 1942, மார்ச் 1943ஆம்ஆண்டுப் போர்களில் 50 ஆம் ஆண்டு ஞாபகார்த்தச் சின்னமாக விற்கத் தீர்மானித்தனர். ஜப்பானிய படைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதில் இவ் விரு போர்களும் முக்கிய பங்காற்றின. சிட்னியிலுள்ள ''வேவலி றோற்றரி கிளப்'' 100, 000 வெற்றுப் போத்தல்களைத் துப்புரவு செய்து பொதியாக்கிக் கப்பலிலேற்றும் பொறுப்பை ஏற்றது.

1943 இலும் பார்க்கத் தற்போதைய விலைகள் சற்று உயர்ந்தவையே. ஒரு போத்தலின் விலை 32 டொலர். கிடைத்தற்கரிய பச்சைக் கிளாசுடன் கூடிய இரண்டு போத்தல்களைக் கொண்ட பொதியின் விலை 68 டொலர். ஒவ்வொரு பொதியும் அவை உண்மையாக 2 ஆம் உலக மகாயுத்தக் காலத்து வெற்றுக் கொக்கோக் கோலாப் போத்தலை உடையவை என்பது பப்புவா நியூனியின் கலாசாரச் சுற்றுலாத் திணைக்களத்தின் உறுதிப்பாடாகும். இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் 16, 000 பிரஜைகளை உள்ளடக்கிய எமிறோ தீவிலும் அண்மையிலுள்ள லவோங்கை, முசோ, ரெஞ்ச் ஆகிய தீவுகளிலும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களையும், சமூக சேவைகளையும் அமைக்க உபயோகிக்கப்படும். இத் தீவுகள் மிகப் பின்தங்கியவை. அகக் கட்டமைப்பு அற்றவை, போதிய வருமான வசதியற்றவை எனக் கருதப்படுகின்றன.

ஐந்நிலைவுச் சின்னங்களின் வியாபாரம் மிகச் சுறுசுறுப்பாயிருந்தது. அமைப்பாளருக்கு இது வியப்பூட்டியது. இரண்டு நாட்களுக்குத் தொலைபேசிகள் கடுமையாக வேலை செய்தன. யுத்த காலத்தில் துருப்புக்களை உபசரித்த பலரும் தொலைபேசி மூலம் தமக்கு வேண்டியவற்றைப் பெற்றனர். வேறு பலரும் வாங்கினர். பொதிகள் புதிதாக இருந்தாலும் அவை பழைய போத்தல்களையே உள்ளடக்கின. ஞாபகச் சின்னமே அவற்றின் முக்கிய அம்சம்.

ஏசியாவீக்,
ஜூன் 16, 1993.

New Doc 2020-04-06 14.46.20_page-0068.jpg

குற்றத் தடுப்பு:

சீனாவுக்குச் செல்லும் அதிவேக நீரூந்துப் படகு

தனது கணவரின் காரில் பொருத்தப்பட்ட தொலைபேசியுடன் தொடர்பு கொண்ட போது கிரேஸ் கூல்ஜாரி (GRACE GOOL JARRY) என்ற பெண்மணிக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு சீனக் குரல் விடை பகர்ந்தது. தானும் அவருடைய கணவரின் பொன்வர்ண மெர்சிடஸ் பென்ஸ் 420 எஸ்.ஈ. எல்.காரும் ஓர் அதிவேக நீருந்துப் படகில் சீனாவுக்குச் செல்லுகிறோம் என்று அக்குரல் சொல்லிற்று. மேலும் அக்குற்றவாளி: ''நாங்கள் களவெடுப்பதே தொழிலாகக் கொண்டவர்கள்; இதைத் தான் நாங்கள் எப்போதும் செய்கிறோம். உங்கள் கணவரின் காரை எடுப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி; அதன் அழகே தனி'' வெகு நிதானமாக விளக்கம் கூறினான்.



சீனாவை நோக்கிச் செல்லும் அதிவேக நீருந்துப் படகு. சொகுசுக் கார்க் களவுகள் கூடின நடவடிக்கைகளால் குறைந்துள்ளன — இப்போதைக்கு

சொகுசுக் கார்களுக்கு சீனாவில் மிகப் பெரிய கிராக்கி. இறக்குமதி செய்யப்பட்ட வண்டிகளுக்கு 120 வீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டும் சீனா கார்க் கடத்தற் காரரின் சுவர்க்கமாகத் திகழ்கின்றது. கொங்கொங் தெருக்களிலிருந்து கார்களைத் திருடி கொள்கலன்களை ஏற்றும் லொறிகளில் மறைத்தும், நீருந்துப் படகுகளில் செருகியும் இவர்கள் சீனாவுக்குள் தள்ளி விடுகிறார்கள். சில பணம் படைத்த சீனப் பிரஜைகள் தங்களுக்குத் தேவையான கார்களின் அங்க அடையாளங்களைக் கடத்தற் காரர்களிடம் கொடுத்து தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

சென்ற வருடம் கொங்கொங் 6,918 வாகனங்கள் இவ்வாறு களவாடப் பட்டுள்ளன. அவர்கள் விரும்பிக் கைப்பற்றும் வண்டிகளின் விபரம் பின்வருமாறு: மெர்சிடஸ் பென்ஸ் 1,025, பீஎம் டபிள்யூ (BMW) 640, டொயோற்றா கிறவுண் 330, சென்ற 1991 ஆம் ஆண்டு காப்புறுதி ஸ்தாபனங்கள்

கொங்கொங் நாட்டின் கார் கடத்தல்காரரின் இழந்த சுவர்க்கம்

30.5 மில்லியன் டொலரை இழந்துள்ளன. சென்ற வருடம் இத் தொகை இரண்டு மடங்காகியது. 73.5 மில்லியன் டொலரை வண்டி. சொந்தக்காரர்களின் தவணைக் கட்டுப்பணமும் இதற்கேற்றவகையில் உயர்ந்துள்ளது. ஒரு புதிய மெர்சிடஸ் பென்ஸ் 500 எஸ்.ஈ. எல். வண்டியின் சொந்தக்காரர் அதற்கு விலையாகக் கொடுத்த 195,000 டொலர் இற்கு மேலாக முழுக் காப்புறுதிப் பாதுகாப்புக்கு இன்னுமொரு டொலரை 32,000 கொடுக்க வேண்டியுள்ளது.

கடத்தற்காரர்களை அடக்குவதற்கு கொங்கொங் நாட்டின் காவற்துறை, கங்கப் பகுதி, அரச வான்படை, றோயல் விமான அணி, கடற்படை ஆகியன ஒருமித்துச் செயற்படுகின்றன. சீன மொழியில் கடத்தற்காரர்களின் அதிவேக நீருந்துப் படகுகள் டெய்:பயிஸ் (TAI FEIS) என்று சொல்லப் படுகின்றன. இவைகளுக்கு ஐந்து இயந்திரங்கள் வரை பொருத்தப் படுகின்றன. கொங்கொங் நாட்டு திருட்டுத் தடுப்புப் படையினர் சீன நீர் எல்லைவரை துரத்திச் செல்கின்றார்கள். அதற்கிடையில் பிடித்து விட்டாலோ 30 கடல் மைல் (நொட்ஸ்) வேகத்தில் செல்லும் திருடர்களின் படகில் பாய்ந்து தாம் கொண்டு செல்லும் கூரிய கத்தியால் படகின் எரி பொருட் குழாயை வெட்டுவார்கள்.

தடுப்புத் துறையினரின் முயற்சிகள் பலன் தரத் தொடங்கி விட்டன. திருட்டுக்கள் இவ் வருடம் நாலு மாதங்களில் 44 வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளன. ஜனவரி மாதம் 579 கார்கள் திருடப்பட்டன. நாலாம் மாதம் இது 322 ஆகக் குறைந்துவிட்டது. காவல் துறை இவ்வருடம் இதுவரை 17

New Doc 2020-04-06 14.46.20_page-0069.jpg

படகுகளைக் கைப்பற்றியுள்ளது. அதிகமாகத் திருடர்களின் பாவனையிலுள்ள பல இயந்திரங்கள் பொருத்திய நீருந்துப் படகுகள் மலேசிய நாட்டில்தான் செய்யப்படுகின்றன. கொங்கொங் நாட்டின் காவல்துறை குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஜீ. டபிள்யூ. லான்டர் (G. W. LANDER) என்பவர் சொல்கிறார்: ''நாங்கள் மலேசியாவுக்குச் சென்றோம். இந்தப் படகுகள் எதற்காகப் பாவிக்கப் படுகின்றன என்பதை அதிகாரிகளுக்கு விளக்கினோம். அவர்கள் இப்போது இதுபோன்ற படகுகள் கட்டுவதைத் தடைசெய்து விட்டார்கள். இப்போது படகுகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது'' என்று.

கொங்கொங் நாட்டின் உளவுத் துறையும் அரும் பணியாற்றுகின்றது. ஊழலுக்கு எதிரான தனி அதிகார சபை INDEPENDENT COMMISSION AGAINST CORRUPTION) பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'இலையான் பிடித்தல்'' என்று பட்டப் பெயர் சூட்டப்பட்ட இந்த நடவடிக்கை கடத்தல் கோஷ்டிகளுடன் ஒத்துழைத்த ஒன்பது நடுத்தர சுங்க இலாகா அதிகாரிகளைக் கைது செய்துள்ளது. கொள்கலன் லொறிகளில் கார்களைக் கடத்துவதற்கு வசதி செய்து கொடுத்ததுதான் இவர்கள் செய்த பெரும் குற்றம். 2.3 மில்லியன் டொலர் பெறுமதியான இருபது களவாடப்பட்ட சொகுசுக் கார்கள் இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டன.

சட்டத்திற்குப் புறம்பான இந்த இறக்குமதிகளைத் தடுப்பதற்குச் சீனாவும் தன் பங்கிற்கு முயலத் தொடங்கியுள்ளது. கொங்கொங் நாட்டில் பாவனையிலுள்ள வண்டிகளில் ஸ்ரியரிங் வில்(STEERING WHEELS) வலது பக்கத்தில் அமைந்துள்ளது. சீனாவில் பெரும் பாலும் இவை இடது பக்கத்திலேயே பொருத்தப்பட்டுள்ளன. சென்ற வருடம் சீனா ஸ்ரியரிங் வில் வலது பக்கம் பொருத்தப்பட்ட வாகனங்கள் இறக்குமதி செய்வதைத் தடை செய்துள்ளது. ''இது அமுலாக்கப்படாத சட்டமாகி விடுமோ என்று நாம் ஐயுறவு கொண்டோம். ஆனால் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுவதை நாம் கவனித்துள்ளோம்'' என்கிறார் லான்டர். இப்போது கொங்கொங் வியாபாரிகள் செலுத்திகள் இடது பக்கம் பொருத்தப்பட்ட கார்களைச் சட்டபூர்வமாகச் சீனாவுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இது தங்கள் நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றி என்கிறார் குற்றத் தடுப்பு அதிகாரி லான்டர். ''இடது பக்க அமைப்புள்ள கார்களின் வியாபாரம் அமோகமாக வளர்ந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் 15,000 த்திலிருந்து 20,000 வண்டிகள் கொங்கொங் ஊடாகச் செல்லுகின்றன. இன்று பலர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்'' என்று அவர் மேலும் தகவல் தருகின்றார்.

சொகுசு வண்டிகளின் சொந்தக் காரர்களும் திருட்டைத் தடுக்கும் சொந்த முயற்சிகளில் இறங்கியுள்ளார்கள். திருடர்கள் கைவைத்தவுடன் மணி அடிக்கும் சாதனங்கள், எரிபொருள் இயந்திரத்திற்குபோகாமல் தடுக்கும் உபகரணங்கள் இன்று பலவாறாகப் பொருத்தப்படுகின்றன. அநேகமாகக் காப்புறுதி ஸ்தாபனங்களே இவைகளை விற்பனை செய்கின்றன. கிடாயி ஏகே 28 என்ற இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்யும் கருவி 1,600 டொலரிற்கு விற்பனை ஆகின்றது. திருடர்கள் கண்ணில் படாமல் வண்டியில் இது மறைக்கப்பட்டுள்ளது. இக்கருவி பொருத்திய கார்களின் காப்புறுதிச் செலவு 19,000 டொலர் ஆகும். காப்புறுதி ஸ்தாபன அதிகாரி பிரான்ஸிஸ்சான் கிடாயி ஏகே 28 பொருத்தப்பட்ட 2,000 கார்களில் நான்குதான் திருடப்பட்டுள்ளன என்று சொல்லுகின்றார். திருட்டுக்களைக் கட்டுப்படுத்தத் தொழில் நுட்பம் உதவுகின்றது. ''களவில் தோல்வி விகிதம் கூடிக்கொண்டு போகின்றது. முயன்று பார்த்து இயலாமையால் விட்டுச் சென்ற வாகனங்களின் தொகை அதிகரிக்கின்றது'' என்று லான்டர் பெருமிதமடைகின்றார்.

சிலருடைய கருத்தில் இளைப் பாறிய குர்க்காப் படைவீரர்கள் தான் சிறந்த பாதுகாப்பாளர்களெனச். சென்ற வருடம் நேபாளத்திலிருந்து 110 குர்க்காக்கள் ஜார்டின்செக்குரிகோன் என்ற பாதுகாப்பு ஸ்தாபனத்தால் வரவழைக்கப்பட்டுள்ளனர். முதலில் யுத்தமுனை அனுபவம் பெற்றவர்கள் எப்படி வண்டிகள் நிறுத்தும் இடத்தை பாதுகாப்பார்கள் என்று மக்கள் சந்தேகித்தனர் ஆனால் இப்போது குர்க்காக்கள் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகி விட்டனர். ''திருடர்களை தடுத்து நிறுத்த அவர்கள் பின்வாங்க மாட்டார்கள் என்று அந்தப் பாதுகாப்பு நிறுவன அதிகாரி கிறிஸ் ஹார்டி கூறுகிறார். கையில் குறுந்தடியுடன் அவர்கள் நாளொன்றுக்கு பன்னிரண்டு மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மாதாந்த ஊதியம் 1,800 டொலர் ஆகும்.

கொங்கொங் நாட்டின் காப்புறுதியாளர்களின் கழகச் செயற்பாட்டதிகாரி வை. வை. ராங் 1991 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களாகத் திருட்டுக்கள் குறைந்ததை நினைவு கூருகிறார். ''ஆனால் 1992 ஆம் ஆண்டு மிகவும் கூடாத காலம்'' என்கிறார் அவர். மீண்டும் திருட்டுக்கள் குறையத் தொடங்கியுள்ளன. ஆனால் காப்புறுதிக்குக் கொடுக்க வேண்டிய கட்டுப்பணத்தின் தொகை இன்னும் குறைக்கப்படவில்லை என்றும் அவர் சொல்லுகிறார். ''இப்போது குற்றத்தடுப்பு வெற்றி கொள்ளத் தொடங்கியுள்ளது. ஆனால் பிரச்சினை மீண்டும் தலையூக்காது என்பதற்கு ஓர் உத்தரவாதமும் இல்லை'' என்று அபிப்பிராயப்படுகிறார் லான்டர்.

ஏசியாவீக், ஜூலை 2, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0070.jpg

ஆரோக்கியமான இதயத்திற்கு உயிர்ச்சத்து "E"



இதய நோய் வராமல் தடுப்பது ஓர் இலகுவான காரியமல்ல. எமக்கு இதய நோயினைப் பற்றி வைத்திய நிபுணர்கள் சளைக்காது அடிக்கடி எடுத்துரைப்பது போல சிகரட் புகைத்தலைக் கைவிடல், தீவிர உடற்பயிற்சி செய்தல், தானியத்தை அதிகளவில் அடிப்படையாகக் கொண்ட உணவை உட்கொள்ளுதல் போன்ற அறிவுறுத்தல்களும் தேவையானவை. ஆனால் கூடுதலான உயிர்ப்பாதுகாப்பு உத்தரவாதம் மருந்துக் குளிகைகள் உருவில் வரலாம். ஆராய்ச்சியாளர்கள் ஏட்சியேற்றலை தடுப்பவையான உயிர்ச்சத்து E மற்றும் பீற்றா கரோட்டின், உயிர்ச்சத்து 'C' போன்றவை பாதிக்கப்படுவதை தடுக்கின்றன என்பதையிட்டு நீண்ட காலமாக ஒரு சந்தேகம் கொண்டுள்ளனர்.

இன்று இரு புதிய ஆய்வுகள் அவர்களுடைய முடிவு சரியானதை என எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல் அதிலும் உயிர்ச்சத்து 'E' யைப் பொறுத்தமட்டில் இது முற்றிலும் சரியானது என்று கூறுகின்றன.

சென்றவார நியூசிலாந்து மருத்துவச் சஞ்சிகையில் இவ் ஆய்வு பற்றிக் கட்டுரை வெளி வந்துள்ளது. அதில் உயிர்ச்சத்து 'E' யை உணவில் சேர்த்துக் கொண்ட 120.000 பேருக்கு இதய நோய் ஏற்பட்ட விதத்தை எடுத்துப் பார்க்கும் போது இது உயிர்ச்சத்து 'E' யை உணவில் சேர்க்காதவர்களில் இருந்து 40 வீதம் குறைவாகக் காணப்படுகின்றது. எனினும் இதற்கான காரணத்தையும் இதுஏற்படுத்துகின்ற விளைவையும் இன்னமும் நிரூபிக்க முடியவில்லை. ஆனால் புதிய கண்டு பிடிப்புகள் யாவும் விற்றமீன்களை அமெரிக்காவின் பிரதான கொலையாளியான இதய நோயின் அதி சக்தி வாய்ந்த எதிர்ப்பு ஆயுதமாக எடுத்துரைக்கின்றன.

சொற்ப காலமாக ஆராய்ச்சியாளர்கள் இரத்தத்தில் காணப்படும் அதிகளவு கொலஸ்ரோல் மட்டும் தான் இதய நோய்க்குக் காரணமல்ல என்பதை அறிந்து கொண்டுள்ளனர். வைத்திய கலாநிதி டானியல் ஸ்ரெயின்பேக் என்பவர் சாண்டியாகோவில் உள்ளகலிபோர்ணியாப் பல்கலைக் கழகத்தில் ஓர் இதய நோய்ச்சிகிச்சை நிபுணர் ஆவார். இவர் பத்தாண்டு காலங்களுக்கு முன்பே கொடுத்த தனது விளக்கத்தில் ஒட்சியேற்றம் என்ற இரசாயன மாற்று நடவடிக்கையானது (இம் மாற்றம் தான் வெண்ணெய் பழுதடைவதற்கும், உலோகங்கள் துருப் பிடிப்பதற்கும் காரணமாக உள்ளது.) இதயத்திற்கான இரத்த விநியோகத்தை மேற்கொள்ளும் முடியுருநாடியையும் சேதமாக்குகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ் ஒட்சியேற்றத்தாக்கத்தில் ஏற்றமற்ற துணிக்கைகள் (Free Radicuts) பங்குபற்றுகின்றன. ஒட்சிசன் மூலக்கூறு உடற் கலங்களில் தாக்கம் புரிவதைப் போல இவ் வேற்றமற்ற துணிக்கைகளும் உடலில் சில தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால் சாதாரண ஒட்சிசன் மூலக்கூறு ஒரு சோடி அணுக்களுடன் இணைப்பை ஏற்படுத்துவது போலல்லாது இவ் வேற்றமற்ற துணிக்கையானது ஓர் அணுவை மட்டும் காவிச் செல்கின்றது. ஒட்சியேற்றத் தாக்கமானது இவ் வேற்றமற்ற துணிக்கை ஒன்று அருகில் காணப்படும் மூலக்கூறில் இருந்து ஓர் அணுவைப் பிரித்தெடுப்பதினால் நடைபெறுகின்றது. இதனால் தொடர்ச்சியாக அரிப்பை ஏற்படுத்தக் கூடிய தாக்கம் ஒன்று ஏற்படுகின்றது.

இவ்வொட்சியேற்ற மாற்றம் தான் கண்ணில் பூவிழுதல் (Cataract) இல் இருந்து புற்று நோய் வரையிலும் நடைபெறுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒட்சியேற்ற மாற்றத்தினாலேயே ஆபத்தை விளைவிக்கின்ற எல். டீ. எல் என்ற தீய கொலஸ்ரோல் உண்டாக்கப் படுகின்றது என்று நம்புகிறார்கள். மேலும் ஸ்ரெயின்பேக்கும் இதர ஆராய்ச்சியாளர்களும் எல். டீ. எல் என்ற கொலஸ்ரோல் முதலில் இரத்தக் குழாய்களில் படிந்து ஒட்சியேற்றப்படுகின்றது என்று கூட்டிக் காட்டியுள்ளார்கள். இதனால் அவ்விடத்தில் உள்ள இழையங்கள் சேதமாக்கப்படுவதுடன் வெண் குருதிச் சிறு துணிக்கைகளும் அவ்விடத்திற்குக் கவரப்படுகின்றன. இவ் வெண் குருதிச் சிறு துணிக்கைகள் ஒட்சியேற்றப்பட்ட எல். டீ. எல் கொலஸ்ரோலுக்கு அருகில் நஞ்சுகளை விழுங்கி குருதிக் குழாய்களின் மேல் படிகின்ற படியால் குருதிக் குழாய்களின் துவாரம் ஒடுங்குகின்றது. மேலே விபரிக்கப்பட்ட மாற்றத்தில் உயிர்ச்சத்து 'E' தலையிட முடியும் என்பதற்கும் பல காரணங்கள் உள. இது இயற்கையாகவே ஒட்சியேற்றத்தை எற்படுத்தக் கூடியது. இதனால் ஒட்சியேற்ற இரசாயனத் தாக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியும் ஏனெனில் இது ஏற்றமற்றதுணிக்கைகளின் மேலுள்ள சோடியற்றப் அணுக்களை பிரித்தெடுக்கக் கூடியது. மேலும் இது பரிசோதனைக் குழாய்களில் எல். டீ. எல். கொலஸ்ரோலை ஒட்சியேற்ற

New Doc 2020-04-06 14.46.20_page-0071.jpg

விடாமல் தடுக்கின்றது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். மேலும் ஆராய்ச்சிகளின் போது இரத்தத்தில் அதிகளவு கொலஸ்ரோல் கொண்ட முயல்கள், குரங்குகள் போன்றவற்றில் அதிகளவு உயிர்ச்சத்து 'E' கொடுக்கும் போது இருதய நோய் வராமல் தடுக்கப் படுகின்றது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆதாரங்கள் பூரணமற்று இருந்த போதும் மனித ஆராய்ச்சிகளின் போது பல்வேறு உணவு வகைகளில் கிடைக்கும் குறைந்தளவு உயிர்ச்சத்து 'E' யிலும் பார்க்க 100-600 அலகுகள் அளவு உடைய அதிகளவு உயிர்ச்சத்து 'E' கூடுதலான நன்மைகளை அளிப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இதுவரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலும்பார்க்க கடந்த வாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தரவுகள் மிகவும் வலுவுடையனவாகும். இங்குமேற் கொள்ளப்பட்ட இருபெரும் ஆராய்ச்சிகளும் வைத்திய கலாநிதி மேஜர் ஸ்ராம்பயர் தலைமையில் கவரட் பொது சுகாதார நிலையப் பாடசாலையிலும், பிரிஜ்காம்ப் பெண்கள் வைத்தியசாலையிலும் நடத்தப்பட்டன. இதில் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 87,000 பெண் தாதிகள் ஈடுபடுத்தப்பட்ட விரிவான சுகாதாரக் கணிப்பில் பங்குபற்றியவர் ஆவர். இவர்கள் காலத்திற்கு காலம் தங்களுடைய உணவுப் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள் உடலின் சுகாதார நிலைகள் போன்றவற்றை பற்றிய விளக்கமான கேள்விக் கொத்துகளைப் பூர்த்தி செய்து வந்தவர்கள். இவ் வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டவை என்னவெனில் . . , . .

இப் பெண்கள் உயிர்ச்சத்து 'E' யினை (நாளொன்றுக்கு 100 சர்வதேச அலகுகள் வீதம்) தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு உட்கொண்டு வரும்போது எதிர் பார்க்கப்பட்டதிலும் பார்க்க 41 வீதம் குறைவாகவே இதய நோய்களுக்கு உள்ளாகினர் இங்கு வயது, புகைத்தல் மற்றும் இதய நோயைக் கூட்டும் வேறு காரணிகள் போன்றவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதே போல் இரண்டாவது ஆராய்ச்சியில் 40,000 தொழிற்றுறையினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவர்களை எரிக்றம் என்ற தொற்று நோய் ஆய்வாளரும் அவரது சக வைத்தியர்களும் ஆராய்ந்தனர். இங்கு 100 சர்வதேச அலகுகள் உயிர்ச்சத்து 'E' யைத் தொடர்ந்து 2 வருடங்களுக்கு பயன்படுத்தியவர்களுக்கு இதய நோய் ஏற்படும் ஆபத்து 37 வீதம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

றுத் தாக்கத்தை தடுப்பவைகள் தான் இரத்தக் குழாயில் கொழுப்பு படிவதைத் தடுக்க உதவுகின்றன என்ற ஆதாரம் உள்ளது என்று தெரிவிக்கின்றார். இவர் அமெரிக்காவில் இதய நோய்ச் சங்கத்தில் இப்பிரச்சினை சம்பந்தமாகக் கதைப்பதற்கு நியமிக்கப்பட்ட பேச்சாளரும் ஆவார்.

சகல விதமான ஆய்வுகளும் ஒரே திசையில் துரிதமாகச் செல்கின்றன. ஏனெனில் கொலஸ்ரோலினால் ஏற்படும் நோயைக் குணப்படுத்துவதற்குப் பாவிக்கப்படும் மருந்துகளை

பயரங்கரமான வியாதியை அதன் போக்கிலிருந்து விட்டகலச் செய்தல்

ஆய்வாளர்கள் இதய நோய் எல்டீ எல் என்ற கொலஸ்ரோல் ஒட்சியேற்றப் படுவதினால் உண்டாகிறது, எனச் சந்தேகிக்கின்றனர். (உட்சியேற்றும் முறையினாலேயே துருப்பிடித்தலும் ஏற்படுகிறது) உயிர்ச்சத்து 'E' இந்த ஒட்சி யேற்றப்படும் முறையைத் தடுத்து நிறுத்தக் கூடியது.

1. குறைந்தளவு அடர்த்தியுள்ள லிப்போபுரோட்டீன்ஸ் (எல். டீ. எல். எஸ்) நாடிச்சுவரினுள் அதிகரித்து ஒட்சியேற்றப்படுகின்றன.

2. ஒட்சியேற்றப்பட்ட எல் டீ எல் கள் நாடி சுவர்களை சேத முறச் செய்யக் கூடியவை அத்துடன் வெண்குருதிக் கலங்களை கவர்கின்றன.

3. அந்த வெண்குருதிக் கலங்கள் ஒட்சியேற்றப்பட்ட எல். டீ. எல். களால் அதிகரிக்கப்பட்டு நாடிச்சுவர்களுக்கிடையில் சேர்த்து வைக்கப்படுவதினால் இரத்த நாடியின் துவாரம் இறுதியில் ஒடுக்கப் படுகின்றது.

எல் டீ எல் -எஸ். Low Density Liproteins
L. D. L. S. குறைந்த அடர்த்தியுள்ள கொழுப்புப் புரதங்கள்.

துரிதகதியில் விற்பனை

இந்த புதிய கண்டு பிடிப்புகள் நிச்சயமாக உயிர்ச்சத்து 'ஈ' விற்பனையை அதிகரிக்க உதவும். இன்று அமெரிக்காவில் இவ்வுயிர்ச்சத்து E யின் விற்பனைப் பெறுமதி 1990 இல் 260 மில்லியன் டொலரில் இருந்து கடந்த ஆண்டில் 392 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. ஆனால் சில இதயநோய் சிகிச்சை நிபுணர்கள் இவ்வதிகரிப்பு வேகத்தை கண்டித்தும் உள்ளார்கள். ஜோர்ஜ் வோஷிங்ரன் பல்கலைக்கழகத்தில் கொழுப்பு சம்பந்தமாகக் கடமையாற்றும் வைத்திய கலாநிதி ஜோன் லறோசா தமது கூற்றில் ஒட்சியேற்

விட உயிர்ச்சத்து 'E' மிகவும் மலிவானது. உண்மையில் ஒரு மாதத்திற்குத் தேவையான உயர்ந்தளவு உயிர்ச்சத்து 'E' குளிசைகளை 99 சதத்திற்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யும் சுகாதாரப் பண்டகசாலைகளில் (மருந்தகங்களில்) பெற்றுக்கொள்ளலாம். இன்று சாதகமான பல கூற்றுகள் வந்த போதிலும் ஒருவரது உயிர்ச்சத்து 'E' இதய நோயில் இருந்த உயிர் பாதுகாக்கும் ஒரு நிரூபிக்கப்பட்ட மருந்து என்று எடுத்துரைக்க முன்வரவில்லை. சில நிபுணர்கள் உயர்ந்தளவு உயிர்ச்சத்து 'E' யை நாளாந்தம் பாவிக்கும் போது எதிர்பாராத நீண்ட

New Doc 2020-04-06 14.46.20_page-0072.jpg

காலப் பக்க விளைவுகள் ஏற்படலாம் என்று பயப்படுகிறார்கள். (ஆனால் ஆறுமாத ஆய்வுகளின் போது இப்படியான பக்க விளைவுகள் ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை.) எனினும் ஆர்வமுள்ள விஞ்ஞானிகள் கூட ஒவ்வொருவரையும் 100 அல்லது அதற்கு அதிகமான அளவு அலகு உயிர்ச்சத்து 'E' யை (தற்போது சிபார்சு செய்யப்பட்ட உணவுப் பட்டியலில் பார்க்க எட்டு மடங்கு கூடியது.) நாளொன்றுக்கு பயன்படுத்துமாறு ஆலோசனை கூற முன்பு அதன் நன்மைகளைக் கட்டுப்படுத்தப் பட்ட மருத்துவ பரீட்சார்த்தங்கள் மூலம் நிரூபிக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சாதாரணமாக தங்கள் உணவுப் பழக்கத்தை எடுத்துரைப்பதிலும் பார்க்க ஒரு மருத்துவப் பரீட்சார்த்தத்தில் ஈடுபட்டிருப்போர் ஒரு மாதிரி குளிகையையோ அல்லது குறிப்பிட்ட அளவு உயிர்ச்சத்து 'E' யையோ ஒவ்வொரு நாளும் பாவித்து அவற்றால் ஏற்படும் விளைவுகளை மிகக் கவனமாக அளந்தறிய வேண்டும். இப்படிப் பட்ட பல ஆய்வுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் சுகாதார மனத்திடமுள்ள விஞ்ஞானிகள் இந்த ஆய்வுகளின் பெறுபேறுகள் வரும்வரை காத்திருக்க விரும்பவில்லை.

ஆண்களின் ஆய்வுகளிற்குப் பொறுப்பாக விருந்த ஆய்வாளர் 'றிம்' நான் சாப்பாட்டில் கவனமெடுப்பதுடன் உடற்பயிற்சியும் செய்கிறேன் அதே நேரத்தில் நல்லதிற்காக ஒவ்வொரு நாளும் 200 அலகுகள் உயிர்ச்சத்து 'E' யையும் உட்கொள்கிறேன் என்கிறார்.

ஆசிரியர் – ஜொபெறி கௌவியுடன்
மேரி கேகரும்,
கரன் ஸ்பிறிஞ்செனும்

நியூஸ்வீக், மே 31, 1993.

ஆகாய மேலாதிக்கம்

எழுதியவர் – பொப் ஜோன்சன்

இம்மாதம் நடந்தேறிய ரோக்கியோ உச்சி மகா நாட்டில் மனக் குமுறல் களையும் திருப்தியின்மையின் எதிரொலிகளையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. ஆகாயத்தில் இருந்தபடியே முன்கூட்டியே எச்சரிக்கை தரும் கருவிகள் பொருத்தப்பட்ட அவாக் (AWAC) எனப் பெயரிடப்பட்ட இரு விமானங்களை போயிங் (BOEING) விமான நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய ஜப்பான் தீர்மானித்துள்ளது. இச் செய்தி ஜப்பானிய ஆயுத ஒப்பந்தக் காரர்களைக் கோபமுறச் செய்து உள்ளது.



எப் 16 (F16) இதை ஜப்பான் தனது தேவைக்கேற்ப மாற்றியமைக்கும் செலவு உயரச் செல்லும்.

தர்க்க ரீதியாகப் பார்ப்பின் இக் கொள்வனவு நியாயமான தொன்றே. ஜப்பான் கடலுக்கு மேலால் அண்மையில் வடகொரியா ஒரு நடுத்தர ஏவுகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்துள்ளது. இது ஜப்பான் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. தனது அவாக் விமானங்களின் தொகையைப் பெருக்குவதால் ஜப்பான் முறைக்கு மூன்று விமானங்கள் என்ற விகிதத்தில் வட கொரியாவை இருபத்திநாலு மணி நேரமும் கண்காணிக்க முடியும். அவசர காலத் தேவைக்கென ஒரு விமானத்தை அவர்கள் ஒதுக்கியும் வைத்திருக்கலாம்.

ஆனால் கொள்வனவுச் செய்தி வெளியிடப்பட்ட நேரகாலம் இதில் அரசியல் நோக்கம் கலந்துள்ளது என்று சந்தேகிக்க வைத்துள்ளது. பாதுகாப்புக் காரணங்கள் இரண்டாம் பட்சமே என்றும் சொல்லப் படுகின்றது.

ஒவ்வொரு அவாக் விமானத்தின் விலை 500 மில்லியன் அமெரிக் கடொலர் ஆகும். அமெரிக்கப் பொருட்களையும் தயாரிப்புக்களையும் கூடுதலாக வாங்கும்படி அமெரிக்கா ஜப்பானுக்கு நெருக்குதல் கொடுக்கும் இக் கால கட்டத்தில் இவ் விமானக் கொள்வனவு அமெரிக்க நிர்வாகத்தை மகிழ்விக்கும் என்று ஜப்பான் நம்புகிறது.

விமானக் கொள்வனவுக்குரிய பணம் ஜப்பானின் பாதுகாப்பு நிதியிலிருந்து எடுக்கவேண்டியுள்ளது. இப்போது ஜப்பானில் உள்ள அரசியல் குழப்ப நிலை காரணமாகப் பணம் வேறு விதமாக எடுக்கக் கூடிய சாத்தியங்கள் குறைவாயுள்ளன. பாதுகாப்பு நிதியிலிருந்து பணம் எடுக்க வேறு செலவுகள் குறைபடும் வாய்ப்பு

New Doc 2020-04-06 14.46.20_page-0073.jpg

உண்டு. அனேகமாக ஜப்பானிய பாதுகாப்புக் கழகம் JAPAN DEFENCE AGENCY) கூடுபட்டிருக்கும் எப். எஸ். எக்ஸ். (FSX) யுத்த விமானக் கட்டுமானப் பணியில் தான் இந்த வெட்டு விழும்.

இங்கு தான் குமுறல்களும், திருப்தியின்மையும் எழுந்துள்ளன. எப். எஸ். எக்ஸ். திட்டம் இப்போதே எதிர்பார்த்த செலவுக்கு மேலாகச் சென்றுவிட்டது. அவாக் கொள்வனவு எப். எஸ். எக்ஸ். திட்டத்தைக் கொன்றுவிடும் என்று அஞ்சப்படுகின்றது. ஜப்பானிய ஒப்பந்தக் காரர்கள் எப். எஸ். எக்ஸ். திட்டத்தை ஆதரித்து வந்துள்ளனர் என்பது வெளிப்படை. எப். எஸ். எக்ஸ். விமானத்தின் கதை அதிசயமானதொன்று. அதன் வரலாறு அண்மையில் வெளிவந்த நூலில் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த நூலின் பெயர் ''ஜப்பானின் உட்புறப் பாதுகாப்புத் தொழில் நுட்பம்; பொருளாதாரம்; தந்திரோபாயம்'' என்பது. இதை எழுதியவர் அமெரிக்கப் பாதுகாப்புப் பகுப்பாய்வாளர் மைக்கேல் சின்வோத் என்பவர். InsideJapan's Defence Technology, Economics, &: Strategy By Michael Chinworth அமெரிக்கத் தனியார் துறையுடன் ஜப்பான் இந்த விமானத்தைக் கூட்டாகத் தயாரிக்க ஒப்பந்தம் செய்துள்ளது. எப். எஸ். எக்ஸ். விமானம் இப்படியான கூட்டு முயற்சியின் பிறப்பாகும். அமெரிக்க அரசிடம் தனது பாதுகாப்புத் தேவைகளுக்குத் தங்கியிராது சுய தயாரிப்புக்களில் ஜப்பான் இறங்கியுள்ளது, இதுவே முதல் தடவை. முன்பெல்லாம், அமெரிக்க அரசின் அனுமதி பெற்றபின் ஜப்பான் தயாரிப்பில் இறங்கியது. எப். எஸ். எக்ஸ். விமானத்துடன் அது கூட்டுத் தயாரிப்பில் இருங்கியுள்ளது. இதுவே இந்தப் புத்தகத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

இதே போன்ற கூட்டு ஒப்பந்த முறையில் எப் 15(F 15) என்ற யுத்த விமானத்தை ஜப்பான் தயாரித்துள்ளது. இவ் விமானத்தின் அமெரிக்கத் தயாரிப்பாளர் மெக்டொனால் டக்ளஸ் எனப்படும் நிறுவனமாகும். Mc. Donnell Douglas இந்தத் தயாரிப்பில் ஜப்பான் பல கசப்பான அனுபவங்களைப் பெற்றுள்ளது. உதிரிப் பாகங்கள் சரியான நேரத்தில் கொடுபடாததாலும் சேவையிலீடுபடும் விமானத்தின் பராமரிப்பை உரிய நேரத்தில் கொடுக்காததாலும் ஜப்பானுக்கு இது ஏற்பட்டது. இந்தவிமானத்திற்கு அமெரிக்க நிறுவனம் ஹியூகஸ் HUGHES) தயாரித்தளித்த ராடர். அன்ரெனா கருவி RADER AN TENNA) சரிவரச் செயற்படாததும் பெரும் குறை. 100 விமானங்களில் பொருத்தப்பட்ட இந்தக் கருவிகளில் 30 சரியாக இயங்கவில்லை என்று 1988 ஆம் ஆண்டுக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு நிறுத்தப்பட்டுள்ள விமானங்களை வாங்க ஜப்பான் எப் 15 அனுபவத்தின் பின்பும் தயாராக இல்லை. இப்படி வாங்குவது மிகவும் இலாபகரமானதுதான். ஆனால் ஜப்பான் தனது தேவைகள் பிரத்தியேகமானவையென்றும் தனது தேவைகளுக்கேற்ப தானே யுத்த விமானங்களைத் தானே தயாரிப்பதே சிறந்ததென்றும் ஜப்பானிய பாதுகாப்பதிகாரிகள் வாதிட்டனர். ஜப்பானிய அரசியல் சாசனம் யுத்தம் புரிவதற்கரசத் தாக்குதல்களுக்கு உதவும் ஒத்துழைப்புகளையும், தாக்குதல் விமானங்களையும் தயாரிப்பதைத் தடைசெய்கின்றது. ஆகையால் அவர்கள் தயாரிக்கும் விமானங்கள் வெளிநாட்டவர் ஜப்பானைத் தாக்குவதைத் தடுக்கும் வகையைச் சேர்ந்தனவாகும்.

அவர்கள் தயாரிக்கும் யுத்த விமானங்கள் தாக்குதல் விமானங்களல்ல, அவை தாக்குதல்களைச் சமாளிக்கும் பாதுகாப்பு விமானங்களாகும். இவையெல்லாம் சொற்சிலம்பமே. ஆனால் ஜப்பானிய நிலைமை அப்படி. ஜப்பானியஅரசும் ஜப்பானியத் தொழில் அதிபர்களும் இன்னுமொரு காரணத்தையும் முன்வைத்துள்ளனர். அதாவது ஜப்பானிய விமான ஓட்டிகளின் ''உடலமைப்பும் மனநிலையும்'' பிரத்தியேகமானதோர் யுத்த விமானத் தேவையை உண்டு பண்ணியுள்ளதென்று. இறக்குமதி செய்யப்பட்ட யுத்த விமானங்கள் இத்தேவையைப் பூர்த்தி செய்ய இயலாதவை என்பது அவர்களின் வாதம்.

சில ஜப்பானியத் தொழில் அதிபர்கள் ஜப்பான் தனியாகவே தனது யுத்த விமானங்களைத் தயாரிக்கக் கூடிய வல்லமை உடையது என்று நம்புகின்றனர். விமானங்களில் பொருத்தப்படும் கட்டுப்பாட்டுக் கணணித் தொழில்நுட்பத்தை ஜப்பானிய நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ள அமெரிக்கா பின்வாங்குவதும் ஒரு காரணமாகலாம். ஆனால் ஜப்பானியப் பாதுகாப்புக் கழக அதிகாரிகள் பிறநாட்டுதவி இன்றி ஜப்பான் யுத்த விமானத் தயாரிப்பில் ஈடுபட இயலாதென்று சரியாகத் தீர்மானித்து விட்டனர். இதை மைக்கேல் சின்வோர் தனது நூலில் வரவேற்றுள்ளார். விமான இயந்திரம், மேற்குறித்த கட்டுப்பாட்டுக் கணணித் தொழில் நுட்பம் போன்றவை ஜப்பானியத் தொழிற்சாலைகளால் நினைத்துப் பார்க்க முடியாதவையாகும்.

பல்வேறு வாதப் பிரதி வாதங்களின் பின் 1987 ஆம் ஆண்டு மிற்சுபிஷி கனரகத் தொழிலகமும் MITSUBISHI HEAVY INDUSTRIES) அமெரிக்காவின் தனியார் ஸ்தாபனமும் ஜெனரல் டைனமிக்ஸ் (GENERAL DYNAMICS) நிறுவனமும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டன. இதன்கீழ் ஜெனரல் டைனமிக்ஸ் நிறுவனத்தின் எப் 16 (F16) விமானம் ஜப்பானியத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படும். இதன் செலவு தொகை 1.9 மில்லியன் அமெரிக்க டொலர் என்று மிற்சுபிஷி கணக்கிட்டுள்ளது. ஆனால் உண்மையில் இத்தொகை இரண்டு அல்லது மூன்று மடங்கு கூடியது ஆகும்.

எப் 16 தயாரிப்புச் செலவு கூடிக் கொண்டு போவதற்கு ஜப்பான் அமெரிக்க நிறுவனத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளது. எப். எஸ். எக்ஸ் விமானத்தின் எதிர்காலத்தையும் கூடுதல் தயாரிப்புச் செலவு பாதிக்கும் அபாயம் உண்டு. எப் 16 யுத்த விமானத்தின் மாதிரிகள் பல

New Doc 2020-04-06 14.46.20_page-0074.jpg

இந்த ஒப்பந்தத்தின் கீழ் முதலில் செய்யப்படும். பின்பு முழு அளவில் தயாரிப்புகள் ஆரம்பமாகலாமென்று மைக்கேல் சின்வோத் தெரிவிக்கின்றார். கூடுதல் செலவுகள் முழு அளவுத் தயாரிப்பைத் தடுத்து விடும் என்று இவர் தனது நூலில் சுட்டிக் காட்டுகின்றார்.

முழு அளவுத் தயாரிப்பு நடவாவிட்டாலும் ஜப்பானுக்குப் பெரும் நன்மைகள் விளையுமென்று சின்வோத் வெளிப்படுத்துகின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்கள் அறிந்திராத பல்வேறு தொழில் நுட்பங்களையெல்லாம் ஜப்பான் பெற்று விட்டது. இவை ஜப்பானின் பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப் படும். விமானத் தயாரிப்பிலிருந்து பலவிதமான தொடர்ச்சியான நன்மைகள் விளையும் வாய்ப்பு உண்டு. தனது நூலில் சின்வோத் பின்வருமாறு எழுதியுள்ளார்;-

''பல்வேறு தொழில் நுட்பங்கள் ஒன்று சேர்ந்து இந்த விமானமாக உருவெடுத்துள்ளன. இவை யாவும் ஜப்பானின் தொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிர் கொடுப்பனவாகும். இதனால் விமானத் தயாரிப்பிலும், விமானங்களுடன் தொடர்புடைய வேறு தொழில்களிலும் ஜப்பான் முன்னேற்றமடையும்''.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் இதுவே ஜப்பானிய பொருளாதாரக் கொள்கையுமாகும். பிற நாடுகளின் கண்டுபிடிப்புக்களையும் புரட்சிகரமான தொழில் முன்னேற்றத்தையும் வருவித்துத் தனது தயாரிப்புகளுடன் ஐக்கியப்படுத்தி ஜப்பான் இலாபமடைந்துள்ளது. பாதிப்படைந்த நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும். இன்று ஜப்பான் விமான உதிரிப்பாகத் தயாரிப்பிலும் காலூன்றியுள்ளது. விமானங்களைத் தயாரித்து விண்ணில் பறக்காமலே விமான உதிரிப்பாகத் தயாரிப்பில் ஜப்பான் பெரு வெற்றியடைந்துள்ளது. இந்தப் பேருண்மையை மசாசுசற் தொழில் நுட்பக் கழகத்தின் முன் டேவிற் பிரீட்மன், றிச்சாட் சாமுவல் என்பவர்கள் தயாரித்துப் படித்துக் காட்டிய சுட்டுரை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ●


(F) வார் ஈஸ்டேன்
எக்கணமிக் றிவியூ, 22-07-93

சங்கிலித் தாக்கம்

இறுதி அணுக்கருப் பயங்கரம்:

அணுக்குண்டுடன் பயங்கரவாதிகள். அவர்களால் ஒன்றைச் செய்ய முடியுமா?

சென்ற பெப்ரவரி மாதம் நியூயோர்க்கின் உலக வர்த்தக மையத்தைத் தாக்குவதற்கு ஏறக்குறைய 1200 இறாத்தல் எரிபொருள் நெய்யும், உரமும் பயங்கரவாதிகளுக்குத் தேவைப்பட்டன. ஆறு பேரைக் கொல்லவும் மூன்று மட்ட மோட்டார் வாகனத் தரிப்பிடத்தை உருக்கு வளைகளில் சிக்கலாக்கவும் இக்கலவை போதுமானதாக இருந்தது. சென்ற ஏப்ரல் மாதத்தில் லண்டனின் நிதிப்பிரதேசத்தில் ஒரு குண்டு வெடிப்பிற்கு செப்ரெம்பரில் வெடிமருந்துடன் ஒரு தொன் உரத்தை ஐ.ஆர்.ஏ பயன்படுத்தினார்கள். இக்குண்டு ஒருவரைக் கொன்று ஒரு டசின் கட்டடங்களில் ஒட்டைகளைத் துளைத்தது. நியூயோர்க்கில் சென்ற மாதம் 1750 இறாத்தல் டீசல் நெய்யுடனும், உரத்துடனும் கைதாகிய எட்டுப்பேர் லிங்கன் சுரங்கத்தையும் ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடத்தையும் அழிக்கலாம் என எண்ணியிருந்தார்கள்.



ஆனால் இவையாவும் சூனியக் காரிகளின் கலவை போன்ற தடிப்பற்ற கஞ்சியாகும். உண்மையான பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய பயங்கரம் யாதெனில், வோஷிங்டன் யூனியன் ஸ்டேசனின் தரிப்பிடத்தில் ஓர் உடுப்புப் பெட்டியில் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் ஓர் அணுக்கரு ஆயுதமாகும். ஒரு பண்படாத அணுக்கருக் குண்டு மட்டுமே நிலத்திற்கு மேலே பல மைல் சுற்றளவில் கட்டடங்களை அழிக்கக்கூடியது. இதன் விளைவாக ஏற்படும் தீப்பந்து, ஒலியின் வேகத்துடன் சுநிர்வீசி வழியில் உள்ள உருக்கு கொங்கிறீற் கட்டடங்களையும் மனித உடலையும் எரித்து ஒரு பயங்கர மனித அழிவை ஏற்படுத்தக்கூடியது.


மான்ஹட்டன் திட்டம் – சைல்ஸ் சதுக்கத்தில் ஏற்படும் அணுக்கரு வெடித்தல். நகரின் குடிப்பகுதியைத் தரைமட்டமாக்கி ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்லக்கூடும். மிகச் சிறிய துவக்கு வகை குண்டு, மிகச் சிறிய உள்வெடித்தல் குண்டிலும் பார்க்க பத்து மடங்கு அழிவை ஏற்படுத்தும்.

ஒரு பயங்கரவாதக் குழுவிடம் அணுக்கரு ஆயுதம் இல்லாதிருப்பதற்குத் தடை யாது? ஓர் அணுக் குண்டை ஆக்குவதற்கு இரு விடயங்கள் தேவை. ஆக்கும் அறிமுறையும், தேவையான பொருட்

New Doc 2020-04-06 14.46.20_page-0075.jpg

களும். அலமோகோடோவில் நடாத்தப்பட்ட மான்ஹாற்றன் திட்டப் பரிசோதனைகளுக்கு பின் அறிமுறை தாராளமாகக் கிடைக்கின்றது. 23 டொலர் விலையுள்ள ''தலொஸ் அலாமஸ் பிறைமர்'' என்னும் புத்தகத்துடன் ஒரு பயங்கரவாதி தொடங்கலாம். ஒரு காலத்தில் மிக உயர் இரகசியமாகப் பேணப்பட்ட தரவாகிய சங்கிலித் தாக்கத்திற்கு தேவையான மிகக்குறைந்த யுரேனியத்தின் அளவு 25 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பிளக்கப்படும் பதார்த்தத்தை அரைவாசியாக்குவதற்கு எவ்வாறு ஒரு தெறிகருவியை அமைக்கலாம் என்று 44 ஆம் பக்கத்தில் விளக்கப்படுத்தியுள்ளது. குண்டின் மையத்தினுள்ளே யுரேனியக் கட்டியொன்றைச் செலுத்தி அணுக்கரு வெடிப்பை ஆரம்பிக்கும் வழியை 57 ஆம் பக்கத்தில காணலாம். 1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ''அணுக்கரு பயங்கரவாதத்தைத்தடுப்பு'' என்னும் புத்தகத்தையே பயங்கரவாதி ஒருவன் படிப்பானாயின் ஓர் அணுக்குண்டு செய்வதற்குத் தேவையான யுரேனியம் அல்லது புளுடோனியத்தின் சரியான நிறைகளை அவன் அறிவான்.

அணுக்கரு பயங்கரவாதத்திற்கு மிகப்பெரிய தடையாக உள்ளது. தேவையான பொருளாகும். புளுட்டோனியம் அல்லது செறிவூட்டப்பட்ட யுரேனியம் ஒரு குண்டுக்குத் தேவை. இவற்றை ஆக்குவது மிகச் செலவுள்ளதாகவும் அண்மைக்காலம் வரை களவெடுப்பது மிகக் கடினமுமாக விருந்தது. சோவியத் ஒன்றியம் உடைந்த பின் பல்லாயிரக்கணக்கான அணுக்கரு ஆயுதத் தொழிலாளர் வேலையில்லாமலும் பணமில்லாமலும் இருக்கிறார்கள். ஆனால் எண்ணங்கள் இல்லாமல் இல்லை. சென்ற இலையுதிர் காலம் ருஷ்யாவில் உள்ள ஓர் உயர் இரகசியத் தொழிற்சாலையிலிருந்து 5.5 இறாத்தல் நிறையுள்ள பகுதி செறிவூட்டப்பட்ட யுரேனியத் துண்டுகளை இரு ருஷ்யர்களும், ஒரு பைலோருஷ்யனும் களவெடுத்து ஈயக்கொள்கலன் ஒன்



110 இறாத்தல் திணிவுள்ள உதைபந்தளவு யுரேனியக் கட்டியினுள்ளே யுரேனியத் துண்டொன்றை சுடும் பொழுது கட்டி மாறுநிலைத்திணிவை அடையும் ஒரு நியுத்திரன் தொடக்கமாக்கி தாக்கத்தை விளைவுபடுத்தும்.

றினுள் அடைத்து ரஷ்யாவிலோருவில் உள்ள பிறெஸ்ற் வரைக்கும் 1200 மைல்கள் தூரம் வாகனத்தில் சென்றுள்ளார்கள். (போலந்து நாட்டவர்கள் சிலர் இதை வாங்க முன் காவற்றுறை அதிகாரிகள் இவர்களைக் கைது செய்தார்கள்.) 1991ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 35 அணுக்கருக் கடத்தல் திட்டங்களுடன் ஒப்பிடும் பொழுது சென்ற வருடம் 100 திட்டங்களை ஜேர்மன் புலனாய்வாளர்கள் கண்டு பிடித்தனர். வளைகுடா யுத்தத்திற்குப் பின்பு ஈராக் நாட்டுக்கு ஐக்கிய நாட்டு அணுக்கருப் பரிசோதனைக் குழுவிற்கு தலைமை தாங்கிய டேவிட் கேய் கூறுகிறார்: ''அணுக்கரு ஆயுதங்களை வெவ்வேறாகக் கழற்றும் பொழுது கவனமாகத்தான் இருக்க வேண்டும்.'' முன்னாள் சோவியத் நாடுகளிலிருந்து கடத்தப்பட்ட யுரேனியம் ஆயுதம் செய்யக்கூடிய தரத்தில் இருக்கவில்லை.(அதாவது சங்கிலித் தாக்கத்தை நிலை நிறுத்தக்கூடிய மூலகத்தின் தூய மாதிரி யுரேனியம் - 235) குண்டு செய்யக்கூடிய சிறிதளவு யுரேனியம் ருஷ்யாவிலிருந்து கடத்த எடுத்த முயற்சியும் தடுக்கப்பட்டது. கேய் என்பவருக்கும் மற்றவர்களுக்கும் மனவருத்தம் உண்டாக்குவது யாதெனில், கடத்தல்வழிகள் அமைக்கப்பட்டு வருவதே. தற்போது லண்டனில் உள்ள யுரேனியம் கல்வி நிறுவனத்தில் வேலை பார்க்கும் கேய் மேலும் கூறுகிறார். ''சுங்க அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கு தாங்கள் தடுப்பது முழு அண்டகோளமா அல்லது குறைவானதா என்பதைப் பற்றி துரும்பளவேனும் தெரியாது'' என்று. மேற்குப்பக்கமாகச் செல்லும் மிகக் கவனமாகப் பரிசோதிக்கப்படும் கடத்தல் வழிகள் பிரச்சினை தரக்கூடியனவல்ல. கசக்கிஸ்தான் அல்லது ஜோர்ஜியா ஊடாக ஈராக், ஈரான் ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் செல்லும் வழிகளே பிரச்சினைக்குரியனவாகும். கசக்கிஸ்தான் இடமிருந்து ஈரானியச் சார்பு நிறுவனங்கள் அணுக்கருப் பதார்த்தம் பெற முயன்றதற்கு ஆதாரம் உள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகிறார்கள்.

மிகவும் சிக்கலான வினைத்திறனுடைய அமெரிக்க ருஷ்ய நாட்டு ஆயுதக் கிடங்கில் உள்ளவை போன்ற குண்டுகளை பயங்கரவாதிகள் செய்யத் தேவையில்லை. அவர்களின் செயற்பாடு பண்பற்றதாக இருந்தாலும் போதுமானது. மாறுநிலைத்திணிவை ஆக்கி புளுட்டோனியம் அல்லது யுரேனியம் அணுக்களின் கருக்களை வெடிக்கச் செய்து பிரமாண்டமான சக்தியை வெளிப்படுத்துவதேபடங்களில்காட்டப்பட்ட எளிய குண்டு மாதிரிக்

New Doc 2020-04-06 14.46.20_page-0076.jpg


ளின் ஹிரோஷிமாவில் ஏற்பட்ட அழிவைச் செய்யக்கூடியன.

துவக்கு வகைக் குண்டு:-

மாற்றி அமைக்கப்பட்ட துவக்குக் குழாயில் இருந்து ஒரு யுரேனியக் குண்டு சுடப்படும்பொழுது யுரேனியத் திண்மக் கட்டி மாறு நிலைத் திணிவிற்கு உயர்த்தப்படுகின்றது. வோஷிங்ரன் நகரின் ஒரு யோசனைப் பெட்டகமான விஞ்ஞான மற்றும் சர்வதேச பாதுகாப்பு நிறுவனத்தின் டேவிட் ஆல்பிறைட் கூறுகிறார்: ''ஆயுதத் தரமுள்ள யுரேனியம் உபயோகிப்பதாயின் 50 கிலோ கிராம் (114 இறாத்தல்) தேவைப்படும். இது ஒரு உதைபந்திலும் சிறிது பெரிதாக இருக்கும்'' என இந்த அளவிற்குக் குண்டைச்சுற்றி ஒரு சில அங்குலம் தடிப்பான ஓர் இரும்பு அல்லது பென்சிற் கரியிலான ஒடு தெறிக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக்கருதப்படுகின்றது. சங்கிலித் தாக்கத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்த இத் தெறிகருவி நியூத்திரன்கள் மீண்டும் மையத்தை நோக்கித் தெறிக்கின்றன. சாதாரண இயந்திரக் கருவிகள் யுரேனியத்தைத் தேவையான கோளமாக உருவாக்கக் கூடியன. உலோகம் மீது வேலை செய்யப்படும் போது வெடித்தல் அல்லது கதிர் வீசல் பாதிப்பு ஏற்படும் அதிக அபாயம் இல்லை. ஓர் இலத்திரனியல் வியாபார நிலையத்தில் வாங்கக்கூடிய நேரப்பதிவுமானியை இணைத்து குறிப்பிட்ட நேரத்தில் எரி பொருளைச் சுடச் செய்யலாம். ஹிரோஷிமா அளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய 15 கிலோ தொன் வெடித்தலை இத் துவக்கு வகைக் குண்டு ஏற்படுத்தக் கூடியது. காளான் போன்ற முகிலை ஏற்படுத்தக்கூடிய தாக்கம் நடைபெறாவிடினும் ஒரு சிறிய வெடித்தலினால் ஏற்படும் கதிர்வீச்சுப் பொழிவு சில ஆயிரம் மக்களைக் கொல்லக்கூடியது.

உள் வெடித்தல் குண்டு:-

இக் குண்டில் யுரேனியக் கோளத்தின் மீது பதிக்கப்பட்ட விசேடமாக உருவாக்கப்பட்ட ஏற்றங்கள் அதை மறு நிலைத் திணிவாக வர அமுக்குகின்றன. எரி பொருளினுள் வைக்கப்பட்ட ஒரு பிறப்பாக்கி சங்கிலித் தாக்கத்திற்கு ஒரு மேலதிகத் தள்ளுகையைக் கொடுக்கின்றது. பல்கலைக் கழகப் பௌதிகவியல் ஆய்வு கூடங்களில் பெறக்கூடிய மூலகம் பொலோனியத்தின் சிறிதளவும் இரசாயனப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் வாங்கக் கூடிய லிதியமும் பிறப்பாக்கியாகச் செயற்படக் கூடியன. ஏறக் குறைய 20 இறாத்தல் புளூட்டோனியம் – 239 (அல்லது தெளிகருவி இருப்பின் அரைவாசி அளவு) ஒரு சங்கிலித் தாக்கத்தை நிலை நிறுத்தி வான் மாடிக்கட்டடங்களை வீழ்த்தக்கூடிய ஒரு கிலோ தொன் வெடித்தலை ஆக்கும். அந்த 20 இறாத்தலும் களஞ்சியத்தில் இல்லையே என்று கண்டுபிடிக்கவும் மாட்டார்கள். எவருக்கும் தெரியாமலே மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை 33 இறாத்தல் புளூட்டோனியம் கணக்கு வைக்கும் தவறுகளால் காணாமற் போகலாம் என்று உபயோகப்பட்ட யுரேனியத்தை புளூட்டோனியமாக மாற்றும் ருஷ்ய தொழிற்சாலையின் பிரதம எந்திரி கூறுகின்றார். ஏறக்குறைய ஐந்து விருந்து ஏழு கிலோ கிராம் புளூட்டோனியத்தைச் சுற்றி உயர் வெடிகள் அடைக்கப்பட்டிருந்ததாலுமே கிளர்மின்வீசல் பயங்கரமாக இருக்கும் என்று ஆல்பிறைட் கூறுகிறார்.



1 உருக்கு ஒடு
2 உயர்வெடித்தல் ஏற்றங்கள்
3 புளூட்டோனியப் பந்து
4 தெறிக்கும் உருக்கு ஒடு
5 நியூத்திரன் பிறப்பாக்கி.

பத்து இறாத்தல் திணிவுள்ள புளூட்டோனியம் வெடித்தல் ஏற்றங்களால் சூழப்பட்டுள்ளது. வெடிக்கும் பொழுது புளூட்டோனியத்தை மாறு நிலையிலிருந்து அமுக்கி ஓர் அணுக்கரு வெடித்தல் உண்டாகின்றது.

குண்டின் உருவமைப்பை அறியவும் யுரேனியத்தைப் பெறவும் ஒரு குழுவிற்கு ஒரு வருடத்திற்கு மேல் தேவைப்படும். பன்பு ஒரு சில நாட்களில் ஒரு தொழிற்படக் கூடிய அணுக்கருக்குண்டைச் செய்யலாம் என்று வியன்னாவில் உள்ள சர்வதேச அணுசக்தி நிலைய விஞ்ஞானி டேவிட் பிஷ்ஷர் கூறுகின்றார். ஆனால் இந்நாடகம் மேடையேறுவது சாத்தியமில்லை என்றும் கூறுகின்றார். உலோகப் பிரிப்பியலில் ஈடுபடும் பயங்கரவாதிகளையும், பௌதிகவியல் பயங்கரவாதிகளும் என்று ஆல்பிறைட் கூறுகிறார்.

New Doc 2020-04-06 14.46.20_page-0077.jpg

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

களையும் இலகுவில் சந்திக்க முடியாது. இப்பொழுது அவ்வாறு இருக்கலாம். ஆனால் இனிமேல் வரக்கூடியவர்களைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. அதிகமான அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் அணுக்கரு, பொறியியல் பகுதிகளுக்கு உயிர் ஊட்டுபவர்கள் ஈராக், ஈரான் மற்றும் லிபியா நாடுகளின் மாணவர்களே என்று வோஷிங்ரனில் உள்ள அணுக்கரு ஆளும் கல்வி நிறுவனத்தின் விஞ்ஞானி போல் லெவென்தல் கூறுகின்றார். இது கல்வியைப் பெறக் கூடிய சுதந்திரக் கொள்கையாகும். ஆனால் யாரை எதற்காக மீண்டும் கற்பிக்க வேண்டும் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களின்படி முன்னாள் சோவியத் ஒன்றியம் அடுத்த நூற்றாண்டு வரைக்கும் வருடமொன்றுக்கு 2,000 அணுக்கரு ஆயுதத் தலைகளை அகற்றும். அதாவது ஆறு தொன் புளுட்டோனியத்தையும் 30 தொன் யுரேனியத்தையும் இலகுவாக எண்ணக்கூடிய ஏவுகணைகளிலிருந்து கணக்கெடுப்பதில் சிக்கலான களஞ்யங்களுக்கு அனுப்ப வேண்டும். முழுவதையும் எவராலும் கணக்கெடுக்க முடியுமா? அமெரிக்கர் தமது யுரேனியக் களஞ்சியத்தை ஒரு மைக்ரோகிராம் வரைக்கும் கணக்கெடுக்கிறார்கள். முன்னேற்றகரமான அளக்கும் கருவிகள் இல்லை என்பதைக் காரணங்காட்டி குண்டுகள் செய்யக்கூடிய யுரேனியத்தைக் கொண்டுள்ள பீப்பாக்களையும் சிறிய மென்பந்து அளவு புளுட்டோனியம் அலகுகளையும் சோவியத் நாட்டினர் எண்ணிக்கணக்கெடுக்கிறார்கள். எனவே நுணுக்கமான கணக்குப் பதிவு இல்லாத காரணத்தால் ஆயுதங்களைக் கழற்றும்போது மேற்பகுதியில் தட்டியெடுப்பது இலேசானதாகும். பொருளொன்றும் இழக்கப்படவில்லை என்று கூறுபவருக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லது தன்னையே ஏமாற்றலாம் என்று கேய் கூறுகிறார்.

குண்டுகளுக்குத் தேவையான எரிபொருளைத் தேடும் மட்டத்திற்கு உலகம் இன்னும் வரவில்லை. ஆனால் அடைப்பு திறக்கப்படுவதற்குத் திருப்பப்பட்டுள்ளது.

இலண்டனில் ஏரோன் பெக்லி
உடன் டானியல் பீடர்சன்
வோஷிங்ரனில் ஜோஷுவா கூப்பர்
இராமோ உடன்மெலிம்பா லியூ

நியூஸ் வீக், ஜூலை 12, 1993

சிறிய தள்ளுகை ஆனால், மிகப்பெரிய விளைவு

விஞ்ஞானத்தின் குழப்ப நிலையின் அறிமுறை

(பி) பீஜிங்கில் ஒரு வண்ணத்துப்பூச்சி தன் இறக்கைகளை அடிக்கின்றது. சான் பிரான்சிஸ்கோவில் மழை பெய்கிறது. தமது உருவத்திலும் பார்க்க மிகப் பெரிய விளைவுகளை உண்டாக்கும் சிறிய அதிர்வுகள் குழப்ப அறிமுறைக்கு மையமாக உள்ளது. சிறியதோர் நடுக்கம் ஏற்பட்டவுடன் சீரான இரசாயனத் தாக்கம் அல்லது லேசரின் செலுத்தல் குழப்ப நிலை அடைகின்றது. இது ஒரு தொந்தரவு தரும் விளைவாகவே எப்பொழுதும் கருதப்பட்டது. ஒரு தள்ளுகையோடு ஆளக்கூடியவாறு கருவித் தொகுதிகளை வடிவமைக்கக் கூடிய வண்ணம் வண்ணத்துப் பூச்சி விளைவைப் பயன்படுத்தலாம் என இப்போது ஆராய்ச்சியாளர்கள் காண்கிறார்கள். 50 மில்லியன் மைல் தூரத்தில் உள்ள வால் வெள்ளியைச் சந்திப்பதற்குச் சந்திரன் - வால் வெள்ளி - விண்வெளிக் கலம் ஆகிய தொகுதியின் குழப்பநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி பெரும்பான்மையான வாயு முடிவடைந்த நிலையில் விண்கலமொன்றை 1985ஆம் ஆண்டளவிலேயே நாசா அனுப்பியது மேரிலண்ட் பல்கலைக்கழகத்தின் ஜேம்ஸ் யோர்க் தலைமை தாங்கும் ஆராய்ச்சியாளர்கள்.



வண்ணத்துப் பூச்சியொன்றின் இறக்கைகளின் அடிப்பு அண்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

நிலக்கரியைச் சுத்தமாக எரியப் பண்ணவும் மிகக்கூடிய வலுவுள்ள தொலைத் தொடர்புக் கற்றைகளை உண்டாக்குவதற்கும் குறைந்த வலுவுள்ள மைக்குரோ இலத்திரனியலை உபயோகிப்பதற்கும், மற்றும் இதய அடிப்புகளை ஒழுங்கு படுத்தவும் குழப்ப நிலையைப் பயன்படுத்தலாம் என இப்பொழுது நினைக்கிறார்கள்.

நியூஸ்வீக், ஜூலை 26, 1993

New Doc 2020-04-06 14.46.20_page-0078.jpg

உலகத்தில் மிகப் பெரிய குளிரூட்டி

ஜப்பான்: பெரிய மண்டபத்தினுள்ளே மென் பனிச்சறுக்கல் விளையாட்டு

ஜப்பானில் கோடை காலம் -மாரிகால உடுப்பு அணிந்து கைகளுக்கு உறைகள் போட்டு மென் பனிச்சறுக்கல் சாய்வுக்குப் போகச் சிறந்த நேரம். கோடையில் மென்பனிச் சறுக்கல் விளையாட்டு என ஆச்சரியப்படுகிறீர்களா? ஆம், பணச்செலவும் மக்கள் கூட்டமும் நிறைந்த மாரி கால மலை நோக்கிய பிரயாணங்களால் களைப்படைந்த டோக்கியோ வாசிகளுக்கு நாட்டின் மிகப் பெரிய காணி மற்றும் கட்டடங்கள் விருத்தியாக்கும் தொழில் அதிபர் உலகத்தில் மிகப் பெரிய உள்மண்டபச் சறுக்கல் வசதியை ஏற்படுத்தியிருக்கிறார். டோக்கியோவிலிருந்து கிழக்கே 30 நிமிடப்புகையிரதப் பிரயாணத்தின் பின்வரும் சிபா பட்டினத்தில் புன்பாசியில் SSAWS. ஸ்கீ கட்டடம் இந்த வாரம் திறக்கப்படுகின்றது. SSAWS எனப்படுவது (ஸ்பிறிங், சமர், ஒற்றம், வின்ரர் மற்றும் ஸ்னோ ஆகியவற்றை அதாவது இளவேனிற் காலம், கோடைகாலம், இலையுதிர் காலம், பனிக்காலம் மற்றும் மென்பனி ஆகியவற்றை குறிக்கின்றது.) உருக்கினாலும் ஒமெந்துக் கொங்கிறீற்றாலும் கட்டப்பட்ட அமைப்பை வெளியில் இருந்து பார்க்கும் பொழுது ஓர் இராட்சத வெண்ணெய் ஆப்பு போல் தோன்றுகின்றது. டோக்கியோவில் பல நோக்குக் கடையொன்றின் சிப்பந்தி 29 வயதுடைய மிக்கேகா சைற்ரோ கூறுகிறார்: ''இந்த அந்நியமான கட்டடம் என்னவாயிருக்கலாம் என்று பல காலமாக நான் சிந்தித்ததுண்டு. உண்மையான மென்பனியைக் கொண்டுள்ள சறுக்கல் மையம் என்று அறிந்தபின் உள்ளே சென்று உண்மை பொய் அறிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்'' என்று.

இந்த ஸ்கீ கட்டடம் உண்மையாக 364 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட ஒரு குளிரூட்டியாகும். உள்ளே வெப்பநிலை 2 பாகை சீ இல் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. வெளியிலிருந்து வரும் வெப்பத்தைக் கடுப்பதற்கு 20 சென்ரி மீற்றர் தடிப்புள்ள கம்பளி-கண்ணாடிக் காவல் உதவுகின்றது. இக்கட்டடத்தின் மென்பனி உருவாக்கும் தொகுதி தனித்துவமானது என்று கூறப்படுகின்றது. சீலிங்கில் பரவலாகப் பொருத்தப்பட்ட 94 மூக்குச்சூழாய் அமுக்கப்பட்ட வளியும் கலங்கல் நீரும் கொண்ட கலவையை விசிறுகின்றன. நீர்த்துணிக்கைகள் குளிர்ந்த வளியுடன் மோதும் போது மென் பனிப் பளிங்குகளாக மாறுகின்றன. இது சாதாரண பனியல்ல என்று இக்கருவியை உருவாக்கிய மிசுஜி பியூடோசன் கம்பனி அதிகாரிகள் கூறுகிறார்கள். இப் பளிங்குகள் மிகச்சிறிய தூள்களாகும்- 80 மைக்குரோன் விட்டமுடைய இவ்வகையான உயர் பண்புள்ள மென்பனியைப் பெறுவதற்கு ஜப்பானின் வடபகுதித் தேவான ஹொக்கைடோ மலைகளுக்குத் தான் செல்ல வேண்டும் என (SSAWS) முகாமையாளர் றையோசுகி உமாட்சு கூறுகின்றார். ஸ்கீ கட்டடத்தில் இரண்டு சாய்வுகள் உண்டு. ஒன்று ஆரம்ப பயிற்சியாளருக்கும் மற்றது அனுபவமுடைய விளையாட்டு வீரருக்குமாகும். எதிர்பார்க்கப்பட்டபடி அவற்றின் நீளம் குறைவானவையே. 500 மீற்றர் நீளமானவை. ஓர் ஓட்டம் முடிந்தபின் இரு உயர்கதி கதிரை வடிவ உயர்த்திகளில் மீண்டும் மேலேகொண்டு செல்லப்படுவார்கள்.

இரண்டு மணி நேர சறுக்கல் விளையாட்டிற்கு 54 டொலர்கள் கட்டணமாக அறவிடப்படும். சன நெருக்கத்தினை தவிர்ப்பதற்கு ஒரே நேரத்தில் 2,000 பேரே உள்ளே விடப்படுவர். தமது முறை வரும் வரைக்கும் காத்து நிற்பவர்கள் சாப்பிடலாம்.தொலைக்காட்சி பார்க்கலாம், நீந்தலாம் அல்லது கொதி நீராவிக் குளிப் பறையில் இருக்கலாம்.

'வைல்ட் (பி) புளூ, யொக்கொஹாமா, என்றழைக்கப்படும் பிரமாண்டமான நீர் விளையாட்டு உள் மண்டப வசதியும் ஜப்பானில் உண்டு. மணற் கடற்கரையையும், செயற்கை பாம் மரங்களையும் இயந்திரத்தால் உருவாக்கப்படும் 2 மீற்றர் உயரமான அலைகளையும் இம்மண்டபம் கொண்டுள்ளது. இதன் கட்டணம் 35 டொலராகும். சேர்ஃப் பலகைகளில் நீர் மேல் செல்ல மேலதிகப்பணம் அறவிடப்படும்.



டோக்கியோவிற்கு அண்மையில் உள்ள ஸ்கீ மண்டபத்தில இரு சாய்வுகளும் தூளாக்கிய மென் பனியும் உண்டு.

New Doc 2020-04-06 14.46.20_page-0079.jpg

"மாயா"வின் இரகசியங்கள்

— கட்டுரையாளர் —
மைல்கல் டீ லிமோனிக்

ஒன்றரை நூற்றாண்டு கால ஆராய்ச்சியின் பின்னர் மாயா என்பவர்கள் யார், எப்படி வாழ்ந்தார்கள், அவர்களது நாகரிகத்தின் திடீர் வீழ்ச்சி ஆகியவற்றின் இரகசியங்களை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளார்கள்.

கடும் வெப்பத்தின் மத்தியில் கௌத்தமாலாவின் காடு ஒன்றில் ஏராளமான மக்கள் அங்குள்ள சிவந்த பிரமிட் ஒன்றின் அடியில் நின்று அதன் நுனியை மணித்தியாலக் கணக்கில் அசையாது பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். பிரமிட்டின் உச்சியிலே அவர்களின் அரசன் போன்ற தோற்றமுடையவர்— அவரது தலையில் இறகுகள் பொருத்தப் பட்டுள்ளன. இரட்டைத் தலை முதலையினுடைய வடிவத்தில், பரிசுத்த அறையாக வர்ணிக்கப் பட்ட இடத்தில் அமிழ்ந்த வண்ணம் நீண்டகாலத்தின்முன் மறைந்த தனது முன்னோர்களின் அறிவுரைக்கு ஏற்ப—தலையைத் தாழ்த்தி வணங்குகிறார். கீழே உள்ள மக்கள் கூட்டத்தில் எந்த ஓர் அசைவையும் காணவில்லை. ஆனால் அவர்களுக்குத் தெரியும் அரசரின் சடங்குகள் மறு உலகத் திற்கு எந்த ஓர் ஊடகமும் இல் லாமல் அனுப்பி வைக்கப்படுகின் றன என்று. அரசன் ஒரு கூரிய அலகின் ஊடாக அல்லது கூரிய தங்கூசியினூடாகத் தன்னுடைய சொந்த ஆணகத்தைக் குத்தி ஏற் படுகின்ற காயத்தின் ஊடாக ஒரு கயிற்றை எடுத்துக் கயிற்றின் ஊடாக இரத்தமானது ஒரு கட தாசியின் மீது சொட்டுச் சொட் டாக விழச் செய்தார். பின்னர் அந்தக் கடதாசியைத் தீ இட்டுக் கொளுத்தி நெருப்பில் ஏற்படும் புகையினூடாகச் சர்ப்பம் ஒன்று தரிசனமாகும். இதன் பின்னர் அரசன் வீழ்ந்த கட்டடங்களின் மேல் எழுந்து நின்று தன்னுடைய அரச மேலாடையை அணிந்து இரத்தம் தோய்ந்த கரங்களை அடையாளமாகக் காட்டித் தன் னுடைய முன்னோர்கள் தனக்கு வாக்குறுதியாகத் தந்தார்கள் என்ற செய்தியை மக்களுக்கு அறி விப்பார். இதே வாக்குறுதியை அவர் தொடர்ந்து பல காலமா கப் பெற்றுக் கொண்டு இருப் பார். அந்தச் செய்தி என்னவென் றால்: "போருக்குத் தயாராயிருங் கள்." இந்த அறிவிப்பைக் கேட் டதும் மக்கள் கூட்டம் ஆர வாரித்து எழுந்து சண்டைக்கு ஆயத்தம் செய்வர்.

இந்தப் பிரமிக்கத்தக்க பிர மிட்டுக்களைக் கட்டியும், இப்படி யான சடங்குகளைச் செய்தும் பின்னர் இந்தப் பிரமிட்டுக்களை விட்டு மத்திய அமெரிக்காவின் சுற்றுப் புறங்களில் குடியிருந்த இவர்கள் யார் என்ற கேள்வி எழும்புகின்றது. அமெரிக்கச் சட் டத்தரணியான ஜோன் லியோட் ஸ்ரீபன் என்பவர் "In incidents of Travel in Central America Chiapas and Yucatan *(1841)*" தன்னுடைய நூலில் கொண்டோ ரான் காடுகளில் தான் கண்ட வித்தியாசமான பொருட்கள் பற்றி எழுதுகையில், அதிசயிக்கத் தக்க விதமாக விபரிக்கும் காரியங்கள் ஆவன, மாயாவின் அழிந்த நகர மாகிய கோபான் "எங்கள் கண் களுக்கு முன்பாக ஓர் உடைந்த கப்பல் கடலில் இருப்பது போல" இந்த நகரம் காட்சி அளித்தது. அதனுடைய பெயர் மங்கி விட் டது. மாயா நகரம் எனப்படும்



கடவுளின் கொடை குந்தியிருக்கும் மனித உருவம் கனது மார்பிலே காணிக்கைகளுக்கான பாத்திரத்தை வைத்துள் ளது. காணிக்கையாக பல பொருட்களுடன் பலியிடப் பட்ட மனிதனின் இதயமும் போடப்படும். இந்த உருவம் மாயாவின் போர்வீரரைக் குறிக்கும். இது போர் வீர னுக்கு செலுத்தப்படும் மரியாதையைக் காட்டுகிறது.

New Doc 2020-04-06 14.46.20_page-0080.jpg

கப்பலின் ஓட்டிகள் அழிந்து விட்டார்கள். எப்போது வந்தது, எங்கிருந்து வந்தது, யாருக்குச் சொந்தமானது, எவ்வளவு காலம் ஆட்சி செய்தது, அழிவுக்குக் காரணம் யார் என்பவற்றைச் சொல்ல யாருமில்லை. மேலும் 150 வருடங்களின் பின்னர் ஸ்ரீ பனிற்குப் பின்னால் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் மற்றவர்கள் விட்டுச் சென்ற தடையங்களை வைத்து ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர். நில ஆய்வாளர்களின் ஆராய்ச்சியின் படி கி. பி. 250 ஆம் ஆண்டு முதல் 900 ஆம் ஆண்டு வரை செழிப்புள்ள ஆட்சியாக இருந்தது.

இக் காலகட்டத்தில் அந்நப் பிரதேசங்களில் சிக்கலான எழுத்து வடிவங்களையும், சிறந்த கணித முறை, வானியல் திகதிகளையும் சரியான முறையில் தயாரித்து இருந்தார்கள். அது மட்டுமல்லாமல் பிரமாண்டமான பிரமிட்டுக்களை மத்திய அமெரிக்காவின் இயூக்கட்டான் முதல் நவீன கொண்டுராஸ் வரை பரவலாகக் கட்டி இருந்தார்கள். ஆனால் ஆராய்ச்சியாளர் தற்போது அசுரத்தனமான அழிவுகளில் இருந்து இன்றைய உலகம் கண்டு கொண்டது என்னவென்றால், மாயா மீண்டும் உயிர்த்து எழுவாரெனக் கடந்த வாரத்தில் கடைசிக் கண்டுபிடிப்பாக அறிவிக்கப்பட்டது. மேலும் நான்கு மாயா நகரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை தென் பேலீஸ்ஸில் உள்ள காடுகள் சூழ்ந்த மலைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு இடங்களில் உள்ள தடயங்கள் ஏதும் கொள்ளை போகவில்லை. இவற்றினூடாக ஆராய்ச்சியாளருக்கு நல்ல தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் யார் இந்த மாயாக்கள் என்றும், 900 ஆம் ஆண்டளவில் அவர்களுக்கு ஏன் அழிவு ஏற்பட்டது என்றும் தெரியவில்லை. பொதுவாக ஒரு நாகரிகத்தின் இரகசியங்களை புதை பொருள் ஆராய்ச்சியினூடாக முழுமையாக எடுக்க முடியாது. ஜோர்ச் ஸ்ருவாட் என்கின்ற ஆராய்ச்சியாளர் (National Geographic) என்ற சஞ்சிகையில் இப்போது தடையங்களாகக் கிடைத்து இருப்பவை உண்மை நிலையின் 1 வீதம் என்று கூறுகிறார். இவற்றில் இருந்துதான் மேற்கொண்டு தகவல்களைப் பெற முடியும் என்று குறிப்பிடுகிறார்.



மாயா வகுப்பினருடைய முறைகள் தொல்பொருள் ஆராய்ச்சி தம்பதிகளான ஆர்லின், டயனாசேசும் மாயா சமூகத்தினர் தொழிலாளர் வகுப்பிற்கும் உயர்ந்த வகுப்பிற்கும் உரியவர்களெனப் பிரிபடாமல் வளமீக்க நடுத்தர வகுப்பினரைக் கொண்டிருந்தது எனக் கண்டுபிடித்துள்ளனர். கண்டுகளில் ஈட்டிய வெற்றியினால் கொள்ளையாடிய பொருட்கள்நகரத்தைவளமாக்கியது. இந்த நடுத்தர வர்க்கத்தினர், சித்திரக் கலைஞர், தீர்வாகிகள், போர் வீரர், மேற்பார்வையாளர் என்கிற பிரிவிலடங்குவர். எல்லோருமே விலையுயர்ந்த ஆபரணங்களை வைத்திருந்தனர்.

ஆனால் இந்தக் குறுகிய குழப்பமான தகவல்கள் ஆராய்ச்சியாளர், சரித்திர ஆய்வாளர்களினதும், மனித இயல் ஆய்வாளர்களினதும், மொழி இயல் ஆய்வோரதும், மண் இயல் ஆகியவை மாயா பற்றிய ஆய்வின் வேகத்தை குறைத்து விடவில்லை. பல தொடர்ச்சியான கண்டு பிடிப்புக்களால் தூண்டப்பட்ட ''மாயாவியல்'' கடந்த 30 ஆண்டுகளில் விஞ்ஞான மற்றும் உலகக் கண்டுபிடிப்புக்களில் முதன்மை வகித்துக் கொண்டு இருக்கின்றது. ஆகர் டெம்மாறஸ்ற் என்கின்ற ரெலீசேயைச் சேர்ந்த வண்ட பில்ற் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நிலவியல் பேராசிரியர் கடந்த நான்கு ஆண்டுகளாக வட கௌத்த மாலாவின் டொஸ்பிலாஸ் என்கிற மாயாவின் தலைநகரம் ஒன்றை ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கின்றார். இவரது ஆராய்ச்சியில் பல நகரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பல எழுத்து ஏடுகளும் கண்டு பிடிக்கப்பட்டு, அவை ஒரு சிலராலேயே வாசிக்கக் கூடியவையாக உள்ளன. அத்துடன் பல புதையல்கள் நிரம்பிய கற் குகைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இந்த மாயாவின் அழிவிற்கு என்ன காரணம் என்று கண்டு பிடிக்கப்படவில்லை.

மாயா இன மக்கள் அமைதியை விரும்புகின்ற இனமாக வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களது வாழ்க்கையில் போர் அவர்களது கலாசாரத்தில் முக்கிய பங்கு எடுத்தது. அவர்களை ஆளுகை செய்தவர்கள் ஆளுகை கருதியும், சமயச் சடங்குகள் கருதியும், புதிய கட்டட அங்குரார்ப்பணத்தின் போதும், மற்றும் விளையாட்டுக்களுக்காகவும், நரபலி இடுவதிலும், மக்களைச் சித்திரவதை செய்வதிலும் ஈடுபட்டவர்களாக இருந்ததாகக் கலாச்சாரம் கூறுகிறது. மாயாவியல் ஆய்வாளருக்கு இது பெரும் அதிர்ச்சியாகவே இருந்து வருகிறது. மாயாவின் வீழ்ச்சிக்குக் கட்டுப்பாடற்ற போர் சூழ்நிலைகளும் காரணமாக இருந்திருக்கலாம். வளர்ந்து வரும் நாகரிகத்தின் மத்தியில் பெரு போராட்டம் எழுவதும் இயல்பே. மாயாவின் கலாச்சார வளர்ச்சியின் 250 ஆம்ஆண்டளவில் இப்படியான போர்கள் எழுந்து வீழ்ச்சியைச் சந்திக்க வைத்திருக்கலாம்.

1839 இல் நடைபெற்ற ஆராய்ச்சியின் போதும், அதன் பின்னர் நடைபெற்ற ஆராய்ச்சியின் போதும் மத்திய அமெரிக்காவின் மழைக் காடுகளில் மாயாவின் நினைவுச் சின்ன அழிவுகளான, கோபான், பிளாங், ஒக்ஸ்மால் போன்ற இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஸ்பானியக் குடி

New Doc 2020-04-06 14.46.20_page-0081.jpg

யேற்ற நாடுகளான இவ் விடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட காரியங்களில் போபோல் வூ என்று அழைக்கப்படுகின்ற மாயாவின் பரிசுத்த புத்தகமும் மாயாவின் கலாசாரம் பற்றிய புத்தகமும் அடங்கும். இந்த மாயாவின் கலாசாரம் 16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியரின் கைப்பற்றுதலின் போது மாயாவிற்கு ஏற்பட்ட விளைவுகளைக் கூறுகிறது. 1890 இல் அல்பிரட் மோட்ஸ்லே என்கின்ற ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர் மாயா பற்றிய முதலாவது முழுமையான அகராதியை வெளியிட்டார். இதில் மாயாவின் கட்டடங்கள், பிரதான நகரங்கள், நினைவுச் சின்னங்கள், மற்றும் அவ்வேளை நடைபெற்ற ஆய்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் வெல்லாத் தகவல்களோடும் 19 ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் மாயா பற்றிய புதிய தகவல்களை வெளியிட ஆரம்பித்தனர். வரலாற்றுத் தடையங்கள்கிடைக்காதஇடத்தில் எண்ணத் தடையங்கள் அதிகம் வேலை செய்தன. சிலர் எகிப்தியக் குடிகள் என்றனர், சிலர் போலிக் கேயர், சீனர், யாவானியர் என்றனர். 20 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஆய்வுகள் மேலும் புதிய தகவல்களைத் தந்தன: 1950 இல் ஜி. இ. தொம்சன், மற்றும் சில்வானஸ் மோர்லி ஆகிய வோஷிங்ரனைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஆய்வின் முக்கிய இடத்தைப் பெற்றனர். இன்றும் அவர்களது ஆய்வு மதிக்கப்படுகின்ற போதிலும், பல கூற்றுக்கள் தவறானவை என்று கருதப்பட்டுள்ளன. குறிப்பாக நகரம் ஆனது மாயாக்களினால் சடங்குகளின் வேளையின் போது மட்டும் உபயோகிக்கப்பட்டது என்றும் அங்கு மக்கள் வாழவில்லை என்ற அவர்களது கருத்தும் நிராகரிக்கப்பட்டன. பழைய மாயாக்களின் சில பழக்க வழக்கங்கள் இன்றும் அவர்களது வழித்தோன்றல்களால் குறைந்த அளவில் பின்பற்றப்படுவதாக ஆய்வாளர் கூறுகின்றனர். தற்கால விஞ்ஞான ஆய்வில் புதிய தொழில் நுட்ப முறைகள் குறிப்பாக றேடியோ காபன் திகதியிடும் முறை மிகுந்த பலனைக் கொடுத்துள்ளது.

மெக்சின் எல்லை ஒரத்தின் கௌத்தமாலாவில் உள்ள மாயாவின் நகரமாகிய டொஸ்பிலாஸையும், அதன் சுற்றுப்புறச் சூழலையும் அகழ்ந்த நிபுணராகிய ஆதர் டிமாறஸ்ற் அகழ்வுக்குப் புத்துயிர் ஊட்டிய வர்களில் முதலிடம் பெறுகிறார். இவர் இப்பிரதேச சரித்திரத்தை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கின்றார். கி. பி. 761 இற்கு முன்னரும், பின்னரும் என்று பிரிக்கின்றார். கி. பி. 761 இற்கு முன்னர் நடைபெற்ற சண்டைகளில் அரசாட்சியைக் கைப்பற்றியதோடு கைப்பற்றப்பட்ட அரசுகளின் தலைவர்கள், மக்கள் முன்னிலையில் கொலையும் செய்யப்பட்டனர். ஆனால் கி. பி. 761 இற்கு பின்னர் நடைபெற்ற யுத்தங்கள் ஒரு கலாசாரத்தின் வீழ்ச்சியைக் காட்டுவதோடு, உடைமைகளோடு மக்களும் அழிக்கப்பட்டனர். ஆற்காலசோமாலியாவின் நிலைக்கு அந்த நாடு மாற்றப்பட்டது. 761 இல் டொஸ்பிலாஸ் இன் அண்மை நாடுகளான ரமறின்டிற்றோ மற்றும் அறையோ டிமீற்றா ஆகிய நாடுகள் டொஸ்பிலாஸை முற்றுகையிட்டு வெற்றி கொண்டு அரசனைக் கட்டி இழுத்துக் கொண்டு ரமறின்டோ நாடு சென்று அங்கு பலி இட்டனர். சமுதாய நிலைப்பாடுகளில் இப்படியான நிலை உருவாவதற்கு அரசாட்சியின் அடுத்த வாரிசுகள் என்று பலர் எழுந்ததினால் ஏற்பட்ட உட்பூசல்கள் உள்நாட்டுக் கலவரங்களாக மாறி தங்களுக்குள் பகைமையை வளர்த்தமையால் சமுதாயத்தை இப்படிப்பட்ட சீர்குலைவிற்கு இட்டுச் சென்றது என்று குறிப்பிடுகிறார்.

ஆர்லினும், டயனா சேலமும் கரக்கோல் என்ற இடத்தில் மேற் கொண்ட ஆய்வின்படி சண்டைகளின் உச்சக்கட்ட விளைவே இந்த நாகரிக அழிப்பு என்று குறிப்பிடுகிறார்கள். இவர்கள் காட்டும் ஆதாரங்களிற் சில: எரியுண்ட கட்டடங்கள், காரணம் இல்லாமல் புதைக்கப்படாத எரியுண்ட நிலையில் பிரமிடின் மீது காணப்பட்ட ஆறு வயதுக் குழந்தையின் உடல், மற்றும் கண்டெடுக்கப்பட்ட மட்பாத்திரங்களில் உள்ள சித்திரங்கள் போரிற்கு உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் என்பன.



மாயாவின் அழிவுக்குச் சண்டைகளே காரணமாக இருந்தாலும் வேறு காரணங்கள் இருப்பதையும் ஆய்வாளர்கள் மறுப்பதில்லை. மற்றைய பிரதான காரணிகளில் மழைக்காடுகளின் அழிப்பு ஒரு பிரதான காரணமாக இடம்பெறுகிறது. ஏனென்றால் இக்காடுகளிலேயே மாயாவினர் உணவிற்குத் தங்கியிருந்தனர். ரீ பற்றிக் அல்பேட்என்ற ஆய்வாளர் நிலத்திற்குக் கீழ் கண்டுபிடித்த மகரந்த மணிகளில் இருந்து அந்த மகரந்த மணிக்குரிய அல்லது எந்த ஒரு மழைக் காடுகளுக்குரிய மரங்களும் விட்டு வைக்கப்படவில்லை என்று கூறுகிறார். தண்ணீர்ப் பற்றாக்குறை இன்னுமொரு காரணமாக இருந்திருக்கலாம். ஏனென்றால் நில ஆராய்ச்சியின் படி நவீனமயமான நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டதைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இந்த

New Doc 2020-04-06 14.46.20_page-0082.jpg

நகரங்கள் தேக்கி வைக்கப்பட்ட நீரிலே தங்கியிருந்த காரணத்தால் நீண்ட கால மழையின்மை ஏற் படும்போது மிகவும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டன.

மேலதிக சனத்தொகையும் இன் னொரு காரணமாக இருந்திருக்க லாம். இருபது நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மத்திய அமெரிக்கா வின் தென்தாழ்வு நிலங்களில் ஒரு சதுர க் கிலோ மீற்றருக்கு 200 பேர் வரை இருந்திருக்கின்றார்கள் என்று குறிப்பிடுகின்றது. இந்த வியக்கத் தக்க எண்ணிக்கையானது வளம் மிக்க வடநாட்டில் மேலும் அதிக மாக இருந்திருக்கலாம் என எண் ணத் தோன்றுகிறது. இந்த எண் ணிக்கையானது கை த் தொழில் வளர்ச்சி அடைவதற்கு முந்திய உலகில் அதிகக்கூடிய சனத்தொகை உள்ள இடங்களின் எண்ணிக் கையை ஒத்து இருக்கின்றது.

இந்த அதிக சனத்தொகை கார ணமாகவும், வளர்ச்சியடையாத அல் லது குறைவுபட்ட விவசாயத் திட் டத்தின் காரணமாகவும் போசாக் கின்மை ஏற்பட்டமையால் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்ட் அகழ்வுகளில் இருந்து குழந்தைகள் போஷாக்குக் குறைபாட்டினால் இறந்த நிலையும் காட்டப்பட்டுள் ளது. இவை எல்லாம் மாயா சமு தாயத்தை அழித்திருக்கலாம். ஒரு புறத்தில் பதவி ஆர்வம் கொண்ட தலைவர்களும், மறுபுறத்தில் இயற் கையுமாகச் சேர்ந்து மாயாவின் நாகரிகத்தை அழித்து விட்டன.

மாயாவில் இ ருந்து நா ம் கற்றுக் கொள்வது என்ன? அனே கமான ஆய்வாளர் சு ற் றா டல் செய்தியையே காரணம் காட்டுகின் றனர். மாயா நகரங்கள் மேலதிக சனத்தொகையாலும், அதிக காடு அழிப்பினாலும் ஏராளமான மக் களை இழந்தன. இந்த அழிவானது தற்கால உலகின் நி லை னை ய மாற்றும் என்று நா ம் நம்ப வில்லை. ஆனால் இந்த அழிவை உதாசினம் செய்துவிடுவது அறிவு டையது ஆகாது என்று கல்பேட் துணிந்து கூறுகிறார்.

இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற பல விஞ்ஞானிகள் காடுகளை அழிக்கக்கூடாது என்று கூறுகின்றார்கள். அதே வேளை யில் மாயா சமூகத்தினர் ஒருமித்து இருந்ததற்கான கா ர ணங்கள் என்னவாக இ ரு க் கு ம் எ ன் று தெரியவில்லை.



பந்து விளையாட்டு: மாயாவினரின் பந்து விளையாட்டுப்பொழுதுபோக் கும் அதேவேளையில் சமய சடங்கு மானது. பார்வையாளர்கள் வெற்றி தோல்வியீது கூறாடுவர். றப்பரினால் ஆன உருண்டைப் பந்து சூரியனை யோ சந்திரனையோ குறிப்பதாயி ருந்தது. விளையாட்டின்போது பந்து தொடர்சியாகத் த ரையில் விழா திருக்க வேண்டும். தரையில் விழ விட்டவர் தோற்றவராக கருதப்பட்டு அவரது தலை துண்டிக்கப்படும் அல் லது அவ ரை ச் சித்திரவதைக்குள் ளாக்கி பிரமிட்டின் உச்சியிலிருந்து பந்துபோல கீழே விழவிடுவர்.

மாயாவினுடைய ஆராய்ச்சி யாளர்கள் மாயா மக்களுடைய நாளாந்த நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். இந்தக்கண்டுபிடிப்புக்களை சித்தி ரங்கள், மட்பாண்டங்கள் போன்ற வற்றிலும் வித்தியாசமான கலை களில் கட்டப்பட்ட அவர்களின் வீடுகளில் இருந்தும் அ றி ந் து கொண்டனர். ஒரு சா தா ர ண மாயா கூடும்பமானது 5 மு த ல் 7 அங்கத்தவர்களைக் கொண்டி ருக்கும். இவர்கள் விடிவதற்கு முன்னரே எழுந்து காலை உண வை அருந்துவார்கள்.

காலை உணவாக சூ டா ன சொக்கிலேட் அருந்துவர். வசதி குறைந்தவர்கள் சோளவில் செய்த தடித்த நீர் உணவு. இவ்வுண விற்குப் பெயர் அற்றோல். சாதார ணமாக வீடு ஒர் அறையைக் கொண்ட கு டி சை. சுவருக்குள் தடிகள் பி ன் ன ப் ப ட் டு களி மண்ணால் சுவர் எழுப்பப்பட்டி ருக்கும். சோளம், அவரை ஆகிய வற்றுடன் அவ்வப்போது வா ன் கோழி, முயல் என்பனவும் உண வாய்ப் ப ய ன் ப டு த் த ப்பட்டன. பயிர் வளர்கின்ற காலங்களில் ஆண்கள் பகல் முழுவதும் வயலில் வேலை செய்வார்கள். பெண்கள் வீட்டில் இருந்து உணவு தயாரிப் பதிலும், ஆடை தயாரிப்பதிலும் ஈடுபடுவர். இரவில் குடும்பத்தார் ஒன்று கூடுவர். குடும்பத்தலைவன் ஒரு தூரித இரத்தம் சொட்டும் சடங்கைச் செய்து முன்னோருக் கான பயபக்தியைக் காட்டுவான். இது ஜெபம், மந்திரம், ஒ தல் ஆகியவை இணைந்ததாக இருக் கும். விவசாயத்தில் ஈடுபடாத நாட்களில் கட்டடம் கட்டுவதிலும், பிரமிட் கட்டுவதிலும் இ வ ர் க ள் ஈடுபடுவர். இந்த வே லை க் கு கூலியாக அரச அலைகளில் நடை பெறும் விளையாட்டுக்களுக்கும், விழாக்களுக்கும் பார்வையாளராக கலந்து கொள்ளும் அ னு ம தி கிடைக்கும். இவ் விழாக்களில் அரசன் இரத்தம் சொ ட் டு ம் சடங்கை மே ற் கொ ள்ளுவார். விளையாட்டுக்களில் மல்யுத்தம், போன்ற உடற்கலைகள் இ டம் பெறும். தோல்வியுற்ற மனிதனின் தலை துண்டிக்கப்படும், அல்லது பந்துபோல் உ ரு ட் டி க் கட் டி பிரமிட்டின் உச்சியில் இருந்து மா ய ா வி ன ர் உ ரு ட் டி விடுவார்கள்.



மாயாவினரின் சித்திர எழுத்து

நவின பார்வையில் மாயாவி னர் பிறந்த உயர்தரக் கலாரசி னையுடையவர்களாக இ ருந்துள் ளனர். 'வாக்குக்கண்' உடைய மக்கள் மிகவும் உயர்ந்தவர்களாக கணிக்கப்பட்டார்கள் என்று ஜேல் பல்கலைக்கழக மனித இயல் வல் லுநர் மைக்கேல்கோ எழுதுகின் றார். வாக்குக்கண் உண்டாக்கு

New Doc 2020-04-06 14.46.20_page-0083.jpg

வதற்காக சில பெற்றோர் குழந்தையின் மூக்கின் மேல் சிறிய பொருட்களைத் தொங்க விட்டு முயற்சிப்பார்கள். அது மட்டுமல்லாமல் தலையைத் தட்டையாகவோ அல்லது கூம்புவடிவமாகவோ மாற்றக்கூட முயற்சிப்பர். தொட்டிலின் பலகையில் வைத்து அழுத்தி அல்லது கூம்பு வடிவங்களில் தலையை அழுத்தி இப்படிச் செய்வர்.

மாயாவினர் 'தங்கள் பற்களை T வடிவமாக அராவுகின்ற பழக்க முடையவர்களாகவும் இருந்துள்ளனர். (இதற்காக மயக்க மருந்து ஏதும் கொடுத்தார்களா என்று தெரியவில்லை.) பற்களுக்குள் சிறு குழாய்கள் செருகுகின்ற பழக்கமும் இருந்துள்ளது. ஆண்கள் திருமணத்திற்கு முன்னர் தங்களுக்கு கறுப்புச் சாயமிடுவார்கள். பின்னர் இது அவர்களது சமயச் சடங்குகட்கும், மற்றவர்களைப் பயப்படுத்துவதற்கும் உதவியது என்று மைக்கேல் கோ கூறுகின்றார்.

மாயா பற்றிய தகவல்கள் கிடைத்த பொருட்களினூடாக மட்டுமல்ல அவர்கள் விட்டுச் சென்ற நாகரிகத்திலிருந்தும் பெறப்படுகின்றன. மாயாவினருடைய எழுத்துக்களை ஆராய்தல், அவர்களைப் பற்றிப் படித்தல் என்பது பழைய கலாசாரங்களைப் படிப்பதற்கு வழிவகுக்கின்றது. அமெச்சூர் ரசனைகட்காக மட்டுமல்லாமல் மேலான தேவைகட்காகவும் இவ்வாராய்ச்சி பயன் படுகின்றது.

தென் அலவமா சர்வகலாசாலை சித்திர ஆசிரியர் லின்டா சேல் புதிய அனுபவத்தைப் பெறுகின்றார்: 1970 இல் மெக்சிக்கோவுக்குச் சென்று இந்தச் சுவர் ஓவியங்களைப் பார்வையிட்ட இவர் அற்றால் மயக்க நிலைக்கு உட்பட்டார். 3 வருடங்களின் பின் சேறு இருவருடன் அவர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டார். இதுபற்றிய கருத்தரங்கில் இம்மூவரும் 2½ மணிநேரம் 7 ஆம் நூற்றாண்டு முதல் 8ஆம் நூற்றாண்டு வரை மாயாவின் வீழ்ச்சி என்பது பற்றியும் அதன் சூட்சியாளர் அவர்களது சாதனைகள் பற்றியும் தகவல்களை வெளியிட்டனர்.

கிடைக்கப் பெற்ற எழுத்துத் தடயங்களில் இருந்தும் ஆராய்ச்சி வல்லுநர்கள் மாயாவின் உள்ளார்ந்த எண்ணங்கள் ஒரு மின்னலைப் போல வெளியிடப்படுகின்றன என்று கூறுகிறார். வரலாற்றுச் சித்திர வல்லுனரான ரெக்சார்ள்ஸ் சர்வகலாசாலை ஆசிரியர், கண்ட காட்சிகள் அசாதாரணமாயினும் இந்த அதிசயமிக்க வாழ்க்கையையும், சடங்குகளையும் மேற்கொண்ட மக்களின் உணர்வைப் புரிந்து கொள்ளக் கூடியவாறு உள்ளது என்கிறார்.



இரத்த அறுவடை கொடுமையான இரத்தம் சொட்டும் சடங்கு எப்போதும் பிரதான அரசியல் சமய நிகழ்வின் போது இடம் பெறும். காட்டப்பட்ட பட்டத்தில் XOC என்ற பெண் யக்சிலன் எனகின்ற அரசனாகிய தன் கணவன் முன் முழங்காலில் நிற்கின்றாள். தனது நாக்கினூடாக ஒரு கயிற்றை இறுக்கி றாள். தகனக் கடதாசித் துண்டுகள் மேல் இவ் இரத்தம் வீழுகின்றது. பின் அந்தக் கடதாசிகள் காணிக்கை ஆக எரிக்கப்படும். இத் தகனத்திற்கூடாக தம் முன்னோருடன் உரையாடுகின்றார்கள் என்ற நம்பிக்கை அவர்கள் மத்தியில் உள்ளது.

இந்த மாயா ஆராய்ச்சி வேலை, ஆராய்ச்சி உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது எனலாம். ஏனெனில் பெயரளவிலான இளம் ஆராய்ச்சியாளர் இவற்றில் ஈடுபட்டுள்ளார்கள். 34 வயதான ஸ்ரீவன் குஸ்டன், 28 வயதான டேவிட், ஸ்ருவாட் ஆகியோர் சிறுவயதினராக இருக்கும் போதே இவ்வாராய்ச்சியைத் தொடங்கினர். மாயா நில ஆராய்ச்சியாளரின் புத்திரர் என்று வருணிக்கப்படும் ஜோர்ஜ்யும் ஜீன், ஸ்ருவாட்டும் 3 வயதாக இருக்கும் போதே மாயா சிதைவுக்குத் தமது பிரயாணத்தை மேற்கொண்டனர். 15 ஆம் வயதில் அதாவது 1984 இல் மெக்ஆதர் அறக்கட்டளை ஆக்கத்தில் ''ஜீனியங்'' பட்டத்தை இந்த ஆராய்ச்சிக்காகப் பெற்றுக்கொண்டார். இவர் தனது அடுத்த கட்ட நடவடிக்கையாக மாயாவின் தடயங்கள் அனைத்தையும் நிரைப்படுத்துகின்ற (Catal oying) பணியில் ஈடுபட்டுள்ளார். இப்பணியில் தன் வாழ்நாள் மட்டுமல்ல அதற்குப் பின்னரும் கூட மேலும் ஒரு நூற்றாண்டுக்கான வேலைகள் உள்ளன எனக் கூறுகிறார்.

றிச்சேட் லெவன்தால் என்னும் U.C.L.A நிறுவன அதிகாரி கூறுகிறார்: வளைகுடா யுத்தத்தை அறியச் சதாம்ஹுசேனுடைய அறிவித்தலைப் படிப்பதைப் போல மாயாவின் ஆராய்ச்சியின் ஊடாக மாயாவினது போர் நடவடிக்கை அரசியல், பண்பாடு ஆகியவற்றை புரிந்து கொள்ள முடிகிறது. மாயாவின் எழுத்துக்களைப் புரிந்து கொள்ளுவது பற்றிய விவாதம், அவர்களது வாழ்க்கைத் தத்துவங்களைப் புரிந்து கொள்வது என்பன விரைவில் முடியும் என்றல்ல; புதிய கண்டுபிடிப்புக்கள் புதிய தடயங்களுக்கு வழிவகுக்கும். உ-ம்:- கரக்கோல் என்ற இடத்தில் முன்னொரு போதும் இல்லாத வண்ணம் 74 உடலால் நிரப்பப்பட்ட கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அமைந்த இடம் மக்கள் குடியிருப்பாக இருப்பதால் இவை முன்னோர் வழிபாடு மக்கள் மத்தியில் இருந்ததைக் காட்டுகின்றன. அது மட்டுமல்ல மாயாவினது செல்வம் மிகுந்த நடுத்தர வர்க்கத்தினர் மாயாவிடத்தில் அதிகமாக இருந்தனர். இப்படிப்பட்ட கல்லறைகள் அதிகம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

ஆதர் டிமறாஸ்ட் என்பவர் டொவ்பிலாஸ் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சுழிவுக் குவியல்கள், மிகவும் பிரதானமான கண்டுபிடிப்புக்கள். ஏனென்றால் கல்லறைகளை விட மேலான தக

New Doc 2020-04-06 14.46.20_page-0084.jpg

வல்கள் இங்கு கிடைக்கின்றன. அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள், பாவனைப் பொருட்கள் என்பன அவர்களது வாழ்க்கையின் உண்மையான குறுக்கு வெட்டு முகத்தினையே தருகிறது எனக் கூறுகிறார். இன்னோர் ஆராய்ச்சியாளர் அவர்களுடைய நிலத்தின் மாதிரி கண்டுபிடிக்கப்பட்ட மறைந்தார்களின் மாதிரி, மனித எலும்புக்கூடுகள் ஆகியவற்றின் இராசயனச் சேர்வைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றினூடாக மாயாவினருடைய உணவு வழக்கங்களையும் அங்கிருந்த பொதுவான நோய்கள், விவசாய முறைகள், காலநிலை ஆகியவை பற்றியும் ஆராய வுள்ளார். மாயாவினரின் கடந்த கால வாழ்க்கையை ஆழமாக ஆராய்கின்ற தொல்பொருளாராய்ச்சியாளரும், விஞ்ஞானிகளும் மாயாவினருடைய வாழ்க்கையின் வெற்றிக்கும் அவர்களாகவே தேடிக்கொண்ட அழிவிற்கும் காரணங்களைக் கண்டு பிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். மனிதவியலாராய்ச்சியாளரும், ரெஸ்ராசுவிலுள்ள மெதடிஸ்த சர்வகலாசாலை ஆசிரியருமாகிய ரைடல்பி என்பவர் மாயாவினரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: ''கடந்தவற்றைப் பார்க்கிறபோது நான் பார்ப்பது மனிதக் கற்பனைகளினதும், மனித முயற்சிகளினதும் தோல்விகளையல்ல, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க மாற்ற முயலும் மனித முயற்சியையே'' என்று.

தகவல்–ஹனினா பூளொக்
குயூ இறேயொ
வோரா லோப்பஸ.

ரைம், ஒகஸ்ட் 9, 1993

உங்கள் தேவைகள்
எங்கள் சேவைகளாகும்

தமிழீழப் பரப்பில்
தரமான அச்சுப் பதிப்புகளுக்கு

இராசன் அச்சகம்

144, அருச்சுனா வீதி ✱ யாழ்ப்பாணம்.

New Doc 2020-04-06 14.46.20_page-0085.jpg

வாசகர் கூடிதம்

உலகில் முதன் முதலில் வெளியாகிய சர்வதேச தமிழ்ச் சஞ்சிகை

எங்கள் அறிவுத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடியதாக வெளிவரும் இச்சஞ்சிகைக்கு எனது பாராட்டுக்கள். கடந்த சில காலங்களாக எமது இளஞ்சந்ததியினர் தமது அறிவுப் பசியைத் தீர்க்க முடியாமல் கஷ்டப்படுவதை என்னால் அவதானிக்க முடிகின்றது. ஆங்கிலத்தில் வெளிவரும் இந்தியா ருடேயின் தமிழ்ப் பதிப்பு அதன் மொழி பெயர்ப்பாக இருந்தும் கூட அதில் வெளியிடப்படும் விஞ்ஞான தொழில் நுட்பம் சார்ந்த கட்டுரைகள் முழுமையான தகவலுடன் வெளியிடப் படுவதில்லை. பொருளாதாரத்தடை இருந்த போதிலும் கூட சிறந்த முறையில் இச்சஞ்சிகையை நீங்கள் வெளியிடுகின்றீர்கள். இலட்சக்கணக்கான தமிழ் மக்களும் உலகத்தைப் பார்ப்பதற்கான ஜன்னலை நீங்கள் திறந்து விட்டுள்ளீர்கள்.

V. குமரன்
கோண்டாவில்.

★ ★ ★

தாங்கள் மாசிகையாக வெளியிடும் உலக உலா முதலாவது இதழ் படித்தேன். உலக விவகாரங்கள் யாவற்றையும், சமகால சர்வதேச நிகழ்வுகளையும் ஒரே சஞ்சிகையில் வெளிக் கொணர்ந்திருக்கிறீர்கள். இவ்வளவு உயர்ந்த தரத்தில் தமிழில் ஒரு சஞ்சிகை உலக விவகாரங்களிற்காக வெளிக் கொணரப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று நினைக்கிறேன். எதிரியின் பொருளாதாரத் தடையை ஒரு சவாலாக ஏற்று இச் சஞ்சிகையை வெளிக் கொணர்ந்திருக்கிறீர்கள். இதில் உங்களிற்குப் பெரு வெற்றியென்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு கட்டுரைகளையும் மிகவும் அவதானமாகத் தெரிவு செய்து சமகால நிகழ்வுகளை அவற்றின் வரலாற்றுப் பின் புலத்தோடு வெளிக் கொணர்ந்திருக்கின்ற படியால்

நேசப்பூக்கள்

பல அரிய விடயங்களை உள்வாங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. இவற்றினோடு எதிர்காலத்தில் வெளிவரும் உலக உலாவில் சர்வதேசத் திரைப்படங்கள், சர்வதேச இலக்கியங்கள் பற்றிய பகுதிகளிற்கும் பக்கங்கள் ஒதுக்குவீர்களென எதிர்பார்க்கின்றோம். ஒட்டு மொத்தமாகச் சமகால உலக விவகாரங்களின் காலக் கண்ணாடியாகவும் சர்வதேச விடயங்களின் வரலாற்றுப் பதிவாகவும் உலக உலா அமைந்துள்ளது. இருந்தும் ஒரே யொரு குறை நான்கு கண்டங்களையும் உலா வந்த உலக உலா அவுஸ்திரேலியாக் கண்டத்தை எட்டிக் கூடப் பாராமல் விட்டது ஏனோ? அடுத்த இதழில் இக் குறையும் நீங்குமென எதிர்பார்த்து இம் மடலை முடிக்கிறேன்.

பொன். பூலோகசிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

★ ★ ★

உடனுக்குடன் சமூக, அரசியல், விஞ்ஞான, பொருளாதார ஆய்வுகளையும், எழுத்து வடிவங்களையும் பெறமுடியாதவாறு ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்குத் தம்மைச் சர்வதேச தர அறிவு நிலைக்கு வளர்த்துச் செல்ல உதவும் ஆக்க சாதனமாகும்.

உலக உலாவானது ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுச் செல்கிறது. இன்றைய கல்வி உலகானது கல்வி தேடலும், ஆய்ந்தறிதலும், உய்த்து உணர்தலுமாக வளர்ந்து வரும் வேளையில் பின்னூட்டல் அத்தியாவசியமானது. மானவ சமுதாயம் தத்தமது சர்வதேசம் தழுவிய கணிப்பீடுகளுக்குத் தேவையான சமகாலத் தரவுகள், பொருளியல் துறை சார்ந்த புள்ளிவிபரங்கள், விஞ்ஞான ஆய்வுப்பட்டறைப் பெறுபேறுகளைப் பெறுவதற்கு ஆங்கிலச் சஞ்சிகைகளையே காத்துத் தங்கியிருந்தது. கிடைத்தாலும் அதை உரியமுறையில் விளங்கித் தெளிவாக்க முடியாது அல்லற்பட்டனர். இந்நிலையை உலக உலா முற்றாக மாற்றியுள்ளது எனலாம். இவ்வரிய ஒன்றினைந்த அறிவுப்பணி

> சிறுகதைகள், கவிதைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு ஏறக்குறைய நூறு பக்க அளவில் உலக உலா முதல் இதழ் வெளிவந்துள்ளது. ஆசியா. ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா, மற்றும் வாணிபம், மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், பல்தினைப் பகுதி என்று மொழி பெயர்ப்பு ஆக்கங்களைக் கொண்ட ஒரு மாத இதழ் வருவது அனேகமாக இதுதான் முதல் தடவையாக இருக்கும். அந்த வகையில் புகழாரம் உலக உலாவிற்குச் சேரட்டும்.
>
> — ஈழநாதம்

உலகின் பல்துறை ஆய்வாளர்களையும், அறிவியலாளர்களையும் கொண்ட உலகச் சஞ்சிகைகளின் சமகால வெளியீடுகளின் ஆக்கங்களில் தெரிந்தெடுத்து சிறப்பாகத் தொகுத்தளிக்கப்பட்ட அறிவுத் தேன்தான் உலக உலா எனலாம்.


தொடர என் இனிய நல்வாழ்த்துக்கள்.

செ.விக்கினேஸ்வரநாதன்
(ஆசிரியர்)
யா/புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை.


★ ★ ★

உலக உலா, 144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

New Doc 2020-04-06 14.46.20_page-0086.jpg



எரிக்கிரியா; பிரியகேசக்கின் உதயம்



மாயாவின் இரகசியங்கள்

New Doc 2020-04-06 14.46.20_page-0087.jpg